# வடகரை நாட்டு வரலாறு

## ஆய்வு நூல்

கொடிவேரி அணை கட்டிய அரசன் செம்பவேட்டுவரில்
செயங்கொண்ட சோழ கொங்காள்வான்


ஆசிரியர்

**அடசபாளையம் சந்திரசேகர்**

**(வரலாற்று ஆய்வாளர்)**

பதிப்பாசிரியர்

**மருத்துவர் தே.வாழை பரமேஸ்வரன்**

**MD (General Medicine)**



**வேட்டுவர் டிவி பதிப்பகம்**

# நூல் விவரக்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **வடகரை நாட்டு வரலாறு - ஆய்வு நூல்** |
| ஆசிரியர் © | : | அடசபாளையம் சந்திரசேகர் |
| பதிப்பாசிரியர் | : | மருத்துவர் தே.வாழைபரமேஸ்வரன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2025 |
| பயன்படுத்திய தாள் | : | 70 ஜி.எஸ்.எம். என்.எஸ்.தாள் |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | 186 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 500 |
| விலை | : | **ரூபாய் 180/-** |
| அச்சகம் | : | ASX பிரிண்டர்ஸ், சென்னை |
| பொருண்மை | : | வடகரை நாட்டு வரலாறு |
| வெளியீடு | : | **வேட்டுவர் டிவி பதிப்பகம்**<br>65, கவிதா ஜுவல்லஸ்,<br>ஆனந்த் நகர், சின்ன எலசகிரி ரோடு,<br>ஓசூர் - 635126.<br>போன் : 7888988851<br>vettuvartv@gmail.com<br>vettuvartv.com |

# அணிந்துரை

வேட்டைச் சமூகமே உலகின் ஆதிச்சமூகமாகும். அவ்வேட்டைச் சமூகம் உழவுத் தொழிலுக்குப் பரிணாமம் பெற்ற காலத்தில் பல்வேறு இனக்குழுக்களாகப் பிரிந்து தனித்துவம் பெற்று வரலாற்றுத் தடம் பதித்துள்ளனர். இவ்வரலாற்றுச் சுவடுகளை ஆய்வு செய்தன் மூலமாகவே வேட்டுவரினத்தின் திறத்தை வெளிக்கொண்டுவர முடியும். அத்தகைய ஆய்வில் தடம் பதிக்கிறது ‘வடகரை நாட்டு வரலாறு" என்னும் இந்நூல். இந்நூல் செம்பவேட்டுவரினத்தில் தோன்றி கொடிவேரி அணை கட்டிய அரசன் சோழகொங்காள்வானின் வரலாற்றினைப் பேசுகிறது. அணை நீரைக் கண்டு மகிழ்வோர் அதனைத் தடுப்பணையாய்த் தாங்கி நிற்கும் கற்களின் மகிமையை அறிவதற்கில்லை. நீர் தவழ்ந்தோடி கடல் சேர்ந்து விடலாம். ஆனால் கற்கள் அங்கேதான் நிற்கும். அதுபோல ஆண்டு பல கடந்தாலும் வரலாற்றுக் கரங்களைக் கண்டுணரலாம். அதனைத் தாங்கி வரும் இந்நூல் வாசிப்பிற்கு உகந்தது.

நூலின் தொடக்கத்தில் வேட்டுவர் - என்ற சொல் உருவான சொல்லாய்வு முன்வைக்கப்பட்டுள்ளது. அச்சொல் குறிஞ்சி நிலத் தலைவனாக வேட்டுவன் உருவான திறத்தையும் சுட்டிக்காட்டுகிறது. தலைவனாக, அரசனாக என வரலாற்றில் இடம்பெற்றுள் 19 வேட்டுவ அரசர்களும் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவ்வரசர்களின் வழியில் வந்து தற்போது வாழ்ந்துவரும் வேட்டுவர்களின் கூட்டப் பெயர்களும் அவர்கள் வாழும் ஊர்களின் பெயர்களும் இவ்வாய்வு நூலில் இடம்பெற்றுள்ளன.

வேட்டுவ வரலாற்றிற்கு உறுதுணையாக இருக்கும் கல்வெட்டுகள், செப்பேடுகள், குகை ஓவியங்கள், ஓலைச் சுவடிகள், இலக்கியச் சான்றுகள் என நூல் முழுவதும் சான்றாதாரங்கள் விரவிக் கிடக்கின்றன. குறிப்பாக, கொங்கு நாட்டில் அமைந்த வடகரை நாடு அதன் தலைநகரான அந்தியூர், ஆதித்த சோழன் எழுதிக் கொடுத்த செப்பேடுகள் ஆகியனவும் வேட்டுவர் வரலாற்றைப்

பறைசாற்றுகின்றன. பவானி வட்டத்தில் இடம்பெற்ற அந்துவ வேட்டுவ - அந்தி வேட்டுவ நடுகற்கள் பாண்டியருக்கும் வேட்டுவருக்கும் உள்ள உறவின் வலிமையினையும் பட்டத்தின் சிறப்புகளையும் பேசுகின்றன. சேரமான் பெருமாள் முதலாக பெருஞ்சேரலிரும்பொறை ஈறாக உள்ள சேர வரலாறும் வேட்டுவ இனத்தின் வரலாற்றுச் சுவடுகளாக அமையப் பெற்றுள்ளதும் சோழகொங்காள்வான் கொடிவேரி அணை கட்டிய வரலாறும் என மூவேந்தர்கள் வரலாற்றில் வாழ்ந்தவர்கள் வேட்டுவர்கள்” என அறியமுடிகிறது.

சோழன் போர், ஈரோடு மூக்கறுப்புப் போர், மைசூர் போர் கொடுமைகள் ஆகிய போர் நிகழ்வுகளோடு வேட்டுவரின் திருமணச் சடங்குகளும் இவ்வாய்வு நூலில் பேசப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் நடைபெறும் திருமணச் சடங்குகளில் நிமித்தம் பார்த்தல், திருமண அழைப்பு, கூறைப் புடவை எடுத்தல், பச்சைப் பந்தல், உப்பு சர்க்கரை வாங்குதல், எண்ணெய் தேய்ப்பு, சம்பந்தம் கலக்குதல் ஆகியனவும் அவற்றில் மறந்து அல்லது மறைந்து போன மடைக்கலம் வைத்தல், பிறைமண் எடுத்து பேய் கரும்பு நடுதல், பிரம்மச்சரியம் கழித்தல், முரசுகொட்டி அறிவித்தல் ஆகிய சடங்குகளும் இடம்பெற்றுள்ளன என்பது ஆய்வின் முழுமையைக் காட்டுகிறது.

ஆறு சோழப் பேரரசர்களை உருவாக்கிய சோழப் பேரரசி செம்பியன் மாதேவியின் படிமம், அதன் வரலாறு ஆகியன வேட்டுவப் பெண்ணின் பெருமையினைச் சுட்டிக் காட்டுகின்றன. அப்பெருமாட்டி உருவாக்கிய கலைப் பணிகள் இன்றளவும் நின்று காட்சியளிப்பது வேட்டுவ இனத்தின் வரலாற்று ஆவணங்களாக இந்நூல் எடுத்துக் கூறுகிறது. களச்சி வேட்டுவன் நடுகல், கொடிவேரி அணையில் உள்ள கல்வெட்டு, அதன் மணல்போக்கித் தொழில் நுட்பம், வேட்டுவர் செய்த நீர்ப் பாசனப் பணியில் அல்லாள இளைய நாயக்கனின் பங்கு, அதனை எடுத்துக் கூறும் கல்வெட்டு என பல வரலாற்று ஆவணங்களை முன்னிறுத்தி வேட்டுவ இனத்தாரின் வடகரை நாட்டு வரலாற்றை ஆராய்ந்துள்ள இந்நூல் வரலாற்றுச் சூழலில் வளர்ந்து வரும் ஆய்வாளர்களுக்கு ஒரு வளர்பிறையாய் வழிகாட்டும். வாசியுங்கள்! வழி கிடைக்கும்... வரலாற்றுச் சுவடு எட்டும்...

**முனைவர் ப.சசிகலா**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு.

# வாழ்த்துரை

தமிழ் இனம் என்பது உலகத்தில் உள்ள அனைத்து நாகரிகத்திலும் சிறந்த நாகரிக இனம் என்று உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த இனம் இவ்வாறு புகழ் மிக்கவர்களாக திகழ்வதற்கு தமிழர்களின் வீரம், கொடை, கல்வியறிவு, விவசாயம், நீர் மேலாண்மை, கட்டிடக் கலை, வான சாஸ்திரம் என உலகில் உள்ள 64 கலைகளிலும் சிறந்தவர்களாகவும் முதன் முதலில் உலகிற்கு இந்த 64 கலைகளயும் கொடுத்த பெருமையும் தமிழர்களையே சாரும். இந்த தமிழர்கள் இனக் குழுக்களாக வாழ்ந்து வேட்டுவ தன் மக்களை காக்க தன் உயிர் கொடுத்து பாதுகாத்தான், மேலும் மக்களின் உணவு தேவைகலைப் பூர்த்திசெய்து, வன விலங்குகளிடம் இருந்து அரண்செய்து அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து அரசனாக உயர்ந்தான், இதனால் தொல்காப்பியர் அவர்களை

**"ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்**
**ஆவயின் வருஉம் கிழவரும் உளரே"**

**- (தொல், அகம் 21)**

என்ற பாடல் மூலம் பெருமைப்படுத்தி உள்ள்ளார். தொல்காப்பியர் காலத்தில் குறிஞ்சி நில தலைவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

**கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே**
**வாளோடுமுன் தோன்றிய மூத்த குடி!**

- (புறப்பொருள் வெண்பாமாலை,
சூத்திர விளக்கப்பாடல் -35, கரந்தைப்படலம்.)

ஐயனாரிதனார் என்ற புலவர் வீரத்தோடு பிறந்த இனம் என்ற குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வீரமிக்க வேட்டுவர்கள் சங்ககாலத்தில் ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் மூலம் இனக் குழுவில் அதிக நிரை

செல்வங்களை சேர்த்து உணவிற்கு குறைவின்றி வளமான வாழ்வாதாரத்தை உருவாக்கினர். இந்த காலகட்டமே விவசாய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது ஆநிரைகள் கவர்தல் மற்றும் மீட்டல் இரண்டிலும் ஈடுபட்ட வேட்டுவர் தலைவர் பெரும் செல்வந்தர் ஆனார். இவ ஊர் தலைவன் பின்பு குழுத்தலைவன் பின்பு அரசன் பின்பு வேந்தன் என்ற உயர் நிலையை அடைந்தான். இவ்வாறு வேட்டுவர் வேந்தர் என்ற உயர் நிலையை அடைந்த வேட்டுவர்கள் தங்கள் நற்பண்புகள் மூலம் மக்கள் மனதில் நீங்கா புகழ் பெற்றனர். அவ்வாறு வேட்டுவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஆட்சிசெய்து அதிகாரத்துடன் வாழ்ந்தார்கள் இதனைச் சங்க இலக்கியங்கள், தொல்லியல் ஆதாரங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பாறை ஓவியங்கள் மற்றும் நடுகற்கள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக தமிழ் நாடு முழுவதும் வேட்டுவர் ஆட்சி மிக சிறப்பாக செய்து வந்துள்ளார்கள். அத்தகைய பெருமை மிக்க தமிழ் வேட்டுவ அரசர்களின் சிறப்பு மிக்க வரலாற்றை சேர மன்னர் பரம்பரையில் அந்தி வேட்டுவ அரசர் குடும்பத்தில் வந்துதித்த திரு. சந்திரசேகரன் அவர்கள் தனது களப்பிரர் போர் என்ற புத்தகத்தின் மூலம் தமிழர்களின் பெருமையை உலகம் முழுவதும் அறியச் செய்துள்ளார். இவரின் இரண்டாவது புத்தகமான கொங்கு வேட்டுவ அரசன் செம்ப வேட்டுவரில் ஜெயங்கொண்ட சோழன் பவானி ஆற்றில் முதலில் அணைகட்டி அதன் மூலம் கொங்கு மண்டலத்தில் நீர் பாசன வசதியைப் பெருக்கி உழவர் குடி மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியதும் மற்ற அரசர்களின் படையெடுப்பில் இருந்து கொங்கு மக்களைப் பாதுகாத்த சிறந்த அரசன் என்ற முறையிலும் செம்ப வேட்டுவரை பற்றிய பல ஆய்வு செய்து எண்ணற்ற ஆதாரங்களை தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரலாற்றுப் புத்தகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆட்சி செய்த தமிழரசன் செம்பவேட்டுவ ஜெயங்கொண்ட சோழன் பெருமையையும் வெளிப்படுத்துகிறது. இத்தகைய செயல் மூலம் தமிழ் இனமே பெருமை அடையும் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஐயா சந்திரசேகரன் அவர்கள் ஒரு கல்வெட்டு ஆராய்ச்சியாளர் மட்டுமல்ல இவர் சேர மன்னர் பரம்பரையில் தோன்றிய சேரர் வழித்தோன்றல் கால்வழியினரான அந்துவ (அந்தி) வேட்டுவராவார். இவர் வரலாற்று புகழ்மிக்க ஊரான அந்தியூரில்

கோட்டை கட்டி ஆட்சி செய்த இனத்தில் பிறந்தவர் என்பது இவர் செப்பு பட்டயம் மூலம் நாம் அறியலாம்.

மன்னர் காலத்தில் மக்கள் போற்றும் மன்னன் சேரன் என்பது உலகறிந்த ஒன்று அந்தக் குடியில் பிறந்த ஐயா சந்திரசேகரன் தமிழ் மக்களை உலகம் போற்றும் விதமாக தனது புத்தகத்தில் எழுதியுள்ளார் என்பது மக்களை ஆட்சி செய்ய அதிகாரம் தேவையில்லை நல்ல ஞானம் இருந்தாலே போதும் என்பதற்கு ஒரு உதாரணமானவர் ஐயா திரு சந்திரசேகரன் என்பது நம் அனைவருக்கும் பெருமை ஆகும். இந்த புத்தகத்தின் மூலம் வேட்டுவர்களின் புகழை உலகறியச் செய்த ஐயா சந்திரசேகரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்...

இப்படிக்கு,

**டாக்டர். வாழைபரமேஸ்வரன்.**

# வாழ்த்துக்கள்

கொங்கு நாட்டில் 150 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி அதிகாரங்களுடன் சங்க காலத்திலேயே ஆட்சி செய்த அந்தி வேட்டுவர் மரபைச் சார்ந்த **அடசபாளையம் திரு.சந்திரசேகரன்** ஐயா அவர்கள்

1) களப்பிரர் போர் தமிழ் வேட்டுவர் கன்னட வேட்டுவர்

2) வடகரை நாட்டு வரலாறு -ஆய்வு நூல். (கொடிவேரி அணை கட்டிய அரசன் செம்பவேட்டுவரில் செயங்கொண்ட சோழ கொங்காள்வான் என்ற புத்தகங்களை வெளியிட்டு கொங்கு மண்டலத்தில் வாழும் பூர்வ குடிகளான வேட்டுவ கவுண்டர்கள் வரலாறை உலகறிய செய்தார் இது நம்மை பெருமிதம் அடையச்செய்கிறது அவரின் இந்த அறிய முயற்சிக்கு **கவிதா ஜுவல்ஸ், ஓசூர்** மனமார்ந்த வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறது.



ஆசிரியர்:
**அடசபாளையம் சந்திரசேகர்**
(வரலாற்று ஆய்வாளர்)

Kavitha Jewels | Gold & Silver

vettuvartv.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 3 |
| | வாழ்த்துரை | 5 |
| | வாழ்த்துக்கள் | 8 |
| 1. | ஸ்ரீ பூமன சுவாமி கோவில் பட்டயம் | 17 |
| 2. | செப்பேடு பட்டயத்தின் உண்மை நகல் | 20 |
| 3. | கொங்குநாடு | 23 |
| 4. | குறிஞ்சிநிலத் தலைவன் வேட்டுவர் | 26 |
| 5. | புறநானூறு | 38 |
| 6. | மழவர் மகளார் செம்பியன் மாதேவி | 139 |
| 7. | களாச்சி வேட்டுவன் நடுகல் | 146 |
| 8. | கொடிவேரி அணை கட்டிய கொங்காள்வான் | 148 |
| 9. | அல்லாள இளையா நாயக்கர் | 157 |
| 10. | துணைநின்ற நூல்கள் | 185 |



திங்களூர் அப்பச்சிமார் மடம் மடாதிபதி

தெய்வத்திரு **விஜயகிரி வேலாயுதசாமி**

**தேவசேனாதிபதி கவுண்டர்.**



திங்களூர் அப்பிச்சிமார் மடம் மாடதிபதிகள் தெய்வத்திரு M.P.ஆண்ட முத்து கவுண்டர் அவர்கள், தெய்வத்திரு M.P.ராஜு கவுண்டர் அவர்கள், தெய்வத்திரு M.R.வேலாயுதசாமி கவுண்டர் அவர்கள் நினைவு பரிசளிப்பு விழா பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது, வேட்டுவ சமுதாயத்தை சேர்ந்த 10, 12-ம் வகுப்பில் நன்கு தேர்ச்சி பெற்ற (அரசு பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி, சிபிஎஸ்சி) மாணவ, மாணவிகளை மதிப்பெண்கள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விளையாட்டு துறையில் தேசிய மற்றும் மாநில அளவில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவ மாணவியருக்கும், மருத்துவக் கல்லூரிகளில் தேர்ந்தெடுக்கப்படும் மணவ மாணவியருக்கும் உதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது. திங்களூர் ஊராட்சி மன்றம் தலைவர் டாக்டர். திருமதி கீதா வேலாயுதசாமி B.Sc அவர்கள் தற்போது இந்த பரிசளிப்பு விழாவை சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.



டாக்டர். திருமதி கீதா வேலாயுதசாமி அவர்களின்
ஆன்மீக திருப்பணிகள்: தோரணவாவி அருள்மலை ஆண்டவர் திருக்கோவில், திங்களூர் கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில் ஆகியவற்றிற்கு குடமுழுக்கு விழா நடத்தியது. சிறுவலூர் பச்சைநாயகி அம்மன் திருக்கோவில் தேர் அமைக்க நன்கொடை வழங்கியது, திங்களூர் மடத்துப்பாளையம், நீலகவுண்டம்பாளையம், சிங்காநல்லூர், நிச்சாம்பாளையம், பதிப்பாளையும், பெருமாம்பாளையம் (அத்தாணி) மற்றும் பல மாரியம்மன் கோவில்களுக்கு இவர் தலைமையில் குடமுழுக்கு விழா நடைபெற்றது சரித்திர நிகழ்வாகும், திங்கலூரில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு சந்திர மௌலீஸ்வரர் ஆலயம் பாலாலயம் செய்து திருப்பணி நடைபெற்று வருகிறது.





**பாராட்டுக்கள்:**

- மனிதநேய மாமணி விருது - ஆரா தொலைக்காட்சி, கோவை.
- திருப்பணி செம்மல் விருது - அருள்மலை சிறந்த சமூக சேவகர் விருது - பி கே ஆர் மகளீர் கலைக்கல்லூரி, கோபி. டாக்டர் பட்டம் - ப்ராம்ப்ட்ன் இன்டர்நேஷனல் யூனிவர்சிட்டி கனடா,
- அன்னை தெரசா விருது - ராயல் அகாடமி ஆப் குளோபல் பீஸ், பாரதியார் விருது இராயல் அகாடமி ஆப் குளோபல் பீஸ்,
- காமராஜர் விருது - பண்ணாரி கல்வி அறக்கட்டளை. வீரமங்கை - அருள்மலை ஆண்டவர் விழாக்குழு.
- ஸ்ரீ ஏகலைவன் விருது - ஸ்ரீ ஏகலைவன் கல்வி அறக்கட்டளை, சலங்கபாளையம்.
- திருப்பணி செம்மல் - ஆதி சைவ சிவாச்சாரியார்கள், அருள்மலை. மற்றும் பல சமுதாய சேவைக்கான விருதுகளை பெற்றுள்ளார்.

**சமுதாய பணிகள்:**

- திங்களூர் நூலகதிற்கு இடம் மற்றும் கட்டிடம் தானம் கொடுத்தது.
- திங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்டிக்கொடுத்தது.

திங்களூர் அப்பிச்சிமார் மடம் மாடதிபதி தெய்வத்திரு M.P. ராஜூ கவுண்டர் B.A அவர்களது கரங்களால் 1982 - ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 10, 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தொடர்ந்து 42 ஆண்டுகளுக்கும் மேலாக கல்வி ஊக்கத்தொகை வழங்கி வருகிறார்கள்.

**"படங்கொண்ட பாம்பலங் காரர்க்கு மாறாத பக்திகொண்டு**
**திடங்கொண்ட நெஞ்சோடு திண்கொண்ட தோள்கொண்டு**
**கீர்த்திகொண்டு**
**அடங்கொண்ட பேய்நோய் விடம்தீர்த்து அருள்கின்ற அப்பச்சிமார்**
**மடங்கொண்டு வண்புகழ் கொண்டதன்றோ கொங்கு மண்டலமே"**

இவ்வாறு கொங்கு மண்டல சதக பாடல் ஒன்று அப்பிச்சிமார் மடம் கொங்கு நாட்டில் புகழ்பெற்று விளங்குவதாக கூறுகிறது.

# ஸ்ரீ பூமன சுவாமி கோவில் பட்டயம்

சிறே த தி றே தது வா ப றி யு க கலியுக யூக யுகமது துவா பறியுக குல செல்லா நின்ற பவ வருடம் தையி மாதம் 20 தேதி பூச நட்சந்திரம் பெற்ற சுப தினத்தில் அஸ்தினா புரத்திலிருந்து பஞ்சபாண்டவர் ஐவரும் சந்திர நகரத்துக்கு வந்து ஒரு திங்கள் இருந்தார்கள். இருந்த இடத்தில் சந்திர நகர அசூர றகுல ஒரு பென் அழுதாள். அப்போது பஞ்ச பாண்டவரிடத்தில் பென் அழுகிறவருக்கு மாந மன்னன் வென்று கேயாற கன் அந்த பென் சொன்னது இந்த நகரில் வாகாசுர என்ற ஒரு முலியிருக்கிறது. இந்த முலி வருடம் வருடம் யஉ முதமதி வருடம் ஒரு நரபலி கொடுக்க கொண்டு வருவார்கள். இந்த வருடம் யன முதமதி ஒரு நரபலி கொடுக்க வேண்டுமென்று நான் அழுகிறேன் என அப்போது றமறாசா பீம செந்வள பாறது நியமறக பெண்ணுக்கு தேறுதல் சொல்லி அந்த பலிக்கு நான் போகிறேன் என்று சொல்லி 70 வண்டியில் வேணுமா மாவயிற்றுக்கு கொண்டு பூமவலையும் கட்டிக்தொண்டு இருவரும் போகிறோம் என்று முலி ஆக்கிரமித்துக் கொண்டு பீமசேனனையும் பூமவலையும் பிடித்து முழுங்கி விடுகிறேன் என்று வரும்போது பீமசேனனும் ஆக்கிரமித்து அந்த முலியை பிடித்து முக்கு கல லொ டெடு சதிராடிக்கு கொன்று போட்டார்கள். அப்பொழுது கல்லு மூணு அப்பொழுது பூமவலும் இறந்து போனாள். ஐந்தலநாதன் ஆட வென்சா இறந்தவலை கல்லு சந்திரலிங்க சடப்பனையும், பூமநதியும் பொருந்திய ஐங்கரன பீமன கொன்றும் வென்டு மற்குளம் தெற்கு தென்னரசு மேற்கு முக்கு கல்லு வடக்கு வடதூ றத்தில் கிழக்கு றது காளி றவ முக பூதம் செந்தமின சங்கம் கான சுவ னையும் கரு ரொச்சியும் சிறந்த ஆலயம் சந்திர சேகர சுவாமி பெரிய நாயகி அம்மன் கல்லியான சுப்பிர மணியது நட்டுற அழகற குண்டத்து காளி அம்மனை புரபனாத சுவாமி அங்காளம்மன் மாரியம்மன் முத்து விநாயகன், மதளங்கள் உண்டு.

தெற்கு வாவி உண்டு. கொட்டை உப்பறிகை பன்னக சாலையும் மயிப்படியாப்பட அதிசயமாய் இருந்தது. அதிவீரபாண்டிய அரசாட்சியில் குண்டத்து காளி அம்மன் அதிக

பிறகுபதிபிள்வீரவள மனியம் அவனாசிக்கவுண்டரும் காளி செட்டி கணக்கு நெல்னா தயார் இங்கன சாறியிந்தவூறு குண்டத்துக் காளியம்மன் இருந்த இடம் யுசொகி வனமானம் மலை பாதையிலிருந்தது. அந்த ஆள் காவிலியன மாடு மேய்த்து கொண்டிருப்பான். அப்போது ஒரு காரா பசுமாடு அறியாமல் வந்து பாளை மேல் போய் பாலை சொரியும் இப்படி இந்த மாட்டுப்பாலை யாரு சுறப்பாறுகளென்று ஆட்டு உடையால் வெத்தியாக பாலைத்து

அந்த காறா பசுமாடு சுவாமி மேல் பா லை சொறிந்து போட்டு வந்ததைக் கண்டு மாட்டு உடையான் கண்டு ஒரு அதிசயமா யிருக்கிறது என்று அதிகாரம் பன்னபப்பட்ட அவனாசிக்கவுண்டர் காளி செட்டியுடன் சொல்ல அவனுக்கு பதில் சொல்ல, அவர்கள் சீமை ஆளுகிற ரஅதிவீரபாண்டிய ராஜாவுக்கு சொல்லி கோயில் உண்டுபன்ன, பிரதிட்சை செய்து வைத்து அந்த காளி அம்மனுக்கு விட்ட மானியம் கோவிலுக்கு தென்புறத்தில் அருளிய வள்ளகாடு வாவியம் விட பூசை பிடிக்கு நந நதியா கிய மமௌதான மதாசி முதலானதும் சிகுள தெரு ம் நடந்து வரும்படிக்கு செய்வித்து பூமலுக்கு பால் பங்கு மானியம் விட்டு குண்டத்து காளியம்மனுக்கு நதிற செகற சுவாமி பெரிய நாயகி அம்மன், கல்யான சுப்பிரமணியா நட்டுற அழகு பெருமாள் கோவில் முதலானவைக்கு கார்த்திகை மாதத்திலேயே கொடி கம்பத்தில் கொடி கட்டி தீபம் வைக்கிறதிற்காக பூமன காள பண்ண இவர்களை நியமித்து இவர்கருக்கு கால் பங்கு அல்லாமல் 30 வள்ளகாடு மானியம் விட்டு சுவாமிக்கு தீபம் வைத்தவுடன் சந்தம், பூ, விபூதி, பிரசாதம், பச்சபம் முதலானவை மிகுதி யாயும் கொடுத்து வரும் படிக்காசு, வளையாட்டு கல்லுங்காடுவரியும் உள்ள மட்டும் இந்தப்படி நடந்து வரும்படி செப்பேடு பட்டியம் கொடுத்து இருக்கிறது. அம்மன் கோவிலுக்கு வடபுறம் பள்ளர் வீடு. தை வீடு யாருக்கும் இந்த நூறு வீடுகளில் பெரிய தந்தை சூர வீர பத்திர தீரப் பள்ளன் இருப்பான் அவன் பில்லி சூனியம் படித்துக்கொண்டு அம்மனை சிறிது காலம் உயிலுக்கு எனக்கு நடச் சொல்லி ரொம்ப உபத்திரவம் செய்து வருவான். உபத்திரவம் பொறக்காமல், ஒரு நான் அவ்வுயிலுக்கு போகாமல் அம்மன் இருந்துகொள்டாள். அந்தப் பள்ளன் அம்மன் வயலுக்கு வரவில் லை என்று சாமத்தில் வந்து காளி காளி என்ற கூப்பிட்டான். அம்மன் பேசாமல் இருந்தது. ஞாலெத்தை காலில் உதைத்தான். அப்பொழுது அம்மன் பள்ளன் சூலாயுதத்தினால்

குத்தி கொன்ற விட்டு, இந்த நகரில் பள்ளக்குடி நிலைக்காமல் போகக் கடவது என்று சாபம் கொடுத்து, அம்மன் சாபத்தினாலே பள்ளர் இந்த நகரில் நிலைக்கிறதில்லை.

ருத்திரி காலம் தங்கிறது இல்லை. இப்படிக்கு அதிசயம் இருக்கப்பட்ட சந்திர தர மன்னுறு பேறு ஆகலாம். பூமி சந்திர சூரியர் அறிய எழுதிய செப்பேடு பட்டியம்.

# செப்பேடு பட்டயத்தின் உண்மை நகல்

**சந்திரனுக்கு சாபம் நீக்கிய சந்திரபுரீஸ்வரர் ஆலயம்,**
திங்களூர், ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு.
குடமுழுக்கிற்காக திருப்பணிகள் நடந்து வருகின்றன.

கலியுகத்தின் தொடக்கத்தில் பஞ்சபாண்டவர்கள் தங்களது தலைநகரமான ஹஸ்தினாபுரத்தை விட்டு கொங்கு நாட்டிற்கு வருகை புரிந்து திங்களூரில் ஒரு திங்கள் இருந்து வாழ்ந்த தலம் திங்களூர். இவ்வூர் சந்திர நகரம் என அக்காலத்தில் அழைக்கப் பட்டடது. அக்காலகட்டத்தில் திங்களூரில் ஒருமுனி வழ்ந்து வந்ததாகவும் அதனை பீமசேனன் அழித்துக் கொன்று ஊருக்கு நன்மை செய்தான் என்று புராண வரலாற்றுச் செப்பேடு ஒன்று குறிப்பிடுகிறது. இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் சந்திரசேகரர், பெரிய நாயகி அம்மன் கோயிலின் சுயம்பு லிங்கமாக மேற்கு நோக்கிய நிலையில் எழுந்தருளியுள்ளார். கொங்கு மண்டலத்தில் மேற்குப் பார்த்த சிவன் கோயில் சிறப்புடையதாகும். இக்கோயிலின் இறைவனான சந்திர சேகரருக்கு இவ்வூரைச் சார்ந்த காராம் பசு ஒன்று நாள்தோறும் பால் சுரந்து பூஜை செய்த தலம் இது. இவ்வூரில் திருமணத் தடை நீங்க கல்யாண சுப்பிரமணியரின் தனி ஆலயம் சந்திர சேகர் கருவறையின் பின் பகுதியில் காணப்படுவது சிறப்பு. திருமணத் தடை உள்ளோர் முருகனை வழிபட்டால் திருமணம் நடந்து சீரும் சிறப்புமாக வாழ்வர் என்பது குறிப்பிடத் தக்கது. ஊரை எப்பொழுதும் வளமாக விளங்கச் செய்யும் மூத்த தேவி எனப்படும் சேஸ்டா தேவி கோயிலின் மண்டபத்தில் காணப்படுவது இக்கோயிலின் சிறப்பைப் பறை சாற்றுகிறது.

ஈரோடு மாவட்டம் திங்களூரில் குடிகொண்டுள்ள சந்திர மௌலீஸ்வரர் சிவாலயம் 800 ஆண்டுகள் மேல் பழமை வாய்ந்த சிவன் கோவிலாகும். விநாயகரிடம் சாபம் பெற்ற சந்திரனுக்கு சாப விமோசனம் அளித்த தலமாக விளங்குவதால் சந்திர மௌலீஸ்வரர் என இத்தல இறைவன் குறிப்பிடப்படுகின்றார். சந்திரன் தனக்கு ஏற்பட்ட சாபத்தால் சொல்லொனா துயரங்களை அடைந்தார்.

திங்களூரில் எழுந்தருளியிருக்கும் சந்திர மௌலீஸ்வரரை மனம் உருகி வேண்டி அச்சாபத்தில் இருந்து விமோசனம் பெற்றார். சந்திர மௌலீஸவர் தனது தலையில் பிறைசூடிய பெருமானாக இத்தலத்தில் காட்சி தருவதால் சந்திர மௌலீஸ்வரர் என வழங்கப்பட்டு வருகின்றார். இக்கோயிலுக்கு தொடர்புடைய செப்புப்பட்டயத்தில் சாபம் நீங்கப் பெற்ற செய்தி காணப்படுகிறது. இக்கோயிலில் 20 கல்வெட்டுகள் உள்ளன. முழுவதும் கற்றளியால் கட்டப்பட்ட இக்கோயிலின் விமானம் ஏகதளமாக சுதை விமானமாக காட்டப்பட்டுள்ளது. கோயில் மூலவர் சுப்பிரமணியர் சன்னதி அம்மன் சன்னதி ஆகியவை அழகிய விமானங்களைப் பெற்று விளங்குகிறது.

கொங்குச் சோழரின் காலத்திலும் ஒய்சாளர்களின் காலத்திலும் இக்கோயில் புகழ் பெற்று விளங்கியதோடு கல்வெட்டுகளில் சந்திரபுரீஸ்வரர் என இறைவன் வழங்கப்பட்டுள்ளார். இந்திரன் சாபம் பெற்ற தலமாகையால் இவ்வூரின் அருகில் இருந்த இந்திரபுரி என்னும் ஊரில் ஒய்சாள மன்னர் வீர சோமேஸ்வரன் காலத்தில் நிலங்கள் அளிக்கப்பட்டன. காராம் பசு இறைவனுக்குத் தானாக பால் சுரந்து வழிபட்டமையால் கல்வெட்டு ஒன்றில் திருச்சுரபி என்ற இடத்தில் நிலமும் கோயிலுக்கு அளிக்கப்பட்டது. கோயிலுக்கு வடக்கில் தாமரைக் குளம் ஒன்று இருந்துள்ளதை கல்வெட்டுகள் குறிக்கின்றன. கொங்கு சோழர் வீர ராஜேந்திரன் காலத்தில் விஜயமங்கலத்தில் வாழ்ந்து வந்த தாவந்தாவி என்னும் பெண் கோயிலின் மூன்றில் பாதி அளவு கட்டி முடிக்க பொருளுதவி அளித்துள்ளார். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் தேரையூர் என்னும் ஊரை குலோத்துங்க சோழன் நல்லூராக பெயர் மாற்றி கோயிலின் பூஜைகளுக்கும் திருப்பணி செய்வதற்கும் அவ்வூர் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. இவ்வூரிலும் பிற ஊர்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் அக்காலத்தில் இக்கோயிலுக்கு பல அறப்பணிகளைச் செய்து இறைவனின் அருளைப் பெற்றுள்ளனர். கொங்கு சோழர் விக்கிரம சோழர் காலத்தில் கருவறையின் முன் உள்ள மகா மண்டபம் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. வாணிகம் வளர்ச்சி பெற தனவந்தர்கள் பலர் இக்கோயிலுக்கு பல நிவந்தங்கள் அக்காலத்தில் அளித்துள்ளனர். நாடாழ்வான் நாடு நமனி என்னும் ஊரில் வசித்த வியபாரி பருத்திக்குடையான் சொக்கன் என்பவர் இக்கோயிலில் பலிபீடம் கட்ட கொடை அளித்துள்ளார். இவரது பெயரை இறைவனின் பெயரால் பிறையணி சடையன் எனக்

குறிப்பிடுகின்றார். இதேபோன்று பாண்டிய நாட்டில் கல்வாலி நாட்டில் சுந்தரபாண்டிய புரத்தைச் சார்ந்த (தற்பொழுது பொன்னமராவதி அருகில் சுந்தரம் என அழைக்கப்படும் ஊர்) அஸ்தர தேவரை இக்கோயிலில் பிரதிஸ்டை செய்து வழிபட்டுள்ளார். கொங்கு நாடு மட்டுமன்றி தமிழகத்தின் பிற பகுதிகளிலும் வாழ்ந்த அருளாளர்கள் 800 ஆண்டுகளுக்கும் முன்பாகவே கோயிலின் திருப்பணிகளுக்கும் பூஜைகளுக்கும் பெருங்கொடை அளித்து திங்களூர் இறைவனின் அருளைப் பெற்றுள்ளனர். இவ்வூரில் வாழ்ந்த வேட்டுவ இன மக்கள் கோயிலை 800 ஆண்டுகளுக்கும் முன்பாகவே விரிவுபடுத்தியுள்ளனர். வேளாளர்கள், வணிகர்கள், செட்டிகள் மற்றும் பிற இன மக்களும் இக்கோயிலுக்கு பல நிவந்தங்கள் அளித்து கோயிலில் பல திருப்பணிகள் மேற்கொண்டிருந்தமையைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

800 ஆண்டுகளுக்கும் மேலாக விளங்கும் இக்கோயில் தற்பொழுது திருப்பணி நடந்தேறிவருகின்றது. புதிய கோயில்களை கட்டுவதை விட தொன்மை வாய்ந்த பழம்பெரும் கோயில்களை அதன் பழமை மாறாமல் கட்டி திருப்பணி செய்வது நம் அனைவரது கடமையாகும். திருப்பணி திங்களூர் வாழ் மக்களால் தற்பொழுது முன்னெடுத்துச் செல்லப்பட்டு நடந்து வருகின்றது. அருளாளர் களின் ஆசியால் திருப்பணி முழுமை பெற்று குடமுழுக்கு நடைபெறுவதை எதிர் நோக்கியுள்ளார். அருள்மிகு பெரிய நாயகி உடனுறை சந்திரபுரீஸ்வரர்.

# கொங்குநாடு

தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள ஒரு மண்டலம் ஆகும். இதை கொங்கு மண்டலம் என்றும் அழைக்கப்படுகிறது. சேரர்களால் ஆளப்பட்ட இப்பகுதியானது, கிழக்கில் தொண்டை நாடும், தென் கிழக்கில் சோழ நாடும் மற்றும் தெற்கே பாண்டிய நாடு ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. இது தென்கிழக்கு கர்நாடகத்தின் சில பகுதிகளையும், வடகிழக்கு கேரளத்தின் சிறிய பகுதியையும் உள்ளடக்கியது.

குறிஞ்சி நிலமும், முல்லை வளமும், மருத நிலமும் கொண்டது கொங்கு நாடு. மலையும் காடும் நிறைந்த நாட்டில் தேன்மிகுதியும் கிடைத்தது. தேன் நிறைந்த நாடு கொங்கு நாடு எனப்பட்டது. தேன்கூடுகள் நிறைந்த மலைச்சாரல்களைப் பெற்றது. குன்று செழுநாடு என்றே சங்கப் புலவர்கள் பாடினார். “குன்றும், மலையும் பல பின்னொழிய வந்தனன்” என்றனர். தேனும், பூந்தாதுகளும், குரங்குகளும் குறிஞ்சி நிலத்தின் சொத்துகள். “கொங்கு தேர்வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி” (குறுந்தொகை - 1) என்ற இறையனார்ப்பாடல் கொங்கு என்ற சொல்லைத் தேன் என்ற பொருளில் தான் கூறியுள்ளது.

கொங்கு நாடு என்பது சேர, சோழ, பாண்டிய நாட்டைப் போல தனி மரபினரால் ஆளப்பட்ட பகுதியாகும் . பல சிற்றரசர்களால் ஆளப்பட்டது. அதனால், அந்தப்பகுதிகளை சேர, சோழ, பாண்டியர்கள் தங்கள் நாட்டுடன் அவ்வப்போது இணைத்துக் கொண்டு வந்துள்ளனர். அதன் காரணமாகவே சங்க காலம் முதல் மூவேந்தற்களிடையே அடிக்கடி போரும் நிகழ்ந்துள்ளது. மேலும் இப்பகுதி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பாலக்காட்டுக் கணவாயின் அருகில் அமைந்துள்ளதால் தென்னகத்தின் பல அரசுகள் இப்பகுதியைக் கைப்பற்றச் சண்டையிட்டன - கரூரின் (வஞ்சி) சேரர், பின்னர் சங்கம் மருவிய காலத்தில், கங்க வம்சத்து மேற்கு கங்கர்கள் ஆகியோரின் ஆளுமையின் கீழ் கங்கவாடி என்ற பகுதிக்கு உட்பட்டதாக இருந்துள்ளது. பின்னர் தஞ்சைச்

சோழர்களான, இராசராசன் மற்றும் இராசேந்திரன் ஆகியோர் ஆட்சியின்கீழ் வந்தது. பின்னர், இப்பகுதி போசளரின் ஆட்சிக் கீழ்சென்றது. அவர்கள் கீழ்நிலை ஆட்சிக்கு, இங்கிருந்து வந்த வேட்டுவ அரசர்கள் ஆட்சி அமைப்பினையே பயன்படுத்தினர். கில்ஜி மன்னர்களின் படையெடுப்பு முறியடிக்கப்பட்ட பிறகு, விசயநகரப் பேரரசின் கீழ் நாயக்கர்களின் ஆட்சிக்கு வந்தது. கொங்கு நாடு, 17-ஆம் நூற்றாண்டில், மதுரை நாயக்கர்களின் ஆளுமையின்கீழ் 1659 தொடங்கி 1672 முடிவடைந்தது. தொடர்ந்து பாளையக்காரர்களின் கீழ் கொங்கு நாடு இருந்து வந்துள்ளது.

## சமயம்

கொங்கு பகுதியில் சைவ சமயம் பிரதானமாக இருந்தது. இருப்பினும், வைணவம், சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய இந்து சமயங்கள் கணிசமான எண்ணிக்கையில் இருந்தன. இந்த பகுதியில் பெரும்பான்மையாக உள்ள கொங்கு வேட்டுவர்கள் சைவ சித்தாந்தம் அடிப்படையிலான சைவ சமயத்தை பின்பற்றுபவர்கள். கி.மு. 12-ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி.3-ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் கொங்கு நாட்டில் சமண சமயம் கணிசமாக இருந்தது.

சங்க காலத்தில் கொங்கு நாட்டின் பூர்வகுடிகள் வேட்டுவர் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

**“ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்**
**ஆவயின் வருஉம் கிழவரும் உளரே” (தொல், அகம் 21)**

கொங்கு நாட்டில் ஆளும் குடியாகவும் இருந்தனர். வேட்டுவர் வீரமிக்கவர்கள் ஓரியின் இனத்தவர்கள் (1)

கொங்கு மண்டல சதகம் மற்றும் பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு உள்ளிட்ட பல்வேறு நூல்கள், கொங்கு நாட்டில் வாழும் வேட்டுவர் குடிகள் பற்றி கூறுகிறது.

**“விரவியவீங்கோய் மலைமுதலாக விமலர்தம் பதிபலவணங்கிக் குரவலர் சோலையணிதிருப்பாண்டிக் கொடு முடியணைந்தனர் கொங்கில்” - பெரிய புராணம் (ஏயர்கோன்-85)**

**“காரூரு மலைநாடு கடந்தருளிக் கற்சுரமும்**
**நீரூருங் கான்யாறு நெடுங்கானும் பலசுழியச்**
**சீரூரும் திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றார்”**
**- பெரிய புராணம் (சேரமான்-164)**

பழனி, பண்ணாரி மாரியம்மன் கோயில், பவானி சங்கமேசுவரர் கோயில், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயில், கொடுமுடி, நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில், சிவன்மலை மற்றும் மருதமலை ஆகிய கோவில்கள் கொங்கு நாட்டில் உள்ள முக்கிய கோவில்களாகும். சென்னிமலை முருகன் கோவில், ஊத்துக்குளி வெற்றி வேலாயுத சாமி திருக்கோயில், வெள்ளோடு ராசா கோவில், பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோவில், பேரூர் பட்டி விநாயகர் கோவில், கோவை தண்டு மாரியம்மன் கோவில், கோவை கோனியம்மன் திருக்கோவில் ஆகியவை குறிப்பிடத்தகுந்த கோவில்கள் ஆகும். கொங்கு நாட்டில் குன்று தோறும் குமரன் என்ற பழமொழிக்கு ஏற்ப கொங்கு நாடு முருகன் சன்னதிகளைக் கொண்ட பல சைவக் கோயில்களைப் பெற்றுள்ளது

# குறிஞ்சிநிலத் தலைவன் வேட்டுவர்

வேட்டுவர் என்றால் தலைவன் அரசன் அனைவருக்கும் உணவு கொடுபவன், உதவி செய்பவன் என்று பல பொருள்களில் பயின்று வருகிறது.

வேள் - வேளிர் - வேடர் - வேட்டுவர்

வேள் - வேளிர் - வேடர் - வேட்டுவர்

வேட்டுவர் என்பது பெயர்ச்சொல்லா அல்லது விணையாலனையும் பெயரா என்பதைக் குறித்தும் ஆய்வுகள் உண்டு. வேட்டு என்னும் சொல் வேள் என்பதிலிருந்து தோன்றியிருத்தல் வேண்டும் என்று அறிஞர்கள் சுட்டுவர்.

வேள் என்னும் நிலைமொழி ‘து’ (உணவு) வருமொழியுடன் புணர்ந்து வேட் என்ற தொடக்கத்தைப் பெறுகிறது.

வேள் + து = வேட்டு

வேட்டு + அர் = வேட்டுவர் (உணவு கொடுத்து உதவி செய்யும் அரசன்)

வேள் என்றால் விரும்பத்தக்கவன், தலைவன் என்று பொருள்.

வேள் - விரும்பத்தக்கத் தலைவன்.

வேள் என்னும் சொல் அரசன் பெயரோடு சேர்ந்து வந்தால் அந்த அரசனைக் கொடையாளி என உணர்ந்து கொள்ளவேண்டும். வேள் என்னும் சொல் உதவி என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

வேளான் - அரசியல் அதிகாரிவேட்டை, வேட்டுவன் போன்ற சொற்கள்.

*விள்/ *விய் போன்ற வேரில் வந்திருக்க முடியும். ஏனெனில் மேற்கண்ட வேருக்கு துளைத்தல், பிளத்தல், வெட்டுதல் போன்ற பொருள் உண்டு.

தொடர்புடைய சொற்கள் : விரிவு, விளி, பிரி, (வ் கர ப்கரப் போலி)

வேள் + து = வேட்டு.

வேட்டு + அர் = வேட்டுவர்

வேளிர் = வேட்டுவார் குலம்

## வேளிர் குலத் தலைவன்

செவ்வேள்; செவ்வேள் முருகப் பெருமானைக் குறிக்கும். முருகவேள் எனினுமாம். கருவேள் மன்மதனாம் மாறனைக் குறிக்கும். வேள் முல்லை மற்றும் குறிஞ்சித் தலைவர்க்காம் பெயர்.

## இருதிணைக்கும் உரியவர்கள்

வேட்டுவர்க்குத் தமிழ்நாட்டு வரலாற்றில் குறிப்பாக, கொங்கு நாட்டிற்குத் தனித்ததோர் சிறப்பும் உண்டு. பழமைமிக்க இக்கொங்கு நாடு சங்க காலத்திலேயே தனி நாடாகக் கருதப்பட்டது. இக்கொங்கு நாட்டின் பூர்வகுடிகள் வேட்டுவர்களே என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. புராணங்களும், பழங்கதை களும் இவர்களைக் குருகுலத்தினர் எனக் கூறுகின்றன. போர் குடியான வேட்டுவரின் முதன்மைத் தொழில் போர் அரசு நிர்வாகம் மக்களைப் பதுகாத்தல். இவர்கள் கொங்கு நாட்டின் பல பகுதிகளில் மன்னர்களாகவும், ஆட்சியாளர்களாகவும், படைத் தலைவர் களாகவும் விளங்கினர் என்பதனைப் பல சான்றுகளால் அறியலாம். இவர்கள் அரச குலத்தவர் என்பதனைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் உறுதி செய்கின்றன. கொங்கு தேச ராஜாக்கள் எனும் நூல் இவர்களை ராஜா வேடர்கள் என்றே சுட்டுகின்றது.

## வேட்டுவரின் பல்வேறு பட்டப் பெயர்கள்

வேட்டுவர்கள் வேடர், வேட்டுவர், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேடுவன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி, கொங்கர், நாடாழ்வான், ஊராளி வேட்டுவன் (ஊராண்மை), பாண்டிய புத்ரவர்க்கம், குருகுலராயர், முதலான பெயர்களால் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் குறிக்கப் பெறுகின்றனர். கவுண்டர், காடவராயர், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், நாயக்கர், காடுவெட்டி, வள்ளல், கொங்குராயர், ராயர், காங்கயன், ஊர்க்கவுண்டன், கங்கதிராயர், பிள்ளை முதலான பட்டங்களை இவர்கள் பெற்றிருந்தனர் என்பதனைச் சாசனங்களால் அறிகிறோம். வேட்டுவ ராசாக்கள்

பல்லவராயர், பூலுவராயர், சந்தனராயர், நரசிங்கராயர், வாளரசர், வாளரச மணவாளர் முதலான பெயர்களால் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றனர்.

இவர்கள் காளஸ்திரி மலைக் காவலர், சிவராத்திரி கண்ட பெரியோர், சித்திரபுத்திரர், கொங்கு தேசத்திற்கு உரியோர், கொல்லிமலைக்கு உரியவர்கள், சித்திர மேழிக் கொடியைப் படைத்த பெரியோர், வெற்றி வாளரசர், வங்கக் கடலொலி கைவர வாகை மாலை சூடியவர், கற்றவர்கள் என்று அல்லாள இளையான் செப்பேடுகளில் குறிக்கப் பெறுகின்றனர்.இவர்களுள் வேட்டுவன், வேடன், காவிலவன், மாவிலவன் பூவிலவன் எனும் ஐந்து பிரிவுகள் இருந்தன. பழங்குடியினரான. வேட்டுவரிடையே கணக்கில் அடங்காத கூட்டப் பெயர்கள் இருந்தன. எனவே தான் வேர் வகையை எண்ணினாலும், வேட்டுவர், வகையை எண்ண முடியாது எனும் முதுமொழி பிறந்தது. இருப்பினும் பல சான்றுகளின் அடிப்படையில் இவர்களிடையே ஏறத்தாழ 415 குலப் பிரிவுகள் இருந்தன என்பது அறியப்படுகின்றது. போர் தொழிலை மேற்கொண்ட இவர்கள் வாழ்வில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டது. இவர்கள் தொடக்க காலதில் ஓரிடத்தில் நிலையாகத் தங்க ஆரம்பித்தனர். பின்னர் விவசாயமும் சிலர் ஆடுமாடுகளை வளர்த்தனர். வேட்டுவரின் இம்முன்னேற்றம் குறித்து, எட்கார் தர்ஸ்டனும், 'தென்னிந்தியக் குலங்களும், குடிகளும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். பின்னர் இவர்கள் தலைவர்களாக இருந்தனர் எனவே வேளான் (குறுநில அரசர்) என்றும் அழைக்கப்பட்டனர்.

## வேட்டுவ அரசர்கள்

1. வல்வில் ஓரி
2. தலையூர் காளிங்க அரையன் சோழகோன்
3. மட்டுகடங்கா கொங்கு ராயர்
4. கடியநெடு வேட்டுவன்
5. அல்லாள இளையான்
6. கொங்காள்வான்
7. வீர வெஞ்சமன்
8. குன்னி வேட்டுவ ராஜா

9. கண்டீரக் கோப்பெருநள்ளி
10. செய்யான் பல்லவராயர்
11. கொடுமுடி அரசன்
12. வில்லி வேட்டுவ ராஜா
13. வேள் ஆய் இனியன்
14. சிறுத்தலை வேட்டுவ ராஜா
15. கஜேந்திர மாகாராஜன்
16. வேள் ஆய் அண்டிரன்
17. நீலிய கூடன்
18. குமணன்
19. பிட்டன் கொற்றன்
20. ஆய் எயினன்வேளாண் (தலைவன்) ஆகிய கூத்தன் கரையன் (வேட்டுவர்) என்பவா முக்கண்ண என்கிற ஏரியை உருவாக்குகினார்.

## பல்லவராயன் எனும் பட்டம்

மன்னர்கள் தங்கள் உயர் அதிகாரிகளுக்கு பட்டப் பெயர்களை அளிப்பது வழக்கம். அப்படிப்பட்ட பட்டப் பெயர்களில் "பல்லவராயன்" என்பதும் ஒன்று. வேட்டுவர் சமுதாயத்தில் பலர் அச்சிறப்புமிகு பல்லவராயன் பட்டத்தைப் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**"அறச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன்"**

**"பட்டாலியில் காவலன் வெண்கொற்றரில் சோணாப் பல்லவரையன்"**

**"முத்தூர்காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன்"**

**"ஈங்கையூரில் காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்க சோழப் பல்லவரையன்"**

**"கரூரில் கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவராயன்"**

"கவையன்புத்தூர்பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தன் ஆன உத்தம சோழப் பல்லவரையன்" இவர்கள் அனைவரும் அரசர்களால் சிறப்பிக்கப்பட்ட சிற்றசர்கள் ஆவர்.

வேட்டுவர் சமூகத்தில் பலர் “கூத்தன்” என்று பெயரைப் பெற்றுள்ளனர். கூத்தன் என்பது தில்லையில் நடனம் ஆடுகின்ற நடராசப் பெருமானையும் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆனால் கூத்தன் (கூத்தாடுகின்ற கூத்தன்), ஆனந்தக் கூத்தன் என்பன போன்ற தொடர்களால் இவர்கள் சிவ பக்தர்களாக இருந்தனர். "பட்டாலி காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான வாழவந்தான்"

> **“பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அதியமான்”**
>
> **“பட்டாலி கூத்தன் கூத்தன் ஆன அகளங்க நாடாழ்வான்”**
>
> **“பந்தரத்தை பூவாணி வேட்டுவரில் பெரும்பற்றார் கூத்தன் உடையார் ஆன ஆன்ந்தக் கூத்தர்”**
>
> **“வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் கூத்தாடும் தேவன் இருங்கோவே ளனான வலங்கை மீகாமன்”**

என்பன கல்வெட்டுகளில் காணப்படும் குறுநில மன்னர்கள் ஆவர். பட்டாலிக் கல்வெட்டு ஒன்றில் யாழ்வல்லான் என்று ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார். அக்காலத்தில் பட்டாலி வேட்டுவ குலப் பெருமக்கள் கலைப் பயிற்சி உடையவர்களாகவும், கலையார்வம் மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## வேட்டுவரின் குலங்களும், கூட்டப் பெயர்களும்

கொங்கு நாட்டு வேட்டுவரிடையே பல குலப் பிரிவுகள் காணப்படுகின்றன. இவர்களிடையே 1) வேட்டுவர், 2) வேடர், 3) காவிலுவர் (காவலர்), 4) மாவிலுவர் (மாவலர்), 5) பூவிலுவர் (பூவலர், பூலுவர்) எனும் பெரும் பிரிவுகள் இருந்தனவென்று பழங்கால இலக்கியங்கள் கூறுகின்றன.’ இவர்கள் போர்த் தொழிலில்ஈடுபட்டவர் எனலாம். வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது எனும் முதுமொழி வேட்டுவரிடையே நிலவிய எண்ணிறந்த குலப்பிரிவுகளை உணர்த்துகின்றது. இவை தொழில் அடிப்படையில் ஏற்பட்டப் பிரிவுகள் ஆகும். காவலர் என்போர் நாடு காவல் தொழிலில் (Watch and Ward) ஈடுபட்டிருந்தனர். பூவிலுவர் நிலம் தொடர்பான அதாவது வேளாண்மை புரிந்தனர். மாவிலர் என்போர் பெரும் வலிமை படைத்தவர்.

வேட்டுவர்கள் கூட்ட (குலம்) அடிப்படையிலும் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். சிலர் தாம் எந்த ஊரிலிருந்து குடி பெயர்ந்தனரோ அந்த ஊரின் பெயரைத் தமது கூட்டத்திற்கு வைத்துக் கொண்டனர். சிலர் பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி, வீரம், பண்பு ஆகியவற்றையும் தமது கூட்டப் பெயர்களாகக் கொண்டனர். வேட்டுவரிடையே ஏறத்தாழ 360 கூட்டப் பெயர்கள் காணப்படுகின்றன, இவற்றை நாம் கல்வெட்டு, செப்பேடு, நடுகல், வேட்டுவர் கலிவெண்பா, பஞ்சவர்ண ராஜ காவியம், இலக்கியம் - ஆகியவற்றின் வாயிலாக அறிகிறோம்.

இக்கூட்டப் பெயர்கள் எவ்வாறு தோன்றின? என்பதற்கான சில விளக்கங்களையும் இங்கே காணலாம். சிலவற்றிற்கான பெயர்க்காரணங்கள் முழுமையாக ஆராயப்படவில்லை. இவற்றுள் கரடி, கடம்புலி, புலி, நரிய, ஆமை, வராஹ ஆகியன விலங்குகளின் பெயர்களையும், காடை, குறுங்காடை, கௌதாரி, பறவை, மயில், அந்துவ பூச்சந்தை ஆகிய பெயர்கள் பறவைகளின் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தன. கொன்னை, தும்பை, புட்ப ஆகிய வேட்டுவ இனப் பிரிவுகள் பூக்களின் பெயரால் ஏற்பட்டன. கீரை, மணிய, பன்ன, புல்லை, பனைய, வாகை,வன்னி, புன்ன, விறகு ஆகியன செடி, மரங்களின் பெயர்களைக் கொண்டுள்ளன.

வேட்டுவர்கள் வீரப் பெருங்குடி மக்கள். போர் அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு, விழுப்புண் படாத நாட்களை வீண் நாட்களாகக் கருதுபவர். இவர்கள் பலவகைப்பட்ட படைப் பிரிவுகலை கையாண்டு உள்ளார்கள் கீழ்க்காணும் கூட்டப் பெயர்கள் இவற்றை உணர்த்துவதாக உள்ளன. சொட்டை என்பது ஒரு படைக் கருவி.மூலப் படை , கரிப்படை, பரிப்படை, உரிமைப் படை, சாந்தப் படை, மாந்தப் படை, பாசறை, வீர, சொட்டை, பறைப்படை, பம்பை - ஆகியன போர்க்களத்தில் வாசிக்கப்படும் இசைக்கருவிகள்.

கல்வெட்டுகள் வேட்டுவர், பூலுவர், காவலர் - என்னும் மூன்று பிரிவுகளை மட்டுமே குறிப்பிடுகின்றன. வேட்டுவரின் பல்வேறு பண்புகளை உருவத்தை, குணங்களை விளக்குவதாகவும் சில கூட்டப் பெயர்கள் அமைந்துள்ளன. சில உடலின் பகுதிகளையும் குறிப்பன. அவை முறையே மான, முரட்டு, மின்ன, மினுக்க, பொன்ன, சிறுத்தலை, மூலை.குடுமி, செம்ப, வெள்ளை என்பனவாகும். சிறுத்தலை வேட்டுவன் எனும் பெயரில் வீரத் தலைவன் ஒருவன் இருந்தான். இவ்வீரன் கபிலர் மலை முதல் கை

தீண்டா பாழி வரை, ஆண்டான்கோயில் முதல் தென்னிலை வரை உள்ளப் பகுதிகளை ஆண்டு வந்தான். அவன் வழியினரும் அவனது நினைவாக சிறுத்தலை வேட்டுவர் எனப்பட்டனர்.

பாண்டிய வேட்டுவர், சேர வேட்டுவர் எனும் பெயர்கள் அவர்களது வழி தோன்றல்கள் அவர்கள் எடுத்துக்காட்டாக பாண்டிய வேந்தனின் முன்னோன் (அல்லது தலைவனின்) வழி வந்தவர்கள் பாண்டிய வேட்டுவர் ஆயினர்.

தமது சொந்த ஊரின் பெயரை நினைவு கூர்தல் பொருட்டும் குலப் பெயர்கள் இடப்பட்டன. எடுத்துக்காட்டாக கொல்லி மலையில் வாழ்ந்து, கொல்லி மலையை விட்டு வெளியூர்களுக்குக் குடி பெயர்ந்தவர்கள் கொல்லி வேட்டுவர் எனப்பட்டனர். கீழ்க்காணும் பட்டியல் இவர்களது பூர்வீகத்தை நினைவுபடுத்தும்.

| **இடத்தின் பெயர்** | **கூட்டப் பெயர்** |
|---|---|
| விஜயமங்கலம் | விஜயமங்கல வேட்டுவர் |
| வராகமலை | வராக வேட்டுவர் |
| கொடுமுடி | கொடுமுடி வேட்டுவர் |
| காக்காவாடி | காக்காவாடி வேட்டுவர் |
| தென்னிலை | தென்னிலை வேட்டுவர் |
| பூவானிய நாடு | பூவானிய வேட்டுவர் |
| அந்தியூர் | அந்தி வேட்டுவர் |
| சலங்கபாளையம் | சலங்கை வேட்டுவர் |
| ஆப்பக்கூடல் | ஆப்ப வேட்டுவர் |
| கண்ணாடிப்புத்தூர் | கண்ணாடி வேட்டுவர் |
| கரடிப்பட்டி | கரடி வேட்டுவர் |
| வெங்கம்பூர் | புள்ளை வேட்டுவர் |
| நஞ்சைக்காளிக்குறிச்சி | நஞ்சை வேட்டுவர் |
| மலையம்பாளையம் | மலைய வேட்டுவர் |
| மூலனூர் | மூலவேட்டுவர் |
| பருத்திப்பள்ளி | பருத்திவேட்டுவர் |
| காட்டுப்பாளையம் | காட்டுவேட்டுவர் |
| கரட்டாம்பாளையம் | கரட்டுவேட்டுவர் |

| | |
|---|---|
| மின்னவேட்டுவன்பாளையம் | மின்னவேட்டுவர் |
| வராகமலை | வராகவேட்டுவர் |
| வடுகம்பாளையம் | வடுகவேட்டுவர் |
| பொன்னம்பாளையம் | பொன்னவேட்டுவர் |

இவ்வாறு சில வேட்டுவ இனப் பிரிவினரின் பெயரால் சில ஊர்கள் பெயரிடப்பட்டுள்ளதை இங்கு நாம் அறியலாம். இவ்விதமாக புன்னம், படடாலி, பௌத்திரம், ஈங்கூர், நொய்யல் முதலான ஊர்களைச் சேர்ந்தவர்கள் தமது குலப் பெயரை ஊர்ப் பெயருடன் அமைத்துக் கொண்டனர். கரைய குலச் சொக்கனேந்தல் என்பானின் பெயர் பழமங்கலம் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளதனைச் சுட்டலாம். ஊராளியாக, கிராமத் தலைவன் போன்று விளங்கியவன் ஊராளி வேட்டுவன் எனப்பட்டான். எடுத்துக்காட்டாக 'ஊராளி வேட்டுவன் அழகன் காளி' என வரும் துக்காச்சி நடுகல் கல்வெட்டைக் குறிப்பிடலாம்.

## கவுண்டர் பட்டம்

வேட்டுவர், கவுண்டர்' எனும் பட்டம் கொண்டுள்ளனர். காமிண்டன் என்பதே கவுண்டர் என ஆயிற்று. காமிண்டன் என்ற சொல்லிற்கு வலுவானவன், செல்வாக்கு மிக்கவன் எனும் பொருள் உண்டு. காமிண்டன் எனும் சொல் பயின்று வரும் கல்வெட்டுகள் அனைத்தும் நிலம், நீர்ப்பாசனம் போன்ற வேளாண்மை தொடர்பான செய்திகளாகவே உள்ளன. இச்சொல் கர்நாடகக் கல்வெட்டுக்களில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பயிலப்பட்டு வருகின்றது. தருமபுரிக் கல்வெட்டுக்களில் இச்சொல் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. காமிண்டன் எனும் பெயரே திரிந்து பின்னாளில் கவுண்டன், கவுட என்று மருவியிருக்கலாம். கர்நாடக தேசத்தில் கிராமத் தலைவனாகத் திகழ்பவன் 'கௌடா' என அழைக்கப்பட்டான். தமிழில் காமுண்டன் என்பதுவே கன்னடத்தில் 'கௌடார்' ஆகும். கா எனும் சொல் மக்களைக் காப்பவன் எனும் பொருள்படும். எனவே மக்களைக் காக்கும் வலிமை மிக்கத் தலைவன் 'காமிண்டன்' எனப்பட்டான். பின்னர் படைத்தலைவர் களுக்கும் கவுண்டன் எனும் பட்டம் வழங்கப்பட்டது. பிற்காலத்தில் சமுதாயத்தில் அந்தஸ்தும் மதிப்பும் பெறுவதற்காக வசதி படைத்த சிலர் இப்பட்டத்தைச் சூடிக் கொண்டனர். இன்று இது சாதிப் பட்டமாக மாறிவிட்டது. வேட்டுவர் கவுண்டர் எனும் பட்டத்தைக் கொண்டுள்ளனர்.

**கொங்கு 24 நாட்டுக்கும் உரிய வேட்டுவர் குலப் பெருமக்கள்**

(1) பூந்துறை நாடு- வேந்த வேட்டுவர்
(2) வடகரைநாடு அந்தி வேட்டுவர்
(3) காஞ்சிக் கோயில் நாடு - வேம்ப வேட்டுவர்
(4) ஒடுவங்க நாடு - இலங்கை வேட்டுவர்
(5) குறுப்புநாடு - உரிமைப்படை வேட்டுவர்
(6) ஆறுநாடு - அரிச்சந்திர வேட்டுவர்
(7) பொன்குலுக்கிநாடு - தணம்ப வேட்டுவர்
(8) மணநாடு - வெங்கச்சி வேட்டுவர்
(9) காவடிக்காநாடு - மணிய வேட்டுவர்
(10) வாரக்கநாடு -மோக்காளி வேட்டுவர்
(11) அண்ட நாடு - சுண்டை வேட்டுவர்
(12) வைகாவூர் நாடு - வாகை வேட்டுவர்
(13) நல்லுருக்கா நாடு - புல்ல வேட்டுவர்
(14) தென்கரை நாடு - புன்னாடி வேட்டுவர்
(15) தட்டய நாடு - பட்டாலி வேட்டுவர்
(16) தலைய நாடு - கதுகால வேட்டுவர்
(17) சேலநாடு - சேர வேட்டுவர்
(18) காங்கய நாடு - சாந்தப்படை வேட்டுவர்
(19) வெங்கல நாடு - மீன வேட்டுவர்
(20) கிழங்கு நாடு- கிழங்க வேட்டுவர்
(21) நரைய நாடு - காட்டு வேட்டுவர்
(22) அரையநாடு - கரைய வேட்டுவர்
(23) பூவாணிநாடு - பூவாணி வேட்டுவர்
(24) எழுகரை நாடு - உசர வேட்டுவர் - (அப்பிச்சிமார் காவியம்)

## இலக்கியங்களில் வேட்டுவர்களை பற்றி

1. வெம் மறவர் குலத்து வந்த வேட்டுவர் சாதியர் - பெரிய புராணம் -756.

   கொடும் செயல் மிக்க மறவர் குலத்தில் வந்தவர்கள் என்று கூறுகிறது.

2. வீரத்தில் ஓர் வேட்டுவன் - தேவாரம் .

3. வேட்டுவர் உருவில் இறைவனைக்கானலாம்-பாட்டுக்கோர் பாரதி.

4. மூரிவார் சிலை மாவழியர்-மணிமேகலை.

5. கொற்றவை கொண்ட அணிக்கொண்டு நின்றவி பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ பொற்றொடி மாதர் பிறந்த குடிபிறந்த வில்தொழில் வேடர் குலனே குலம் - சிலப்பதிகாரம் வேட்டுவ வரி.

6. கரும்புறத்தாருக் கெல்லாம் அரசன் மாவலியன் - காளமேகப்புலவர்.

7. வில்விழா எடுக்க என்று விளம்பினான் வேடர் கோமான் - பெரிய புராணம்.

8. மாவலி மருமாள் சீர்கெடி திருமகள் சீர்த்திஎன்னுந் திருத்தறு தேவியோடு - மணிமேகலை .இங்கு மாவிலி மகளாகக் சீர்த்தி சொல்லப்படுகிறாள். சீர்த்தி சோழப் அரச மாதேவி ஆவார்.

9. மாந்தரன் பதிகம் ஓலை சுவடி – நிலந்த்தருசீர்ப் பெருங்கீர்த்தி நிலைமைபெற்று பாண்டியனின் குலம் பெருக வந்துதித்த கோவேந்தர் ஐம்பிரிவர் பூவழியர்,மாவிலியர் பொற்புமிகும் காவலியர் சேவகமே மிகும் சேவக்க மிகும் வேடர் செம்மை மிகும் வெட்டுவார்கள் பன்றிமலை மண்டலத்து பாகொழுகும் மது நாட்டில் வெற்றிதரு விலாடபுரி மேவியமாந்தரசு புரியும் காவலராய் கொங்கரெனும்.இப்பாடல் பாண்டியனின் புத்திரவர்க்கமாக வேட்டுவர்களை கூறுகிறது.

10. வேட்டுவர்கள் பகைபுலத்துக்கு காவலாக இருந்தனர், தனியாட்சி நடத்தினர் என்று முல்லைப்பாட்டு கூறுகிறது - முல்லைப்பாட்டு (வரி -26-28) கான்யாறு தழீஇய வகனெடும்

புறவிற் சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட விடுமுட் புரிசை யேமுற வளைஇப் படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி.

## வேட்டுவர் பற்றிய கல்வெட்டுகள்

1. கி.மு 300 வத்தலகுண்டு -அந்துவ வேட்டுவன் என்ற பெயர் பொறித்த நடுகல்.
2. கி.மு 400 கொடுமணம் -வேட்டுவர் பெயர் பொறித்த கணையாழிகள்.
3. அந்தியூர் செல்லீஸ்வரர் கோவில் பாசறை - வேட்டுவன் கொங்கன்.
4. சோழன் பூர்வ பட்டயம் - ஆதித்ய சோழன் இராஜ வேடர்களை வென்று கொங்கு நாட்டை கைப்பற்றினான் என்று உள்ளது. தென்னிலை செப்பேடு - வேட்டுவர்கள் வேளாண் காடை குலத்துக்கு ராசா கோவிலில் முப்பாட்டு உரிமையை கொடுத்தது.
5. திருமுருகன் பூண்டி முருகநாதர் கோவில் - ஊராண்மை பூலுவ வேட்டுவன் கல்வெட்டு.
6. ஒட்டியர் மற்றும் சல்லியர்களை தோற்கடித்து குடிகளை காத்தனர் என்று வேட்டுவ பாளையக்காரர் வரலாறு கூறுகிறது.
7. கருவூர் அய்யர்மலை கல்வெட்டு “படித்துறை வேடன் அதிட்டனம்: கி.பி.1-ம் நூற்றாண்டு.
8. வேட்டுவன் ஏழுநூற்றவன் வேனாட்டிலுள்ள வாழையூரில் இருந்த வாழையூர் அடிகளுக்கு மங்கள்பாடி என்ற ஊரை தானமாக வழங்கினான்.
9. நந்திவர்மன் பல்லவன் உதய்யெந்திரன் செப்பேடு சுலோகம் (58) உதயணன் என்ற வேதா அரசனைப்பற்றி கூறுகிறது.

## குருகுலவம்சம்.

1. மானூர்பாளையம் செப்புபட்டயம் வேட்டுவர்களை குருகுல வம்சம் என்றும் வணராயக் கவுண்டர் ஆட்சி செய்ததையும் கூறுகிறது.

2. கொடுமணல் கணபதி பாளையம் செல்லாண்டி அம்மன் கோவில் கல்வெட்டு-வேட்டுவர்கள் குருகுல வம்சத்தவர்கள் என்று கூறுகிறது.

**"மூன்று கொலாம் கணை கையது வில் நான்**
**மூன்று கொலாம் புர மெய் தன தாமே"**
**- பாடியவர்: திருஞானசம்பந்தர்**

**"வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்**
**வல்லை வட்டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்தில்லை**
**வட்டந்திசை கைதொழுவார் வினை ஒல்லை வட்டங்**
**கடந்தோடுதல் உண்மையே"**
**- பாடியவர் : திருநாவுக்கரசர், தலம்: தில்லை சிதம்பரம்**

**"கானவர்**
**கரிபுனம் மயக்கிய அகன்காட் கொல்லை**
**ஐவனம் வித்தி மையுறக் கவினி**
**ஈனல் செல்லா ஏனற்கிழுமெனக்**
**கருவி வானம் தலை இ"**

(வேட்டுவர் சுடப்பட்டுக் கரிந்த புனத்தை மயங்க உழுத அகன்ற இடத்தையுடைய கொல்லைகக்கண் ஐவன நெல்லோடு வித்தி இருட்சியுற அழகு பெற்றுக் கோடை மிகுதியில் ஈன்றலைப் பொருந்தாத தினைக்கு இழு மென்னும் ஓசையுடன் மின்னலும் இடியும் முதலாகிய தொகுதியுடைய மழைத்துளி சொரிந்தது )என்று புற நானூறு கூறுகிறது. - புற நானூறு (159)

**வேட்டுவ குலத்தை சேர்ந்த நாயன்மார்கள் : (2)**
**கோச்செங்கட் சோழ நாயனார்-சோழ வேட்டுவ குலம்**
**இடங்கழி நாயனார் -குடுமி வேட்டுவ குலம்**
**நரசிங்க முனையரைய நாயனார்-மின்ன வேட்டுவ குலம்**
**புகழ்ச்சோழ நாயனார்-சோழ வேட்டுவ குலம்**
**கண்ணப்ப நாயனார்-காளத்தி வேட்டுவ குலம்**

# புறநானூறு

புறநானூறு - 324. உலந்துழி உலக்கும்!
பாடியவர்: ஆலத்தூர் கிழார்
திணை: வாகை
துறை: வல்லாண் முல்லை.

**வெருக்கு விடையன்ன வெருள்நோக்குக் கயந்தலைப்**
**புள்ளூன் தின்ற புலவுநாறு கயவாய்,**
**வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்**
**சிறியிலை உடையின் சுரையுடை வால்முள்**
**ஊக நுண்கோற் செறித்த அம்பின்,**
**வலாஅர் வல்வில் குலாவரக் கோலிப்,**
**பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்**
**புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர்க்,**
**குமிழ்உண் வெள்ளைப் பகுவாய் பெயர்த்த**
**வெண்வாழ் தாய வண்காற் பந்தர்,**
**இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்,**
**பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை,**
**வலம்படு தானை வேந்தற்கு**
**உலந்துழி உலக்கும் நெஞ்சறி துணையே.**

## பாடலின் பொருள்:

நெடுந்தகை. உயர்ந்த தகைமைப் பண்பு கொண்டவன். பந்தலில் இடையன் தன்னிடமுள்ள நெய்யை ஊற்றி ஏற்றிவைத்த சிறிதாகக் கொழுந்து விட்டு எரியும் விளக்கொளியில் பாணரின் யாழிசையைக் கேட்டுக்கொண்டு நாணத்தோடு அமர்ந்திருக்கும் பெருந்தகை. குமிழம் பழம் போல வெள்ளை வாயைக் காட்டிச் சுவைத்துக்கொண்டு அமர்ந்திருக்கும் நெடுந்தகை. வெண் முத்துக்கள் உதிர்ந்துகிடக்க, வலிமையான கால் நட்ட பந்தலுக்கு அடியில் இருக்கும் நெடுந்தகை. அவன் ஊரும் சிறுவர்களும் சீறூர் மகாஅர் அவனது ஊர் மக்கள் வேட்டுவர். ஆண் காட்டுப்பூனை




போல் வெகுண்டு நோக்கும் பார்வையை உடையவர்கள். கயந்தலை (யானைக்குட்டி) போலத் தலையை உடையவர்கள். பறவைகளை வேட்டையாடி அதன் கறியைத் தின்று புலவுநாற்றம் வீசும் வாயை உடையவர்கள். வெளுத்த வாயினை உடையவர்கள். அந்த வேடர்களின் மக்கள். விரும்பிப் போற்றும் மக்கள். துணையாகச் சேர்ந்தே விளையாடும் மக்கள். தாமே வில்லும் அம்பும் செய்துகொண்டு விளையாடுவர். சிறிய இலையை உடையது உடைமரம். அதில் கூர்மையான வெண்ணிற முள் இருக்கும். ஊகம் எனப்படும் நாணாத்தட்டை அவர்களுக்கு அம்பு. அந்த அம்பின் நுனியில் உடைமுள்ளைச் செருகி வைத்திருப்பர். வலார் என்பது வளைந்து நிமிரக்கூடிய இளங்கோல். அதனை

வளைத்துக் கட்டி வில் செய்து கொள்வர். கருப்பை என்னும் காட்டு எலியை வேட்டையாடக் குறி பார்ப்பர். இப்படிப்பட்ட புன்புலம் (வளமில்லாத நிலம்) தழுவிக் கிடப்பதுதான் அந்த வல்லாளன் ஊர்.

## வல்லாண் முல்லை – இலக்கண நூல் விளக்கம்:

வல்லாண் முல்லையைத் தொல்காப்பியம் இதனை பகைவர் நுழையாமல் காக்கும் வேல்வீரனின் (வேட்டுவன்) வல்லமையைக் கூறுவது. வல்லாண் முல்லை எனக் குறிப்பிடுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை வாகைத்திணையின் 33 துறைகளில் ஒன்றாக இதனைக் குறிப்பிடுகிறது. நல்லாண்மை உடையவனின் குடியையும், ஊரையும் சிறப்பித்துக் கூறுவது 'வல்லாண் முல்லை'.

## இராஜபாளையத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான கொற்றவை சிற்பம்:

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியரும், தொல்லியல் ஆய்வாளருமான முனைவர் போ. கந்தசாமி கூறியபோது, மாங்குடிக்கு அருகே உள்ள பெருமாள்பட்டி கிராமத்தில் ஆவுடையாபுரம் பகுதியில் கருப்பையா என்பவரின் புன்செய்நில உழவுப் பணியின் போது 6 அடி உயரமுள்ள கொற்றவை சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இச்சிற்பத்தின் நான்கு



**ஆயிரம் ஆண்டுகள் பழமையான கொற்றவை சிற்பம்.**

கைகளும் உடைந்த நிலையில் காணப்படுகிறது. அப்பகுதியில் இச்சிற்பத்தின் ஆசனக் கல்லும் அந்நிலத்திலேயே கண்டெடுக்கப் பட்டது. தென்தமிழகத்திலேயே முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்ட கொற்றவை சிற்பம் மிக நேர்த்தியாக அழகாக செதுக்கப்பட்டுள்ளது.

தற்காலத்தில் வட இந்தியாவில் கொற்றவைக்குச் சிங்கம் அல்லது புலி வாகனமாக சிற்பங்களில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் கலைமான் கொற்றவையின் வாகனமாக காட்டப்படுவது மிகவும் அரிதாக உள்ளது. வட தமிழகத்தில் எடுக்கப்பட்ட மான் வாகனத்தைத் கொண்ட கொற்றவை சிற்பம் ஒன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

தென்தமிழகத்தில் கொற்றவையின் வாகனமாகக் கலைமான் காட்டப்பட்டுள்ள சிற்பம் முதன்முதலாகத் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்திலிருந்தே கொற்றவை வழிபாடு மிகச் சிறந்த வழிபாடாகும். சங்க இலக்கியங்களில் கொற்றவை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கொற்றவை வழிபாடு குறித்து சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரிகள் மூலம் பதிவு செய்யப் பட்டுள்ளது. பாலை நிலத்தில் வாழ்ந்த ஆரலைக் கள்வராகிய எயினர்கள் வணங்கும் கடவுளாக கொற்றவை விளங்குகின்றது. ஆநிரை கவர்தல் போரில் எயினர்க்கு வெற்றிதரும் வழிபாடாகவும் கொற்றவை வழிபாடு அமைந்திருந்தது. நெடுநெல்வாடையில் போருக்குச் செல்லும் வீரன் வெற்றியுடன் திரும்ப வேண்டும் என்று வெற்றி தெய்வமாக வணங்கியதாகவும் நச்சினார்க்கினியர் உரையில் விளக்கமளித்துள்ளார்.

பாலை நில மக்களின் பிரதானக் கடவுளாகவும், போர்த் தெய்வமாகவும் கொற்றவை வழிபாடு இருந்துள்ளது. கொற்றவை வழிபாடு வேட்டைத் தெய்வ வழிபாடாகவும், சங்ககாலத்தில் இருந்து தொடர்ந்து வழிபட்டு வருகின்றனர்.

காட்டு விலங்குகளையும், வேட்டுவர்களையும் காக்கும் தெய்வமாகவும் கொற்றவை கருதப்படுகிறாள். தற்போது கொற்றவை வழிபாடு பிடாரி, காளி, துர்க்கை போன்ற கடவுளின் வழிபாட்டோடு சேர்க்கப்பட்டுள்ளது. 6 அடி உயரமுள்ள கொற்றவை புடைப்புசிற்பம் நேராக நின்றவாறு, நான்கு கைகள் உடைந்த நிலையில், அபய முத்திரையுடன் உள்ள ஒரு கை மட்டும் கயிற்றால் கட்டியுள்ளனர். அழகிய திருமுகம் கொண்ட

அலங்கரிக்கப்பட்ட கரண்ட மகுடம் சூட்டிய நிலையில், நீண்ட இரு மகர குண்டலங்கள் உடனான காதணிகளும் அணிந்து உள்ளது போன்றும் மிக நேர்த்தியாக சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. கழுத்தணிகள் அலங்காரத்துடன் காட்டப்பட்டு, மற்றுமொரு அணிகலன் ஒன்று வயிற்றுப் பகுதி வரை தொங்கிய நிலையில் சூலாயுதம் கட்டப்பட்டுள்ளது.

மார்புக் கச்சை அணிந்தவாறும், இடை மெலிந்தும், கீழாடை இடுப்பு அணிகலன்களோடு அலங்கரிக்கப்பட்டு துணி மடிப்புகளுடன் பாதம் வரை அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

சிற்பம் நிறுத்தப்பட்டுள்ள ஆசனக்கல்லும் மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. கொற்றவையின் வாகனமான கலைமான் சுருங்கிய கொம்புகளுடன் மிக அழகாக முகப் பகுதியும் பின்பகுதியும் செதுக்கப்பட்டிருக்கிறது. கொற்றவை சிற்பத்தின் உருவ அமைப்பைக் கொண்டு முற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த அரிய வகை சிற்பமாக கருதப்படுகிறது.

> இச்சிற்பத்தை மாங்குடியைச் சேர்ந்த மலைக்கனி, ஜீவா, பெருமாள்பட்டியைச் சேர்ந்த வெள்ளைச்சாமி, சுப்பிரமணியம் மற்றும் இராஜகுரு ஆகியோர் சிற்பத்தைச் சுத்தம் செய்து அங்கு உள்ள ஆலமரத்தின் கீழ் ஆசனக்கல் மேல் கொற்றவை சிற்பத்தை நிறுத்தி வைத்து வழிபாடும் செய்து வருகின்றனர். ஆவுடையாபுரம் பகுதியில் ஏற்கெனவே 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நந்தி சிற்பம், தமிழ்க் கல்வெட்டு, விநாயகர் சிற்பம், மற்றும் பல கல்தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன். அந்த வகையில் பழமையான கொற்றவை சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், இப்பகுதியில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான ஒரு கோயில் அழிந்திருக்கலாம் என்பதை கள ஆய்வின் மூலமாக இப்பகுதி வரலாற்றை உறுதிப்படுத்த முடியும்" என்று முனைவர் போ.கந்தசாமி கூறினார். (இராஜபாளையம், தினமணி, 3 - ஜூன், 2020.)
>
> **“மாற்றமில்லாத இறந்த கால நிகழ்ச்சிகளின் தொகுப்பே வரலாறு”** என்கிறார் அரிஸ்டாட்டில்.

நெருப்புக் குழம்பாக இருந்த உலகம் கால ஓட்டத்தில் குளிர்ந்து, இறுகி, பாறையாகி உயிரினம் வாழும் தட்ப வெப்பத்தைப்

பெற்ற இடம் மலை தான் என விஞ்ஞானிகளும், வரலாற்று அறிஞர்களும் கூறுகின்றனர்.

புறப்பாடல் **"கல் தோன்றி மண் தோன்றாக் காலம்"** என முதலில் மலையைத் தான் (குறிஞ்சி) குறிப்பிடுகிறது. இதன் மூலம் முதலில் தோன்றிய ஆதிக்குடி (தொல்குடி) மலையில் வசித்த வேட்டுவ இன மக்களே ஆவர்.

பெரும்பாலும் வேட்டுவர்கள் வாழ்ந்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை உலக பாரம்பரியச் சின்னமாக ஐ.நா.வின் **'யுனெஸ்கோ'** அமைப்பு அறிவித்துள்ளது. இம்மலை இமய மலையை விடப் பழமையானது.

அறிவியலின் படியும், நூல்கள் கூறுவதின் படியும் பார்த்தால், முதலில் தோன்றிய நிலம் மலை (குறிஞ்சி) அதன் பின் தான் காடு, வயல் எனத் தோன்றியிருக்கக்கூடும். அப்படிப் பார்க்கும்போது முதலில் தோன்றியவர்கள் மலையில் வசித்த வேட்டுவ இன மக்களே ஆவர்.

**"சேயோன் மேய மை- வரை உலகமும்"** (தொல்காப்பியம், அகத்திணையியல், ஐந்தாம் பாடல்) எனத் தொல்காப்பியர் குறிஞ்சி நிலத் தெய்வமான வேட்டுவத் தலைவன் குமரனையும் குறிஞ்சி நிலம் என மலையையும் குறிப்பிடுகிறார்.

ஆதிமனிதனான வேட்டுவன் கல்லை எடுத்து வேட்டை ஆடினான், அடுத்து அவன் காட்டை அழித்து நாட்டை ஆக்கினான். முதலில் குறிஞ்சி நிலத்தில் தோன்றிய வேட்டுவர்கள் முல்லை, நெய்தல், மருதம் எனத் தங்களுடைய நாகரீகத்தைப் பரப்பினர்.

## சுமேரிய நாகரிகம்:

குமரன் நாகரிகமே குறிஞ்சி நாகரிகம். குறிஞ்சியின் தலைவன் குமரன். சுமேரிய நாகரிகம் கி .மு 4000- 2000 க்கு இடைப்பட்டது. தமிழ் நாகரிகமும் சுமேரிய நாகரிகமும் ஒன்றெனவே கருதப்படுகின்றன. குமரி நாகரிகம், குமரன் நாகரிகம் என்றால் சுமரியின் நாகரிகமும் குமரன் நாகரிகமே ஆகும்.

"சுமேரியாவில் போருக்குரிய கடவுள் முருகன். தமிழ் நாகரிகமும் குமரன் நாகரிகமும் குறிஞ்சி நாகரிகமேயாகும்" என்கிறார் டாக்டர். மு. கோவிந்தசாமி தன்னுடைய **'தமிழக வரலாறு'** எனும் நூலில்.

## சிந்துவெளி நாகரிகம்:

ஜான் மார்சல் கி.மு 3250- 2750 க்கும் இடைப்பட்டது சிந்துவெளி நாகரிகம் என்கிறார் வேட்டுவர்களின் தலைவன் குமரன். வேட்டுவர்களின் குலதெய்வம் கொற்றவை, சக்தி எனும் காளி ஆகும்.

சுமேரிய நாகரிகத்திற்கு அடுத்து சிந்துவெளி நாகரிகம் ஆகும். சக்தி (கொற்றவை) வணக்கம் சிந்துவெளியில் காணப்படுகிறது. கொற்றவை (சக்தி) வணக்கம் ஐந்திணைத் துறைகளுள் குறிஞ்சியில் தொல்காப்பியரால் கூறப்படுகிறது. குறிஞ்சியின் மக்கள் வேட்டுவர்கள் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**'சபரர்'** என்றால் வேட்டுவர் என்றும் **'சபரி'** என்றால் வேட்டுவச்சி என்றும் பொருள்படும். சிவபெருமான் அர்சுனனுக்கு பாசுபதம் அளிக்க வேட்டுவக் கோலத்தில் சென்றார். அக்கோலம் கிராதக கோலம் எனப்படும். கிராதர் என்றால் வேட்டுவர் என்று பொருள்படும். கொற்றவை கோலம் **'சபரி துர்க்கை'** என்பர்.

> **"உலகில் முதல் மனிதன் தமிழன்,**
> **தமிழே உலகின் முன்மொழி,**
> **திராவிட மொழிகளின் தாய்மொழி,**
> **ஆரிய மொழியின் மூலமே தமிழ் மொழி தான்"**
> **- (தேவநேயப் பாவாணர்)**

உலக நாகரிகங்களெல்லாம் நதிக்கரையில் தோன்றியது என்பர் சிலர் ஆனால் உலகம் முழுவதும் நாகரிகத்தைப் பரப்பிய தமிழ் நாகரிகம் முதன் முதலில் மலையில்தான் தோன்றியது.

வேட்டுவத் தலைவன் குமரனைத் தமிழ்க் கடவுளாக இன்று உலகம் முழுவதும் தமிழர்களால் வணங்கப்படுகிறது.

"முருகனின் கையிலுள்ள வேல் முருகனுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ள முக்கிய குறியீட்டுச் சின்னமாகும். குறிஞ்சி நிலப் பிரிவினரான வேட்டுவர் முருகனை வணங்கிய போது தம்மைக் காக்கும் ஆயுதமாகவும் தம்முடைய வேட்டைத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட கருவியாகவும் விளங்கிய வேலினைத் தமது தலைவனான முருகனுடன் இணைத்தனர். பின்னர் அதுவே இறந்துவிட்ட தன்னுடைய தலைவனின் ஞாபகச் சின்னமாக கொள்ளப்பட்டது.

வேடுவர் தெய்வமான முருகன் போர்க் கடவுளாகப் போற்றப்பட்ட போது போர் ஆயுதமான வேல் அவனுடன் இணைக்கப்பட்டது. வெற்றி கொள்ளல் என்னும் பொருளைத் தரக்கூடிய **'வெல்'** என்ற வேர்ச்சொல்லின் அடிப்படையில் பிறந்த 'வேல்' அவ்வெற்றிக் கடவுளை குறிக்கப் பயன்படுத்தப்பட்டதில் வியப்பில்லை" (டாக்டர் மா.காந்திதாசன். 'தமிழகத்தில் முருக வழிபாடு'- பக்கம் 120 -121).

சாதிகள் அதிகம் இல்லாத சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே வேரூன்றி இன்றுவரை பெயர் சொல்லும் ஒரே இனம் வேட்டுவ இனமே ஆகும். தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு போன்ற சங்க நூல்கள், சிலப்பதிகார 'வேட்டுவவரி' சுந்தரர் 'வேடுபறி' இவைகளெல்லாம் வேட்டுவர் பற்றிக் கூறுவதில் இருந்தே அதன் பழமையையும் பெருமையையும் அறியலாம். "தமிழ் இலக்கியங்கள் இந்த மண்ணின் வரலாற்றை அறியக் கிடைத்த அரிய பதிவுகள் அவற்றை முழுமையாகவும் பிற பதிவுகளுடன் இணைய நோக்கியும் பயன்படுத்தும் போது வரலாற்று மீட்டுருவாக்கம் எளிதாகிறது. பெண் தெய்வ வழிபாட்டின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்த ஆய்வின் போது தான் சிலப்பதிகாரத்தின் பீடு நன்கு புரிந்தது. ஓர் இலக்கியத்தை இலக்கியமாக அணுகும் போது ஏற்படும் புரிதலை விட, அதைப் பிற பதிவுகளுடன் ஒப்பிட்டு ஆராயும் போது கிடைக்கும் புரிதல் இணையற்றதாக அமையும்.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் தெரிவிக்கப்படும் சிலக் கருத்துக்களைப் பல்லவர் சிற்ப இருப்புகளுடனும் சோழர் கல்வெட்டுக்களுடனும் ஒப்பிட்டு நோக்கும் போது தான் வரலாறு எப்படியெல்லாம் தொடர் பிழைகளைப் பின்னிக்கொண்டு தேடுதலுக்குக் காத்திருக்கிறது என்பதை உணர முடிகிறது.

## இரண்டு சான்றுகளை இங்கு பார்க்கலாம்:

வேட்டுவ வரியின் மறவர் வழிபாட்டு நிகழ்ச்சியில் அவர்தம் கூற்றாக இரண்டு கருத்துக்களை இளங்கோ முன் வைக்கிறார். அமரி, குமரி, சூலி என்றெல்லாம் அழைக்கப் பெறும் கொற்றவை சிவபெருமான், திருமால், நான்முகன் ஆகிய மூவரின் இதயத்திற்கே விளக்கமானவள். இது வேட்டுவரின் கூற்றாக அமைந்துள்ளது.

மற்றொன்று, வேண்டுதல் "கண்ணுதலோன் (சிவபெருமான்) பாகத்து மங்கையுருவாய், மறையேத்தவே நிற்பாய்". இந்தப்

பாடலடி இணையற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இப்பாடலடி எழுந்த காலத்தில் தான், 'உமை' எனும் பெண் தெய்வம் கொற்றவைக்கு இணையாகத் தமிழ் நாட்டில் ஏற்றம் பெறத் தொடங்குகிறது. சமகால இலக்கியங்களும் பல்லவர் சிற்பங்களும் கல்வெட்டுகளும் இந்த நுழைவை மெய்ப்பிக்கின்றன. தலைமையிடத்திலிருந்து கொற்றவை நீக்கப்படுவதை அறிந்த வேட்டுவர்களின் எதிர்ப்புக் குரலே இளங்கோவடிகளால் பாடலடியாய்ப் பதிவாகியுள்ளது.

இந்த வேண்டுதல் நிறைவேறியதைச் சோழர் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. புள்ளலூர்க் கோயிலில் துர்க்கா பட்டாரகிக்கு சிவ பிராமணர் திரு ஆராதனை செய்தனர். உத்திரமேரூரில் துர்க்கா பட்டாரகிக்குச் சென்னடை விளக்குகள், அர்ச்சனா போகம், ஸ்ரீ பலி ஆகியவற்றிற்காக நிலம் வழங்கப்பட்டது.

வேட்டுவர்களின் கூற்றாக வெளிப்படும் 'மும்மூர்த்திகளின் இதய விளக்கு கொற்றவை' எனும் செய்தியும் பல்லவர் காலத்தில் சிறப்பாக வெளிப்படுகிறது. தமிழ்நாட்டில் வேறெங்கும் இல்லாத அமைவாக மாமல்லபுரம் மும்மூர்த்தி குடை வரையில் சிவபெருமான், முருகன், விஷ்ணு கருவறைகளை அடுத்து மகிடாசூரமர்த்தினி யாகக் காட்டப்பட்டுள்ளார்.

வட பரங்குன்றத்தில் சிவபெருமானுக்கும் விஷ்ணுவுக்கும் இணையாகக் கொற்றவை கருவறை நாயகியாய் அம்மை உறுதியாகியுள்ளார். திருச்சிராப்பள்ளி கீழ் குடைவரையில் நான்முகனுக்கு இணையாக கோட்டச் சிற்பமாக 'மாமோட்டுத் துணைங்கையஞ் செல்வியாய்' கொற்றவை காட்சி அளிப்பதைப் பார்க்க முடிகிறது. தமிழ்நாட்டின் வட, தென், நடு என அனைத்துப் பகுதிகளிலும் வேட்டுவர் கூற்றைப் பல்லவர், பாண்டியர், அகழ்வுகள் நிறுவியிருப்பது, சிலப்பதிகாரத்தில் வரலாற்று உயிர்ப்பை உணர்த்த வல்லது.

சிலப்பதிகாரம் தொட்டனைத்தூறும் மணற்கேணி அதன் ஒவ்வொரு காதையும் கணக்கற்ற வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டுள்ளது. அறிஞர்களால் மிகுதியும் ஆராயப்பட்ட தமிழ்நாட்டு இலக்கியங்களுள் சிலப்பதிகாரம் தலையாயது. இராமாயணத்தில் உள்ளீடு கல்வெட்டு, சிற்ப நோக்கில் ஆராயப்படாதது போலவே சிலப்பதிகாரமும் நிறைவான ஆய்வை இன்றளவும் அடையவில்லை. தமிழ்நாட்டில் பரவிக் கிடக்கும் கம்பன் அமைப்புகள்,

அப்பெருந்தகையின் சொல்லாடலில் திளைத்து மீள, மீள அது குறித்தே பேசியும் எழுதியும் வருமாறே சிலப்பதிகாரமும் சாளரங்களைத் திறக்காத சிறை வீட்டிலேயே சிக்கியுள்ளது. (வரலாறு 23. ஆய்விதழ் 2013 இரா. கலைக்கோவன் பக்கம் 71-72)

கோசல நாட்டு இளவரசனாகிய இராமன் தாயின் சொல்லைத் தலைக்கொண்டு தனக்குரிய நாடு துறந்து கங்கைக் கரையை வந்தடைந்தான் என்று அறிந்த குகன் அக்குரிசிலைக் காணப் புறப்பட்டான். வான்மீக முனிவர் எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காண புறப்படும் கோலம் ஓர் அரசன் மற்றொரு அரசனைக் காண எழுகின்ற தன்மையில் அமைந்திருக்கின்றது ஆனால் கம்பர் ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாக் குகன் கோலத்தை திருத்தியமைத்துள்ளார்.

**“தேவர் நின் கழல் சேவிக்க வந்தனன்**
**நாவாய் வேட்டுவன் நாயடியேன்”**

என்று குகன் கூறுவதாக அமைத்துள்ளார் கம்பர். எனவே கம்பர் அவரது கம்ப இராமாயணத்தில் வேட்டுவர் வரலாற்றைத் திரித்தும் மறைத்தும் அழிக்க முற்பட்டுள்ளார் என்பது இதன் மூலம் புலப்படுகிறது. "மாணிக்கநாயக்கர் பா. வே. (1871-1931): 1871 ஆம் ஆண்டு சேலம் பாகல்பட்டியில் வேங்கடசாமி, முத்தம்மை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். ‘உயிர் வளர்ச்சியில் கண்ட இறை வடிவம்’, ‘கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்’ இவ்வாறு தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் ஆய்வு நூல்கள் எழுதியமையால் ஆராய்ச்சி பேரறிஞர் பா. வே.மா எனப் போற்றப்பட்டார். இவர் மறைமொழி அடிகளாருடன் தொடர்பு கொண்டு தனித்தமிழ் பணி செய்தவர். இவர் 1931 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்." (கொங்கு களஞ்சியம். இரண்டாம் தொகுதி பக்கம் 534-535)

### ‘வேட்டுவ வரி’ யில் சில வரிகள்:

- வேட்டுவர் குடி தொல்குடி:
- கொற்றவை கோலம்

**“இட்டுத்தலை எண்ணும் எயினர் அல்லது**
**சுட்டுத்தலை போகாத் தொல்குடி குமரி”**

வேட்டுவர்கள் கொற்றவைக்குத் தம் தலையைத் தானே கொய்து பலியிட்டுப் பிறர் ‘இத்தனை’ என எண்ணக் கொள்ளுமாறு செய்பவர் அன்றி, வறிதே செத்துச் சுட்டு தலை எண்ணச் செய்யும்

கோழைமை உடையவரல்லர். அவர்தம் பழங்குடி குமரி-கொற்றவை ஆகும்.

வேட்டு வரி - 8 சிறந்த குலமாகும் (வேட்டுவகுலமே சிறந்த குலமாகும்).

**கொற்றவை கொண்ட அணி கொண்டு நின்ற இப்**
**பொற்றொடி மாதர் தவம் என்னை கொல்லோ?**
**பொற்றொடி மாதர் பிறந்த குடிப் பிறந்த**
**விற்றொழில் வேடர் குலனே குலனும்!**

கொற்றவை யான் கொண்ட அணியெல்லாம் புனைந்து கொண்டு நின்ற இப்பொற்றொடியானவள் பிறந்த குடியிலே பிறந்த வில்தொழில் வல்ல வேட்டுவராகிய எம் குலமே சிறந்த குலமாகும்.

பொதிய மலைத்தலைவர்! வெட்சி சூடுக!!

**“மறைமுக முதல்வன் பின்னர் மேய**
**பொறை உயர் பொதியிற் பொருப்பன், பிறர் நாட்டு**
**கட்சியும் கரந்தையும் பாழ்பட**
**வெட்சி சூடுக- விரல் வெய்யோனே!”**

மறைமுது முதல்வனான தென்திசைக் கடவுளுக்கும் (தட்சிணாமூர்த்தி) பின்னர் வந்து குன்றுகள் உயர்ந்த பொதிய மலையை உடைய வேட்டுவத் தலைவன் பகைவருடைய போர்முனையையும் அவர் நிரை மீட்க வரும் செயலும் பாழ்படும் வண்ணம் செய்து வெம்மையான ஆற்றலுடையவனாகி வெட்சி மாலை (வெற்றி மாலை) சூடுவானாக!

## சோதிட ஓலைச்சுவடிகளில் வேட்டுவர் குலம்:

தமிழகத்தில் 18 நாடி சோதிட ஓலைச்சுவடிகள் இருப்பதாக அறியப்படுகிறது. இவ்வோலைச் சுவடிகள் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர். அவ்வோலைச் சுவடிகளில் ஒன்றான அகத்தியர் நாடியில் “அக்னி வேடுவர் நகக்கன்னில் தேவேந்திரனை உயிர்ப்பித்த வேடுவர் குல சிகாமணிக்கு வணக்கம்” என்று (வேடுவர்) வேட்டுவர் குலச்சிறப்பை விளக்கிப் பின் பலன் கூறத் தொடங்குகின்றது.

போகர் நாடியில் “அசாத்திய துணிவும், வலிமையும், பெருமையும் பெற்ற வேட்டுவர் குல மைந்தனே” என்று கூறிப் பலன் தொடங்கும் என்பர். இதன் மூலம் வேட்டுவர் குலத்தின்

சிறப்பும் தொன்மையும் அறியப்படுகிறது. (வேட்டுவர் குரல், புரட்டாசி மாத இதழ். 1999 பக்கம். 15)

ஆதி காலங்களில் வேட்டுவர் = சாத்தனார், பூதம், பேய் போன்ற தெய்வங்களை வழிபட்டனர். பெருந்தலைச் சாத்தனார் எனும் சங்க காலப் புலவர் வாழ்த்தும் சதுக்கப்பூதம் சேரர்களாலும் சோழர்களாலும் வழிபட்டதாக வரலாறு கூறுவதும், பேயாழ்வார், பூதத்தாழ்வார் எனும் புகழ்பெற்ற ஆழ்வார்கள் பெயர்களும் இதை உறுதிப்படுத்துகிறது.

## தென் கொங்கின் மலைவாழ் மக்கள்:

கொங்கு நாடு மலைகள் சூழ்ந்த நாடாக நிலை பெற்றுள்ளது. இம்மலைகளில் ஐயாயிரம் ஆண்டுகளாக பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். இந்தப் பழங்குடிகள் பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை பழைய பண்பாட்டினையும் சமூக அமைப்பினையும் பாதுகாத்து வருகின்றனர். கொங்கு நாட்டு சமூக ஆவணங்கள் பூவலியர், மாவலியர், காவலியர், வேடர், வேட்டுவர், குறும்பர், குன்றவர், குன்னடியார், நாகர், எயினர் என பல தொல்பழங்குடியினர் வாழ்ந்தனர் என்பதைக் குறிப்பிடும் கொங்கு நாட்டின் முதன்மை மலைமக்களாக வேட்டுவர்களைக் குறிப்பிடலாம். (குறிப்பு: மேலே சொன்ன நாகர் குடியைத் தவிர மற்றவர்கள் வேட்டுவ மரபினர் ஆவர்.)

சங்க இலக்கியங்களில் கானகத்தில் மேயும் ஆநிரைகள் தரும் நெய், தமிழகத்திலேயே சுவையானது என கூறப்படுவதைக் காணலாம். மேலும், கோடை பொருநனைக் குறிப்பிடுகையில் கடிய நெடுவேட்டுவன் என்று புலவர்கள் பாடியுள்ளனர். இவ்விரு சான்றுகளும் முல்லை வாழ்க்கையும், குறிஞ்சி வாழ்க்கையும் சிறப்புற்று இருந்த தன்மையை அறிய உதவும்.

கொடைக்கானல் மலை, பழனிக் குன்றுகள், அமராவதி நகர், திருமூர்த்தி மலை ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ள கற்கருவிகள் புதிய கற்கால வேட்டுவர்கள் வாழ்ந்து வந்த செய்தியை புலப்படுத்துகின்றன. வேட்டுவர்களின் குலதெய்வம் கொற்றவை.

இந்த தெய்வத்தை அவர்கள் வழிபட்ட முறையை சிலப்பதிகாரத்தின் மூலம் அறிய முடிகிறது. கொற்றவை வழிபாடு இப்பகுதியில் கி.மு 5000- லிருந்து சிறந்து இருந்தது என்பதற்கு மூணார் அருகில் உள்ள மறையூர் ஓவியங்களே சிறந்த சான்றுகள் ஆகும்.

இந்தப் பகுதியில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து மனித வாழ்க்கை சிறந்தது என்பதை மேலே குறிப்பிட்ட சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

## குகை ஓவியங்கள்:

தமிழகத்தில் அண்மைக் காலத்தில்தான் தொல்பழங்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஓவியங்களில் கொங்குப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டவை குறிப்பிடத்தக்கவை யாகும். வெள்ளரி கோம்பை, மருதமலை, வெள்ளருகம்பாளையம், தெங்கு மரஹடா, குமிட்டிபதி, மறையூர் ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட ஓவியங்கள் தொன்மைச் சிறப்புமிக்கவை. இவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்த ஓவியங்கள் தவிர பிற இடங்களில் கிடைத்துள்ள தொல்பழங்கால ஓவியங்கள் சிவப்பு வண்ணத்தில் தீட்டப்பட்டவை. வெள்ளை வண்ண ஓவியங்கள் மூவாயிரம் ஆண்டுகள் பழமை உடையவை எனவும், சிவப்பு வண்ண ஓவியங்கள் பத்தாயிரம் ஆண்டுகள் பழமை உடையவை எனவும் தொல்லியலாளர்கள் கணக்கிட்டுள்ளனர். அந்த வகையில் தென்கொங்கு காலத்தில் முற்பட்ட தொல்பழங்கால கலைச் செல்வத்தைப் பெற்று இருந்தது என்று உறுதியாகக் கூறலாம்.

## கொற்றவை – மான் ஓவியங்கள்:

மறையூர் ஓவியத்தில் 15 அடி உயரமுள்ள ஒரு பெண்ணின் ஓவியம் சிவப்பு வண்ணத்தில் வடிக்கப்பட்டுள்ளது. இந்த பெண்ணைச் சுற்றி நூற்றுக்கணக்கான மான்கள் வரையப் பட்டுள்ளன. (Stag) பெண்ணினுடைய உருவத்தைக் கொற்றவை என்று கருதுகின்றனர். இந்த முடிவு ஒருவகையில் சரியானதே. இந்தியா முழுவதும் கொற்றவையின் வடிவம் வெவ்வேறு பெயர்களால் வழங்கப்பெற்று வருகின்றது. வடஇந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் கொற்றவையின் வடிவம் கி.மு.2-ம் நூற்றாண்டு முதல் கிடைத்து வருகின்றது. மகாராஷ்டிரம் ரெய்ச்சூர் பகுதியில் கிடைத்த கொற்றவை.

கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது. அவ்வுருவம் எருமைத் தலைமீது நிற்பதைப் போல வடிக்கப்பட்டுள்ளது. இந்த உருவத்தினுடைய புராண வரலாறு கொற்றவைக்கும் மகிஷாசூரனுக்கும் நடந்த போரிலிருந்து தொடங்குகிறது. ஒரு சாரார் சிந்து சமவெளிப் பகுதியில் சிறப்புற்றிருந்த எருமை வழிபாட்டினர் தெக்கணத்திற்கு வந்த போது இங்கு வாழ்ந்த கொற்றவை வழிபாட்டினரால் தோற்கடிக்கப்பட்டனர். அதனால்தான் எருமை

தலைமீது கொற்றவை நிற்பதைப் போல வடிக்கப்படுகின்றாள். கொற்றவைக்கு மற்றொரு வாகனம் சிம்மம், சிங்கத்தைக் குலச் சின்னமாக உடைய மக்கள் தென்னிந்தியாவில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தனர். தெக்காணத்தின் கிழக்குப் பகுதியில் ஆட்சி செய்த விஷ்ணு குண்டினர் குலச் சின்னமாகக் கொண்டனர். இதுபோன்ற ஒரு பழங்குடியினர் கொற்றவை வழிபாட்டுடன் முரண்பட்டு தோற்றிருக்க வேண்டும். எனவே தான், கொற்றவைக்குச் சிங்கமும் வாகனமாக கூறப்படுகிறது.

இந்த வாகனங்களுடன் தமிழ்நாட்டில் மட்டும் மான் வாகனமாகக் கூறப்படுகிறது. இந்த மான் தமிழ்நாட்டில் தொல்பழங்காலத்தில் வாழ்ந்த ஏதோ ஒரு குடியுனுடைய குலச் சின்னமாகக் கருத வேண்டும். நாட்டுப் பகுதியில் இருந்த ஒரு குடியினுடைய குலச்சின்னமாக மான் இருந்திருக்க வேண்டும். கொற்றவை வழிபாட்டினர் இக்குடியினரை வென்றதால் மான் கொற்றவையின் வாகனமாயிற்று இதைத்தான் சிலப்பதிகாரத்தில் கொற்றவையைக் குறிப்பிடும்போது பாய்கலைப் பாவை என வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் கூறுவார். தமிழ்நாட்டில் கிடைக்கும் (9-ம் நூற்றாண்டு வரை) முதற்கால கொற்றவையின் வடிவங்களில் மான் வாகனமாகக் காட்டப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் தொல் பழங்காலத்திலேயே மான் கூட்டத்தினருக்கும் கொற்றவை வழிபாட்டினருக்கும் இடையில் பூசல் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகக் கூறலாம்.

## தென்கொங்கின் மலைவளம் :

கொங்கு நாட்டுச் சுற்றுச்சூழல் பண்டைய இலக்கியங்கள் கூறும் முல்லையும் குறிஞ்சியும் இணைந்த பகுதியாக விளங்குகின்றது. தென்கிழக்குப் பகுதி தவிர பிற பகுதிகளில் உயர்ந்தோங்கிய மலைகள் சூழ்ந்த எல்லைப் புறங்களைப் பெற்றுள்ளன. இவற்றில் தென்கொங்குப் பகுதி ஆனைமலை, பழனிமலை, கொடைக்கானல், வால்பாறை, திருமூர்த்தி மலை, வெள்ளியங்கிரி, அய்யாசாமி மலை, மருதமலை, குருடிமலை, பாலமலை ஆகிய மலைகளை எல்லைப்புறமாகக் கொண்டு விளங்குகின்றது தென்கோங்கு.

இம்மலைகளில் இயற்கை வளம், மனித வளம் ஆகியவை தொல்பழங்காலம் தொட்டே சிறப்பற்று இருந்தது என்பதற்கு ஏறத்தாழ 7000 ஆண்டுகட்கு முன்னர் செங்காவி வண்ணத்தில் வரையப்பட்ட மறையூரில் வரையப்பட்ட ஓவியங்களே சான்று.

இவை மட்டுமின்றி கொடைக்கானல், ஆனைமலைக் குன்றுகள், வெள்ளியங்கிரி மலைப்பகுதி ஆகியவற்றில் புதிய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குமிட்டிபதி அருகில் உள்ள தேவர் குன்றிலும், மருதமலை, பாலமலை ஆகிய மலைகளிலும் தொல்பழங்கால ஓவியங்கள் வரையப் பெற்றிருப்பதை காணலாம். புதிய கற்காலத்திலும் பெருங்கற்காலத்திலும் வரையப் பெற்றிருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கணித்திருக்கின்றனர். வெள்ளெருக்கம் பாளையம், வேட்டைக்காரன் மலை 4,000 அடி உயரத்திலுள்ள குகை ஒன்றில் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்ட போர்க்காட்சிகள் உள்ளன. இவை மட்டுமின்றி நிலவியல் தொடர்பான வரைபடங்கள் உள்ளன. ஒரு தொகுப்பு ஓவியத்தில் 2 யானைகள், 1 மான் ஆகியவை நிற்கின்றன. அவற்றைச் சுற்றி குழுக்குழுவாகப் பிரிந்து நடனமாடும் காட்சிகளும் வரையப் பெற்றுள்ளன. (தென்கொங்கு நாடு, துரை அங்குசாமி, பக்கம்: 52, 64-67)

**வடகரை நாடு :**
**வடகரை நாட்டின் தலைநகர் அந்தியூர் :**
**அந்தியூர் கோட்டை:**

சங்க கால கொங்கு என்ற தலைப்பில் கோவை அரசு கலைக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் பசுவலிங்கம் கூறியதாவது,

## கொங்கு நாடு:

கொங்கு நாடு, கொடு மனம், வேட்டுவர் என மூன்று கால கட்டங்களாக செயல்பட்டது. கொடு மனம் என்கிற காலகட்டத்தில் அரசு அமைப்பு ஏற்பட்டது. அப்போது வேட்டுவர்கள் என்கிற சிற்றரசர்கள் தோன்றினர். (12.05.2012 தினமலர் நாளிதழ், கோவை பதிப்பு)

உலகில் முதன்முதலில் வேட்டுவ சிற்றரசர்கள் தோன்றினர். அச்சிற்றரசர்களின் மேல்தான் சேரப் பேரரசு உருவானது. சேர மன்னன் குலசேகர ஆழ்வார் தன்னை வேட்டுவன் என்றே கூறுகிறார். இவர் பாடிய முகுந்த மாலையில் இவன் தன்னை கொல்லிக் காவலன், கொல்லி வெற்பன், கொல்லிச் சிலம்பன் மற்றும் கொங்கர் கோன் என்று கூறுகிறார்.

புறம் -168 வேட்டுவ அரசுத் தலைவனை ‘வடிநவில் அம்பின் வில்லோர் பெரும்’ என்கிறது. எனவேதான் சேரனின் சின்னம் வில்

ஆனது. கொங்கில் வேளிர் சிற்றரசர் என்கிற சொல் வேட்டுவ சிற்றரசர்களைச் சங்க காலம் முதல் சுட்டும் சொல்லாகும்.பின்பு இடைக் காலத்தில் ராயர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

அரசு உருவாக்கத்தில் வேட்டுவர் என்ற தலைப்பில் வரலாற்றுச் சிற்பி பேராசிரியர் ம.இராசசேகர தங்கமணி கூறியதாவது, “வில்லோர் அரசே கொங்கு நாட்டில் உருவான முதல் அரசு” ஆகும். இதனை வேட்டுவ அரசு எனவும் கூறலாம். வேட்டுவ இனப் பிரிவுகளுள் வில், வில்லி கூட்டங்கள் இருப்பதை நாமறிவோம். தொல்குடியினரான இவர்கள் வில்லை அரசு சின்னமாகக் கொண்டனர். கரூர் அமராவதி ஆற்றங்கரையில் இதுகாறும் நூற்றுக்கு மேற்பட்ட இருபக்கமும் வில் சின்னம் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன. இதில் சேர அரசின் சின்னமான



படம் 1



யானை காணப்படவில்லை. எனவே, இது சேர அரசின் தலைவன் ‘வில்லோர் பெரும’ என்று இலக்கியங்களில் சுட்டப்படுகிறான். (புறம் 169). இந்த அரசே சேர அரசாக நாளடைவில் உருவாயிற்று. வேட்டுவருள் சேர வேட்டுவர் என்கிற கூட்டப் பெயரும் உண்டு. பனைய வேட்டுவரும் உண்டு. வில்லோர் அரசு சேர அரசாக உருவான பின்னர் வில்லம்பும் யானையும் சேரரது அரசு சின்னமாக மாறியது.வெட்ட வெட்டத் தழையும் வேட்டுவர் படை என்பது முதுமொழி, வேட்டுவர்கள் போர்க்குணம் கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்ததே.

வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது என்கிற பழமொழியும் உண்டு. எண்ணற்ற வேட்டுவர் குலங்களில் இன்று அந்தி என்று சிறப்பித்துக் கூறப்படும் அந்துவன் குலம் பற்றியும் அவன் கட்டிய அந்தியூர் கோட்டை பற்றியும் காண்போம். தமிழ் பல்கலைக் கழகம் எண் 3, புலிமான் கோம்பை, தேனி மாவட்டம். கி.மு. 3ஆம் நூற்றாண்டு நடுகல்.

“கல்பேடு தீயன் அந்தவன் கூடலூர் ஆ கோன்”. பேடு என்னும் ஊரைச் சேர்ந்த தீயன் என்பாரின் மகன் அந்தவன். அந்துவன் ஆவினங்களைக் கவர்ந்து வருகையில் மரணம் எய்தினான்.

அவனுடைய வீரச் செயலை போற்று முகத்தான் இந்த வீரக்கல் எழுப்பப் பட்டது. தீயன் என்னும் பெயர் அக்கினி குலத்தைச் சேர்ந்த சேர மன்னர் மரபுடன் தொடர்புடையதாக உள்ளது.

தீயன் என்றால அக்னி குலத்தவன் என்று பொருள். வழக்கமாக நினைவுக் கல்லைக் குறிக்கும். கல் எனும் சொல் கல்வெட்டின் இறுதியில்தான் காணப் பெறும். ஆனால் இங்கு கல்வெட்டின் தொடக்கத்தில் உள்ளது. இது கி.மு. 3ஆம் நூற்றாண்டு நடுகல். (நடன காசிநாதன் கல்லெழுத்துக் கலை பக்கம் 202) அந்தவன் என்பது அந்துவன் என்ற பெயரின் மாற்றுருவமாகும். இதுவும் பிழையன்று. அந்து என்ற பகுதி வெவ்வேறு விகுதிகளை ஏற்கும் போது, அந்து + அன் = அந்துவன் என்றும், அந்து+ அவன்=அந்தவன் என்றும் விரிவடைகிறது.

அந்தவன் என்ற பெயர் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த கி. மு. – 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பானை ஓடுகளில் பலமுறை

பதிவு செய்யப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (வி.சுப்பராயலு, கொடுமணல் பானை ஓடுகளில் பொறிப்புகள் 1996) புலிமான் கோம்பை நடுகற்கள் பலவகையாலும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

1. இந்தியாவிலேயே இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட நடுகற்களில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவையே மிகவும் பழமையானதாகும்.

2. இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழிக் கலப்பின்றி தமிழில் எழுதப் பட்டுள்ளது இவற்றின் தனிச் சிறப்பாகும்.

3. இக்கல்வெட்டுகள் மதுரையிலிருந்து தொலைவில் (அக்காலத்தில் காடுகள் சூழ்ந்திருந்த) ஒரு சிற்றூரில் கிடைத்திருப்பது சங்க காலத்திலேயே தமிழகத்தில் பரவலாக எழுத்தறிவு இருந்தது என்பதற்கு உறுதியான சான்றாகும்.

(ஐராவதம் மகாதேவன், சென்னை ஆவணம் 17, 2006) சங்க காலத்தில் வேந்தர்களும், வேளிர்களும் அந்துவன் என்று பெயர் பெற்று விளங்கினர். அந்துவன் என்ற பெயர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட குகைகளில் காணப்படும் கல்வெட்டு களில் காணலாம். திருப்பரங்குன்றம் கல் வெட்டு அந்துவன் கொடுபித்தவன் என்கிறது.

திருப்பரங்குன்றத்தை அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை என்று அகம் 59ல் மதுரை மருதன் இளநாகனார் சிறப்பித்துக் கூறுகிறார். அந்துவன் சேரல் இரும்பொறையின் நல்லிசைய புலமை வியந்தே பதிற்றுப் பத்து ஏழாம் பதிகம் ‘நெடுநுண் கேள்வி அந்துவன்’ என்று சிறப்பித்துரைக்கிறது.

ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதித்ய சோழன் கொங்கு மண்டலத்தின் மீது (கி.பி.880-905) படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றிக் கொண்டான் என்று கொங்கு தேச ராசாக்கள் என்ற வரலாற்று நூல் கூறுகிறது. அந்நூல் கூறுவது “சோழ வம்சத்திலே விசாயாட ராயன் மகன் ஆதித்தவர்மராயன் சோழ தேசம் தஞ்சாவூரிலே பட்டங்கட்டிக் கொண்டு கொங்கு தேசத்துக்கு வந்து ராசா வேடர்களைச் செயம் பண்ணி அந்த அரசை ஆண்டனன்” என்பதாம்.

ஆதித்யா சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் பொழுது கொங்கு நாட்டை வேட்டுவ ராசாக்கள்

ஆண்டனர் என்பது இதன் மூலம் புலப்படுகிறது. கொங்கு தேச ராசாக்கள் சரிதம் கூறுவது உண்மை என்கிறது திருத்தொண்டர் திருவந்தாதி பாடல்

**சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு**
**கொங்கிற் கனக மணிந்த ஆதித்தன்குல முதலோன்...**

ஆதித்த சோழன் கொங்கு மண்டலத்தை தன் வசப்படுத்திய பொழுது கொங்கை ஆண்டு கொண்டிருந்த வேட்டுவ ராசாக்கள் கொடுத்த பொன் கொணர்ந்து தில்லைச் சிற்றம்பல முகட்டை அப்பொன்னால் வேய்ந்த செய்தியை உறுதிப் படுத்துகிறது. எனவே, கொங்கு தேச இராசாக்கள் சரிதம் கூறும் ஒரு வரலாற்று நிகழ்ச்சி நம்பியாண்டார் நம்பியின் வாக்கினால் உறுதி செய்யப்படுகிறது.

சங்க காலத்தில் கருவூரை தலைநகரமாகக் கொண்டு அந்துவன் சேரல் இரும்பொறை முதல் கணைக்கால் இரும்பொறை வரை கொங்கு நாட்டை சீரும் சிறப்புடன் ஆண்டு வந்தனர். பதிற்றுப்பத்து எனும் சங்க நூல் சேர மன்னர்கள் பத்துப் பேரைப் பற்றிப் பாடுகிறது. அதில் முதல் பத்தும் கடைசிப் பத்தும் இன்று காணாமல் போய் விட்டது.

சங்க காலத்தில் கொங்கு நாட்டை ஆண்ட அந்துவன் சேரல் இரும்பொறையைத் தொடர்ந்து இடைக்காலத்தில் அந்துவன் சேரல் இரும்பொறையின் கால் வழியினரான அந்துவ (அந்தி) வேட்டுவன் சுந்தராயன் அந்தியூர் வடகரை நாட்டை ஆண்டதைப் பற்றி இனி காண்போம்.

இன்று அந்தியூரின் அருகில் அடசப் பாளையத்தில் (அரசன் பாளையம்) வசிக்கும் அந்தியூர் வடகரை நாட்டு அரண்மனையாளர் சந்திரசேகர சுந்தராயர் அவர்களின் செப்புப் பட்டயம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

இப்பட்டயம் இந்திய தொல்லியல் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளது. ARE 2014-15. இப்பட்டயத்தில், “ஆண்டு எழுபத்து அஞ்சு ஆகிய ஆங்கிரசா வருடம் ஆடி மாதம் 18ஆம் தேதி சேர, சோழ, பாண்டியன் மூவராசாக்கள் பெருமாள் கம்பன் உடைய அந்துவ வேட்டுவ சுந்தராயருக்கு அந்தி ஊரு வடகரை நாடு முப்பது கிராமமுள்பட ஆதீனம் செப்பேட்டு பட்டையம் குடுத்தது” என்று கண்டுள்ளது.

## கொல்லம் ஆண்டு எழுபத்து ஐந்தில் (கி.பி.899-900):

ஆதித்ய சோழன் சேரன்ஸ்தாணுரவி, பாண்டியன் பராந்தக வீரநாராயணன் (880-905) இவர்களால் கருவூரில் முடிசூட்டப் பட்டவன் தான் அந்தியூர் வடகரை நாட்டு அந்துவ (அந்தி) வேட்டுவச் சுந்தராயன். வேட்டுவ மன்னர்கள் ஆட்சி செய்த தலைநகராக அந்தியூர் இருந்ததால் இவ்வூரில் பெரிய கோட்டை ஒன்று இருந்தது.

“இப்பெருங்கோட்டை 1 மைல் நீளமும் அகலமும் கொண்டது. மூன்று சுற்று மதில்களைக் கொண்டிருந்தது. கோட்டையின் உட்புறத்தில் இருந்த அரண்மனை, அத்தாணி மண்டபம், மந்திரிமார்கள் கூடம் ஆகியன அழிந்துவிட்டன. செல்வக் கடுங்கோ வழியாதனுடன் தொடர்புடைய செல்லீசுவரர் கோவில், அழகரசப் பெருமாள் கோவில், வீரபத்திரர் கோவில், பத்திரகாளியம்மன் கோவில், கோட்டை மாரியம்மன் கோயில் என்பவை மட்டும் இன்றும் உள்ளன. இக்கோயில்களில் கவின்மிகு சிற்பங்களும் கல்வெட்டுகளும் உள்ளன. இவை தமிழ்ப் பல்கலைக் கழகம் பதிப்பித்துள்ள வாழ்வியல் களஞ்சியம் முதல் தொகுதியில் கண்டுள்ளது.

இந்த அரிய கோட்டைப் பகுதியில் ஆயிரக்கணக்கான உருண்டை வடிவிலான பீரங்கி எறிகற்கள், உரோமாபுரி நாணயங்கள், யானைத் தந்தங்கள், உடைவாள்கள், பழமை மிக்க எலும்புத் துண்டுகள், பல நாணயங்கள், அகல் விளக்குகள், மண்பாண்டங்கள், மண்ணில் சுடப்பட்ட பொம்மைகள், வளையல்கள் போன்ற அணிகலன்கள் ஆகியவை இன்றும் காணக் கிடக்கின்றன என்று தமிழ் பல்கலைக் கழக வாழ்வியல் களஞ்சியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன.

அந்தியூர் வடகரை நாட்டு கல்வெட்டுகள் வேட்டுவர்களை நாட்டு காமிண்டர் என்றும் கொங்கன் என்றும் கொங்காள்வான் என்றும் ஊராளி (சிற்றூர் மன்னன்) என்றும் குறிப்பிடுகின்றன. அந்தியூர் செல்லீஸ்வரர் கோவில் கல்வெட்டுச் செய்தி பாசறை வேட்டுவரில் குறும்பன் கொங்கன் என்றும் வேட்டுவர்களைக் குறிப்பிடுகிறது.

வடகரை நாட்டு கொடிவேரிக் கல்வெட்டுச் செய்தி ஊராளி செம்ப வேட்டுவன் தொண்டயன் பிள்ளான் ஆன செயங்கொண்ட



ஈரோடு 6-3-2011 23

தினத்தந்தி

# ஆதித்ய சோழன் எழுதி கொடுத்த செப்பேடுகள்...

சுந்தரராய செப்பேடுகளை படிக்கும் மாணவிகளை படத்தில் காணலாம்.

சந்திரசேகர்

சோழ கொங்காள்வான் என்றும் வேட்டுவர்களை ஊராளி மற்றும் கொங்காள் வான் என்ற சொற்களால் சிறப்பிக்கிறது.

வேட்டுவர்களின் வரலாற்றைக் கல் வெட்டுக்களில் அள்ளித் தந்த உலகடமும், பட்லூரும் வடகரை நாட்டில்தான் இருக்கின்றன. சங்க கால வேட்டுவ வேந்தன் செல்வக்கடுங்கோ வாழியாதன் கபிலர் தொடர்புடைய திருநனா எனும் ஊராட்சிக் கோட்டை மலையும் பாரி, நள்ளி இவர்களின் தொடர்புடைய பர்கூர் மலையும், அந்தி வேட்டுவரின் திருகடம்பூர் மலையும் மற்றும் பொறையர்பாளையமும், அரசன்பாளையமும் (அடசப்பாளையம்) வடகரை நாட்டின் வரலாறுகளை இன்றும் எடுத்துரைக்கின்றன. உலகடத்து கள்ள வேட்டுவன், நெரிஞ்சிஊர் சாமவேட்டுவன், கோட்டை நவுலூருபுள்ளை வேட்டுவன், கேசரமங்கலம் வன்னி வேட்டுவன், ஊராச்சிக்கோட்டை பரிபடை வேட்டுவன்,சம்பை அந்து வேட்டுவன், வெள்ளை வேட்டுவன், ஆப்பக்கூடல் படைத்தலை வேட்டுவன், கீழ்வாணி கிழங்கு வேட்டுவன், திருக்கடம்பூர் அந்து வேட்டுவன், வேம்பத்தி வேம்பு வேட்டுவன், நவலூரு புன்னை வேட்டுவன், பட்டுலூர் பீச்சை வேட்டுவன், அந்து வேட்டுவன் என்று சுந்தராயப் பட்டையம் கூறுவதால் வடகரை நாட்டில் உள்ள முப்பது கிராமங்களுக்கும் ஊராளிகளாக வேட்டுவர்களே இருந்தனர் என்பது புலப்படுகிறது.

சிற்றூர் மன்ன்ன் என்ற ஊராளியாகவும், வேளிர் என்ற குறுநில மன்னராகவும், வேந்தன் என்ற பேரரசனாகவும் வேட்டுவர்கள் தமிழகத்தில் ஆட்சி புரிந்தனர் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. உதாரணமாக கடம்பூர் சிற்றூர் மன்னன்(ஊராளி) அந்து வேட்டுவன் அந்தியூர் (வடகரை நாட்டு) குறுநில மன்னன் (வேளிர்) அந்து வேட்டுவ சுந்தராயன் கொங்கு நாட்டின் வேந்தனாக அந்துவன் சேரல் இரும்பொறை ஆண்டது வேட்டுவர்கள் அரசு உருவாக்கத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கெட்டி முத்லியார்களைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் வில்சன் என்ற ஆங்கில அறிஞர் கொங்கு மண்டலம் சேர, சோழ, பாண்டியர் காலத்திற்குப் பின்னாலும் வேட்டுவப் பாளையக்காரர் களால் சீரும் சிறப்புடன் ஆளப்பட்டு வந்தது எனவும், அவர்களே சங்ககிரி, சாமப்பள்ளி (தென்னிலை) காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் கோட்டைகள் கட்டிக் கொண்டு ஆண்டனர் என்று கூறியுள்ளார் (Wilson. P425. No. XVIII) சரம்பள்ளி, தென்பளை, காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் வேட்டுவர்கள் கோட்டை

இருந்ததாகப் பாளையப்பட்டுக்களின் வரலாறு (தொகுதி 1 பக்கம் 1ல்) கூறுகிறது.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் திருமலை நாயக்கன் மதுரையை ஆண்டபோது அந்தியூர் கோட்டை செப்பனிடப்பட்டதாக நாயக்கர் வரலாறு கூறுவதால் அந்தியூர் கோட்டை திப்பு சுல்தானால் கட்டப்பட்டது என்பது வரலாற்றுப் பிழையாகும். அது வேட்டுவன் கோட்டை என்பதுதான் உண்மை.

## பதிற்றுப்பத்து:

- குடங்கோநெடுஞ்சேரலாதன் (2ஆம் பத்து) 58 ஆண்டுகள் அரசாண்டான்.
- பல் யானைச் செல்கெழு குட்டுவன் (3-ம் பத்து) 25 ஆண்டுகள் அரசாண்டான்.
- களங்காய்க் கண்ணிநார் முடிச்சேரல் (4-ம் பத்து) 25 ஆண்டுகள் அரசாண்டான்.
- சேரன் செங்குட்டுவன் (5-ம் பத்து) 55 ஆண்டுகள் அரசாண்டான்.
- ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (6-ம் பத்து) 38 ஆண்டுகள் அரசாண்டான்.
- செல்வக் கடுங்கோ வாழியாதன் (7-ம் பத்து) 25ஆண்டுகள் அரசாண்டான்.
- தகடூர் எறிந்த பெருஞ்சேரன் இருப்பைறை (8-ம் பத்து) 17 ஆண்டுகள் அரசாண்டான்.
- (குட்டுவன் இரும்பொறை) இளஞ்செரல் இரும்பொறை (9-ம் பத்து) 16 ஆண்டுகள் அரசாண்டான்.
- (1-ம் பத்தும், பத்தாம் பத்தும் இன்று கிடைக்கப் பெறவில்லை).

## கொங்குச் சேரர் பரம்பரை:

- பொறையன் அந்துவன் (உத்தேசமாக) - கி.பி. 92-112 வரை
- மாந்தரன் செல்வக் கடுங்கோ வாழியாதன் - கி.பி.112- 137 வரை
- பெருஞ்சேரல் இரும்பொறை - கி. பி. 137 - 154 வரை.

- இளஞ்சேரல் இரும்பொறை - கி. பி. 154 - 170 வரை.
- யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை - கி. பி. 170 - 190 வரை.
- கணைக்காலிரும் பொறை - கி. பி. 190 - 210 வரை.

## சேரநாட்டுப் பிரிவுகள்: குட்டநாடு (குட்டுவன் மரபினர்)

குடநாடு (குடக்கோ மரபினர்) பொறை நாடு (பொறையர் மரபினர்) மற்றும் பூழிநாடு (பூழுவ மரபினர்) வேணாடு, ஆயநாடு எனப் பல பிரிவுகள் இருந்தன. குட்ட நாட்டை குட்டுவன் மரபினர் (சேரன் செங்குட்டுவன்) அரபிற் கடற்கரை பகுதிகளை ஆண்டதால் கரையர் எனப்பட்டனர். (இவர்களின் வழிவந்தவர்கள் கரைவழி நாட்டையும் (உடுமலைப்பேட்டை, திருமூர்த்தி மலை, பழனி வரை) ஆண்டு பிறகு பாவனி, அமராவதி, காவேரிக்கரைகளில் ஆட்சி செய்தவர்கள் இந்த கரைய வேட்டுவர்கள் ஆவர்.

மலையாளக் கடற்கரையை ஆண்டதால் கரையயகுலம் என்றும் மலையாள கருப்பணசாமியை இஷ்ட தெய்வமாகவும் சேரனின் அயிரமலை கொற்றவையை குலதெய்வமாக கொண்ட இவர்கள் தற்போது படைவெட்டி அம்மன், அறச்சாலை அம்மன் ஆகிய தெய்வங்களையும் வணங்குகிறார்கள் இவர்கள். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளின் அண்ணன் சேரன் செங்குட்டுவனின் கால்வழியினர் ஆவர். அமராவதி ஆற்றின் கரைவழி நாடான, கரைவழி நாட்டினை ஆட்சி புரிந்தவர்கள் பின் "பவானி (வானி) ஆற்றங்கரைகளிலும், காவேரி ஆற்றங்கரை களிலும் கொங்கு நாட்டின் வளத்தைப் பெரிக்கியவர்கள் கரைய வேட்டுவர்" ஆவர். இவர்களின் வேந்தர் ஆட்சியில் சேரன் செங்குட்டுவன் கடைசி வேந்தன் ஆவான. கரையர் எனும் கரைய வேட்டுவர்கள் சேர வேந்தர்களில் குட்டுவன் மரபினர் என்பதை பார்த்தோம். தாலமி தனது நில நூலில் (கி.பி. 150) இவர்களை கர ஓ இ (Kareoi) என்கிறார். பொறையர் மரபினர் சேரநாட்டில் உள்ள குறும் பொறைநாடு, நெடும் பொறைநாடு எனும் பொறை நாடுகளை ஆண்டவர்கள் ஆவர். சேரர் பெருகத்தால் பொறையர் பாலக்காட்டு கணுவாய்களை அடுத்த உள்ள கொங்கர்கள் எனும் "வேட்டுவக் குறுநில மன்னர்கள் (வேளிர்கள்)" ஆண்டு வந்த கொங்கு நாட்டைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக் கொண்டனர். சங்ககாலத்தில் சுமார் 250 ஆண்டுகள் அந்துவன் சேரல்

இரும்பொறையிலிருந்து கணைக்கால் இரும்பொறை வரை கொங்கு நாட்டைச் சீரும் சிறப்புடனும் வேட்டுவப் பொறை அரசர்கள் ஆண்டு வந்தனர்.

## கொங்கு நாட்டில் கொங்குச் சேரர்:

அந்துவ (அந்தி) வேட்டுவரில் 35 - க்கும் மேற்பட்ட காணியூர் கோட்டைகளில் அந்தியூர் பெருங்கோட்டையை இரண்டாவது தலைமை இடமாகவும், அந்துவன் சேரல் இரும்பொறை முதல் கணைக்கால் இரும்பொறை வரை சுமார் 250 ஆண்டுகள் முதல் தலைமை இடமாக கருவூர் பொன்மாடத்தில் இருந்தும் சிறந்த முறையில் கொங்கு நாட்டை ஆண்டனர் என்பதனை பதிற்றுப்பத்து எனும் சங்க நூலால் அறியப்படுகிறது. 35-க்கும் மேற்பட்ட அந்தி (அந்துவ) வேட்டுவர்களின் காணியூர்களில் ஒன்றான கீரனூரில் அந்துவன் கீரன் எனும் மன்னன் ஆண்டு வந்தார். (காவட்டனார்) புறம் - 359.


பவானியில் பாண்டிய மன்னன் கால நடுகல் கண்டுபிடிப்பு

**தினமணி அக்டோபர் 11, 2019**

## அந்துவன் கீரன்:

அந்துவன் கீரன் ஒரு சேரச் சிற்றரசன், காவட்டனார் அந்துவன் கீரனுக்கு ஈகை செய்யுமாறு அறிவுறுத்தியது. கொடுமுடி மன்னன் எனும் வேட்டுவன் ஆண்டதால் அவ்வூர் கொடுமுடி என்று அழைக்கப்பட்டது. அதேபோல் அந்துவன் கீரன் ஆண்ட ஊர் கீரனூர் ஆனது. அந்தியூரை அந்தி (அந்துவ) வேட்டுவ வேந்தன் அந்துவன் சேரல் இரும்பொறை ஆண்டதால் அந்தியூர் என்று அழைக்கப்படுகிறது.

"புகழ்பெற வாழ்வது வாழ்வெனப் போற்றும்" இப்பாடல் அந்துவன் கீரனைப் போற்றிப் புலவர் காவிட்டனார் பாடியது. (திணை- காஞ்சி, துறை பெருங்காஞ்சி)



பாறுபடப் பறைந்த பன்மாறு மருங்கின்
வேறுபடு குரல் வெவ்வாய்க் கூகையொடு
பிணந்தின் குறுநரி நிணம் திகழ் பல்ல
பே எய் மகளிர் பிணம் தழூ உப் பற்றி
விளர் ஊன் தின்ற வெம்புலால் மெய்யர்
களரி மருங்கில் கால் பெயர்த் தாடி
ஈம விளக்கின் வெருவரப் பேரும்
காடுமுன் னினரே நாடு கொண்டோரும்
நினக்கும் வருதல் வைகல் அற்றே
வசையும் நிற்கும் இசையும் நிற்கும்
அதனால் வசை நீக்கி இசை வேண்டியும்
நசை வேண்டாது நன்று மொழிந்தும்
நிலவுக் கோட்டுப் பல களிற்றோடு
பொலம் படைய மா மயங்கிட
இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது
கொள்என விடுவை ஆயின் வெள்ளென
ஆண்டு நீ பெயர்ந்த பின்னும்
ஈண்டு நீடு விளங்கும் நீ எய்திய புகழே!

போரினால் மாற்றமடைந்த போர்க்களத்தில் கூகையுடன் குள்ளநரி பிணந்தின்று தசைமாட்டிக் கொண்ட பற்களுடன் இருக்கும். பேய்மகளிர் பிணத்தைத் தழுவிப்பற்றிக் கொண்டு தசையைத் தின்று புலால் நாறும் உடம்புடன் ஆடிப்பிணஞ்சுடும் வெளிச்சத்திள் அச்சந்தருபடி செல்லுஞ் சுடுகாட்டை நாடுகளை பிடித்துக்கொண்ட அரசர்கள் அடைந்தார்கள். உனக்கும் சுடுகாட்டை அடையும் நாள்வரும் ஒருவன் அடைந்த பழியும் நிலைத்து நிற்கும், புகழும் நிலைத்து நிற்கும். அதனால் நீபழியை நீக்கிப் புகழையடைய விரும்பினால் பொருள் மீது விருப்பதனை விட்டு விட்டு நல்லதைச் சொல்லி இரவலர்க்கு யானையும் குதிரையும் தேரும் குறையாமல் கொடுத்து வழியனுப்பு வாயானால் நீ வானுலம் போனபிறகும் இங்கு நீ அடைந்த புகழ் நீண்டகாலம் விளங்கும். (புறம்: 359)

## ஊஞ்சலூர் அந்துவ (அந்தி) வேட்டுவர் கரை கல்வெட்டு:



A.R. No. B 226 of 1967-68

Unjalur, Erode Taluk, Coimbatore District

Nāgēśvara svāmi temple, mahamandapa, door-jamb.

Text.

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 ஸ அச்சுதராய
3 ர் மகாராயர் க
4 ரியத்துக்கு க
5 டவதான திரும
6 கி நாயக்கர் தி
7 ருவவுத்திபடு
8 செல்லா நின்ற
9 [கலியுக] சகாத்த
10 ம் சித்தசு யுக்மை
11 ல் செல்லா நின்
12 ற ஏவிளம்பி வரு
13 ஷம் அற்பசி மாத
14 ம் கரு ஸ்ரீ ஹன்ம
15 வரா தேவ தத வா
16 வாத்துமன் கை
17 ஏடுமுடி லிங்க
18 ன விரநாராய
19 ணப் பெருமா
20 ன் திருப்பபடி
21 க்கு ஸ்ரீ கரு வேதவர்
22 திருமலை நாய
23 க்கர் காரியத்து
24 க்கு கீடவதான
25 அதிகாரி மைய்
26 க்கும் பெருமா
27 ன் பிள்ளையவர்
28 களும் தானத்த[ர்]
29 ர்களும் திருப்பதி
30 யாரும் திருவக
31 ம் படியாரும்
32 ஊஞ்சலூரும்
33 ஊரவற்க்கும் மகி
34 ய் வைபடுவரின்
35 நல்லண்ணன் கரை
36 ஒன்றுக்கும் விப்
37 படி சொழியன்
38 [க ல] ர ஒன்றுக்கும்
39 [அ]ந்துவ வைபடு
40 ரின் [திருவங்க]
41 ரை [ஒ]ன்றுக்கும்
42 [மெற்படிகரு]
43 . . . . . .

Second piece.

44 நச்சுழி யெவிட்
45 டு வரின் சிறுவ
46 [ர்]கரை ஒன்று
47 க்கும் கிருங்க
48 ளை வைபடு
49 வரில் இணைஞ
50 ன் கரை ஒன்று
51 க்கும் வெள்ள-
52 ஞர் தனிருசி
53 களில் காயா
54 ண்டன் க்கரை ஏ
55 ன்றுக்கும் ஆக
56 கரை எழுநி
57 க்கரக்கும் ஆறு
58 வு கெடுக்க படி
59 [ஸ்வாமி] திருக்க
60 க வழக்கமாக
61 ஏகு மாணியம்
62 ாபம் அனுப
63 வித்துக் கொள்
64 ளக் கடவராக
65 வும் இந்த காணி
66 யம் எல்லாம் ஒ
67 ற்றிவைய்த்துக்
68 கொள்ளக்கட
69 வராகவும் இ
70 ந்த திருக்கை
71 [வழக்]கம் எழு
72 [மாணி]யம் . .
73 . . . டுவா அல்
74 ல [ஏ லு டு] மைண் .
75 . ம் காங்கைக்
76 கரையினை கா
77 ரம் பசுவைக்
78 கொன்றத் தோஷ
79 த்திலும் . . . .
80 . . . . . .
81 . . . . தோஷத்
82 திலும் போகக் கட
83 வராகவும் இந்தக்கு
84 யாதொருவன் அ
85 ல் சுவா மையன்
86 [கொ]ண் தொ . . .
87 ——— . . .

## அந்துவ (அந்தி) வேட்டுவரின் பழம்பெரும் காணியூர்கள்:

"சீருலவு நாகநகர் கீரனூர் ஆதியூர்
செப்பரிய் மோட மங்கை
திகழ் ராசியூர் பாலைமேடு தூரம்பாடி
சித்திர வீதிக் கோதையூர்
ஏருலவு வடகரை நன்னாட்டில் அந்தியூர்
இனிய லக்கா புரமுடன்
எழில்பரவு தோட்டாணி மேவு செவியூருடன்
இனிதான வாய்ப்பாடியும்
காருலவு முடுதுறை அன்னதரு திருவாச்சி
கனக கொடையூரு மிகவும்
காவேரி சூழ்மேல் அரைய நன்னாட்டில்
கதி பெருகும் ஊஞ்சலூரும்
ஆரமணி மேடை திகழ் தெக்கலூர் பூந்துறைசை
அதிக சேவூரு குன்றை"

அந்துவ (அந்தி) குல வேட்டுவரின் கரணியூர்கள் நாகம்பள்ளி, கீரனூர், ஆரியூர், மோடமங்கலம், ராசியூர், பாலைமேடு, தூரம்பாடி, கோதையூர், அந்தியூர், லக்காபுரம், தோட்டாணி, செவியூர், வாய்ப்பாடி, முடுதுறை, திருவாச்சி, கொடையூர், ஊஞ்சலூர், தெக்கலூர், பூந்துறை, சேவூர், குன்னத்தூர்.

## கிபி. 1295 நாமக்கல் மாவட்டம் வெப்படை, எலந்தகுட்டை நடுகல்:

ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு ஆண்டு 20 - வது மண்டபத்தூர் அந்துவ (அந்தி) வேட்டுவர் உத்திமான்...............

இந்த நடுகல் வாசகம் முற்றுப்பெறாமல் பல வரிகள் சிதைக்கப்பட்டுள்ளது வேண்டுமென்றே வேட்டுவர் வரலாறு களை சிதைப்பது வந்தேறிகளின் வேலை என்பதனைப் இது புலப்படுத்துகிறது. சுந்தரபாண்டியருக்கும் முகமதியருக்கும் நடைபெற்ற போரில் சுந்தரபாண்டியருக்கு ஆதரவாக அந்துவ வேட்டுவ குலத்தைச் சேர்ந்த உத்தமன் என்ற மண்டபத்தூர் நாட்டை ஆண்ட மன்னன் போரில் இறந்ததற்காக எடுக்கப்பட்ட நடுகல் இது.

# பாண்டிய மன்னன் காலத்தில் அந்துவ வேட்டுவன் நடுகல்



நாமக்கல் மாவட்டம், பவானி கொமாரபாளையத்திற்கும், வெப்படைக்கும் இடைப்பட்ட மண்டபத்தூர் பகுதியில் நடுகல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.



கொங்கு நாட்டை ஆண்ட சுந்தரபாண்டிய மன்னன் கி.பி.1285-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவன் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவார்கள். இம்மன்னனது 22ஆம் ஆட்சியாண்டான கி.பி.1307-ல் எடுக்கப்பட்ட நடுகல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுத்துறையில் ஆர்வமுடைய ஜோதி, சந்திரசேகர் ஆகிய இருவரும் கொடுத்த தகவலின்படி அவர்களுடன் சென்று கல்வெட்டு ஆய்வாளர் ஜம்பை புலவர் அ.பழனியப்பன் ஆய்வு செய்தார்.

இந்த நடுகல் ஒரு தோட்டத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. பருத்த தொடைகளும் அகன்ற மார்பும் உடையவனாக வீரன் காணப்படுகிறான். தலையின் இடப்புறம் உருண்டை வடிவில் கொண்டை உள்ளது. கைகளில் குத்தீட்டி உள்ளது. அந்துவ வேட்டுவன் ஒருவனைப் பற்றி 3½ வரிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது வரியும், நான்காவது வரியும் முழுமையாகப் படிக்க இயலாமல் எழுத்துகள் சிதைந்துள்ளன.

கல்வெட்டு

*1. ஸ்ரீ சுந்தர பாண்டிய தெவற்கு யாண்டு உயஉ*

*2. வது மண்டபத்தூர் அந்துவ வெட்டு(வன்)*

*3. உத்தம ......................*

*4. ..............................*

என்று உள்ளது. உத்தம எனத் தொடங்கும் பெயரை உடைய அவ்வீரன் பகைவருடன் போரிட்டு வீரமரணம் எய்தி இருக்கலாம் என புலவர் பழனியப்பன் கூறுகிறார்.

**Kannappar Kalvi Madal, November 2019.**

இந்நடுகல் இன்று வெப்படை எலந்தக்குட்டை மண்டபத்தூர் பொங்காளியம்மன் கோயில் அருகில் உள்ளது குறிப்பிடத்தக்க தாகும்.

“கள்வர் கோமான்” புல்லி திருவேங்கடத்தை ஆண்ட வேட்டுவ மனனன்.

வேந்தன் ஏவி விட்டபடி வீரர்கள் அயலார் நிலத்திற்குப் போய்ப் பசுகளையும், எருதுகளையும் கவர்ந்து வருவார்கள். அதனால் வீரர்களைக் கள்வர் எனப் புலவர்கள் கூறினார்கள். இக்காலத்தில் கள்வர் என்பதிற்கு திருடன் என்று பொருள் கூறுவது வேறாகும்.

**“கள்வர் கோமான்” எனப் புல்லி அழைக்கப்பட்டான்.**
**(அகம் - 61:11)**

**வேந்து விடு முனைஞர் வேற்றுப் புலக்**
**களவின் ஆதந் தோம்பல் மேவற்றாகும்.**
**(தொல்காப்பியம் பொருளதிகாரம் - 57)**

## வடகரை நாட்டு அந்தியூரன்:

அந்தியூர் வடகரை நாட்டு மன்னன் அந்துவ வேட்டுவச் சுந்தராயன் பட்டயம் ஒலகடத்தில் கள்ள வேட்டுவர் சிற்றூர் மன்னனாக இருந்ததைக் குறிப்பிடுகிறது. ‘திருச்செங்கோடு நடுகல்’

**“ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு**
**ஆறாவது வடகரை நாட்டு உலகடங்கத்து**
**கள்ளை வேட்டுவரில் அந்தியூரன்”**
**(நாமக்கல், திருச்செங்கோடு நடுகல் கி.பி.1280)**

சுந்தரபாண்டியருக்கும், முகமதியருக்கும் நடைபெற்ற போரில் சுந்தரபாண்டியருக்கு ஆதரவாக கள்ளை வேட்டுவ குலத்தைச் சேர்ந்த அந்தியூரன் என்பவர் போரிட்டு இறந்ததற்காக எடுக்கப்பட்ட நடுகல். இவன் அந்தியூர் கோட்டையில் பாசறை வேட்டுவர்களிடம் போர் பயிற்சி பெற்றதால் அந்தியூரன் என்று அழைக்கப்பட்டான். இந்த நடுகல் இன்றும் சேலம் அருங்காட்சி யகத்தில் மிகக் கம்பீரத் தோற்றத்துடன் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கங்கமன்னர்களின் கடைசி அரசன் இராஜமல்ல தேவராயன். இவன் குணதுத்தம ராயனுடைய தம்பி இவனைப் பற்றி அடியிற் கண்டபடி கூறப்பட்டிருக்கிறது. "அவன் தம்பி இராஜமல்ல தேவராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு சகல ராஜாக்களுடைய விருதுமடைந்து அப்பொழுது பாண்டியராஜன் யுத்தத்திற்கு வந்தவிடத்திலே அவனுக்கு அபசெயம் பண்ணு வித்துச் சகல ராஜாககள்ளும் இவனுக்குச் சமமான பலசாலி இல்லை என்று கீர்த்தியை அடைந்து தன்னுடைய அண்ணணை விஜய ஸ்கந்தபுரத்திலே வைத்து அரசாண்டனன். அப்பொழுது அவன் அண்ணன் குணதுத்தமராயன் தருமம் பண்ணின வயணம்:-

சாலி வாகன சகை வருஷம் நோபா வஸி 89 விகாரி வருஷம் 303 ஆனி மாசத்திலே குரு வாரத்திலே பூர்ணமியிலே புனர்வசு நக்ஷத்திரத்திலே 7 விஷ்னு குஹானாலய மென்கிற சைன தேவரது நவ கரும பலிபூசை முதலான தருமத்துக்குக் கொங்கணீ சுவர பகவந்தனுடைய சிஷ்யன் தேச சோம பகவந்தன், அவன் சிஷ்யன் அகோர சோம பகவந்தன், அவன் சிஷ்யன் சசிபூஷண மகாமுனி அவனுக்குத் தலக்காடு, நாடுவடகரை நாடு, வீர அள்ளியென்கிற கிராமம் சர்வ மானியமாய் தர்மம் பண்ணிக்கொடுத்தான். அதன் பிறகு உபயகாவேரி மத்தியத்திலே பச்சிம ரெங்க நாயகருடைய சேவை வெகுநாளாய்க் கௌதம பூசை செய்து இருந்த பிறகு இந்த ஸ்தலம் வனமாய்ப் போய்த் திருமலை என்கிறவன் இரங்கநாயகர் கோவில் கட்டி வைத்துக் கொஞ்சம் பிரகாரங்கட்டி ஸ்ரீரங்கபுரமென்று பெயர் வைத்து அந்தக் கோயிலுக்கு மேற்கே தன் பெயர் வைத்துத் திருமலை தேவ ரென்று ஒரு விஷ்ணு பிரதிஷ்டை பண்ணி இந்த இரண்டு கோயிலுக்கும் பூஜை முதலானா தருமம் நடப்பித்துக் கொண்டுவந்தான் சகை வருஷம் 894 ஆனந்த வருஷம் வைசாக மாதம் சுக்கில பக்ஷம் சப்தமி சுக்கிர வாரம்"

மேற்சொன்ன வரலாற்றில் இவ்வரசன் ஸ்ரீரங்கப் பட்டணத்தைப் புதுப்பித்தவன் என்று தெரிகிறது.

இவன் இருந்த காலம் கி.பி. 894 என்று மேலே சொன்ன வரலாற்றினால் தெரியவருகிறது. கங்க வம்சத்து அரசர்களில் இவன்தான் கடைசி அரசனாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவனுக்குப் பிறகு கொங்குதேசம் சோழர் வம்சத்திற்குச் சேர்ந்து விட்டதாக இந்நூல் கூறுகிறது.

இவ்வரசனுடைய வரலாற்றுக்கு பின் அடியிற்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது.

“சோழவம்சத்திலே கொங்கு தேசபட்டம் சோழவம்சத்திலே விசயாடராயன் மகன் ஆதித்திய வர்மராயன் சோழதேசம் தஞ்சாவூரிலே பட்டங்கட்டிக்கொண்டு

கொங்குதேசத்துக்கு வந்து இராசா வேடர்களை செயம் பண்ணித் தலைக்காடென்ற பட்டணங்கட்டிக் கொண்டு இந்த இராச்சியங்களிலே அநேக அக்ரகாரம் சர்வ மானியமாய்த் தருமம் பண்ணி அந்த அரசை அரசாண்டனன்.

> இவ்வரலாற்றினால் முன்சொன்ன இராஜமல்ல தேவனுக்குப் பிறகு கொங்குநாட்டிற்கு வந்து அரசாண்டது சோழ வம்சத்து ஆதித்தியவர்மன் என்று தெரிகிறது. இவன் பிற்காலச் சோழ வம்சத்தை நிறுவிய விஜயாலாய்னுடைய மகன் பராந்தகன் என்பவனுடைய தகப்பன். கி.பி. 9-வது நூற்றாண்டில் சோழ வம்சத்தில் புகழோடு ஆண்டவன். மேலே கூறிய வரலாற்றுக்கு சோழவம்சத்து அரசர்களுடைய பெயர்களும் அவர் களுக்குப் பிறகு ஒயிசள வம்சத்து அரசர்களுடைய பெயர்களும் ‘கொங்குதேச இராஜாக்கள்’ எனும் நூலில் காணப்படுகின்றன.
>
> (கொங்கு நாட்டு வரலாறு
> பக்கம். 113 to 116. கோவைக்கிழார்)



அந்தியூர் அருள்மிகு பத்ர காளியம்மன் கோவில் குண்டம் விழாவில் அந்தியூர் ஆதீனம் அடசபாளையம் சந்திரசேகரன் குண்டம் இறங்கிய காட்சி - (4.4.2018, மாலைமலர், ஈரோடு.)

## மழங்கொங்குநாடு :

தேர்மாறன் கி.பி 710 முதல் 740 வரை ஆண்டிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியரளர்கள் கணித்திருக்கிறார்கள். தேர்மாறனுடைய தகப்பன் கோச்சடையன் என்ற பாண்டியன் “கொங்கா கோமான்” என்ற பட்டத்தை வகித்திருந்தான். கொங்கு நாட்டை தன்வசப்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற ஆவலோடு தேர்மாறன் படைஎடுத்துச் சென்ற பாகத்திற்கு ‘மழங் கொங்கம்’ என்ற பெயர் அக்காலத்தில் வழங்கிவந்த்தாக அறிகிறோம். "மழகொங்கம் அடிப்படுத்துப் பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது பத்மபாதம் பணிந்தேத்தி” என்று பாண்டியன் நெடுஞ்சடையனுடைய ‘வேள்விக்குடிச் சேப்பேட்டில்’ கூறியுள்ளதால் மழங்கொங்கமானது பாண்டிக் கொடுமுடி மட்டும் பரந்திருக்க வேண்டுமென்று யூகிக்கலாம். கி.பி. 907 - 953 ல் ஆண்ட பராந்தகன் 1 என்ற சோழ அரசனுடைய இரண்டாவது புதல்வனான கண்டராதித்தர் மழவ மன்னனின் குமாரத்தியை மணம் செய்து கொண்டதாகவும், அவ்வரசியின் பெயர் பராந்தகன் மாதேவடிகளார் என்றும் தென்னிந்திய சாசனங்கள் 4.11. பாகம் V.375 ல் அறியப்படுகின்றது.

**அந்தியூர் சுந்தராயர் பட்டயத்தின் 1–ம் பக்கம்.**



ஆண்டு எழுபத்துதஞ்சு ஆகிய ஆங்கில வருஷம் ஆடி மாதம் 18 - ல் சேரன், சோழன், பாண்டியன் மூவராசாக்கள் விச (ய) னகரம் ஆனகுந்தியில யிருந்து கண்ணப்ப கோத்திரத்தை வேண்டியழைத்து வேழங்கள் தானகொடுத்து மூவராசாக்களுங்கூடி கருவூர்சாமிக்கு எண்ணைக்காப்புசாத்தி அருளியபொழுது வானவரம்ப கோவர்கோ கோக்கலி மூக்கன் கிளக்கிட முடி சேர நயினார் வன்னியர் தொண்டமானார் சேருமா மலை ஊராளி காஞ்சிக்கோவில் நாட்டுத தானிகரில் பெரிய பெருமாளயன்கும் பலங்காடைய் கிட அருந்துதி என்ம்பன் பெருமாளுக்கு விண்ணப்பம் செய்யுது திருமுகம் பெற்று(ம்)

முக்கோடி நம்பியாரைக் கூட்டித் திருமுகம் விட்டு சாத்தப்பட்டும் சிறப்புக் குடுத்து அருந்துதியை நில்லென்று சொல்லித் தங்கள் விளி விளிச்சு முக்கா முக்கோடி நம்பிமார்கள் கண்டு பன்னிராட்டைக் காலம் விசாரித்து யின்றும் தங்பழங்கார்ரெனவகா அம்பலங்காரென்றும் பெண்டிரென்றுங் குடுப்பதில்லை யிதினுங் கானுந்தன பாப்பானுங் கடுக வருவதென்று சொல்லி அருந்திதி சென்று பெருமாளு

**அந்தியூர் சுந்தராயர் பட்டயத்தின் 2 – ம் பக்கம்.**



க்கு விண்ணப்பஞ் செய்ய பெருமாள் கோபிச்சு எளுந்து கிளக்கிட சிங்காதன மேறக்கிட பதிநெட்டுச் சுரமும் மளிச்சு சேரன், சோழ, பாண்டி(ய)ன் மூவராசாககள் பெருமாள் கம்பன் உடைய அந்துவ வேட்டுவ சுந்தராயருக்கு அந்திஊரு வடகரைநாடு முப்பது கிராமம் யுள்பட ஆதீனம் செப்பேட்டு பட்டையம் குடுத்து மேக நதி யிலிருக்கும் பூதம் பணி செய்ய அவ்வை நலக்கவி சொல்ல ஆணுக்கும் பெண்ணுக்கும் வரிசைப் பொன்னாலை பூணுறு காவிக்கம் ஆலவட்டம் பரிமாறப் பள்ளிச் சிவியார் பரிசு மக்க சங்கு பேரிகை முழக்கம் வெங்கலக் கொடை வெள்ளியால வட்டம் நஞ்சை புஞ்சை னாற்பாங்கு எல்லையும் புற்றி தொன்றியும் தென்படுமலை மடுசுனையும் அனுபவிச்சுக் கொள்ளவும் வஞ்சிக்கும் வடகரைக்கும் யெல்லை வரு ஊருமலை அதின் கிழக்கு பச்சைபாளி யிதின் கிழக்கு நிலபாறையில் எளுத்து சாதனம் யிதின் கிழக்கு பாலைமலை மேல் அட்டகல் யிதன் கிழக்கு ஆளைக்கல் யிதின் கிழக்கு தென்கல்லு

**அந்தியூர் சுந்தராயர் பட்டயத்தின் 3 – ம் பக்கம்.**



யிதின் கிழக்கு காவேரி வடகரைக்கும் ஒடுவங்கத்துக்கும் யெல்லை திருக்கடம்பூரு வாணிப்புத்தூருக்கும் நடுவே விளுந்த புலியன் பள்ளத்தில் பாறையில் எளுத்து வடக்குமலை அழவு தெற்கு வானிநவுலூருக்கு யெல்லை காரைமடை யிதின் வடக்கு கருங்கரடு யிதின் வடக்கு பெரியமலை என்னமங்கலத்துக்கு எருத்தாயமலை மாத்தூருக்கு வால்கரடு வடக்கு கருங்கரடு யிதின் வடக்கு தென்படுமலை திருப்பூருக்கு நாவிதன் பாழி வடக்கு பூதாளை பட்டுலூருக்கு கருங்கரடு தெக்குசிருக்கரடு யிதின் தெக்குதூரி ஆலாயிதின் மேற்கு கொண

உகாய அடுத்து எளுத்துக்கல் யிதின் மேற்குக் கருங்கரட்டுக்கு தெற்கு அடுத்த எளுத்துக்கல் யிதின் மேக்குக் கருங்கரட்டுக்கு தெற்க்கு அடுத்த எளுத்துக்கல் மேற்க்கு வெள்ளகரடு உலகடத்து கள்ள வேட்டுவன் நெரிஞ்சி ஊர் சாமவேட்டுவன் கோட்டை நவுலூரு புள்ளை வேட்டுவன் கேசரமங்கலம் வன்னி வேட்டுவன் ஊராச்

**அந்தியூர் சுந்தராயர் பட்டயத்தின் 4 – ம் பக்கம்.**



சிக்கோட்டை பரிப்படை வேட்டுவன் சம்பை அந்து வேட்டுவன் வெள்ள வேட்டுவன் ஆப்புகூடல் படைத்தலை வேட்டுவன் கீள்வானி கிளங்கு வேட்டுவன் பெருமுகை வெள்ள வேட்டுவன் திருகடம்பூர் அந்து வேட்டுவன் நவுலூரு புன்னை வேட்டுவன் அந்து வேட்டுவன் வேம்ப அத்தி வேம்பு வேட்டுவன் கட்டுகல்லானை சிவப்பிரமாணன் கோயில் ஆண்டி கொங்க கொள்ளன் தச்சன் வேட்டுவனாவிதன் சங்கிடு பறையன் காளத்தீயீசர் மீனாட்சி அம்மன் மாணிக்கவாசகர் லட்சிக்கவும் யிந்த செப்பேடு வெட்டுனவன் கட்டாரி செய்யன் இதுக்கு ஆதாயொருவர் ஆமா அல்லவென்று துடுக்குச்சணம் பன்னின பேர்கள் காசிகெங்கை கரையில் காராம் பசுவை கொன்ன பாவத்தில் ஏழுபிராமணரை கொன்னபாவத்தில் போகக்கடவானாகவும் உ பட்டுலூர் பீச்சைவேட்டுவன் ஊழியத்து பெரிதான யீஞ்சனுக்கும் கருமலை வட்டத்தில் முப்பது வள்ள காடு உம்பழ

## பவானி வட்டத்தில் வேட்டுவர் நடுகல்

ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தைச் சார்ந்த ஜம்பை கிராமத்தில் அந்தி வேட்டுவர்களும், வெள்ள வேட்டுவர்களும் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அடசப்பாளையம் சந்திரசேகர் வீட்டிலுள்ள வேட்டுவர் செப்பேட்டின் மூலம் அறியலாம்.

இவ்வூரில் 4 அடி உயரமும், 3 அடி அகலமும் கொண்ட நடுகல் உள்ளது. இதில் பொறிக்கப்பட்டுள்ள வேட்டுவரின் தலையில் குடுமியும், வலக்கையில் அம்பும், இடக்கையில் வில்லும், இடுப்பில் வாளும் உள்ளன. கழுத்தணி உள்ளது. தற்போது இவ்வூரில் வேட்டுவர்கள் ஒருவர்கூட இல்லை. தொழில் மற்றும் பல்வேறு காரணங்களால் இவர்கள் வெளியூர்களுக்குக் குடியேறி இருக்கலாம். இந்த நடுகல் 15ம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சார்ந்தது. எந்தக் காரணத்திற்காக இந்த நடுகல் எடுக்கப்பெற்றது என்று





அ. பழனியப்பன்

தெரியவில்லை. இதில் எழுத்துக்களும் இல்லை என்று கல்வெட்டு ஆய்வாளர் ஜம்பை பழனியப்பன் தெரிவிக்கிறார்.

நவம்பர் 2015

## மாந்தரஞ் சேரல் மெய்க்கீர்த்தி:

சேரநாட்டை ஆண்ட சேர மன்னாகளுக்கு முசிறி எனும் பெருங்கடற்கரை துறைமுகமும் பூழி நாட்டில் உள்ள தொண்டி, மாந்தை கடற்கரை துறைமுகங்களும் இருந்தன. அப்பொழுது கொங்கு நாட்டை ஆண்ட இரும்பொறை அரசர்களுக்கு கடற்கரை துறைமுகங்கள் இல்லாது போனதால் கொங்கு நாட்டை ஆண்ட செல்வக்கடுங்கோவுக்கு பூழி நாட்டை சேர மன்னர்கள் கொடுத்தனர். இதனால பூழி நாட்டில் உள்ள தொண்டி, மாந்தை கடற்கரை துறைமுகங்கள் செல்வக்கடுங்கோ வாழியாதன் எனும் இரும்பொறை அரசனுக்கு உரிமையுடையதாதனது. இதனால் செல்வக்கடுங்கோ பூழியர் கோ என்றும் மாந்தை கடற்கரை துறை முகத்தை உடையவன் ஆனதால் மாந்தரன் கடுங்கோ என்றும் அழைகக்கப்பட்டான். இவனுக்குப் பின் கொங்கு நாட்டை ஆண்ட இரும்பொறை அரசன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் என்று போற்றிப் புகழப்பட்டான். இவன் மாந்தை நகரில் மாந்தப்படை எனும் படை வீடு வைத்திருந்தான். இன்றும் வேட்டுவரில் மாந்தப்படை வேட்டுவர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். அந்தியூர் காணியாளர் (அந்தியூர் ஆதினம்) ஏ.கே. சந்திரசேகரனின் முன்னோர்களிடம் இருந்த அந்துவன் காணிப் பாடல்கள், மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி போன்ற ஆவணங்களத் தமிழ் தொல்லியல் துறையினர் பெற்றுக்கொண்டனர். பின்பு மாந்தரஞ் சேரல் மெய்க்கீர்த்தி ஏடு பெயர்த்து எழுதும் பொழுது தற்காலத்தில் வழங்கிய வண்ணம் சில இடங்களின் மாற்றம் செய்துள்ளனர்.

கொங்கு நாட்டைக் கைப்பற்றிய வெற்றியில் மகிழ்ந்த சேரன் கொங்கு நாட்டில் தன் பெயரால் மாந்தை நகர் ஏற்படுத்தி சாத்தன் ஐயனைப் பிரதிட்டை செய்கின்றான். இன்றும் வேட்டுவர்களில் மாந்தைப்படை வேட்டுவர்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றனர். இன்றும் கொங்கு நாட்டில் மாந்தபுரி (மாந்தை) என்னும் ஊர் விளங்குகிறது. அங்கு புகழ்வாய்ந்த நாட்டராயன் கோயிலும் உள்ளது. மாந்தீசுவரர் என்ற சிவன் கோயிலும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கொங்கைக் கைப்பற்றி ஆண்ட அந்துவன், சேரல் இரும்பொறைக்குப் பின் கொங்கு நாட்டை ஆண்ட மாந்தரன் செல்வக்கடுங்கோ வாழியாதன் மற்றும் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**மாந்தரன் I : மாந்த்ரன் செல்வக்கடுங்கோ வாழிஆதன்**
**மாந்தரன் II : யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை.**
**மாந்தரஞ் சேரல் மெய்க்கீர்த்தி பாடல்:**

உதியனது நல்மரபில் பதியெனவே வந்தமர்ந்து ஆய்ந்துணர்வு கொளும் புனித மாந்தரஞ் சேரல் மன்னன் சேரல மாநகர் என்னும்

**திகழ் வஞ்சி மாநகரும் காகம் எனும் நற்பதியும், கனக தாராபுர**
**நகரும், விளங்கிலெனும் பதியதுவும், மிகு மூலனூரதுவும்**
**பாரதனினில் பலதலைமைப் பண்புடைய நகர்போக்கி,**
**பாண்டியர்தம் புத்திரராய்ப் பகர் கொங்கர் ஐவரொடும்**
**வேண்டிய சீர் வேளிர்களும் விறல்கெழுநற் (கொற்றவை)**
**நற்புகழ்பாட கொலுவமர்ந்து குடிபுரந்து (கத்தல்) கொற்றமது**
**புரிநாளில் திங்களையும்**

## மெய்க்கீர்த்தி திகழ் சோழர் தம் குடியில் மைக்

1) கருமை மையூரும்
2) மருவு திரு அய்யோத்திப் பட்டினமும்
3) வேங்கடமும்
4) பாங்கமரும் துவரையதும்

## சக்கரமோட்டிய அரசுபுரியும் சக்கரவர்த்திகள்

எனவே தார்அரசு புரிநிலமை மையூரும் பிற தலமும் மாதவ நீராடிவரும் செய்யூருமாதவத்தார் செப்புநலம் கேட்டயிவன் அங்கு அவரில் வாழ்வு பெறும் அழகிய சீர்த் துவரையில் வாழ் செம்பியனைப் பொன்னணியும் திகழ் சோழ எழினியையும் வம்பியல் செந்தார் அணியும் மாண்பன் இருங்கோவேள்லையும் தியனொடு மையூரன் திகழ் பொருநான் என்பவனை நட்பரசு ஆக்கியவர். நல மிகு சீர் நற்குடியில் தன் சேய் மந்தரஞ்சேரல் தனக்கு மகள் கொடை நேர்ந்து சேரலா மாநகரில் திகழ் காக பதி அதனில் பரளவும் கீர்திபுனை பகர்த் திருச்செங்கோடதனில் மன்னு பலபதிகளும் மகன்றனை நல்லரசாக்கி துன்னு பல வளங்களொடு சுபமாக விளக்கதனில் வந்து தனது அரசியலை வகையாக நடத்திடும் நாள் விந்தை பெறு இவன் தோள்மேல் விந்தையுமே கூடினளால். நட்பரசர்களுக்கு அவன் நல புலமை தருவதற்கே பெட்புடையா மனம் அதனில் பெரு விருப்பும் மிகக் கொண்டு

இருங்கோவைச் சகபுரி யிருந்துவரும் எழினியையும் திதியனையே பேரென்னும் ஓர் பொற்புடைய பதி தந்து வரு குறைஒன்றும் இல்லாது மணி அரசு செழுதிடும் நாள் வந்தமரும் வேளிரெல்லாம் வகைபடவே சொல் தரும் இந்தநிலம் தமதாக்கி எழில்வளனை இயற்றியதால் மந்திரி மார் தம்முடனே வரும் சேனை தானை நடத்தும் தந்திரமும் மிக்கச்செய்து தருவளவர் எனும் பதமும் கிள்ளியோடு நள்ளி முதல் கேடில்கா விதிப்பதமும் விள்ளருஞ்சீர் ஏனாதி மிகுபதமும் மோதிரமும் தனது இனும் பலகாணி தகு சிறப்புச்செய்து நலமைந்து பெற அவர்களுடன் மகிழ்ந்து அரசு புரிந்திடும் நாள்.நிலந்தரு சீர்ப் பெருங்கீர்த்தி நிலைமைபெரும் பாண்டியனின் குலம்பெருக வந்துதித்த கோ வேந்தர் ஐம்பிரிவர் பூவலியர், மாவலியர் பொற்பு மிகும் காவிலியர், சேவாகமே மிகு வேடர் செம்மைமிகு வேட்டுவர்கள் பன்றி மலை மண்டிலத்துப் பா கொழு அமர்த்து நாட்டில் வென்றிதரு விரடபுரி (தாராபுரம்) மேவியமர்ந்து அரசு புரிந்த காவிலியர் கொங்கர் எனும் கமழ்தாரர் இவனுடைய மந்திரியர் சேனைதனை வகை பெறவே நடத்துநர். இந்த நிலை தமக்கு எதிரா எங்கிருந்தோ வந்தவர்கள் மந்திரராய் சேரல் மனம் மகிழ்தருசீர்ப் பண்பினாராய் சம்பந்தரய் உளவிப் தமக்குறிய பூமிதனில் பிம்பமிரும் காணியராய்ப் பெருகி வளர் நிலைகண்டு ஆத்திரமும் கோபமதும் அருமனத்து மிகத் தாங்கி தங்களது தலைவரெனத் தருசீர்த்தி மாவலியன் பங்கு பெறும் காவலவப் பண்புடைய கொத்துமுடிப் பாண்டியன்தன் பால் அணுகிப் பாராளும் பத முடைய ஈண்டு புகழ் தம் பதத்தை இன்று வருவோர்க்களித்த சேரலனைச் செருவருத்துச் சென்று தொலைத்திடுவம் எனக் கோபித்துக் கூற அதைக் கொத்துமுடியோன் கேட்டு நாக்கடித்து அருமீசை துடிதுடிப்ப வடக்கமரும் சேரலனை மன்னனெனக் கொண்டது நம் அடக்கரிய வன்மைதனக் கருமாக தந்தெமை போர்க்கெழுந்து ஆங்கவனைப் புறங்கண்டும் நம்மவர்கள் தார் குதிரை யானையெலாம் சமர்க்கோலம் செய்ம்மின் எனபோக்கினன்.

ஓர் தூதுவனைப் புறங்காணும் ஆசையதால் குடமலையும் வடமலையும் குணமலையும் பிறவாய தரமலைகள் ஆளும் நலத் தரு சேரல் முன்வந்து அத்தூதன் மொழிகின்றான் ஆன்றமைந்த மிகுகேள்வி கொத்துமுடியோன நின்பால் குணமமையவிட வந்த தூதனிவன். வந்தெனனச் சொல்லு முறையும் உண்டென்ன மாந்தரனும் கோபித்த வரு வயணம்(காரணம்) கூறென்றான்

கல்தோன்றி மண்தோன்றாக் காலமுதலா நாங்கள் (வேட்டுவர்கள்) மல் (வலிமையான) வலயதாதோள் கொண்டு மாவலியர் என இருந்து காவலராய்க் கொங்கர்களாய் கமழரசு புரிநாட்டில் தா வளஞ் சேர் மன்னனுந்தான் தனியரசாச் செய்ததனால் கொங்கனென எந்நாமம் கொடுத்து உம்மை மகிழ்வித்து எங்களது புயவலியால் எண்டிசையும் வென்றளித்து மந்திரராய்ச் சேனைதனை வகை பெறவே நடத்திடு சீர்த் தந்திரராய் இருந்த எமை தான் மதியாதிது நாளில் வடக்கிருந்து வந்தவரை மதித்தவரை மந்திரியாய் தடக் கிரி சூழ் உலகமதில் தனிக்காணி தந்தளித்தால் எங்கள் குலத்தவர் தமக்கு இழிவாகும் ஆதலினால் பொங்குமதைப் போக்க வரும் போர்க் கெதிராய்ப் போர்புரிய கொங்கரெனும் பேரெமரைக் கொன்று பின்னர்த் தரிக்கவெனும் என கொத்துமுடியோன் வார்த்தை.

குவலயபூபதி (சேரன்) செவியில் மெத்து திறலுடன் வீழ வெகுண்டமரில் பார்ப்பம் என தூதுவரைப் போக்கிவரும் (அனுப்பிவிட்டவர்கள்-குறள்-774 ) தூறர் எனும் (பழி சொல்லும்) மந்திரரை (வேட்டுவரை) எதுவுடன் (கோபத்துடன்) மிகப் பார்த்து எழுந்தவாரே சமர்புரிய தனக்கு உபகாரம் புரியதலை இளி செய்யு வாரையும் மனக்கினிய முறைமை அதில் மகிழ்விக்கு மாறியம்பி ஏறை மலையாருகாசு இருக்குமொரு செங்களத்தில் திங்கள் மரபினில் வந்த சீர்மை மிகு பாண்டியர்கள் (வேட்டுவர்கள்) பொங்கி வரும் புத்திரரை போற்றி வரும் கொத்துமுடிக் கொங்கனுடன் மலையரசு குணம் நிறையப் புரிநிறைந்து. கொங்கனெதிர் அமர்புரியக் கொண்டவன் நற்படை நாட்கோள் சேரலன் தன் படையெடுப்பும் செம்மையுள அவன் சேனை ஆரவார முடன் வந்த அதனை மனமது கொண்டு யாகபுரியொடு பிறவும் அரசுபுரி கொத்து முடி வேக மிகு மன்னவனும் விடுத்தனன். தென் மதுரை சேர் அரசுபுரி பாண்டியனும் அனுப்பினன் நற்படை வேண்டி விரசுபுரி திருக்கோலம் விளங்கு திறல் மாமதுரை மன்னவனும் இதுகேட்டு மனம் பெருகச் சினம்கொண்டு தென்னவனென்றில் இவ்வுலகில் திகழ் சீர்மை கொண்டிலகும் நம்மது புத்திர வர்க்கம் நாடாளும் தேன்நாட்டில் செம்மையுடன் சேரலனைச் சேரவமைத் திட்டதுவும் அன்றி நம தாங்குடியின் அணிமலரைத் தந்ததுவும் கொங்கன் என நமது பெயர் கொடுத்ததுவும் சீர்மை பெற இங்குஅவன் தனைப்போற்றி இருந்ததுவும் தப்பாமல் அத்தவரைப் போர் முறையில் அகற்றிவரும் செயல் புரிய இத்தரையில் படைகொடு நாம் எழுதலே நலம் என்று மாமதுரைப் பாண்டியனும்

மாண்பு மிகும் தேன்நாட்டு சேம மிகும் கொத்து முடிச் செழியன் எனும் மன்னனுடன் கொங்கர் எனும் பெயர்கொண்டு குலவும் நல வேட்டுவரை அங்கமரும் வேடர் தமை ஆதரித்துத் தான் கூட்டி பெருஞ்சேனை கடல் போல பேரார ஆர்ப்பரித்து அருஞ்சீர்த்திச் சேரலனை அடுத்ததனால் அவர்களுடன் வந்தெதிர்த்த சேனைகளை வல்லமைகொண்டே தாக்கி பைந்துணர் சேர்ர பனந்தாரன் பக்கமுள்ல மற்றவரும் பலநாட்கள் போர்புரிந்து பலபடியாய் மிகவென்று நலமனைய வெற்றி கொடு நாயகராய் வந்தெதிர்ந்த பாண்டியனை விடலாபுரி பார்திபனை வையாக புரி ஆண்டு வரும் காவலனை யாவரையும் அணிபோரில் படத்துரத்தி மிக வெட்டி பனபுயரும் மற்றவரை இதத்துயரும் பொதினிவரை ஏகவமர் தனில் ஒட்டி புரிந்து செயக் கொடிநாட்டி புவனியெலாம் தமக்காக்கி தெரிந்து மெத்திறம் விளைத்த திறல் வேளிர் தமைப் புகழ்ந்து மைந்துடனே வாகையது மாண்புபெறவே புனைந்து உதவிவரும் வேள் பலர்க்கும் ஊர்க்காணி பரிசளித்து பதமிகுந்த அரசாட்சி பார்மகிழ நிலைநிறுத்தி தன்னரசு மிகப்புரியத் தகு வாரை ஆராய்ந்து தென்னவர்கள் ஊர்கள் தொறும் திறல் வேளிர்தமை நிறுவி வடமலையும் தென்மலையும் வாகு பெரு பலஇடமும் குடகடலும் குணகடலும் குலவிடு நற் பூமியெலாம் தன்னரசை நிலை நிறுத்தித் தகுந்த நாடு நிலம் ஆய்ந்து தென்னவர்தம் பூமியினுள் திகழ் தலமாம் ஓரிடத்தில் மாந்தையெனத் தன் நாமம் மருவ ஒரு நகர் அமைத்து பாந்தமுடன் ஐயன் (வேட்டுவர் தெய்வம்) எனும் பகர் சாத்தன் தளி எடுத்து நாட்டரயன் என நாமம் நவின்று தொழுதவன் குறைதீர் மோட்டு நலத் தொரு பூதம் முழு நலத்தால் எழுவித்து மந்திர நன் முறைமையினில் வரு தெய்வத் திறம்பேண எந்தி ரசா தனம் முதல் இயற்றுவித்து நாட்டினர்க்கு ஒரு குறையும் இல்லாது வறுதுயரம் நில்லாது மாரி வளங் குறையாது மனுநீதி தவறாது தன்னுயிர்போல் மன்னுயிரைத் தலையளி செய்தே ஆண்டு சேயான மாந்தரனும் திறமையொடு புவி புரத்தல் (ஆட்சி செய்தான்) ஆயான் நலம்பலவும் அமைய விளக்குதல் கண்டும் அன்னவனுக்கு உறுதுணையாய் அறுவர்துணை நலம்கண்டும் பூரித்து தன் உள்ளம்போல் புயம்வரைப் புகழ்குடி அறிந்து நலங்கண்டு அவனியெல்லாம் புகழ் பரப்பி இறைவனது திருவடியை இதயமதில் மிகக்கொண்டு பல்லுழி வாழ்கவென்றான்.

பார்த்திபனும் கோமகனும் நீடுழி வாழ்கவென நித்தமுமை வாழ்த்துவமே!.

## தேன்நாடு (கொங்கு நாடு):

வஞ்சி மாநகர் (கருவூர்), தாராபுரம் நகர் (இராஜ இராஜபுரம்), விளங்கில், மூலனூர், மையூர் அயோத்திய பட்டினமும், வேங்கடம், துவரை, செய்யூர், காகம், திருச்செங்கோடு, மாந்தை என்ற ஊர்களும் சேரன், பாண்டியன் கொங்கர் எனும் வேட்டுவ வேளிர்கள், எழினி இருங்கோ வேள், திதியன், மையூரன், கிள்ளி, நள்ளி, ஏனாதி, கோவேந்தர், ஐம்பிரிவர் பூவலியர், மாவலியர், காவலியர், வேடர், வேடுவ (வேட்டுவர்) கொத்துமுடி செழியன் எனும் மன்னர்களும் பன்றிமலை, விலாடபுரி, குடமலை, வடமலை, குணமலை, ஏறைமலை, பழனிமலை (பொதிணி மலை) என்ற மலைகளும் மாந்தரல் சேரல் மெய்கீர்த்தியில் குறிப்பிடப்படுகின்றன.

கரூர் (வஞ்சி) மாநகரில் இருந்து ஆண்ட மாந்தரஞ் சேரல் இரும்பொறை மாமதுரை பாண்டியனுடனும், கொங்கர் எனும் வேட்டுவ வேளிர்களுடனும், சோழ ஏனாதிகளுடனும் போரிட்டு கொங்கு நாட்டைக் கைப்பற்றி கொங்கில் மாந்தபுரி (மாந்தை) எனும் ஊர் தன் பெயரில் (மாந்தரன்) அமைத்து சாத்தன் ஐயனை பிரதிஷ்ட்டை செய்து மாந்தீஸ்வரன் என்ற சிவன் கோயிலையும் தன் பெயரில் அமைத்து மாந்தப்படை எனும் வேட்டுவ படையையும் அமைத்து நாட்ராயன் கோயிலிலும் அமைத்து மாந்திரஞ் சேரல் புகழடைந்தான்.



சேரமான் அந்துவஞ் சேரல் இரும்பொறை (அந்துவன்): பதிற்றுப்பத்து நூலில் ஏழாம்பத்தின தலைவனாகச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளவன் செல்வக் கடுங்கோ வாழியாதன். இவனது தந்தை அந்துவன் என்னும் சேர அரசன். இவன் கருவூரைத் தலைநகராகக் கொண்டு நாடாண்டு வந்தான். கொங்கு நாட்டிலுள்ள கருவூரே இவனது கருவூர். புறநானூற்றில் குறிப்பிடப் பட்டுள்ள (புறம்:13) சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை இந்த அரசனே என்பது புலப்படும். அந்துவன் என்பவன் திருப்பரங்குன்றத்திலுள்ள முருகனைச் சிறப்பித்துப் பாடினான் என்று சங்ககாலப் புலவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் (அகம் 59:10-13). இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் திருப்பரங் குன்றத்திலுள்ள சங்ககாலக்கல்வெட்டு 'அந்துவன் கொடுபிதவன்' என்று கூறுகிறது. சேர அரசன் அந்துவன் 'நல்லந்துவனார்' என்னும் புலவர் என்று கருதவும் இடமுண்டு.

அந்துவஞ் சாத்தன் (புறம் 71:13), அந்துவன் கீரன் (புறம் 359) ஆகிய பெயர்களுக்கும் இவனுக்கும் உறவு முறையில் தொடர்பு இருந்திருக்கவும் கூடும். அந்துவஞ் செள்ளை என்னும் பெயரும் இத்தகையதே.

## அந்தியூர் கோட்டை (அந்தி வேட்டுவ அரசன் கோட்டை):

வடகரை நாட்டுக்குத் தலை நகராக அமைந்திருந்தது அந்தியூர் என்ற ஊராகும். அந்தியூர், வட்டத் தலைமையிடமாக இருந்ததைப் பாளையப்பட்டுக்களின் வம்சா வழியைக் காட்டும் முதல் தொகுதி “அந்தியூர் தாலூக்கா சரம்பள்ளி கணக்குப்பிள்ளை கைப்பீது” என்று குறிப்பிடுவதில் அறியலாம். அந்தியூர் - பெயர்க்காரணம்:

கொங்குநாடு பல்வேறு மன்னர் பரம்பரையால் ஆளப்படினும் சேரர் செல்வாக்கு ஈண்டு மிகுதி. சங்க சேரமன்னன் அந்துவன் பொறையன் (கி.பி. 92-112) கொங்கு நாட்டை ஆண்ட சேரருள் ஒருவன். அந்துவன் பெயரால் அமைந்ததே அந்தியூர்எனபது கருத்து. இதற்கு இவ்வூரையும் வடகரை நாட்டையும் ஆணட அந்துவ (அந்தி) வேட்டுவன் சுந்தராயன் செப்புப்பட்டயமே சான்றாகும்.

## சிவியர்:

அந்தியூரில் சிவியர்கள் (பல்லுக்கு தூக்குபவர்கள்) வசிக்கும் சிவியர் தெரு மற்றும் கண்ணப்பர் கிணறும் உள்ளது. அந்துவ

(அந்தி) வேட்டுவர் அடசபாளையத்தில் (அரசன் பாளையம்) உள்ள மாகாளி அம்மனுக்கு அளித்த மானுவ காடுகள், வயல்கள் பலவற்றுள் சிவியர்கள் காடும் ஒன்றாகும். அடசபாளையத்தில் சில பெயர் சொல்லும் காடுகளையும், வயல்களையும் காண்போம். அதில் முக்கியமான சிலவற்றில் ஆண்டிவயல், வண்ணான் காடு, பள்ளங்காடு, நாவீதன் காடு, குறவன் காடு, சிவியர் காடு என்பன குறிப்பிடத்தக்கதாகும். இன்றும் அடசபாளையத்தில் உள்ள மாகாளி அம்மன் கோயில் குண்டம் திருவிழாவுக்கு அந்தியூரில் வசிக்கும் சிவியர் வருடா வருடம் தங்கள் குலதெய்வம் என்று கூறிக்கொண்டு வருகை செய்து சிறப்பு செய்வது மேற்கண்ட வரலாறுகளை மெய்ப்பிக்கிறது.

மேலும் இன்றும் அந்தியூர் கோட்டை மாரியம்மன் கோயிலுக்கு அடசபாளையத்தில் வசிக்கும் அந்தி வேட்டுவர் வருடா வருடம் அந்தியூர் பத்ரகாளி அம்மன் குண்டம் திருவிழாவிற்கு கம்பம் நடுவதும், மகிஷாசுரனை வதம் செய்ய அம்மனை அழைக்கும் நிகழ்ச்சியில் கெண்டி எடுப்பதும் மற்றும் குண்டம் இறங்க சிலம்பூர் அம்மனை அழைக்கும் நிகழ்ச்சியில் கெண்டி எடுப்பதும் மேற்கண்ட வரலாறுகளை மெய்ப்பிக்கிறது. அந்தியூர் பத்ரகாளி அம்மன் மகிஷாசுரனை வதம் செய்யும் அன்றும் குண்டம் இறங்கும் அன்றும் அம்மனை எதிர் கொண்டு அழைக்கும் நிகழ்ச்சிகளில் சிவியர் பங்கு பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

அந்தியூர் கோட்டையில் இருந்து வேட்டுவ இளவரசிகள் சிவிகையில் (பல்லக்கில்) சென்று பட்லூர் வாகீசுவரர் கோயில் அருகிலுள்ள குளத்தில் உள்ள கல் தொட்டியில் குளிப்பார்கள் கீழே உள்ள படத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான குளத்தையும், கல்தொட்டியையும் காணலாம்.



## அந்தியூர் வடகரை நாட்டை ஆண்டவர்கள்:

அந்தியூர் காலம் முதற்கொண்டே முதன்மை பெற்ற ஊராக இருந்துள்ளது. சங்க காலத்தில் கொங்கு நாட்டை ஆண்ட சேரர்கள் அந்தியூர் அமைந்துள்ள வடகரை நாட்டையும் ஆண்டுள்ளனர்.

சேரருள் செல்வக் கடுங்கேவாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை கணைக்கால் இரும்பொறை ஆகியோர் வடகரை நாடாண்ட கொங்குச் சேரர்கள் ஆவர். முடிவேந்தர் போன்ற வேட்டுவ குறுநில மன்னர்களும் இப்பகுதியில் ஆட்சி செய்துள்ளனர். வேட்டுவத் தலைவனாக கண்டீரக் கோப்பெரு நற்கிள்ளி என்பவனும் இப்பகுதியை ஆண்டுள்ளான். இவனால் ஆளப்பட்ட தோட்டி மலை இன்றைய பர்கூர் மலையின் ஒரு பகுதியான கார்கே (கண்டிரம்) மலையாகும். பர்கூர் மலையின் பிற பகுதிகளைப் பாரி மன்னன் ஆண்டான். பாரியூர் கோவிலில் மணிய வேட்டுவர் ஊராண்மை செய்த கல்வெட்டு உள்ளது மற்றும் பனைய வேட்டுவர் கல்வெட்டும் உள்ளது. பனைய வேட்டுவர் சேர வேந்தனின் கால்வழியினர் ஆவர். எனவே மணிய வேட்டுவரே கொங்கு மன்னன் பாரியின் கால்வழியினர் ஆவர்.

**பாடுவது கவியா இல்லை**
**பாரி வள்ளல் மகளா**
**சேரனுக்கு உறவா இல்லை**
**செந்தமிழன் நிலவா - (கவியரசு. கண்ணதாசன்).**

பாரியின் மகள்களான அங்கவை, சங்கவை சிறந்த பெண்பால் புலவர்கள் ஆவர். இவர்களின் பாடல்கள் புறநானுற்றில் இடம்பெற்றுள்ளன.

அந்தியூரில் உள்ள அழக இராஜபெருமாள் கோயில் கோட்டை பத்ரகாளியம்மன் கோயில் ஆகிய கோயில்களில் உள்ள மீன் சின்னங்கள் இந்த ஊருக்கும் பாண்டியருக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன.

அந்துவனது நல்லிசைப் புலமையை வியநதே பதிற்றுப்பத்து ஏழாம் பதிகம் “நெடு நுண் கேள்வி அந்துவன்” என்று சிறப்பித்துரைக் கின்றன. வேட்டுவ வேளிர்கள் ஆண்ட வேணாட்டில் ஒருதந்தை என்ற பெயர் பெற்று அநநாளில் வேளிர் தலைவன் ஒருவன் சிறப்புற்றிருந்தான். அவனுக்குப் ‘பொறையன் தேவி’ என்றொரு

மகள் இருந்தாள் அவளை அந்துவன் மணந்து, செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற மகனைப் பெற்றான்.

அந்நாளில் சேர நாட்டில் தெற்கில் தென்பாண்டி நாட்டில் உள்ள பொதிய மலை சான்றோர் பரவும் சால்புற்று விளங்கிற்று. அதனடியில் **ஆய்குடி** என்ற ஓர் ஊருண்டு. இது இன்று தென்காசிப் பகுதியைச்சேர்ந்த செங்கோட்டை வட்டத்தில் ஆய்குடி என்ற அப்பெயர் திரியாமல் இருந்துவருகிறது. அவ்வூரைத்தலைமையாகக் கொண்டு அப்பகுதியை “வேள் ஆய்” என்ற வேளிர் தலைவன் அப்பகுதியை ஆட்சி செய்து வந்தான் அவனை ஆய் அண்டிரன் என்றும் சான்றோர் வழங்குவர்.

முடமோசியார் ஆய்குடியில் இருந்து அந்துவனைக் காண விரும்பி அவனது கருவூருக்குச் சென்றார். கருவூரில் வேண்மாடத்தே இருந்து போர் நிகழ்ச்சியை நோக்கி இருக்கையில் மோசியாரை வரவேற்று உபசரித்தார். அப்பொழுது தன்மீது படையெடுத்த வந்த கோப் பெருநற்கிள்ளி என்னும் சோழன் அமர்ந்திருந்த யானை மதங் கொண்டு தறிகெட்டு ஓடியது. இதனைக் தன் வேண்மாடத்திலிருந்து கண்ணுற்ற அந்துவன் பகைவன் எனறும் பாராமல் பாய்ந்து சென்று மதங் கொண்ட யானையை அடக்கி சோழனைக் காப்பாற்றினான். என்னே! வேட்டுவ வேந்தர்களின் பண்பு!!

அரசுக்குரிய வெற்றிமுரசு இருக்கும் கட்டிலில் பிறர்யாரும் ஏறியிருத்தல் கூடாது. அஃது அரசைக் கைப்பற்றியது போல் ஆகும். அப்படிச் செய்வோர் கொலைத்தண்டனைக்குரியவர் ஆவர்.

அந்துவன் சேரல் இரும்பொறையின் பேரன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தில் மோசிகீரனார் என்ற புலவர் முறைமை தெரியாமல் முரசுகட்டிலில் கிடந்து உறங்கிவிட்டார் செய்தி தெரிந்த வேந்தன் சினத்துடன் அவரை, நெருங்கினான். தமிழ் முழுதறிந்த சான்றோர் என்பது தெரிந்து அவருக்கு அவன்கையில் விசிறி கொண்டு வீசலுற்றான். சான்றோர் விழித்தெழுந்து அவனுடைய தமிழன்பை வியந்து பாராட்டினர். என்னே! வேட்டுவ வேந்தர்களின் தமிழ்ப்பற்று!!

இன்று கொற்றவையையும் மலையாள கருப்பணசாமியையும் வணங்கும் கரைய வேட்டுவர் கேரளாவின் குட்ட நாட்டையும் அரபிற்கடற்கரையும் ஆண்ட சேரன் செங்குட்டுவனின் கால் வழியினர் என்பதனையும், ஆய் அம்மனையும் பெருமாளையும்

வணங்கும் வெள்ளை வேட்டுவர் ஆய் மன்னர்களின் கால்வழியினர் ஆவர்.

வெள்ளைக்கடவுள் வாலியோன் பனைக் கொடியையும் கலப்பை (நாஞ்சில்) யையும் சின்னமாகக் கொண்டவன் இவனின் வழித் தோன்றலே வெள்ளை வேட்டுவர், கேரளாவிலுள்ள சிறும்பொறை நாடுகளையும், பெரும் பொறை நாடுகளையும் ஆண்ட இரும் பொறை மன்னர்களின் வழித் தோன்றல்களே அந்துவன் எனும் அந்தி வேட்டுவர் ஆவர். இரும்பொறை அரசர்களின் கடற்கரை மாந்தை ஆகும். மாந்தையை ஆண்ட **'நள்ளி'** (இந்த நள்ளி வேறு கண்டீரக் கோப்பெருஞ் நள்ளி வேறு) எனும் குறுநில மன்னனின் வழித்தோன்றலே மாந்தை படை வேட்டுவர். சேரமான் அந்தையின் கால் வழியினரான கீரந்தை, மாடந்தை வேட்டுவர் ஆகும். மேற்கூறிய அந்தி (அந்துவன்), கரைய, வெள்ளை, மாடந்தை, கீரந்தை மாந்தை வேட்டுவர்கள் மற்றும் பூழி நாட்டின் பூழுவ வேட்டுவர்கள், பனைய வேட்டுவர், வில் வேட்டுவர் சேர வேட்டுவர்கள் ஆவார்கள். இது பற்றிய விரிவான விளக்கங்கள் என்னுடைய **'களப்பிரர் போர்'** எனும் புத்தகத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## சேரமான் பெருமாள்:

சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய நூல்கள் சில சைவத்திருமறைகளில் தொகுக்கப்பட்டிருப் பதையும் அவரது வரலாறு சேக்கிழாரால் செந்தமிழாற் பாடப்பட்டிருப்பதையும் அறியாமையால் மிக்க பிற்காலத்தே தோன்றிய கேரள மான்மியம், கேரளோற்பத்தி என்ற நூல்கள் அவர்முகமதியராகி மெக்காவுக்குப் போய் விட்டார் எனப் பொய்யெழுதிவிட்டன. பிற்காலக் கல்வெட்டுகள் அவர்கள் கண்ட மாகோதையை மாக்கோதையார் பட்டினம் (A .R .No . 481 of 1929-30) எனச் சிறிது மாற்ற அதன் பிறகு அது மகாதேவர் பட்டணமாக்கப்பட்டது (W. Logams Malabar P.207) எல்லாவற்றிற்கும் முடிவில் மகாதேவர் என்ற பெயரும் போய் மகோத்தியாபட்டினமாகி இதிகாசத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்படுவதாயிற்று டாக்டர் சேய்சு (Dr. Sayee) ஈவிட் (Hewitt) என்பார் கூறுவது (The Dig and growsk of religion among the Babylonians of Dr. Sayee-Hibbert Lectures for 1887) போல கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே சால்டியர், கிரேக்கர், யவனர் எகிப்தியர் சிரியர், பாபிலோனியர், கோசியர், பாரசிகர் முதலிய மேனாட்டவரும்

வட புல ஆரியரும் வந்து மக்களிடையே கலந்து கொண்டதனால் சேர நாட்டவர்களுடைய மொழியும் நடையும் உடற்கூறும் திரிந்து தமிழ்நாட்டின் கூறு என்ற குறிப்பே தோன்றாதவாறு பெரிதும் மாறிவிட்டன.

சேர நாட்டை 8ஆம் நூற்றாண்டில் சேர வேந்தன் குலசேகர ஆழ்வாரும் 9ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் நாயனாரும் ஆண்டனர். நம்பூதிரிகள், நாயர் மற்றும் ஈழவர்கள் பிற்காலங்களில் சேரநாடாம் கேரளத்தில் வந்து குடியேறியவர்களே ஆவர்.

## சேரமான் பெருமாள்



அரசாட்சி என்பது சத்ரியர்களுக்கே உரியது சத்ரிய குலங்கள் இரண்டு. அவை சூரிய குலம், சந்திரகுலம் எனப்படும்.

## சூரிய குலம்:

தசரதன், இராமன் மற்றும் சோழர்கள் அனைவரும் சூரிய குலத்தவர்கள் ஆவர்.

## சந்திரகுலம்:

சேரன் சந்திர வம்சத்து நகுசன் புத்திரனாரகிய யயாதியின் சந்ததியினர் (அபிதான சிந்தாமணி) மகாபாரதப் பாண்டவர்கள், கௌரவர்கள், அரிச்சந்திரன், துஷ்யந்தன், பரதன், பாண்டியர்கள் சந்திர குலத்தவர்கள் ஆவர்.

தமிழர்களின் வழிபாடு பூ வழிபாடு ஆகும். ஆரியர்களின் வழிபாடு தீ வழிபாடு ஆகும். சேரநாடாம் கேரளத்தில் ஆரியர்களின் தாக்கம் அதிகமானதால் சேரர்களை அக்னி குலத்தவர் என்று அழைத்தனர்.

சங்க காலத்தில் சேர மன்னனின் காசுகள் எகிப்தில் கிடைத்துள்ளது. இது தமிழருக்கு பெருமை சேர்க்கும் வரலாறு ஆகும். அதேபோல் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் உள்ள **ஆய்நாட்டு** ராணி 'செம்பவளம்' கொரியாவில் 'கயா' (Gaya) ராஜ்ஜியத்தை பல ஆண்டுகள் முதன் முதலில் ஆட்சி செய்தார் என்று 'சமயோக் யுஷா' (Samguk Yusa) என்ற **கொரியன் வரலாற்று நூலில்** ஆய் நாட்டில் இருந்து வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன் அயோத்தின் பெயர் 'சகேடா' (Saketa) ஆகும். குறிப்பிட்ட அந்த காலத்தில் ஆய் என்ற பெயர் கொண்ட நாடு நம் தமிழகத்தில் மட்டுமே இருந்தது. கொரிய நாட்டில் ஆட்சி செய்த 'ஆய் நாட்டு ராணி செம்பவளம்' பாண்டியனின் மீன் சின்னத்தை பயன்படுத்தினார். ராணி செம்பவளம் தமிழ் பெண் என்பதால் கொரியாவில் சுமார் 4,000 க்கும் மேற்பட்ட தமிழ் சொற்கள் வேரூன்றி இன்றும் அவரின் புகழ் பாடுகின்றன. அம்மா, அப்பா, சோறு, நான் என்பது போன்ற 4,000 க்கும் மேற்பட்ட தமிழ் சொற்கள் அப்படியே கொரிய மொழியில் பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நூறு ஆண்டு களுக்கு முன்னால் உத்தரபிரதேசத்தின் அரசு சின்னத்தில் ஒரு வில்லும் இரண்டு மீன்களும் பொறிக்கப்பட்டு உள்ளதை கொண்டு இன்று ராணி செம்பவளத்தின் பெயர் 'சுரே ரத்னா' என்றும் சொந்த

ஊர் அயோத்தி என்றும் எல்லா மீடியாக்களும் சொல்வது தவறு ஆகும். இதன் மூலமாக வட இந்தியர்கள் தமிழர்களின் வரலாற்றை திரித்து தங்களின் வரலாறு போன்று கூறுவது பொய் என்பதே உண்மையாகும்.

ஆய் நாட்டை ஆய் அண்டிரன், ஆய்வேள், ஆய் எயினன் எனும் வேட்டுவ வேளிர்களால் ஆளப்பட்டது என்று பாண்டியர்களின் 'வேள்விக்குடி செப்பேடு' கூறுகிறது. தமிழர்களின் வரலாறுகளை வட ஆரியர்கள் திரிப்பது போல் தமிழ்நாட்டில் வந்து குடியேறியவர்கள் தற்பொழுது வேட்டுவர்களின் வரலாறுகளை திரிப்பதை நடுநிலையான வரலாற்று ஆசிரியர்கள் அறிவர். வட ஆரியர்களால் வடநாட்டில் உள்ள 'சஹேடா' என்ற இடத்திற்கு அயோத்தி என்று பெயரிட்டு தமிழர்களின் வரலாற்றை திரித்தனர். 'ராணி செம்பவளம்' ஒரு ஆய் நாட்டு அரசி ஆவாள். பரதன் ஆண்டதனால் இந்த நாடு பாரத நாடு (ரிக்வேதம்) என்று ஆனது. இராமன் ஒரு ஆய் நாட்டு அயோத்தி வேட்டுவன் ஆவான். பெருமாளின் தசாவதாரத்தில் இராமன் ஒரு அவதாரமாகும், பெருமாள் ஒரு சேர வேட்டுவ வேந்தன் ஆவான், சிவன் ஒரு பாண்டிய வேட்டுவ வேந்தன் ஆவான், ஐயனும் அப்பனும் (அறியும் சிவனும்) ஐயப்பன் ஆவான், சபரி என்றால் வேட்டுவச்சி என்றும், சபரன் என்றால் வேட்டுவன் என்றும் பொருள்படும். சபரிமலை ஐயப்பன் வில்லாதி வில்லன், வீர மணிகண்டன், பங்களத்து வேட்டுவராசனே ஆவான். குறிஞ்சித் தலைவன் முருகன் ஒரு வேட்டுவ முருகன் ஆவான், இராமன் ஒரு ஆய்நாட்டு வேட்டுவன் ஆவான், இராவணன் இலங்கை வேட்டுவன் ஆவான், சினத்திற்கு பிறந்த சிவனும் ஒரு வேட்டுவன் ஆவான்.

**தென்னாடுடைய சிவனே போற்றி!! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!** என்று மாணிக்கவாசகர் கூறுவது 'ஆதி காலங்களில் தென்னாட்டு வேந்தர்கள் வடநாடுகளையும், அயல் நாடுகளையும் ஆட்சி செய்துள்ளனர்' என்பதை குறிப்பிடுகிறது.

**சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அனைவருமே வேட்டுவ புத்திர வர்க்கத்தினர் ஆவார்கள்.**

திருக்கச்சி ராஜன், திரு வேங்கட ராஜன், காவிலிராஜன், மாவிலிராஜன், பூவிலிராஜன் இந்த ஐந்து ராஜாக்களும் சேர, சோழ, பாண்டியர்களை களப்பிரர்களிடம் இருந்து சிறை மீட்டனர் என்று வேட்டுவர் குலபாடல்களின் மூலம் அறியப்படுகிறது.

## திருக்கச்சி ராஜன்:

கச்சி என்னும் காஞ்சிபுரத்தை தலை நகராக கொண்டு ஆண்ட வேட்டுவ மன்னன். திரு வேங்கடராஜன்: வேங்கடத்தை (திருப்பதி மலை) தலை நகராக கொண்டு ஆண்ட வேட்டுவ மன்னன்.

## காவிலிராஜன், மாவிலிராஜன், பூவிலிராஜன்:

இவர்கள் கொங்கு நாட்டின் பூர்வ குடி வேட்டுவ மன்னர்கள் என்று "சோழர் பூர்வ பட்டயம்" கூறுகிறது.

## களப்பிரர்:

களப்பிர மன்னர்கள் என்பவர்கள் கன்னட வேட்டுவ வரகத்தினர்கள் ஆவார்கள்.

## பல்லவ மன்னவர்கள்:

பல்லவ மன்னனர்கள் என்பவர்கள் ஆந்திர வேட்டுவ வரகத்தினர்கள் ஆவார்கள்.

## சங்ககாலச் சேரமன்னர்கள்:

சேரநாட்டின் தொன்மையை கணித்துக்கூற இயலாது. பதிற்றுப்பத்தில் பத்து சேர மன்னர்களைப் பற்றிக் கூறப்படுகிறது. முதல் பத்தும், கடைசிப் பத்தும் நமக்குக் கிடைக்காத்தால் எட்டு சேரமன்னகளைப் பற்றித்தான் அறிய முடிகிறது. சேரர் பற்றி அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் உள்ள விரிவான குறிப்புகளும் தக்க சான்றுகளாகும். ரிக் வேதம், தைத்தீரியம், வியாசபாரதம், இராமாயணம் ஆகியவற்றில் மூவேந்தர்களும் அறியப்படுகின்றனர். மேற்கில் அரபிக்கடலையும், கிழக்கில் கிழக்குதொடர்சி மலையையும், வடக்கில் தபதியாற்றையும், தெற்கில் பொதிய மலையையும், சேரநாட்டின் எல்லைகளாகப் பெற்றிருந்தது.

ஒரு காலத்தில் சேரநாடு வடபாகம் குட்டநாடு என்றும், தென்பாகம் குடநாடு என்றும் அழைக்கப்பட்டன. காலப் போக்கில் பொறைநாடு, கடுங்கோநாடு, பூழிநாடு என்னும் பிரிவுகளும் ஏற்ப்பட்டன.

பொறைநாட்டை ஆண்டவன் பொறையன் என்றும், கடுங்கோ நாட்டை ஆண்டவன் கடுங்கோ என்றும், குட்ட நாட்டை ஆண்டவன் குட்டுவன் என்றும், குடநாட்டை ஆண்டவன்

குடக்கோ என்றும் அழைக்கப்பட்டனர். கொண்கன நாடு, புன்னாடு ஆகியவற்றை ஆண்டவர்கள் சேரர் குடிக்குரிய நன்னன் மரபினர் ஆவர். தகடூர் நாட்டை ஆண்டவர் **'வேளிர்'** தலைவரான **அதியமான்களாவர்.** இவர்களும் சேரர் குடி மரயினரே ஆவர். இவர்களைத் தவிர சிற்றரசர் பலரும் சேரநாட்டில் இருந்தனர்.

## சேரரின் சிறப்புப் பெயர்கள்:

வானவரம்பன, வானவன், குட்டுவன், குடக்கோ, பொறையன், இரும்பொறை, கடுங்கோ, கோதை முதலியன சேரரின் சிறப்பு பெயர்கள் ஆகும். சேரலர், சேரன், சேரமான் என்பன பொதுப்பெயர்கள். சேர மன்னர்களின் வரலாற்றையறியும் போது உதியன் குடும்பத்தரர், பொறையன் குடும்பத்தார் எனப் பிரித்துக் கூறலாம். சேரலர் என்பது கேரளர் என்று திரிந்தது - மலைநாடு என்பது மலபார் ஆனது. அசோகன் கல்வெட்டிற் காணப்படுவது. கேரளர் என்பதேயாயின் இரண்டாயிரமாண்டுகட்கு முன்பே வடவர் சேரலர் என்னும் தமிழ்ச்சொல்லைக் கேரளர் எனத் திரித்துக் கொண்டனர் என்பதை அறியலாம்.

தற்பொழுது சேரநாட்டில் அதன் தொன்மை கூறும் கேரள மான்மியம், கேரளோற் பத்தி எனும் இரண்டு வரலாற்று நூல்கள் உள்ளன. கேரள மான்மியம் வடமொழியிலும், கேரளோற் பத்தி மலையாள மொழியிலும் உள்ளன. கேரளோற் பத்தியை எழுதியவர் தஞ்சத்து இராமானுசன். இந்நூல்களை நன்கு ஆராய்ந்த மேனாட்டு ஆங்கிலேயரான வில்லியம் லோகன் (william Logan), உண்மைக்கு மாறகப் பொய் நிறைந்த கதை செறிந்த இந்நூல்களை இந்நாட்டு வேதியர்கள் தங்கள் நலமே பெரிதும் பாதுகாக்கப்பட்டு நிலை பெறும் பொருட்டு வெறிதே புனைந்துரையாக அமைத்துக் கொண்ட புளுகுமூட்டை என மனம் வெதும்பிக் கூறியிருக்கின்றார். (W. Logan's Malabar Manual.P. 24b).

## சேரவேந்தர்: உதியன் குடும்பம் :

#### பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் (வானவரம்பன்):

சேரலாதன் என்பது சேர வேந்தர் குடிப் பெயர் என்று அறியப்படுகிறது. சேரல் ஆதன் என்பது சேர வேந்தனான ஆதன் என்று பொருள்படுகிறது. சேரலாதன் என்ற பெயருடையோர், சேரமான் ஆதன் என்பான் சேரன் வழி வந்தவர் என்பது இனிது விளங்கும். இச்சேரமானும் உதியன் சேரலாதன் எனப்படுவதால்

இவன் வழி வந்தவன் என்பது பெறப்படும். **ஆதன் என்றால் கிரேக்க மொழியில் அழிவில்லாதவன்** என்று பொருள்படும்.

இவன் காலத்தே குட்ட நாட்டுக்கு தெற்கில் வேட்டுவ வேளிர் பலர் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த நாடு வேணாடு எனப்படும். மேனாட்டு 'யவனர்' குறிப்புகள் கொல்லத்துக்குத் தென்பகுதியில் வேட்டுவர்களில் ஆய்வேள், ஆய் எயினன் வழியினர் ஆட்சி செய்தனர் என்றே குறிக்கின்றன. பிறகாலத்து வேள்விக்குடி செப்பேடும் இந்நாட்டு வேளிரை ஆய் எயினன், ஆய் வேள் என்று குறிக்கின்றது. இப்பகுதியிலிருந்து இனிய அரசு புரிந்த திருவிதாங்கூர் வேந்தர்கள் தம்மை வேணாட்டடிகள் என்பதும் இக்கருத்தை வற்புறுத்தும், (Ep. Indi. vol. Xvii. No. 16. P. 303)

இவ்உதியன் காலத்தில் வேணாட்டில் வெளியன் என்னும் வேளிர் தலைவன் மகள் வேண்மாள் என்பவளை உதியன் மணந்து கொண்டான். இவனுக்கு நெடுஞ்சேரலாதன், குட்டுவன் என்று இரு மகன்கள் இருந்தனர்.

## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன:

அரபிக்கடல் தீவுகளின் மன்னனான கடம்பனை (கடற்குறும்பு செய்த கடம்பரை) வென்ற வெற்றியினை இமயவரம்பன் தன் மாந்தை நகர்கண் சிறப்புடன் விழாக கொண்டாடினான். இவன் உம்பர்காடு என்ற பகுதியில் ஐந்நூறு ஊர்களை இரண்டாம் பத்து பாடிய குமட்டூர் கண்ணனார்க்குத் தானம் கொடுத்தான். பாலைக் காட்டுக் கணவாய் வழியாகக கொங்கு நாட்டில் வந்து சேர அரசர் (ஆனைமலையை ஆண்ட நன்னன்) யானை மலைக்காடுகளை முதலில் கைப்பற்றினார்கள். யானைமலைப் பிரதேசத்துக்கு அக்காலத்தில் உம்பல் காடு (உம்பல் - யானை) என்று பெயர் இருந்தது.

சேரமன்னர் கொங்கு நாட்டில் கால் ஊன்றுவதைக் கண்ட சோழ அரசர்களும், பாண்டிய மன்னர்களும் சும்மா இருக்கவில்லை. சேரர்களுக்கு எதிராக அவர்கள் போர் செய்து அவர்களின் ஆதிக்கத்தைத் தடுத்தார்கள். அவர்கள் கொங்குச் சிற்றரசர்களுக்கு உதவியாக இருந்து சேர அரசர்களின் ஆதிககத்தை எதிர்த்தார்கள். இதன் காரணமாகச் சேரமன்னர்கள் கொங்கு நாட்டை எளிதில் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் விடாமுயற்சியோடு போர் செய்து கொங்கு நாட்டில் சிறிது சிறிதாகக் சேர அரசர்கள் தங்கள் ஆட்சியை நிறுவினாகள்.

## பல்யானைச் செல்கெழு குட்டுவன்:

இவன் உம்பற்காட்டை தன்னடிப்படுத்தியதும் அகப்பாக் கோட்டையைத் தாக்கி தீக்கிரையாக்கினான். அக்கோட்டையைக் கைப்பற்றி அங்கிருந்த பாண்டியரை வெளியேற்றினான். இவன் தன் அண்ணனுக்காகவே அகப்பா கோட்டையைத் தாக்கி வெற்றி பெற்றான் என்றும் கூறுவர். இவன் பல யானைகளைத் தம்படையில் கொண்டிருந்தமையால் ‘பல்யானை’ என்ற பட்டம் பெற்றான். இவன் 25 - ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

காவிரியின் வடகரையில் வாழ்ந்த மழவர் பலர் தெற்கில் கீழ் கொங்கு நாட்டில் வந்து குடியேறியிருந்தனர். அவர்கள் மறப்பண்பு சிறந்து நின்றமை அறிந்து, கீழ் கொங்கு நாட்டில் வாழ்ந்த வேளிர் பலர் அவர்களைத் தமது படை மறவராகக் கொண்டிருந்தனர். கொங்கு நாட்டைக் குட்டுவன் அகப்படுத்தி அங்கு வாழ்ந்த மழவரும் அவன் ஆணை வழி நிற்பாராயினர். அவர்கள் போர்த்துறையில் சிறந்து குட்டுவன் பாராட்டும் சிறப்பு எய்தியதனால் குட்டுவன் “குவியற் கண்ணி மழவர் மெய்மறை” (பதிற். 21) என்ற சிறப்பை எய்தினான்.

இவ்வாறு குட்டுவரும், பூழியரும், கொங்கரும், மழவரும் ஆகிய பலவகை வேட்டுவ மறவர்கள் தானை வீரராக மலிந்த பெரும்படை கொண்டு குட்டுவன் விளக்க முறுகையில் ஆங்காங்கு சிற்சில தலைவர்கள் நின்று சிறு குறும்பு செய்தனர். அறியாமை காரணமாக அவர்கள் போர் தொடுத்தாராயினும், குட்டுவன் தன் பெரும்படை கொண்டு அவர்களை வலியழிப்பதில் சிறிதும் தாழாது ஒழுகினான். போரை வெறுத்த அவனுக்கு மகப்பேறும் இல்லாதிருந்தது அஃது அவன் கருத்தை மேன்மேலும் ஊக்கவே, அவன் தானும் துறவு மேற்கொள்ளத் துணிந்து சான்றோர் சிலர் துணை செய்யத்தன் மனைவியுடன துறவு பூண்டு காடுசென்று சேர்ந்தான்.

சேரன் செங்குட்டுவனின் தம்பி துறவு கொண்டதால் குட்டுவனின் வேந்தர் ஆட்சி முறை கொங்கில் அழிவுற்றது. பொறையரசர்களே கொங்கினை ஆண்டனர். குட்டுவனின் வழிதோன்றல்களான கரைய வேட்டுவர்களும் அந்துவன் சேரல் இரும்பொறையின் வழித்தோன்றல்களான அந்துவ (அந்தி) வேட்டுவர்களும் கொங்கில் நிலைபெற்றனர்.

குட்ட நாட்டில் கடற்கரையை ஆண்ட குட்டுவன் மரபினர் கரைய வேட்டுவ இனக்குழு ஆவர். ஆட்டு மந்தைகள் நிறைந்த பூழிநாட்டை ஆண்ட பூழிமரபினர் பூலுவ வேட்டுவ இனக்குழு ஆவர். கண்ணன் அழித்ததாக கூறும் சோணிதபுரம் (பழஞ்சேர நாட்டைச் சேர்ந்த்து) மாவிலி என்னும் சேரன் மகன் வாணனது தலைநகர் ஆகும். வெள்ளை வேட்டுவர் ஆய் மரபினர் ஆவர். சேரமான் அந்தை வழியினர் மாடந்தை (கீரனூர் அந்தை) கீரந்தை வேட்டுவர் இனக்குழு ஆவர்.

## களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்:

இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய மனைவி பதுமன் தேவி, (வேணாட்டு வேட்டுவ வேளிர் குடியில் தோன்றியவள், அவள் தந்தை வேளாவிக் கோமான் எனப்படுவான்) மணக்கிள்ளி (சோழர் குலப் பெண்) என இருமனைவிகள். பதுமனதேவி மகனான நார் முடிச்சேரல் குட்டுவன் துறக்கமடைந்ததும் குன்றநாட்டினின்று பூழிநாடு கடந்து, குட்டநாடு புகுந்து முடிசூட்டிக்கொள்ள வேண்டிய வனானான். பூழிநாட்டுத் தலைவர் சிலர் நன்னன் பக்கம் இருந்தமையின், அவன் குன்ற நாட்டு வண்டரும் முதியரும் சேரரும் படைத்துணை செய்யப் பெரியதொரு தானையுடன பூழி நாட்டுப்புகுந்து எதிர்த்தவரை வென்று நன்னனையும் வெருட்டியோட்டி வென்று மேம்பட்டான. பூழிநாடும் பண்டு போல் சேரர்க்குரியதாயிற்று . இவன் தன்னை பலப்பாட்டுக்களாற்பாடிச் சிறப்பித்த காப்பியாற்றுக் காப்பியனார்க்கு **“நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கே கொடுத்து தான் ஆள்வதிற்பாகம் கொடுத்தான்”** என்றும் 25 - ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான் என்றும் நான்காம் பத்தின் பதிகம் கூறுகிறது.

## கொங்கு நாட்டு சேரர்கள் (பொறையன் குடும்பம்):

### அந்துவன் பொறையன் (அந்துவன் சேரல், இரும்பொறை)

உதியன் குடும்பமும் பொறையன் குடுப்பமும் சேரர் குடும்பங்களே. உதியன் இமயவரம்பன், வானவரம்பன், குட்டுவன் என்பன உதியன் குடும்பத்தாருக்குரிய விருதுப் பெயர்களாகும்.

அந்துவன், கடுங்கோ, மாந்தரன், பொறையன், இரும்பொறை என்பன பொறையன் குடும்பத்தாருக்குரிய விருதுப்பெயர்கள் ஆகும்.

ஆதன், கோதை, சேரல், சேரமான் முதலியன இருகுடும்பத தாருக்கும் உரிய பொதுவான பட்டப்பெயர்களாகும்.

கோப்பெரு நற்கிள்ளி அந்துவன் ஆண்டு கொண்டிருந்த கருவூரின் மேல் படையெடுத்த பொழுது அவன் வந்த யானை மதம் பிடித்து அடக்க முடியாமல் போகவே, இதனை வேண்மாடத்தில் இருந்து கண்ணுற்ற அந்துவன் தன் பகைவன் என்று அறிந்தும் காற்றிலும் கடுகச் சென்று களிற்றின் மீது பாய்ந்து அதன் செருக்கை அடக்கி சோழனை உய்வித்து மீண்டான். சோழன் கோப்பெரு நற்கிள்ளி அந்துவனுடைய மறமாண்பை வியந்து பகையையொழித்து நட்பால் பிணிப்புண்டான். இச்செயலால்

> **“மடியா வுள்ளமொடு**
> **மற்றோர்ப் பிணித்த**
> **நெடுநுண் கேள்வி அந்துவன்”**

என்று சான்றோர் பாராடினர். ஏனைய நாட்டவரிடையே இது நிகழ்ந்திருப்பின் நாடெங்கும் இவ்வரலாறு பரப்பப்பெற்றிருக்கும்.

முதலாம் அந்துவன் சேரல் இரும்பொறை என்பவன் பொறையன குடும்பத்து முதல்வன் ஆவான். இவனுக்குப் பின்னால் இரண்டாம் அந்துவன் சேரல் இருப்பொறை என்பவன் கருவூரில் இருந்து ஆண்டான் எனத் தெரிகிறது. இவனுக்கு அந்துவன் இயற்பெயர் சேரல் சேரா் குடும்பத்தில் பொதுபெயர், இரும்பொறை குடும்பப் பெயர். இவன் வேணாட்டில் ஒருதந்தை என்ற வேளிர் குடிமன்னனின் மகள். பொறையன் பெருந்தேவியை மணந்து செல்வ கடுங்கோ வாழி ஆதனைப் பெற்றான. கொங்குநாட்டில் சில பகுதிகளைக் கைப்பற்றி அங்குப் பொறையர் ஆட்சியை நிறுவினான்.

கொங்குநாட்டில் கருவூரை வென்றதால் இவனைக் **“கருவூர் ஏறிய ஒள்வாள் பெருஞ்சேரல் இரும்பொறை”** என்றும் அழைப்பர். இப்போரில் இவனுக்குத் துணையாக நின்றவன் பல்யானைச் செல் கெழுகுட்டுவன் ஆவான். இவன் தோராயமாக இருபது ஆண்டுகள் கொங்கு நாட்டை ஆண்டான். இவனுக்குப் பின் இவன் மகன் செல்வக் கடுங்கோ வாழியாதன் அரசன் ஆனான். அந்துவ வேட்டுவர் பொறையன் வழித் தோன்றல்களே ஆவர்.

## செல்வக் கடுங்கோ வாழியாதன் : மாந்தரன் I :

ஆதன் என்பது இவனுக்குரிய சிறப்பு பெயர். செ. க. வா ஆதனுக்கு மாந்தரன், மாந்தரஞ் சேரல் என்னும் பெயரும் இருந்தது.

பரணர் அகநானூறு 142 ஆம் செய்யுளில் இவ்வரசனை **“மாந்தரம் பொறையன் கடுங்கோ”** என்று கூறுகிறார்.

கபிலர் கடுங்கோ பொருட்டுக் “குறிஞ்சிப்பாட்டு” எனப்படும் அழகிய பாட்டைப்பாடி அதன் வாயிலாகவே கபிலர் தமிழரது தமிழ் ஒழுக்கத்தின் தனிமாண்பை அவனுக்கு அறிவுறுத்தினார். கடுங்கோ வாழி ஆதன் அயிரைமலைக்குத் தன் சுற்றம் சூழச்சென்று கொற்றவையை வணங்கி பின் வாழி ஆதன் கபிலருடன் கொங்கு நாட்டிறகுச் சென்றான். அங்கு ஆதன் கபிலர் மனம் மகிழ சிறுபுறம் என நூறாயிரம் கானம் பொன் கொடுத்து நன்றா என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான். இந் **‘நன்றா’** என்னும் குன்று கி.பி. ஏழாம் நூற்றாண்டில் **‘நாணா’** என மருவி வழங்கிற்று.

திருநணா கொங்கேழு சிவத்தலங்களில் ஒன்றாகும். திருஞான சம்பந்தர் திருப்பதிகம் நணாவைக் குன்றென்று கூறுகிறது. இக்குன்று இன்று பவானியில் உள்ள ‘ஊராட்சிக் கோட்டை மலை’யாகும். நன்றாவின் மேலிருந்து காட்டிய நாடு கொல்லிக் கூற்றமாகும் அங்குள்ள ஊர்களில் ஒன்று கபிலக் குறிஞ்சி எனப் பெயர் கொண்டு நிலவுவது இதற்குச்சான்றாகும்.

சிக்கற் பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன் இருபத்தைந்து ஆண்டு அரசு வீற்றிருந்தான் என்று பதிகம் கூறுகிறது. இவன் துஞ்சிய சிக்கல் எனும் இடம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உத்தர கோசமங்கைப் பகுதியில் உள்ளது. இவன் ஆட்சிக் காலத்தில்தான் அந்தியூர் கோட்டையில் உள்ள ஈஸ்வரன கோயில் செல்லீஸ்வரன் கோயில் என்றும் மற்றும் கொங்குநாட்டிள் உள்ள அந்தியூர், பவானி, கருவூர் உள்பட சில அம்மன் கோயில்கள் செல்லாண்டி அம்மன் கோயில் என்று அழைக்கப்பட்டன. இவன் ஆட்சிக் காலத்தில் பொறை நாட்டிற்குக் கடற்கரை துறைமுகம் இல்லாததால் சேரநாட்டின் மாந்தையை கடற்கரை துறைமுகமாகக் கொண்டதால் மாந்தரன் என்று அழைக்கப்பட்டான். கபிலர் இவன்மீது 7 - ம் பத்தைப் பாடினார்.

ஆதனிடம் பரிசில் பெறச் சென்ற குண்டு கண் பாலியாதனார் எனும் புலவருக்கு இவன் பெருஞ்செல்வம் வழங்கினான். யானை, குதிரை, ஆட்டு மந்தை, மாட்டு மந்தைகள், மனை, மனைசார்ந்து வயல்கள் மற்றும் வயல்கள் வேலை செய்ய களமர் (உழவர்) இவைகள் எல்லாம் இவ்வரசன் இப்புலவருக்கு வழங்கினான்.

இவைகளெல்லாம் கண்ட இந்த புலவர் இது கனவா, நனவா என்று அறியாமல் திகைத்துப் போனதாக அவரே கூறுகிறார்.(புறம். 384)

குட்ட நாட்டில் கடற்கரையை ஆண்ட குட்டுவன் மரபினர் கரைய வேட்டுவ இனக்குழு ஆவர். ஆட்டு மந்தைகள் நிறைந்த பூழிநாட்டை ஆண்ட பூழிமரபினர் பூலுவ வேட்டுவ இனக்குழு ஆவர். கண்ணன் அழித்ததாகக் கூறும் சோணிதபுரம் (பழஞ்சேர நாட்டைச் சேர்ந்த்து) மாவிலி என்னும் சேரன் மகன் வாணனது தலைநகர், வெள்ளை வேட்டுவர் ஆய் மரபினர் சேரமான் அந்தை மாடந்தை (கீரனூர் அந்தை) கீரந்தை வேட்டுவர் இனக்குழு ஆவர்.

## தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை:

செல்வக் கடுங்கோ வாழியாதனுக்குப் பின் அரசு கட்டில் ஏறியவன் அவன்மகன் பெருஞ்சேரல் இரும் பொறை ஆவன். இவன் கழுவுளை வென்றான். கழுவுள் என்பவன் ஆயர் தலைவன், காமுரிலிருந்து கொண்டு வேளிர் பலருக்கும் தொல்லை தந்தான். வேளிர் பதினால்வரும் ஒன்று சேர்ந்து காமூரைத்தீக்கரையாக்கி இவனை விரட்டி அடித்தனர், தப்பியோடிய இவன் கொல்லிமலைக்குத் தென்பால் சென்று ஆயர் தலைவன் ஆனான். கழுவுள் பின் இரும்பொறைக்கு நண்பன் ஆனான். வல்வில் ஓரி கொல்லிக் கூற்றத்தின் (நாமக்கல்) மன்னன் ஆனான். இவன் காரியை வென்று திருக்கோவிலூர் நாட்டை வென்று தனக்குத் துணை நின்ற தகடூர் அஞ்சிக்குப் பாதி நாட்டை அளித்தான். காரிக்கு உதவ பெருஞ்சேரல் ஓரி மீது போர் தொடுத்தான். கொல்லிக் கூற்றத்தின் பெருநகராகிய நாமக்கல்லில் நடுத்தெருவில் நடந்த போரில் வல்வில் ஓரி மாண்டான், கொல்லிக கூற்றத்தைச் சேரன் கைக் கொண்டான்.

ஓரிக்குத் துணையாகக் காரியைத் தாக்கிய தகடூர் நாட்டு அதிகமான் அஞ்சியையும் பெருப்படை கொண்டு அதியமானைக் கொன்று தகடுர் நாட்டையும் கைக்கொண்டான். கொல்லிக் கூற்றமும், தகடூர் நாடும் சேர நாட்டுடன் இணைந்தது. இவ்விரு நாடுகளையும் கண் காணிக்க இவற்றிக்கிடையில் இருந்த மலையில் தங்கு தளமொன்றை அமைத்தான்: இம்மலை இன்று இவன் பெயரால் **சேர அரையன் மலை** (சேர்வராயன் மலை) என அழைக்கப்பெறுகிறது.

தன்னைப் பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்து பாடிய கிழாருக்குத் தன் நாட்டையே பரிசிலாக வழங்கினான். அப்புலவர் அவனையே

அரசுகட்டிலில் அமர்த்தித்தான் அருந்தமிழ் வளர்த்தார். இவனை நாடிவந்த மோசிக் கீரனார் என்னும் புலவர் இவனுடைய போர் முரசுகட்டிலில் அயர்ந்து தூங்கிவிட்டார், போர் முரசுக்கட்டிலில் அமர்வோருக்குக் கொலை தண்டனையளிப்பது அக்கால வழக்கம், ஆனால் தமிழுள்ளங்கொண்ட பெருஞ்சேரல் அவருக்குக் கவரி வீசி இனிதே உறங்கச் செய்தான்.

அவன் கொங்கருக்கு உரியனவாய் நாற்றிசையும் பரந்து மேயும் ஆனிரைகள் போல யானை நிரைகளை உடையவன், பூழியர் மெய்ம்மறை, கொல்லிப் பொருநன், கொடித் தேர்ப் பொறையன் என்று அழைக்கப்பட்டான்.

## குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை:

இவன் தன் ஆட்சிக்கு உட்படாமல் இருந்த வடகொங்கு நாடுகளை வென்று தன் ஆட்சியுடன் இணைக்க விரும்பி கொங்கு நாட்டிலிருந்த நீலக்கல் நிரம்பிய புன்னாட்டின் மீது முதலில் படையெடுத்துத் தலைநகரான கட்டூரை கைப்பற்றினான்.பின்பு மற்றொரு நாடான விச்சியூர் மீது போர்தொடுத்தான். இதையறிந்த சோழ, பாண்டிய வேந்தர் தங்கள் படைகளை அனுப்பிவைத்து விச்சிக்கோவுக்கு உதவினர், ஆனால் விச்சிக்கோவையும், சோழர், பாண்டியர் படைகளையும் ஒருங்கே தோற்கடித்து விச்சிக்கோவின் கோட்டையையும் கைப்பற்றினான்.

## சோழன் போர்:

சோழன், பெரும் பூண் சென்னி, இளஞ்சேரல் இரும்பொறை கைப்பற்றிய புன்னாட்டை வயப்படுத்த அந்நாட்டின் மீது போர் தொடுக்கத் தன் தானைத் தலைவன் பழையனை அனுப்பினான். பழையன் புன்னாட்டை நெருங்கியதும் இளஞ் சேரல் இரும்பொறைக்குக் கீழடங்கிய நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, வல்வில் புன்துறை ஆகிய சிற்றரசர்கள் ஒன்றுகூடிப் பழையனை எதிர்த்த போரில் பழையன் போர்க்களத்தில் மாண்டான். தான் சென்ற இடங்களிலெல்லாம் சீரிய வெற்றி பெற்றது குறித்துத் தன் முன்னோரைப் போலவே இரும்பொறை அயிரை மலைக்குச் சென்று கொற்றவையைப் பரவினான்.

குடவரும், குட்டுவரும், பொறையரும், பூழியரும், கொங்கரும், மரத்தையோரும், பிறரும் வந்திருந்தனர். இதனை அறிந்த சோழன் பெரும்பூண் சென்னி சேரனைப் பழிவாங்க

அவனுக்கு உட்பட்ட கொங்கு நாட்டிலிருந்த **'கழுமம்'** எனனும் இடத்தைத் தாக்கி அதனைக் காத்து நின்ற கணையனையும் சிறைப்பிடித்துச் சென்றான். இதனை அறிந்த இளஞ்சேரல் இரும்பொறை பெரும் படையொன்றை அனுப்பிச் சோழனை வென்று கணையனைச சிறை மீட்டான். இப்போரில் இளஞ்சேரலின் பாட்டன் செல்வக கடுங்கோ வாழி ஆதன் கபிலருக்கு கொடுத்த ஊர்களை விட சோழப்படைகள் போர்களத்தில் போட்டுவிட்டு ஓடிய வேல்கள் அதிகமானவை என்று பெருங்குன்றதூர் கிழார் பாடியுள்ளார். இவன் வெற்றிக்குப் பின் சோழ நாட்டு **'பொத்தி'** என்னும் ஊரை ஆண்ட பெருஞ்சோழனையும் அவனுடைய தானைத் தலைவன் இளம் பழையன் மாறனையும் வென்றான.

## யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (இரணடாம் மாந்தரன்) மாந்தரன் II :

இவன் செல்வக் கடுங்கோ வாழியாதனின் (மாந்தரன்) பெயரன். இவன் கொங்கு நாட்டுக் கொல்லிக் கூற்றத்தையும் மேலைக் கடலோரத்திலுள்ள தொன்டியையும பெற்றிருந்தான். இவன் விளங்கில் என்ற ஊரில் பகைவருடன் பொருது நின்று வெற்றி பெற்றானென்பதை புறநானூற்றில் அறியப்படுகிறது.

## கணைக்கால் இரும்பொறை:

சங்க காலத்தில் இரும்பொறைகளில் இவனே கடைசி வேந்தன் ஆவான். இவன் ஒரு புலவனாகவும் திகழ்ந்தான். இவனுடைய பாடல் (புறம்.74) இவனுடைய வரலாற்றைக் குறிப்பாக உணர்த்துகிறது. இவன் சோழன்

செங்கணானுடன் பொருது தோற்றுச் சிறைபிடிக்கப்பட்டா னெனறும் சிறையிலிருந்த போது இவன் கொண்ட நீர் வேட்கைக்கு நீர்கொடுக்க மறுக்கப்பட்டானென்றும். அதற்காக வருந்திச் சிறையிலேயே உயிர் நீத்தானென்றும் அறிகிறோம்.

இவருக்குப் பின் களப்பிரரின் ஆட்சிக் காலம் தமிழகத்தைத் தழுவியது. அதற்குப்பின் கி.பி. எழுநூறு வரையிலும் சேரர் கால்வழியினரில் சிலர் இங்குமங்குமாக ஆண்டனர்.

(புறம்:74) இரப்பதிலும் இறப்பது மேல்! (கணைக்கால் இரும்பொறை பாடியது)

**குழவி இறப்பினும் ஊன் தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின தப்பார்**
**தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
**கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை இன்றிவயிற்றுத் தீத்தணியத்**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்ம ரோஇவ் வுலகத் தானே!**

எனவே இறந்து குழந்தை பிறந்தாலும் - குறைப் பிறவியாக இருந்தாலும் வாளால் அதை கீறியே - விழுப்புண் உண்டாக்கியே புதைப்பது - மறக்குடி மரபு. அப்படியிருக்கப் போரிட்டும் விழுப்புண் பெறாது, பகைவரின் காவல் கைதியாகி அவன் அளிக்கும் நீரினை உண்டு உயிர் வாழ நினைப்பது முறையாகுமா? என்று மனம் புழுங்கிச்செத்த சேரன் கணைக் காலிரும் பொறையின் மானம் போற்றத்தக்கது.

சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களின் பேரரசுக்கு இணையாக நான்காவது பேரரசசாக ஆய் மன்னர்களும், அதிய மன்னர்களும் (மழவர்கள்) உருவாகியதைத் தடுக்கவே பாண்டியரும், சேரரும், சோழரும் இந்த நான்காவது பேரரசுடன் போட்டி போட்டுக் கொண்டு அழிக்கத் திட்டமிட்டு தாக்கி அழித்து சிற்றரசு நிலையிலேயே இருக்கச் செய்தனர்.

## கொங்கில் சேரர் பெருக்கம்:

அன்னியர் வருகையால் வடநாடு கலப்புற்றது. அதனால் ஆரியரின் தென்னக வருகையால் தமிழ், துளு, மளையாளம், தெலுங்கு, கன்னடம் என வேறுபட்டது. பின்பு தமிழர், துளுவர், கன்னடர், மலையாளர், தெலுங்கர் எனவும் அழைக்கப்பட்டனர். வேட்டுவர், தமிழ் வேட்டுவர், வடுக வேட்டுவர் எனப்பட்டனர். கன்னடம், தெலுங்கு, வடுகர் மொழியெனவும் வடுகர் தேசம் எனவும் சங்க இலக்கியங்களில் மொழிபெயர் தேயம் என்றும் வடுகர் தேசம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. வேட்டுவர் (குறும்பு என்றால் கோட்டை என்று பெயர்) தங்கள் ஊரைச் சுற்றி குறும்பு அமைத்து ஆண்டதால் குறும்பர் என்று அழைக்கப்பட்டனர். குறும்பர்கள் தமிழ் குறும்பர், கன்னட (வடுகமொழி) குறும்பர், அதேபோல் கங்கர் தமிழ் கங்கர், கன்னடக் கங்கர் என்றும் அழைக்கப்பட்டனர். கி. பி. 5 – ஆம் நூற்றாண்டில் தமிழ் வேட்டுவர்க்கும், களப்பிரர் எனும் கன்னட வேட்டுவர்க்கும் நடந்த யுத்தம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட களப்பிரர்

யுத்தம் ஆகும். இந்த யுத்தத்தால் (போரினால்) தமிழ் நாட்டில் களப்பிரர் ஆட்சி அகற்றப்பட்டது.

ஆரியர் வருகையால் முதலில் கர்நாடகம், ஆந்திரம் ஆரிய மயமானது போல், கேரளமும் நாகர் ஆரியர் கலப்பில், நம்பூதிரிகள், நாயர் எனவும் மாறியது. கரிகாலன் கல்லணை கட்ட பன்னிராயிரம் ஈழவர்களை இலங்கையில் இருந்து வரவழைத்து அணைகட்டி முடிக்கப் பெற்ற பின்னர் சேரநாடாம் கேரளத்தில் குடியேற்றியதும் சிவாசாரியர் எனும் பிராமணர்களைக் குடியேற்றம் செய்த்ததும் என பலவற்றாலும் சேர நாடாம் கேரளமும், தமிழ்நாட்டில் இருந்து மலையாளம் எனப் பிரிவு பட்டது. எனவே நாம் சேர நாட்டையும் இழந்துள்ளோம். சேரநாட்டின் ஒரு பகுதியை ஆண்ட மாவலி அவன் மகன் வாணன் மரபினர் மாவலியர் எனவும், மாவிலி வாணக் கோவரையர் எனவும் அழைக்கப்பட்டனர். சேரன் செங்குட்டுவனின் மாவிலி மும்பை வரை ஆண்டதாகச் சேரவரலாறு கூறுகிறது.

சேரன் செங்குட்டுவன் சேரநாட்டில் குட்டநாட்டு கடற்கரையை ஆண்டதால் சேர்பன், சேரன் என்றும் அழைக்கப்பட்டனர். கடலில் தன் இராஜ்யத்தை பெருக்க முடியாமல் கொங்கில் முல்லைப்பகுதி களில் ஊடுவினான். கரையர் வந்த பகுதி கரையர் வழிநாடு, கரைவழி நாடு என்றும் உடுமலை, திருமூர்த்தி மலை, பழனி வட்டாரங்கள் அழைக்கப்பட்டன. **சேரர்களில் இவர்கள் கரைய வேட்டுவர் அமராவதி (கரைவழி நாடு), பவானி, காவேரி கரைகளைக் கண்டவர்கள் ஆவர்.**

மாவலி மற்றும் மாவலி மகன் வாணன் ஆண்ட மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து கிழக்குத் தொடச்சி மலைவழியாக தர்மபுரி, தொப்பூர், சேலம் எனக் கொங்கில் மாவலியர் என்றும் அவன் மகன் வாணதி அரையன் பெயரால், வாணக்கோவரையர் என்றும் பரவினர். சங்ககிரி மாவிலிபாளையம் வாணியம்பாடி என்பதெல்லாம் அவர்கள் வந்த வழித்தடங் களேயாகும்.

பனைக்கொடி மற்றும் கலப்பையுடனும் பலதேவன் என்னும் வெள்ளையோன் ஆண்ட நாஞ்சில் நாடு (நாஞ்சில் என்றால் கலப்பையைக் குறிக்கும்) ஆய் நாடுகளை ஆண்ட ஆய் மன்னர்களான வெள்ளையோன் கொங்கில் பரவி ஆய்க்கானூர், ஆய்பாளையம், ஆய்க்கவுண்டன் பாளையம், வெள்ளலூர், வெள்ளாங்கோயில், வெள்ளைப்பாடி, வெள்ளாய் எனும் வெள்ளோடு என்பனவெல்லாம் அவர்கள் கொங்கில் வாழ்ந்து ஆளுமை செய்த

வழித்தடங்கள் ஆகும். இன்றும் புலியன்பட்டி (பு. புளியப்பட்டி) அருகில் உள்ள கோப்பம்பாளையத்தில் ஆய் அம்மனை தங்கள் குலதெய்வமாக இவ்வெள்ளையோன் எனும் வெள்ளை வேட்டுவர் வழிபடுகின்றனர்.

சேரநாட்டில் குறும்பொறை, நெடும்பொறை நாடுகளை ஆண்ட சேர நாட்டு பொறையரசர்கள் சங்க காலத்திலேயே கொங்கில் புகுந்து அந்துவன் சேரல் இரும்பொறையில் இருந்து கணைக்கால் இரும்பொறை வரை சுமார் 250 ஆண்டுகளுக்கு மேல் கொங்கில் ஆட்சி புரிந்தனர். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் இரத்த உறவு கொண்ட குறுநில மன்னர்களின் கூட்டணி ஒருபக்கம் இவையெல்லாம் போதாக் குறைக்கு பசும்பூண் பாண்டியன் கொங்கு நாட்டில் புகுந்து கொங்கு வேட்டுவக் குறுநில மன்னர்களை வென்று தனக்கு ஆதரவுதந்த வேட்டுவ நண்பர்களுக்கு நாடுகள் பல தந்தார். கொங்கர் ஒட்டி நண்பர்களுக்கும் நாடுகள் சில தந்தான். பசும்பூண் பாண்டியன் என்று சங்க செய்யுள் கூறுகிறது கி.பி.9-ம் நூற்றாண்டில் ஆதித்ய சோழன் கொங்கின் மீது படையெடுக்கும் பொழுது கொங்கு நாடு முழுவதும் வேட்டுவர்கள் ஆண்டதாக கொங்குதேச இராசாக்கள் எனும் நூல் கூறுகிறது. நம்பியாண்டார் நம்பி யும் மற்றும் சோழர் பெருவழிக்கல்வெட்டுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறாக கொங்கு நாட்டில் வடபாரிசா நாட்டை ஆண்ட பாரியை மூவேந்தர்களும் பெண்கொடுக்க மறுத்ததால் வீழ்த்தினர். பாரியூர் கோயிலில் உள்ள கல்வெட்டு மணிய வேட்டுவர் பாரியூரின் ஊராளி எனகிறது. இது பாரி மன்னரின் வழித் தோன்றல்கள் மணிய வேட்டுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

தகடூர் அதியமான் அஞ்சி கொல்லிமலை ஓரி எனும் மழங்கொங்குப் பேரரசுகளை இரும்பொறை அரசர்கள் வீழ்த்தினர். மற்றொரு பேரரசான ஆய் மன்னரை மூவேந்தர்களும் பெரும்பாடுபட்டு வீழ்த்தினார்கள். இவ்வாறாக வேட்டுவ மூவேந்தர்களும் மற்றும் 300 கும் மேற்பட்ட வேட்டுவக் குறுநில மன்னர்களும் ஒற்றுமையின்றி மாறி மாறி போரிட்டு வலுக்குறைவதும் பின்பு வலுப்பெறுவதும் வாடிக்கை ஆகிவிட்டது. கனியன் பூங்குன்றனார் தமிழ மனனர்களிடையே ஒற்றுமையை வளர்க்க மனம் நொந்து பாடிய பாடல் **“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் இரத்த உறவு

கொண்ட கேளிர், எனவே இரத்த உறவுகளையும் மறந்து ஒருவருக்கு ஒருவர் போரிடாமல் ஒற்றுமையுடன் இருங்கள் எனப்பாடியும் பலனற்றுப் போய்விட்டது. தமிழ் உறவு நிலைக்க, தமிழன் ஒற்றுமை ஓங்க வேண்டும் என்று மன வேதனையால் பாடியபாடலை அலட்சியப்படுத்தியதால் அன்னியர்க்கு அடிமை பட்டு ஆங்கில ஆட்சிவரை ஒற்றுமையின்மையின் பலனை அனுபவித்தான் தமிழன்.

பாரதியார் சுதந்திர வேட்கையில் பாடிய **“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்நது நில்லடா”** என்று தமிழனைத்தான் பாடினார். இதே போல் பூங்குன்றன் வேட்டுவ ஆட்சியாளர்களின் ஒற்றுமைக்காகப் பாடிய பாடலை உலகத்தாருக்காகப் பாடிய பாடல் எனக் கூறுவது எங்கனம் பொருந்தும். இது இன்னும் அடிமைப்புத்தி அகலவில்லை என்பதையே காட்டுகிறது.

பாரதப் போரில் அரவானைக் காவு கொடுத்ததை நினைவுப்படுத்தும் விழாவே கூத்தாண்டைத்திருவிழா.

## கூத்தாண்டைத்திருவிழா நிகழ்ச்சிகள்:

அத்திமரநார்கொண்டு கூத்தாண்டை எனும் மனித உருவம் செய்து விழாக்கால நேரத்தில் ஒரு பிரிவினர் தாரைதப்பட்டை வாத்திய மேளங்கள் முழங்க ஆடவர்கள் ஆடிவர, அதற்கு மத்தியிலே கூத்தாண்டை ஆடிவரும். அதன் பின்னே பூவையர்கள் மாவிளக்கு ஏந்தி வரும் காட்சி திரு வீதியிலே கண்கொள்ளாக் காட்சியாக கூத்தாண்டை அடைந்த பின்னே வேட்டுவக்கவுண்டர்கள கூத்தாண்டையைத் திரும்ப எடுத்துச்சென்று வேட்டுவ முப்பாட்டுக்காரர் வீட்டிலே வைத்து அதற்குச் சீர் சிறப்பு செய்து அலங்காரம் செய்து முடித்தவுடன் ஒரு பிரிவினர் அங்கு சென்று கூத்தாண்டையுடன் வேட்டுவர்களை அழைப்பார்கள். வேட்டுவர் வில் அம்புடன் நடு இரவில் தாரை தப்பட்டை கொட்டு மேளங்கள் முழங்கத் திரு வீதிஉலா வருவார்கள். பூவையர் பின்னே வரக் கூத்தாண்டையுடன் ஆடவர்கள் அதிர்வேட்டுகள், முழங்க வேட்டுவர்கள் வீறுகொண்டு ஆடி வரும் காட்சி பாரதப் போரை நினைவூட்டுவதாக அமையப்பெற்றிருக்கும்.

கூத்தாண்டை திருக்கோயிலை வந்து சேர்ந்தவுடன் தேரினிலே கூத்தாண்டையைக் கட்டிவைத்து இருபிரிவினரும் இரு அணியாக நின்றிருக்கும்போது வேட்டுவர்கள் வில்லால் கூத்தாண்டையின் தலையை பிய்த்துக் கொள்வர். பிய்த்துக் கொண்ட தலைலையும்

வில் அம்பும் வேட்டுவர் வைத்துக்கொள்வர். ஒரு பிரிவினர் உடலைப் பெற்றுக் கொள்வர்.

கரியகாளி அம்மன என்று அழைக்கப்பட்ட சில காளி கோயில்கனெல்லாம் இன்று பத்ரகாளி அம்மன் என்று அழைக்கப்பட்டு வருகிறது. அதே போல் பொங்காளி அம்மன் என்று அழைக்கப்பட்ட சில காளி கோயில் எல்லாம் இன்று பொன்னாச்சி (பொன்காளி) அம்மன் என்று அழைக்கப்பட்டு வருகின்றன.

பழங்காலத்தில் ஒருகோயில் அதாவது வேட்டுவப் பழங்குடியில் ஒருவர் காளிகோயில் புதியதாய் அமைத்து அதன்பின் அவர் சமாதி நிலை அடையும்பொழுது அந்தக்காளிகோயிலின் குண்டத்தின் (தளவு குண்டம்) முன் அமைந்துள்ள குறிஞ்சியின் பின்னால் குகை அமைத்து குகையில் இறக்கி அடக்கம்செய்வர். அடக்கம் செய்யப்பட்ட ஆத்மா அழிவு பெறாதிருந்து அக்கோயிலிலுக்கு வரும் பக்த்தர்களுக்கு அருள் பாலித்துக் கொன்டிருக்கும் என்பது வேட்டுவ ஐதீகம். தலைப் பலி கொடுத்த வேட்டுவ வீரர்களின் ஆத்மாக்களும் அவ்விடத்தில் அருள்பாலிக்கும் என்பதும் ஐதீகம், இக்கோயில்களுக்குத் தீங்கு செய்யும் எவரும் இந்த ஆத்மாக்களின் பிடியில் இருந்து தப்பிக்க இயலாது என்பது ஐதீகம். எனவே வேட்டுவப்பாளையகாரர்களுக்கும் அவர்களின் பூர்வீகக் கோயில்களுக்கும் தீங்கிழைத்த மைசூராரின் பினாமிகளான நஞ்சராயன், திப்பு சுல்தான் போன்றவர்கள நற்கதி அடையவில்லை என்பதே இதன் உண்மை.

கொங்கில் குடியேறிவர்களுக்கும் வேட்டுவர் தங்கள் கோயில் திரு விழாககளில் பங்களித்தனர். பதினென் குடிமக்கள் பங்குபெறாத வேட்டுவர் கோயில்கள் கிடையாது. பதினெண் குடிமக்களுக்கும் மானுவ பூமிகள் அளித்தவர்கள் வேட்டுவர். இன்று வடகரை நாட்டின் தலைநகர் அந்தியூர் காளி கோயில் திருவிழாவில் 108 சாதியாரும் பங்குபெறுகின்றனர். பகுத்துண்டு வாழ்ந்தவர்கள் வேட்டுவப்பழங்குடியினர்.

## பாரதப் போரை நினைவு கூறும் கூத்தாண்டைத்திருவிழா:

வில்லுக்கோர் விசயன் என்று புகழப் பட்டவன் அர்ச்சுனன். காளகத்திஸ் தல புராணம் அர்ச்சுனனை கண்ணப்ப நாயனாரின் முற்பிறவி என்கிறது. அர்ச்சுனன் கிராத அர்ச்சுனன் அதாவதுவேட அர்ச்சுனன் என்றும் குறிக்கப்படுகிறது. அர்சுனனுக்குப் பிறந்தவன் அரவான். அரவான கிருஷ்ணன், வரும் பாதையில் அம்பு தீட்டிக்

கொண்டிருக்க கிருஷ்ணன் அரவானிடம எதற்கு அம்புதீட்டுகிறாய்? என்று கேட்கிறார். அக்கேள்விக்குப்பதிலாக நடைபெறஉள்ள பதினெட்டு நாள் பாரதப் போரில் இந்த ஒரே அம்பில் கௌரவர் சேனை முழுவதையும் அழித்தொழித்து என் தகப்பன்மரார்களான பாண்டவர்க்கு வெற்றிகிட்டவே அம்பைத்தீட்டுகிறேன் என்றான்.

அரவானின் வில்லாற்றலைச் சோதிக்க விரும்பிய கிருஷ்ணன காத தூரம் படர்ந்துள்ள ஆலமரத்தின் அத்தனை இலைகளையும் ஒரே அம்பினால் துளைசெய் என்று கூற அரவான வில்லை வளைத்து அம்பை எய்ய படர்ந்திருந்த ஆல மரத்தின் இலைகள் அனைத்தையும் துளை செய்தபின் அவ்வம்பு எய்தவனிடமே திரும்பிவந்தது. என்னே! அவனது வில்லாற்றல்!! அவனதுவில்லாற்றைக் கண்ட கிருஷ்ணன் வியப்புற்றார்.

போரின் போக்குக் கருதி அரவானைப் பாரதப்போரில் களப்பலியாகக் காளிக்கு (கொற்றவைக்கு) பலிகொடுக்க விரும்பினர். திருமணம் புரிந்தவனே களப்பலிகொடுக்கத் தகுதியானவன் என்பதை கருத்தில் கொண்டு பொங்கியம்மாளை அரவானுக்கு மணம் முடித்து வைக்கின்றனர். பின்பு அரவான தன் தகப்பன்மார்களான பாண்டவர்களுக்கு வெற்றிகிட்டப் பாரதப் போரில் தன் தலையைத்தானே வெட்டிப் போர் தெய்வமான காளிக்கு காணிக்கை ஆக்கினான்.

கொமரபாளையம் வட்டம் மோளக்கவுண்டனூர் அருகில் உள்ள மண்டபத்தூர் அதாவது நாமக்கல் மாவட்டம் பவானி கொமாரபாளையத்திற்கும் வெப்படைக்கும் இடைப்பட்ட மண்டபத்தூர் (நத்தமேடு) பொங்காளியம்மன் கூத்தாண்டை மாரியம்மன் ‘கோயிலிலும் வடகரை நா ட்டு பிரம்மதேசத்திலுள்ள பொங்காளி அம்மன் கூத்தாண்டை மாரியம்மன் கோயிலிலும், பெருந்தலையூர் (காஞ்சிக் கோயில் நாடு) கூத்தாண்டை மாரியும்மள் கோயிலிலும் வேட்டுவர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன. இக்கூத்தாண்டைத் திருவிழா வேட்டுவர்களால், இன்றும் சிறப்பாகக்கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்காளி என்பது அரவானின் ஒரு நாள் மனைவி பொங்கி (அம்மாள்) நினைவாக பொங்காளி அம்மன் என்று அழைக்கப்படுகிறது. எனவே பொங்காளி அம்மன் கூத்தாண்டை மாரிம்மன் எனும் கோயில் களெல்லாம் வேட்டுவரின் பூர்வீகக் கோயில்கள் ஆகும்.

உதாரணமாக இன்னும் இரண்டு மூன்று போர் கொடுமைகளாலும் மதமாற்றக் கொடுமைகளாலும் தங்கள் குல தெய்வ வழிபாட்டுக் கோயில்களை விட்டுச் சென்ற நிகழ்ச்சிகளைக் காணலாம்.

சுந்தரபாண்டியன் ஆட்சி காலத்தில் பாண்டியரும், போசளரும் இணைந்து முஸ்லீம்களுக்கு எதிரான போராட்டித்தில் (மாவிலங்கை) லெங்கை (இலங்கை) வேட்டுவர்கள் அந்தியூர் வடகரை நாட்டில் நடந்த போரில் மைலம்பாடி கரியகாளி அம்மன் குலதெய்வ வழிபாட்டு ஊரை விட்டு வேற ஊர்களில் சென்று குடிஅமர்ந்தனர். (சுந்தரபாண்டியன் 13வது ஆட்சிஆண்டு வடகரைநாட்டுக் கல்வெட்டு) மற்றொன்று நாமக்கல் மாவட்டம் வெப்படைக்கும் கொமராபாளையத்திறகும் இடைப்பட்ட மண்டபத்தூர் (நத்தமேடு) நாட்டில் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் பாண்டியரும், போசளரும் இணைந்து முஸ்லீம்களின் எதிரான போராட்த்தில் உயிரிழந்த அந்துவ வேட்டுவரின் நடுகல். இந்நடுகல் இருக்கும் சுமார் பத்து ஏக்கர் பரப்பளவிற்கு மேல் உள்ள பகுதியில் குதிரை எலும்புகளும், மனித எலும்புகளும், போர் ஆயுதங்களும் தென்படுகின்றன. இன்று அவைகளெல்லாம் விலை நிலங்களாக மாறி உள்ளன. இப்போர்க் கொடுமைகளால் இடம் பெயர்ந்த அந்துவ வேட்டுவர்கள் இன்றும் தங்கள் குலதெய்வமான பொங்காளி அம்மனையும் கூத்தாண்டை மாரியம்மனையும் வழிபட்டுச் செல்கின்றனர் என்றும் குலதெய்வ வழிபாட்டை செய்வதற்கு மறுப்பவர்கள் நற்கதி அடையமாட்டார்கள் என்பது வழி வழி வந்த வேட்டுவ ஐதீகம் ஆகும். காளிகோயிலையும் அக்கோயில் உள்ள நாட்டையும் காத்து இன்னுயிர் ஈந்த முன்னோர்களின் சித்தர்கள், தலைபலி கொடுத்தவர்கள் கோயில் குண்டத்தின் முன் குகை அமைத்து, சமாதி அடைந்தவர்களின் ஆத்மாககளின் சக்திகள் இன்றும் வேட்டுவர்களின் பழங்கால கோயில்களில் வலம் வந்து கொண்டுதான் இருக்கும். ஆத்மாக்கள் அழிவற்றது என்பதும் வேட்டுவர் ஐதிகம்தான்.

வேட்டுவர்களின் பூர்வீக கோயில்களான வெள்ளியங்கிரி மற்றும் ஐயப்பன் கோயில்களில் பெண்கள் வழிபாடு விலக்கு (தீட்டு) இவ்வகைப்பட்டது என்பது வேட்டுவரின பூர்வீக ஐதீகமாகும். இன்றும் இவ்வேட்டுவ ஐதீகம் நடைமுறையில் உள்ளது. எனவே இக்கோயில்களில் பெண்களை அனுமதிக்கப் படுவதில்லை.

அடுத்து நாம் இன்னுமொரு மைசூராரின் படையெடுப்பில் தீக்கிரையாகிய சங்ககிரி துர்க்கத்தில் உள்ள மோரூர் பற்றியும் அவ்வூர் ஊராளி இப்படையெடுப்பில் இன்னுயிர் ஈந்து நடுகல்லான ஊராளியப்பன் வீரவரலாற்றையும காண்போம். மைசூர் படையெடுப்பில் அழிக்கப்பட்ட மோரூரில் ஆட்சிபுரிந்த பொன்னங்கட்டி வேட்டுவர் மற்றும் குன்றக்கட்டி (குன்னங் கட்டி வேட்டுவர்) வேட்டுவர்கள் அருகில் உள்ள குட்ட்டி மேய்ககன் பட்டியில் குடியேறினர். குட்டிமேய்ககன் பட்டியிலும் இவர்கள பற்றிய கல்வெட்டு உள்ளது குறிப்பிடததக்கதாகும். ஆண்டுக் கொருமுறை சிவன்ராத்திரி அன்று இக்கட்டி அரசமரபினர்கள் தங்கள் வில், வேல், வாள் போன்ற போர் ஆயுதங்களுடன் வந்து மோரூரில் உள்ள ஊராளியப்பன் நடுகல், கோயிலில் வழிபட்டுச செல்வது நெஞ்சை உருகவைக்கும், நிகழ்ச்சியாக இன்றும் நடைபெற்று வருகிறது.

இப்படையெடுப்புக்குப் பின் கொள்ளையன் நஞ்சராயன் திருச்செங்கோடு மலைக்கோயிலுக்குச் சென்று அங்குள்ள கோயில் நகைகளைக் கொள்ளையடித்தான். இதைக் கேள்வியுற்று பரமத்தியில் கோட்டை கட்டி ஆண்ட அரைய நாட்டு வேட்டுவப் பாளையக்காரன் அல்லாள இளையான் திருச்செங்கோட்டு மலைக்கோயில் நகைகளை கொள்ளையன் நஞ்சராயனிடமிருந்து மீட்டு அந்நகைகளை கோயிலுக்கே திரும்ப ஒப்படைத்தான், என்று திருச்செங்கோட்டுத் 'திருப்பணி மாலைச செய்யுள் 263 கூறுகிறது. இறுதியில் நஞ்சராயனின் கொடுமைகளைச் சகிக்காத கொங்குநாட்டு வேட்டுவப் பாளையக்காராகளெல்லாம ஒன்றுகூடி கொள்ளையன் நஞ்சராயனை மைசூருக்குத் துரத்தி அடித்தனர்.

## ஈரோடு மூக்கறுப்புப் போர்:

மதுரையை ஆண்ட திருமலை நாய்க்கர் உடல் நலக்குறைவுற்றிருந்த போது கண்டீரவ இராசவின் தளபதி ஹம்பையன ஈரோட்டுப்பகுதிகளுக்கு படையெடுத்த போது மதுரை நாய்க்கர் படையை மூக்கரிய மைசூர் மன்னன் ஆணையிட்டதால் இப்போர் ஈரோடு மூக்கறுப்புப்போர் எனப்பட்டது. இதனைக் கேள்விப்பட்ட திருமலை நாய்க்கனின் தம்பி குமாரமுத்து நாய்க்கர், சேதுபதியின் படைத்துணைக் கொண்டு சீரங்கப்பட்டினம் வரைசென்று பழிக்குப் பழியாக மைசூராரின் மூக்குகளை அரிந்தனர். இந்த ஈரோட்டுப் போரிலும் வேட்டுவப் பாளையக்கரர்கள் சின்ன

வேட்டுவம்பாளையம், பெரிய வேட்டுவம்பாளையம் போன்ற ஊர்களை விட்டு வேறுவேறு ஊர்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

நஞ்சராயனின் படையெடிப்பில் கொள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட ஊர்களில் லக்கப்பட்டி, பாரியூர் போன்ற ஊர்களும் அடங்கும். லக்கம்பட்டி, பாரியூர் என்ற ஊர்களில் ஆட்சிசெய்த வேட்டுவ இனமக்கள் வேறு இடங்களுக்கு இடப்பெயர்ச்சி ஆனார்கள். பாரி ஊரில் வேட்டுவர்களின் ஆதிக்கம் நிலைபெற்று இருந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்களைக் காண்போம்.

## 1). குலோத்துங்க சோழதேவன் (கி.பி.1149–1183):

இக்குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் பாரியூர் அமரபணீசுவரர் கோயில் கல்வெட்டில் (191-1910) பாரியூர், பனைய வேட்டுவரில் பொன்னப்பனையன் என்பவன் கோயிலுக் கதவு நிலை தானம் செய்தது கண்டிருக்கிறது. இக்கல்வெட்டு செய்தியினை கோவைக்கிழார், கோமா. இராமச்சந்திரஞ் செட்டியார் பி.எ.பி. எல். அவர்கள் தனது கொங்கு நாட்டு வரலாறு (முதல் பகுதியில் 206 -ம் பக்கம்) எனும் நூலில் வெளியிட்டுள்ளார்

## 2). தெற்கு வாசலுக்கு மேல் புறத்துச் சுவர்ப்படையில் எழுதியிருப்பது.

(No. 189 of 1910) on the south wall of the same mandapa. Record dated in the 21st year of the Vira pand ya deva, registering the gift by periya - Pillaiyan, a member of Maniya Vettuvar community, of Pariyur of 10 panam for burning a twilight lamp in fony of the god Amaravitankap- perumal at pariyur in Kanchikoyil nadu. The Epigraphy department has read the name of the king as (Sunda) ra pandya deva and the date as the 20th year.

வீரபாண்டிய தெவற்கு யாண்டு உயக-தையி மாதம் வ த காஞ்சிக் கொயில் னாட்டு பாரியூரில் மணிய வெட்டுவறில் வூறான பெரிய பிள்ளையாண்டை..... யாற் அமட விடங்கபெருமாள் திருக்கொயிலுக்கு சந்தியா தீபம் ஒன்று யென்னுதாக டைக்கக் கடவு தாகவும். இதுக்கு பத்துப் பணம் கொயில்க் காணியுடைய சிவப்பிறாம்மணன் காசியப கோத்திரத்தில் புரம் பல னம்பி பட்டன் அவினாசி..... அனந்த பட்டனும் இவ்விருவரும் இப்பணம் பத்தும் உபய மாகக் கை கொண்டுமுட்டாமல் கடக்கக் கடவதாகவும். இக்கொயில் ஆண்டு குச்சியுங் கொண்டு கொயில்ப் புகுவான் யாவ னொருவன் சந்திறாதித்தவரை செல்வதாகவும். இதுபன்மகெசுபறகைஷ கோயம்புத்தூர் ஜில்லா (கோயிற் சாசனங்கள்) சாசனம் -352 [D.3302-iv-86.

**லக்கம்பட்டி, பாரியூர் போன்ற ஊர்களில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த வேட்டுவக் கவுண்டர்கள் நஞ்சகவுண்டன் பாளையம், ல.கள்ளிப்பட்டி மற்றும் கோயம்முத்தூர் வரை இடம் பெயர்ந்தனர்.**

**சோழர்கள் ஆட்சிக்காலத்திலும், பாண்டியர் ஆட்சிக் காலத்திலும் கொங்கில் ராயர்கள் என்ற பட்டங்களைப் பெற்று கொங்கு நாட்டை ஆட்சிசெய்தவர்கள் வேட்டுவர்களே என்பதனை செப்பேடுகளும், கல்வெட்டுகளும் இலக்கியங் களும் கூறுகின்றன.**

### வேட்டுவராயர்களः

கொல்லம் ஆண்டு எழுபத்து ஐந்தில் (கி. பி. 900) ஆதித்ய சோழன். சேரன் ஸ்தாணுரவி, பாண்டியன் பராந்தக வீர நாராயணன் (கி.பி. 880 - 905) இவர்களால் முடிசூடப்பட்ட அந்தியூர் வடகரை நாட்டு அந்துவ (அந்தி) வேட்டுவச் சுந்தராயன் மற்றும் காங்கேய நாட்டு பட்டாலி வேட்டுவர் ஆனவராயன் மற்றும் குறிப்பு நாட்டுச் சேப்பேடு கூறும் நரசிங்கராயர், சந்தனராயர், பல்லவராயர், பூவலராயர் ஆகியோர்கள வேட்டுவராயர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

### வேட்டுவர் கலிவெண்பா கூறும் வேட்டுவ இனக்குழு ராயர்கள்:

புலிமுக வேட்டுவராயன், அந்துவ (அந்தி) வேட்டுவராயன். அறுமுக வேட்டுவராயன, வடமலை வேட்டுவராயன், முடக்கடி வேட்டுவராயன், கீழ்முக வேட்டுவராயன், கொடும்பரி வேட்டுவ ராயன், நச்சுழி வேட்டுவராயன, கெம்பீர வேட்டுவ ராயன், குக்க வேட்டுவராயன், படைத்தலை வேட்டுவராயன் மற்றும் பெருந்தலை வேட்டுவராயன் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

### கல்வெட்டுகளில் வேட்டுவராயாகள் :

#### பல்லவ ராயர்கள் :

சோழர்கள் தொண்டைமண்டலத்தில் பல்லவ மன்னர்களின் ஆட்சியை அகற்றிட சோழர்களுக்கு வேட்டுவ அரசர்கள் துணை நின்றனர், எனவே வேட்டுவர்களுக்குச் சோழர்கள் பல்லவராயர் என்னும் பட்டத்தை கொடுத்தனர்.

பல்லவ மன்னர்கள் என்பவர்கள் தெலுங்கு வேட்டுவர் ஆவர், களப்பிரர் என்பவர்கள் கன்னட வேட்டுவர் ஆவார்கள்.

**“அறச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவரையன்”**

**“பட்டாலியில் காவலன் வெண் கொற்றரில் சோணப் பல்லவரையன்”**

**“கரூரில் கரடி வேட்டுவரில் மானா பரணப் பல்லவரையன்”**

**“முத்தூர்காவலன் வளவரில் உத்தம சோழப் பல்லவரையன்”**

**“கவையன் புத்தூர் பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தன் ஆன உத்தம சோழப் பல்லவரையன்”**

**“ஈங்கையூரில் காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான்” ஆன குலோத்துங்க சோழப் பல்லவரையன்**

**வானவராயன் :**

“வெங்கம்பூர் புல்லை வேட்டுவரில் வானவ அரையன் வலங்கை வாழவந்தான் ஆன சுந்த பாண்டிய வீரசிங்க தேவன்” மூன்றாம் குலோத்துங்கன் சோழன் (கி.பி.1180 - 1218) காலத்தில்

**காலிங்கராயன் :**

கரூர் அருகே சங்கரமலைப்பட்டி: கி.பி.1190-ம் மூன்றாம் குளோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் கரூர் அருகே சங்கரமலைப்பட்டியில் உள்ள சிவன் கோயில் மிகவும் பாழடைந்த நிலையில் இருப்பது கண்டு இந்தகோயிலை சீரமைக்க வேண்டியும் அதற்கு தேவையான நிதியை பெறும் வழிவகை குறிததும், பராமரிப்பது குறித்து குலோத்துங்க சோழன் ஆணையிட்டார், இதை கரூர் வரலாற்று ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் கண்டு பிடித்து படியெடுத்துள்ளார். சங்கரமலைப்பட்டி ஒரு பாறையாகும். அந்தப் பாறையின் மேல் சிறிய சிவன் கோயில் உள்ளது. இந்தப்பாறையின தெற்கு சரிவில் 3 கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் எழுதப்பட்ட கல்வெட்டில் கோயிலுக்கு பணிசெய்ய வரியாக எள்எண்ணெய், மாஎண்ணெய், செக்குபனைவரி, தென்னைவரி, பாறைக்கு தெண்டகுற்றம் முதலியன வரிகளாக வசூலிக்கப்பட்டு, தேவதானமாக தந்தோம். இப்படிக்கு காளிங்கராயன இட்டகட்டளை ஆவுர் சிறு கணக்கன் இவைகளை கல்லிலும், செம்பிலும் வெட்டிக கொள்ளலாம் என்றும், நான்கு பக்கமும் திரிசூலக் கல்லை நட்டு நிலங்களை அளந்து பயிர் செய்து விவசாயம் செய்து அனுபவிக்க

வேண்டும். இவை கச்சி ராயன் எழுத்து என்று எழுதப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டில் கி.பி. 1196 - ல் எழு தப்பட்டதில் சிவபுரம் நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட நீர் நிலையும், நஞ்செய், புன்செய், ஆறுகள், ஏரிகள், ஓடம் தள்ளுபவர்கள் ஆகியோருக்கு வரியாக காளிங்கராயன் சொல்ல சிறுகணக்கன் கோயில் வரிவசூல் மற்றும் அனைத்து கணக்குகளை சரிசெய்து தெய்வத்தை பாதுகாத்துவரவேண்டும். பலவிதமான பதார்த்தங்கள் செய்து பூஜை செய்யவும் மற்றும் திருப்பணிசெய்யவும் இறைவனுக்குக் கொடையாக கொடுத்தோம. இவற்றை கல்லிலும், செம்பிலும் வெட்டிக் கொள்ளவும் காளிங்கராயன் மற்றும் கச்சிராயன் எழுதின எழுத்து என்று எழுதப்பட்டுள்ளது.

## 3வது கல்வேட்டு வீரபாண்டியனது கல்வெட்டாகும்:

இந்தக் கல்வெட்டுக்கள் 42 வரிகளாக எழுதப்பட்டுளது. இதன்மூலம் கோயில் பராமரிப்பிற்கு அனைவரின் பங்கும் வேண்டும் என்பதாக வரி வசூல் செய்த விவரம் தெரிய வருகிறது. இந்தத் தகவல்களை தமிழக தொல்லியல் கழகம் மற்றும் கல்வெட்டுத் துறை, வரலாற்று ஆய்வாளர் பால சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

(பத்திரிகைச்செய்தி) (கண்ணப்பா கல்வி மடல் - நவம்பர்-2013. பக்.17-18)

தமிழகத்தின் கருவாக இருந்த ஊர் கருவூர். மதுக்கரை செல்லாண்டியம்மன் கொங்கு நாட்டை ஆண்ட அந்தி என்கிற அந்துவ வேட்டுவ வேந்தன் அந்துவ சேரல் இரும்பொறையின் மகன் செல்வக் கடுங்கோவாழி ஆதன் பெயரால் உருவான கோயில் ஆகும். மதுக்கரை சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கு எல்லையாக அமைந்தித்துள்ளது.

## அரங்கராயன்:

“நாமககல் புல்லை வேட்டுவரில் நற்காவிரி நாடாழ்வான் தேசிஆளப்பிறந்தான் மும்முடிச்சோழச் சக்கரவர்த்தி அரங்கராயன்”

## சேனாவராயன:

“திங்களூர் வேட்டுவர் செய்யர்களில் போத்தன் கோன் ஆன சேனாவரையன்”

## காலிங்கராயன்:

"சுந்தரபாண்டிய தேவர்க்குயாண்டு -5. (கி.பி.1290). காவடிக்கா நாட்டு எறிச்சில் பொழில் வாய்ச்சியான முடித்தலைச் சோழநல்லூர் பூலுவன் (வேட்டுவர்) சிலம்பள் பிள்ளையான அதியன் காலிங்கராயன்" குள்ளிசெட்டிபாளையம் சுப்பிரமணிய சுவாமிகோயில், வடக்குச்சுவர் கல்வெட்டு மேற்கண்டவாறு கூறுகிறது.

## அமந்தியராயன்:

பேரூர் பட்டீஸ்வரர் கோயில் மகாமண்டப வட மேற்குச்சுவற்றில் உள்ள கொங்குச் சோழன் இரண்டாம் விக்கிரசோழன் கல்வெட்டில் மன்றாடி நாச்சிநமனும், ஊராளி கரலிங்கராயனும், ஊராளி அமந்தியராயனும் குறிக்கப்பட்டுள்ளனர். கச்சிராயன்: தீரன் ஜவர் திருகச்சராயன், திரு வேடராயன், காவலராயன், மாவலராயன், பூவலராயன் வேட்டுவாகள்.

கச்சிராயன் என்பான் கரை வழி நாட்டுக் கொழும்ம வீர சோழீசுவரமுடையார் கோயிலில் நித்த நின்றாடுவார் கோயிலைக் கட்டியதாக சங்கிராம நல்லூர் கல்வெட்டு கூறுகிறது. இக்கச்சிராயன் கொங்கு நாட்டில் பல கோயில்களைப் புதுப்பித்தவன் என்று **"சோழன் பூர்வ பட்டயம்"** என்ற நூல் கூறுகிறது. கரைவழிநாடு என்பது அமராவதிக் கரைப்பகுதியாகும். இதை ஆண்டவர்கள் சேரன் செங்குட்டுவன் மரபில் தோன்றிய கரையர் எனும் கரைய வேட்டுவர் ஆவர். குட்ட நாட்டையும் அரபிக் கடற்கரையையும் ஆண்ட மலையாள வேந்தன் கரைய வேட்டுவர் ஆவர். இக்கரைய வேட்டுவர் மலையாள கருப்பண்ண சாமியைக் காவல் தெய்வமாக வணங்குகின்றனர்.

சபரி எனும் வேட்டுவச்சி மலையில் சீதையின் மகன்களான லவ, குசன் வளர்க்கின்றனர். வனவாசத்தில் இருந்த சீதையின் மகன்களையும் தீப்பாய் வைத்தபொழுது சீதையை பூமாதேவி அணைத்துக்கொண்டாள் அவள் மகன்களில் குசன் மட்டும் தீக்கரையாகி கருநிறம் அடைந்தான். பின்பு இராமன் லவனே உண்மையான மகன் என்றும், குசன் அவனுக்கு உறுதுணையாய் இருந்த வேட்டுவ குறுநில மன்னனின் மகன் என்பதையும் அறிந்து இருவரையும் தன் மகன்களாக ஏற்றுக்கொண்டான் என்பதே வரலாறு. இராமன் ஒரு சத்திரியன் ஆவான் பார்பனன் அல்ல. குசன் எனும் வேட்டுவ இளவரசன் தீப்பாய்ந்து கருகியதால் மலையாள

கருப்பண்ணசாமியாக வேட்டுவர்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர்.

## வேட்டுவ மண்ணாடிகள்:

வேட்டுவகுல பெருமக்கள் மூவேந்தர்களால் 32 ஊர்களில் **'மண்ணாடி'** பட்டம் (மண்ணை ஆளுபவன் மண்ணாடி) பெற்று, கோட்டை ஊர் அதிகாரம் செய்த்தை **"சோழன் பூர்வபட்டயம்"** கீழ்க் கண்டவாறு கூறுகிறது. வேட்டுவர்கள் கோட்டை கட்டி ஆண்ட ஊர்களின் பெயர்களும், வேட்டுவர்களுக்கு அதிகாரம் அளித்த மன்னர்கள பெயர்களும். பழனி (சேரன்), ஆய்க்குடி (பாண்டியன்), பூம்பறை (சேரன்), ஆனைமலை (சேரன்), தென் சேரி (சோழன்), சென்னிமலை (சோழன்), வெள்ளியம்பதி (சோழன்), சத்தியமங்களம் (சேரன்), திங்களூர் (சேரன்) விசயமங்களம் (சோழன்), கீரனூர் (சேரன்), கோனாபுரி (சோழன்), நடுவச்சேரி (சேரன்), பல்லடம் (சேரன்), தணக்கன்பதி (டணாய்க்கண் கோட்டை, சோழன்), குள்ளந்துறை (சோழன்), வண்டிகோட்டை (சோழன்), வெள்ளாந்தி (சோழன்), கவையம்புத்தூர் (சோழன்) சாமளபுரம் (சோழன்), சிங்கநல்லூர் (சோழன்), வெள்ளலூர் (சோழன்), சூலூர் (சோழன்), இருகூர் (சோழன்), இடிகரை (சோழன்), கோவன்புத்தூர் (சோழன்), துடியலூர் (சோழன்), பேரூர் (சோழன்), அவினாசி (சேரன்), திருமுருகள் பூண்டி (சோழன்), அன்னுர் (சேரன்), சேவூர் (சோழன்), முட்டம் (சோழன்).

சேர, சோழ, பாண்டிய ஆட்சிக்குப் பின்னால் பாளையப்பட்டு ஆட்சிக்கு காலத்தில் கூட அந்தியூர் கோட்டை வேட்டுவர் வசம் இருந்ததைப் பாளையப்பட்டுகளின் வரலாறு தொகுதி - 1 பக்கம். 1- ல் சரம்பள்ளியில் தென்மனை, காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் வேட்டுவர்கள் கோட்டை இருந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது உறுதிப்படுத்துகிறது.

வெள்ளை வேட்டுவர் பெயரால் தான் வெள்ளோடு என்ற ஊர் வெள்ளை ஓடை என்ற ஓடையும் உருவானது. வெள்ளோடையை தலைநகராக கொண்டு பூந்துறை நாட்டின் ஒரு கரையை வெள்ளை வேட்டுவரும், அவல் பூந்துறையைத் தலைநகராக கொண்டு பூந்துறை நாட்டின் மறுகரையை அந்தி வேட்டுவரும் ஆண்டனர் என்பதே உண்மையான வரலாறு ஆகும்.

## நாடாண்ட வேட்டுவர்:

“நாடாண்ட வேட்டுவர்” என்ற தலைப்பில் பேராசிரியர் கரூர் தங்கமணி அவர்கள் வேட்டுவத்தலைவாகள் கோட்டை கட்டி ஆண்டதாகத் குறிப்பிடும் ஊர்கள் “தென்னிலை, புரவிபாளையம், இனுங்கனூர், நிமந்தப்பட்டி, புன்னம், காகம், அந்தியூர், காக்கா வாடி, இருக்கூர், ஆத்தூர், மறுளப்பட்டி, கிளாங்குண்டல், ஒத்த மாந்துறை, குறிஞ்சி நகரம், வெள்ளியங்கிரிநகரம், பரமத்தி (வேலூர்)” என்றும் மற்றும் ஆளும்வர்கத்தினரான வேட்டுவத் தலைவர்கள் நாடாள்வான், கொங்காள்வான், கொங்குராயன், ஊராளி, மன்றாடி, அதிகாரண் முதலான அடைமொழிகளுடன் செப்பேடுகளிலும், கல்வெட்டுக்களிலும் குறிக்கப்பெறுகின்றனர். வேட்டுவத் தலைவர்களின் அரிய செயல்களைப் பாராட்டி மூவேந்தர்களும் விசயநகர வேந்தர்களும் இவர்களுக்குப் அதியமான், பல்லவராயன், தொண்டைமான், சேனவராயன், காலிங்கராயன் முதலான தோரணையான சிறப்புப்பெயர்களை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்” என்றும் குறிப்பிட்டுள்ளார். (கண்ணப்பர் கல்விமடல் செப்டம்பர் - 2012)

## காலிங்கராயன்பற்றிய கல்வெட்டுக்கள்:

காவடிக்கா நாட்டில் (கி.பி.1290) பூலுவன் (வேட்டுவன்) காலிங்கராயன் பற்றிய கல்வெட்டு ஒன்றும் பேரூர் பட்டீஸ்வரர் கோயிலில் உள்ள வேட்டுவன் ஊராளி காலிங்கராயன்பற்றிய கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. இது இரண்டாம் விக்கிரம சோழன் கி.பி.1264 ஆண்டு கல்வெட்டாகும். மற்றும் தலையூர் சங்கரன் மலைப்பட்டியில் மூன்றாம் குலோத்துங்கன் சோழன் காலத்து கல்வெட்டுக்கள் இரண்டு, கரூர் வரலாற்று ஆய்வாளர் பால சுப்பிரமணியன் கண்டுபிடித்து படியெடுத்ததில காலிங்கராயன, கச்சிராயன் பற்றிக் குறிப்படப் பட்டுள்ளது தெரிய வருகிறது. வெல்லட்டும் வேட்டுவம்:

“வேட்டுவ வரியின் மறவர் வழிபாட்டு நிகழ்ச்சியில் ‘அமரி, குமரி, சூலி’ என்றெல்லாம் அழைக்கப்பெறும் கொற்றவைக்கு இணையாகத் தமிழ்நாட்டில் **‘உமை’** எனும் பெண் தெய்வம் ஏற்றம் பெறத் தொடங்கியது. தலைமையிடத்திலிருந்து கொற்றவை நீக்கப்படுவதை அறிந்த வேட்டுவர்களின் எதிர்புக்குரல் இளங்கோவடிகளால் பாடலடியாய்ப் பதிவாதியுள்ளது”. (இரா. கலைக்கோவன் **“வரலாறு”** ஆய்விதல் 23-ல் பக்கம் 71-ல் குறிப்பிட்டுள்ளார்).

சங்ககால கொங்கு என்ற தலைப்பில் கோவை அரசுகலைக் கல்லூரி முன்னாள் பேராசியர் பசுவலிங்கம் **“கொடுமணம்”** என்ற காலகட்டத்தில் அரசு அடைப்பு ஏற்பட்டது. அப்போது **‘வேட்டுவர்கள்’** என்ற சிற்றரசர்கள் தோன்றினர். (12.05.2012 தினமலர் நாளிதழ் கோவை பதிப்பு).

உலகில் முதன் முதலில் வேட்டுவச் சிற்றரசர்கள் தோன்றினர். சிறுகுடிச் சிற்றரசு ஆகியபின் பேரரசு ஆனது. வேட்டுவ இனக் குழுக்கள் சங்ககால சிற்றரசுகளையும் தமிழகத்தின் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளையும் நினைவுபடுத்துகின்றன. சேரன் செங்குட்டுவனின், கரைய வேட்டுவன், அந்துவன் சேரல் இரும்பொறையின் அந்துவ வேட்டுவன், பனைய வேட்டுவன், வில்லி வேட்டுவன், ஆதன் வேட்டுவன், அக்கினி வேட்டுவன், உதியன் அதியன் வேட்டுவன், சேரமான் அந்தையின், கீரந்தை மாடந்தை, மாந்தப்படை, பூலுவ வேட்டுவர் (சேரர் பூழி நாடு) என்ற வேட்டுவ இனக்குழுக்கள் சேர அரசர்களையும், சோழ வேட்டுவன், வளவர், வேட்டுவர், செம்ப வேட்டுவர் இனக்குழுக்கள் சோழ அரசர்களையும், பாண்டிய வேட்டுவன், வேம்ப வேட்டுவன், சந்திர வேட்டுவன், குடுமி வேட்டுவன், உயர வேட்டுவர், (கடிய நெடு வேட்டுவன் நெடியோன் - பாண்டியனின் குறுநில மன்னன் ஆவான்) என்ற வேட்டுவ இனக்குழுக்கள் பாண்டிய அரசர்களையும் குறிக்கின்றன.

வேட்டுவ நாவிதனை பாண்டிய நாவிதன் என்றே அழைக்கின்றனர். மாந்தரன் பதிகம் வேட்டுவர்களை **‘பாண்டிய புத்ரவர்க்கம்’** என்கிறது. ஈரோடு மாவட்டம் பட்டையக் காளிபாளையம் காளத்தீஸ்வரர் கோயில் கல்வெட்டு “பஞ்ச பூதஸ்தலங்களில் ஒன்றாகிய ஸ்ரீகாளத்திநாதர் ஆதினம் கண்ணப்ப கோத்திர வில்வேட்டுவர், மாவுலவர், பூவுலவர், காவுலவர் இதைச் சார்ந்த 32 ராயர்குலம் லட்சத்தி எட்டு வீரகுலத்தவர்களும் வெற்றிவாளும் வீரத்தண்டும் புலிக் கொடியும்” என்று கல்வெட்டு கூறுவதால் வேட்டுவர்கள் புலிக்கொடியும் உடையவர்கள் என்று புலப்படுகிறது. இது வேட்டுபர்களை ‘சோழ வர்க்கம்’ என்கிறது.

> “சேர நாட்டில் மன்னனின் அடையாளமாக இருந்தது வில் என்பதை இங்கு எண்ணும்போது ஆதியில், வேடனாக இருந்தவன் நாளடைவில் மன்னனாகத் திகழ்ந்திருக்களாம் என்று கருத இடமுண்டு. பொதுவாகக்

கூறுமிடத்து கூட்டம் கூட்டமாக வாழ்ந்தவருள் தலைமை நிலைமையை எய்தியிருந்தவர் அரசராக உருவெடுத்தானெக் கொள்ளலாம். டாகடா கே. கே.பிள்ளை அவர்கள் முதல் அரசு உருவாக்கம் பற்றிக் கூறும் பொழுது இவ்வாறு குறிப்படுகிறார்.

(“தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் - பக்கம் 166 உலக தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலை வெளியிட்டுள்ளது.”)

‘அரசு உருவாக்கத்தின் வேட்டுவர் என்ற தலைப்பில் வரலாற்றுச் சிற்பி பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி கூறுவது:- **“வில்லோர் அரசே கொங்கு நாட்டில் உருவான முதல் அரசு”** ஆகும். இதனை **‘வேட்டுவ அரசு’** எனவும் கூறலாம். வேட்டுவர் இனப் பிரிவுகளுள் வில் கூட்டங்கள் இருப்பதை நாமறிவோம். தொல்குடியினரான இவர்கள் வில்லை அரசு சின்னமாக கொண்டனர். கரூர் அமராவதி ஆற்றங்கரையில் இது காறும் நூற்றுக்கு மேற்பட்ட இருபக்கமும் வில் சின்னம் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன. இதில் சேர அரசின் சின்னமான யானை காணப்பட வில்லை, எனவே இது சேர அரசிற்கு முற்பட்டது என்பதில் ஐயமில்லை. இந்த அரசின் தலைவன் “வில்லோர் பெரும” என்று இலக்கியங்க சுட்டிக்காட்டப்படுகிறான் (புறம் 169). இந்த அரசே சேர அரசாச நாளடைவில் உருவாயிற்று. வேட்டுவருள் சேர வேட்டுவர் எனும் குலபெயரும் உண்டு, பனைய வேட்டுவரும் உண்டு, வில்லோர் அரசு சேர அரசாக உருவான பின்னர் வில்லம்பும், யானையும் சேரரது அரசு சின்னமாக மாறியது.

சேரமன்னன் குலசேகர ஆழ்வார் தன்னை வேட்டுவன் என்றே கூறுகிறார். இவர்பாடிய முகுந்த மாலையில் இவன் தன்னை கொல்லிக்காவலன், கொல்லி வெற்பன், கொல்லி சிலம்பன் மற்றும் **‘கொங்கர் கோன்’** என்று கூறுகிறார்.

ஆதித்ய சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுக்கும் பொழுது கொங்கு நாடு முழுதும் வேடராசாக்கள் ஆண்டனர் என்று கொங்கு தேச இராசாக்கள்’ எனும் நூல் கூறுகிறது. வேட்டுவர்கள் போர்க் குணம் கொண்டவர்கள் “வெட்ட வெட்ட தழையும் வேட்டுவர் படை” என்பது முதுமொழி; “வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகை எண்ண முடியாது" என்ற பழமொழியும் உண்டு. வேட்டுவர் வில் எடுத்தது வில்லிப்புத்தூர்

ஆனது. வில்லி வேட்டுவன் ஆண்ட வில்லிப்புத்தூர் (ஸ்ரீ வில்லிபுத்தூர்) ஆண்டாள் கோயில் கோபுரம் இன்று தமிழக அரசு சின்னமாக உள்ளது. வேட்டுவர் வேள் எடுத்தது வேலூர் ஆனது, வேட்டுவ மன்னன் நம்பிராசன் மகள் வள்ளியை வேட்டுவத தலைவன் வேலன் (குமரன்) மணம் புரிந்தது வேலூரில் உள்ள வள்ளிமலை ஆகும். வேட்டுவர் வாள் எடுத்தது வாளகிரி ஆனது. வேட்டுவர்கள் களப்பிரர்கள் தலைவனான உத்தண்டன் (விக்கந்தன்) பரசுராமன் எல்லை அழித்து எதிர்படை வென்று சேர, சோழ, பாண்டியர்களைச் சிறைமீட்டு வாளை கழுவிய ஆறு வாளைஆறு ஆனது. வேட்டுவர் பரம்பரை அரசாண்ட பரம்பரை, சேர், சோழ, பாண்டிய நாடுகள், தொண்டை நாடு, கொங்குநாடு என்னும் ஐந்து தமிழகத்தையும் ஆண்டவர்கள் வேட்டுவர்கள். சங்ககாலத்தில் முருகனுக்கு வள்ளி ஒருவளே மனைவி ஆவாள்.

**சிவன், வேலன் (குமரன்), பெருமாள்பங்களத்து இராசன், வில்லாதி வில்லன், வீரன் மணிகண்டன், திரு வேட்டுவர் கண்ணப்பர்** என்பவர்கள் எல்லாம் வேட்டுவ மன்னர்களே ஆவர். சிவன், பெருமாள் மக்களுக்குக் காட்சி தரும் பொழுது வேட்டுவக் கோலத்தில் தான் வருகின்றனர். சபரிமலை என்றால் வேட்டுவச்சி மலை என்று அர்த்தம். ஆதலால் தான் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியார் **“வேட்டுவர் சார்பினிலே இறைவனை காண்போம்”** என்றார்.

பொதியமலையை ஆண்ட ஆய் அண்டிரன், கொடைக்கானல் மலையை ஆண்ட கடியநெடு வேட்டுவன், பழனிமலையை ஆண்ட பேகன், நீலகிரி மலையை ஆண்ட வஞ்சன், கண்டீர மலையை ஆண்ட கண்டீரக் கோப்பெருநள்ளி, வேங்கட மலையை ஆண்ட ஆதனுங்கன், திருவண்ணாமலையை ஆண்ட நன்னன், காளத்திமலையை ஆண்ட நாகன், கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரி என்ற அனைவருமே புகழ் வாய்ந்த மலைகளை ஆண்ட மன்னர்கள் எல்லாம் வேட்டுவ மன்னர்களே ஆவர். மலைகளை ஆண்டகுறிஞ்சிக் கோமரபினரான வேட்டுவர்கள் முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலங்களில் தங்கள் நாகரிகங்களை பரப்பினர். வேட்டுவர் இனத்தில் குழந்தை பிறந்ததும் இறந்தால் கூட அந்தக்குழந்தையை வாளாள் கீரி விழுப்புண் ஏற்படுத்தீயே அடக்கம் செய்வர்.

## இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் வேட்டுவர்கள்:

சிலம்பன், எயினன், குன்றவர் (குன்னுவர்), கானவர், வேட்டுவர், வேடர் - வேடுவர், புளிந்தர், காட்டு குறும்பர், அருவாளர், சபரர், நிஷாதர், வேட்டுவரையர், மழவர், ஆவியர், ஓவியர், கங்கர், ரட்டர் (குறும்பர்) கட்டியர், புன்துரையன், காங்கேயன், அந்துவன், கொங்கன், கொல்லியர், வேணாடர் (வேட்டுவ நாட்டார்) என பலபெயர்களில் வேட்டுவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நாட்டையும், மக்களையும், கால்நடைகளையும் காத்தலில் வலிமை உடைய தலைவன் என்பதினால் காமிண்டர் என்றும், காவிலியர் என்றும் வேட்டுவர்கள் அழைக்கப்படனர். சங்க காலத்தில் இருந்தே கல்லெறி கவுண்ப்படை வைத்திருந்ததால் தான் கவுண்டர் என்று அழைக்கப்பட்டனர். கவுண் என்ற சொல்லே கவுண்டனாகி இப்பொழுது வேட்டுவக் கவுணடர் என்று அழைக்கப் படுகின்றனர். ஒரே அம்பில் ஐந்து விலங்குகளை வீழ்த்தியவன் மழங்கொங்கு நாட்டில் கொல்லிமலையை ஆண்ட வேட்டுவன் வல்வில் ஓரி ஆகும். ஆறே நாட்களில் இறைவனை அடைந்த திரு வேட்டுவர் திருகண்ணப்பர் ஆவார். கண்ணப்பரை இலக்கியங்கள் திரு வேட்டுவர் கண்ணப்பர் என்றே குறிப்பிடுகின்றன.

“கொங்கு நாட்டின் பூர்வகுடிகளான வேட்டுவர்க்கும், குடிபுகுந்த குடியானவர்களும் பத்து, பதினொன்றாம் நூற்றாண்டு களின் சில பூசல்கள் நிகழ்ந்தன. வேட்டுவர்களைப் போன்று வெள்ளார்களும் கூட்டப் பெயர்களை (குல பெயர்) வைத்துக் கொண்டனர் அவை அந்துவன், அக்கினி, இந்திரன், கீதை, மூலன், மணியன், பனையன், பாண்டியன், சேரன், பூஞ்சந்தை, காடை, வெலையன், காரி, புன்னை, பொன்னன் என்பனவாகும்”.

(கொங்கு சமுதாயம் (வேட்டுவர்): பக்கம்:37. வரலாற்றுச் செம்மல் பேராசிரியர், ம. இராசசேகர தங்கமணி.)

“சோழன் பூர்வ பட்டயமும் வேட்டுவரில் காவலுவர், மாவலுவர், பூவலுவர், குன்னுவர் (குன்னி) ஆகியோர் கொங்கின் ஆதிக்குடிகள் என்று கூறும். வெள்ளாளர்கள் செந்தலை, படைத்தலை, பால் சேரிநகர், தென்திசைநகர், திசைவூர் ஆகிய சோனாட்டு ஊர்களிலிருந்து கொங்கில் குடியேறினர் என்று சோழன் பூர்வ பட்டயம் கூறுகின்றது,” (புலவர் செ.இராசு, “தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு” பக்கம். 29.)

பூர்வகுடி வேட்டுவர்க்குப் பணி செய்த, பணி செய்யும் மக்கள் கொங்கில் குடிபுகுந்த குடியானவர்களுக்கு பணிசெய்ய மறுத்தால் வெள்ளாளர்கள் நாவிதன் முதற்கொண்டு தங்களுக்குள்ளேயே புதியதாய் அமைத்துக்கொண்டனர், எனவே வேட்டுவ நாவிதன் மற்றும் குடிநாவிதன் என்ற பாகுபாடுகள் இன்றும் கொங்கு நாட்டில் உள்ளன. (புலவர். செ. இராசு "கொங்கு களஞ்சியம், பக்கம்:345.) வேட்டுவர்கள் தங்களுடைய கோயில் விழாக்களிலும், குடும்ப விழாகளிலும் பணி செய்யும் பதினென் குடிகளையும் பங்குகொள்ளச் செய்து ஆதரித்தனர்.

வேட்டுவர்கள் பதினென் குடிகளுக்கும் தங்களுடைய கோயில்களுக்குப் பணிவிடை செய்ய நாவிதன் காடு அல்லது வயல், வண்ணான் காடு, குயவன் காடு, பள்ளங்காடு, பறையன் காடு, சிவிகை தூக்கும் சிவியர்காடு, ஆண்டிக்காடு, ஆசாரிகாடு, கொல்லன்காடு, குறவன் காடு, செக்கான் காடு எனவும் கோயில் அர்ச்சகருக்கு பாப்பான் காடு அல்லது வயல் என தங்களது காணிபூமியில் (பங்களித்தனர்) பகிர்ந்தளித்தனர்.

## வேட்டுவர் திருமணச்சடங்குகள்:

வீரத்திற்கு பிறப்பிடமான வேட்டுவர்கள் வில்லேற்றி வீரம் காட்டியயவனுக்கும், மாப்பிள்ளை குண்டு கல் தூக்கியவனுக்கும், மாடுபிடித்தலில் காளையை அடக்கியவனுக்கும், போரில் வீரம் காட்டியவனுக்கும், புலியைக் கொன்று மக்களைக் காப்பாற்றிய வனுக்கும் என வீரம் செறிந்த ஆண்மகனுக்கே பெண் கொடுத்தனர்.

வேட்டுவர்கள் பெண் கொடுப்பதும், பெண் எடுப்பதும் தன்னுடைய இனக்குழு இல்லாத வேறொரு வேட்டுவ இனக்குழுக் களிலேயே வைத்துக் கொண்டனர்.

## தாலி:

மிகப்பழங்காலத்தில் வேட்டுவ வீரர்கள் பனை ஓலையில் குமரிக்கு கட்டிய "தாளபத்திரம்" காலப்போக்கில் தாலி என்று அழைக்கலாயினர்.

மங்கல நாணாகிய "புலிப்பல் தாலி" அணிவது பற்றி அக நானூறு கூறுகிறது.

> **"மறங்கொள் வயப்புலி வாய்ப் பிளந்துபெற்ற**
> **மாலை வெண்பல்தாலி நிறை பூட்டி" - (சிலம்பு. 12:27, 28)**

சிலப்பதிகார காலத்தில் வேட்டுவரகள் கொற்றவை போல் சிங்காரித்த குமரிக்கு வீரங்கொண்ட புலியைக் கொன்று வாயைப் பிளந்து எடுத்த பற்களைக் கோர்த்த தாலியைக் கட்டினார்கள் என்று “வேட்டுவ வரி” யில் சிலப்பதிகாரம கூறுகிறது. பின்னர் வேட்டுவர்கள் வீரத்தோடு கொல்லும் புலியின் இரண்டு பற்கள் போலச் செய்த தங்கத்தாலியை மணமகளுக்கு கட்டும் பழக்கம் தமிழகத்தின் பரவளாயிற்று. இன்று வேட்டுவர்களில் சில வேட்டுவர்கள் தாலி காட்டும் பழக்கம் இல்லை தாலிக்குப்பதிலாக டாலர் வைத்த செயின் மட்டும் அணிகின்றனர். வேட்டுவர்கள் போர்க்குடியினர் ஆவர். அவர்கள் போருக்கு சென்றால் போர் முடிந்த பின் தான் ஊருக்கு வருவார்கள். போர் முடிந்து ஊருக்கு திரும்பும் வழியில் திடீர் வெள்ளப் பெருக்கால் ஆறுகளையும் பள்ளங்களையும் கடந்து வர முடியாத சமயத்தில் அவர்களுடன் சென்ற நாய்கள் மட்டும் கரையைக் கடந்து ஊர் திரும்பி விடும். இதைக் கண்ட வேட்டுவப் பெண்கள் தன் கணவன்மார்கள் போரில் இறந்திருக்கலாம் என்று எண்ணி தாலியை அறுத்த பின் தீப்பாய்ந்து வீரமாத்திகள் ஆவார்கள். இதனால் பின்பு சில வேட்டுவர்கள் தாலி கட்டும் பழக்கத்தை கைவிட்டனர். இதனால் தாலிக்குப் பதிலாக டாலர் வைத்த தாலிக்கொடியை வேட்டுவர்கள் பயன்படுத்தினார்கள்.

## பொருத்தம்:

**“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே, உணர்வோடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகை யே”**

**- (தொல். காப்பியம். மெய் -25)**

பிறப்பு என்பது அவர்கள் பிறந்த குலம், குடிமை என்பது அவர்கள் பிறந்த குடி, ஆண்மை என்பது அவர்களுடைய வீரம், ஆற்றல் ஆண்டு என்பது அவர்களுக்கு தகுதியான திருமண வயது, உறவு என்பது அவர்களுடை உடல் பொருத்தம், நிறுத்த காமவாயில் அவர்கள் இருவருக்கும் இடையே தோன்றும் அன்பு, நிறை என்பது அவர்களுடைய கற்பின் திண்மை, அருள் என்பது அவர்களுடைய கருணை, உணர்வு என்பது அவர்கள் (மணப்பெண், மணமகள்) பெற்றிருக்கும் அறிவு, திரு என்பது அவர்களுடைய செல்வம் மேற்கூறிய பத்து வகை பொருத்தமும் ஆணுக்கும், பெண்ணுககும் பொருந்தி வருகிறதா என்பதைக் கவனித்து இருவருக்கும் திருமணம் செய்துவைத்தனர் நம் முன்னோர்கள்.

## சோதிடமும் நிமித்தமும்:

மேற்கூறிய பத்துப் பொருத்தங்களைச் சோதிடம் மூலம் பார்த்து திருமணம் செய்கின்றனர். சிலர் பூவரம் பார்க்கின்றனர். நிமித்தம் என்பது சகுனம். சகுனம் பார்தது தடம் வழிபார்த்து பெண் பார்த்து பின்பே திருமணம் உறுதி செய்கின்றனர்.

## நிச்சய தாம்பூலம்:

வண்ணாத்தி வெண்மையான துணியை விரிப்பாகப் போட்டுவைப்பாள், அதன்நடுவில் முக்காலிவைப்பர், அதன் மேல் மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த தாம்பூலத் தட்டதகை வைப்பர். பின்பு அத்தட்டத்தை குடிமூத்தோர் அல்லது அருமைக்காரர் எடுத்து மாங்கல்யம் தரித்த பெண்களிடம் கொடுப்பார். அவர்கள் மணப்பெண்ணிடம் கொடுத்து பெண்ணை அலங்காரம் செய்து பெண்ணின் மடியில் வெற்றிலை, பாக்கு, மஞ்சல், எறுமிச்சம் பழம் வைத்துக் கட்டி அவைக்கு அழைத்து வந்து பெரியோர்களை வணங்கச் செய்வர். பின்பு இருவீட்டாரும் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வர்.

## மாங்கல்யத்திற்குப் பொன் கொடுத்தல்:

நிச்சயம் முடிந்தவுடன மாப்பிள்ளை வீட்டார் ஒரு தாம்பாளத்தில் பழம், வெற்றிலை பாக்கு, எலுமிச்சை, பூ மற்றும் தாலிக்குரிய பொன் இவைகளை வைத்துத் தங்களுடைய குலதெய்வ கோயிலில் பொன் வேலை செய்யும் ஆசாரியிடம் பொன் தாலி செய்யக் கொடுப்பர். கூறை புடவை எடுத்தல்: மணமகளுக்கு மணமகன் வீட்டார் கூறை புடவை தேர்ந்த்தெடுப்பர். மணமகனுக்குரிய ஆடைகளைபெண வீட்டார் தேர்ந்த்தெடுப்பர்.

## உப்புச் சர்க்கரை மாற்றல்:

நிச்சயம் முடிந்த பின்பு உப்பும், சர்க்கரையும் இருவீட்டாரும் பரிமாறிக் கொள்வர். திருமணத்திற்கு நெல்குத்துதல், விறகு வெட்டுதல் என்ற சடங்குகளையும் செய்கின்றனர்.

## திருமண அழைப்பு:

முன்பு பனை ஓலையில் திருமண அழைப்பை ஓலை சொன்னபடி எழுதும் ஒச்சன் (கணக்கன்) எழுதி அதன் மூலம் உறவுகளை (சொந்தங்களை) அழைப்பர்.

## பட்டினிச் சாப்பாடு மற்றும் இணைச்சீர்:

திருமனத்திற்கு முதல் நாள் மணமகனும், மணமகளும் உண்ணும் உணவை ஒருசந்தி (பட்டினிச்சாப்பாடு) என்று கூறுவர். முகூர்த்தத்திற்குமுன் இந்த ஒருவேளை சாப்பாடே (ஒருசந்தி) அவர்களுக்கு வழங்கப்படும். உடன் பிறந்தவர்களோடு செய்யும் சீர் இணைச்சீராகும்.

## மணமக்கள் தோழன், தோழி:

திருமண நாளில் மணமகன், மணமகள் இருவருக்கும் தோழன், தோழி துணை இருப்பர். மணமகனுக்குத் துணையாக சகோதரியின் கணவன் மார்களும், மணப் பெண்ணிற்கு நங்கை, கொழுந்திய மார்களும் தோழன், தோழி ஆவார்கள்.

## மடைக்கலம் வைத்தல்:

குயவன் விளக்கு குடம் பானை சால் முதலியவைகளையும் ஆசாரி மற்றும் கொல்லன் மனைக்கு வேண்டிய அரிவாள் மனை, அஞ்சறைப்பெட்டி, ஏழறைப்பெட்டி, உப்புபெட்டி முதலியவை களையும் குறவன் முறம், கூடை முதலியவைகளையும் கொடுக்கும் சீரை “மடைக்கலம் வைத்தல்” என்பர். மடைக்கலம் என்பது சமையலுக்குரிய பாத்திரபண்டங்களைக் குறிக்கும்.

## பிறைமண் எடுத்து பேய்க் கரும்புநடுதல் (பிரமனை):

**‘வான்மீகம்’** என்றால். கரையான்புற்று என்று சொல்வர். கரையான் புற்று தன்னை மூடி மறைத்தும் தன் உறுதிகுன்றாமல் இருந்தால் அதன் பெயரே வான்மீகம் என்று அழைக்கப்பட்டது. வால்மிகியின் பெயரால் விளங்கும் நகரமே **‘திருவான்மியூர்’** ஆகும். வால்மீகி தனது இராமாயணத்தில் குகனை இராமனுக்கு நிகரான மன்னனாகக் காண்கிறார். ஆனால் கம்பன் தனது இராமாயணத்தில் குகனை **“நாவாய் வேட்டுவன் நாயடியேன்”** என்று குறிப்பிடுகிறார். சிவன், குமரன், பெருமாள ஆகிய வேட்டுவ மனனர்கள் நாக விசத்திடமிருந்து தன் மக்களை காப்பற்றினர். மணமக்களுக்கு விஷக்கடி தாக்காமால் இருக்க பிறைமண் எடுத்து வணங்கினர். புற்றுக்கு பால் வார்த்து பூசை செய்து புற்றிலிருந்து எடுத்து வந்த மண்ணைக் கொண்டு வேட்டுவ நாவிதன் (பாண்டிய நாவிதன்) மண மேடையில் அரை அடி உயரத்திற்கு சதுர மேடை அமைப்பான். பின்பு புறைமண் மேடையில் பேய்க் கரும்பினை நடுவான்.

## பச்சைப் பந்தல்:

16 பந்தக் கால்நட்டு பச்சை மரக்கிளைகளைக் கொண்டு பந்தலிடுவர். பசுமை பந்தல் முழுவதும் வண்ணான் பட்டாடையை அப்பந்தலில் மேலே கட்டி அழகு செய்வான், பந்தலிட்டு மணமேடையை குளிர்ச்சி செய்த வண்ணான், நாவிதன் மற்றும் பந்தலிட்ட அனைவர்க்கும் விருந்து அளித்து வெகுமதி செய்வர்.

## மாலை வாங்குதல்:

கந்தமலர் மாலைக்காரன் (பண்டாராம்) திருமணத்திற்கு வேண்டிய பூக்களையும், மாலைகளையும் வழங்குவான். கொற்றவை எனும் காளி, சிவன், குமரன், பெருமாள் கோயிலில் ஆணடி, ஐயர் மற்றும் பூசாரிகளும் அந்தந்த கோயில் மாலைகளைக் கொண்டு வந்து கொடுப்பர். பிரம்மச்சரியம் கழித்தல்: மாப்பிள்ளை பிரமச்சரிய விரதம் முடிப்பதால் நாவிதன் முகச்சவரம் செய்து மயிர்வினைச் செயலை முடிப்பான். கி.பி. 6 - ஆம் நூற்றாண்டின் கொங்கு வேளிர் அருளிய பெருங்கதையில் மயிர்வினைப் படலம் இதைப்பற்றி கூறுகிறது. பெருங்கதையில் வேட்டுவர் திருமணச் சடங்குகள் பற்றி முழுதும் அறியலாம்.

## மங்கல நீராட்டு:

மாப்பிள்ளை முகச்சவர வேலை முடித்த பின் பச்சைப் பந்தலில் முக்காலி மேல் அமர்த்தி செஞ்சோற்றை சுற்றிப்போட்டு தண்ணீரால் குளிக்கவைப்பர். மஞ்சள், சுண்ணாம்பு கலந்த செஞ்சோற்று அடையை தலை, தோள் மற்றும் பாதங்களில் வைத்து எடுத்தபின் வேட்டுவர் நாவிதன் மாப்பிள்ளைக்கு நீராட்டுச் செய்வான்.

## ஆக்கை சுற்றிப் போடுதல்:

புளிய மரத்து விளாரை இரண்டாகப் பிளந்து ஆக்கை சுற்றி உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை மாப்பிளைக்கு மிளாரால் மேலும் கீழும் மூன்று முறை தடவி நீராட்டுவதே ஆகும்.

## பாலைக்கால் போடுதல்:

பாலமரத்து கிளையில் ஒன்றை கொண்டுவந்து மஞ்சள் துணியில் நவதானியங்கள் முடிந்து அக்கிளையில் கட்டி மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டார் அனைவரும் சூழ்ந்திருக்க மேள தாளத்துடன் பாலமரத்துக்குப் பூசைசெய்வர். நாவிதன்

துணைசெய்ய அருமைக்காரர் இப்பூசையைச செய்வர் மூவர் அல்லது ஐவர் சேர்ந்து வடகிழக்கு மூலையில் உள்ள பந்தகாலில் கட்டி பால் வார்ப்பார்கள்.

## கங்கணம் கட்டுதல்:

மாப்பிள்ளைக்கும், மணப்பெண்ணுக்கும் வலதுகையில் கனுவு இல்லாத மஞ்சள் எடுத்து மஞ்சள் தடவிய நூலில் கட்டுவதே கங்கணம் கட்டுவது ஆகும்.

## குதிரை மேல் ஏற்றம்:

மாப்பிள்ளைக்கு அலங்காரம் செய்து மலர்மாலை சூட்டி உருமாலை சொங்கு விட்டு மாமன் மைத்துனர் கட்டுவிப்பர். பின்பு மாப்பிள்ளையைக் குதிரை மேல் ஏற்றி கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவர். முரசு கொட்டி அறிவித்தல்: மணவிழாவை நாட்டு மக்கள் அறிய யானைமீதோ, குதிரைமீதோ சுமந்து முரசு கொட்டி அறிவிப்பர். செய்தியை ஊரார் அறிய மேளதாளம் தாரை தப்பட்டை ஆகியவற்றை கொட்டி அறிவிப்பர்.

## நாட்டுக்கல் வழிபாடு:

மணமக்கள் நடுகல் வழிபாடு, குல தெய்வ வழிபாடு முடித்த பின் நாட்டுக்கல் வழிபாடு நடக்கும் நாட்டார் அனைவர்க்கும் அழைப்பு விடும் முகமாக நாட்டு எல்லையில் உள்ள அல்லது ஊர் எல்லையில் உள்ள நாட்டுக் கல்லுக்கு நீராட்டி, மஞ்சள் நீர் தெளித்து, வெற்றிலை கட்டி, மலரிட்டு வளம் வந்து வழிபாடு செய்வார்கள். இந்நிகழ்ச்சியில் நாடாளும் வேட்டுவரும், ஊராளும் வேட்டுவரும் முக்கியஸ்தர்கள் ஆவர்.

## இணைச்சீர் – இணை உடுத்தல்:

உடன் பிறந்தவளுக்கு அலங்காரம் செய்து பட்டாடை உடுத்தித் திருமணப் பேழையை அவள் தலையில் சுமந்து வலக்கையில் நிறை நீர் செம்பு கொண்டு வரசசெய்து, உடன் பிறந்தவனைச் சுற்றி வரச் செய்வர். பேழைகுள் வெற்றிலை பாக்கு, தேங்காய் பழம், பூ, கண்ணாடி, சீப்பு, எலுமிச்சை, விரலி மஞ்சள, கூறைச் சேலை ரவிக்கை முதலியன வைத்திருப்பர்.

## பரியம் செலுத்துதல்:

பெண்ணுக்குப் பரியமாக நடப்புப்படி மாப்பிள்ளை வீட்டார் குறித்த பணத்தை மஞ்சள் துணியிலே முடிந்து சபையில் வைப்பர்

நிச்சயம் முடிந்த பின் வெற்றிலைபாக்கு உரிய முறைக் காரர்களுக்கு வழங்கப்படும்.

## பெண்ணெடுத்தல்:

மணப் பெண்ணின் தாய்மாமனுக்கு அழைப்பு விடுத்து, மஞ்சள்தடவிய புதுவேட்டிதுண்டு கொடுத்து, பணமுடிப்பு கொடுத்து மாலை, சந்தனம் அணிந்து பாலும் பழமும் கொடுப்பர். பெண்ணை மணமேடைக்குத் தூக்கிச்செல்லும் பழக்கம் மாறி இன்று அழைத்து செல்கின்றனர், முறை மாமன் மணப் பெண்ணுக்கு நெற்றியில் தங்கப்பட்டம் கட்டி மாலை அணிவிப்பார்.

## தாலிகட்டல்:

வாளுக்கு மாலை சூட்டி மண வாழைப் பந்தலிலே மேள தாளத்துடன் மாப்பிள்ளைத் தோழன் கைபிடிக்க மணமகன் மணவறையை வலமாகச்சுற்றி வந்து கிழக்கு திசை நோக்கி இருக்க வைப்பர். பின்பு மணமகளை மணமகளின் தோழி மண மேடைக்கு அழைத்துவருவர். தட்டத்தில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, பூக்கள், எலுமிச்சை போன்றவை நிறைந்திருக்க பிராமணர் ஓம குண்டம் வளர்த்தி தாலி அதன்மீது வைக்கப்படும். வேதசாத்திரம் ஓதுவர். கற்பூரம் ஊதுபத்தி சாம்பிராணி மணம் கமலும் மண மேடையில் வேட்டுவர்குல முதியோர் அல்லது அருமைக்காரர் வேட்டுவரின் வீரமிகு குலப்பாடலைப் பாடுவர்.

வடக்கே வளநாடு வாளகிரிப்பட்டிணம் காஞ்சி காளகத்தி உடுப்பூர் பட்டிணம்திருக் கச்சிராசன், திருவேங்கடராசன், காவலிவ ராசன், பூவலி ராசன், மாவலிவன் ராசன் இவர்கள் ஐந்து ராசாக்களும் சேர்ந்து, சேரன், சோழன், பாண்டியன் மூவராசாக்களையும் பிடித்து சிறைக்கூடத்தில் அடைத்த உத்தண்டன், வீரபத்திரன், பரசுராமன் எல்லை அழித்து எதிர்படை வென்று வேட்டுவ ராசாக்களுடைய காணி பூமி இவ்வளவு என்று கல்வெட்டு சாசனம்.

“வடக்கே வாளை ஆற்றுக்கும் கிழக்கே காஞ்சி காளகத்திக்கும் தெற்கே மதுரை கோட்டை தலை வாசலுக்கும் மேற்கே வெள்ளியங்கிரி மலைக்கும் நாலு சமுத்தாணமும் கூடி ஆண்டுயிருக்கும் நாளையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்யாணம் செய்ய வேண்டுமென்று ஏழு பிராமணரை அழைத்து வேதசாஸ்திரம் ஓதி பதினாரு பந்தக்கால் நட்டி பச்சைப் பந்தல் போட்டு பட்டாலை மேக்கட்டி பாலைக்கால் தோரணம் இட்டு

பேக்கரும்பு கொண்டு வந்து பிரமனை சோடித்து வாளுக்கு மாலைசூட்டி மண வாழைப் பந்தலிலே வெள்ளிக் குடையும் தங்கத்தினால் பூனூலும் போட்ட பெரியோர்களான போர்க்கு வீமர் ராசா பொறுமைக்கு தர்மராசா சொல்லுக்கு அரிச்சந்திரர் ஆன கொடைக்கு கர்ணன் ஆன வில்லுக்கு விசயர் ஆன சாத்திரத்திற்கு சகாதேவர் ஆன எச்சிலிட்ட முக்தி பெற்ற கண்ணப்ப கோத்திரம் குருகுல வம்சமாகிய..........” இன்ன குலத்தின் பிறந்த இந்த ஆண்மகனுக்கும் இன்ன குலத்தில் பிறந்த இந்த பெண்மகளுக்கும் இருவீட்டுப் பெரியோர்களின் சம்மதத்துடன் மணம் முடித்து வைக்கிறேன் என்று கூறி நாடாளும் வேட்டுவர்களும், ஊராளும் வேட்டுவர்களும் உற்றார் உறவினர் புடைசூழ அமர்ந்திருக்கும் மணப்பந்தலிலே சிறப்பு செய்வர்.

மணமகன், மணமகள் வீட்டார் மணமக்களைக் காக்கும் படி தம் முன்னோர்களை வேண்டுவர். அனைவருக்கும் மஞ்சள் தோய்ந்த அரிசி மலரோடு வழங்கப்படும். மங்கல இசை முழங்க கெட்டி மேளம் கொட்ட மணமகள் கழுத்தில் மணமகன் தாலியை அணிவிப்பான். கெட்டி மேள முழகத்தில் அனைவரும் மஞ்சள் அரிசையை மலரோடு தூவி மணமக்களை வாழ்த்துவர்.

### தாரை வார்த்தல்:

மாப்பிள்ளையின் வலது கை மேல் மணப்பெண்ணின் இடதுகையை வைத்து ஒரு பணம் வைத்து மணப் பெண்ணின் பெற்றோர் தன் சுற்றத்தினர் சூழ தன்கையால் தண்ணீர் தாரைவார்த்து கொடுப்பர். பெண் வீட்டார் **‘கொடுத்தோம்’** என்று சொல்வர். மாப்பிள்ளை வீட்டார் **‘கொண்டோம்’** என்று சொல்வர்.

### பாத பூசை:

மணமகனும் மணமகளும் தங்கள் பெற்றோர்களின் பாதங்களை நீர் தெளித்து கழுவி வீபூதி, சந்தனம் குங்குமம் இட்டு வழிபடுவர். பெற்றோர்களின் வாழ்த்துகளையும் மற்றோர்களின் வாழ்த்துகளையும் பெறுவர்.

### அம்மி மிதித்தல்:

அம்மி மிதித்து அருந்ததிகாட்டுவர் அகலிகை பிற ஆடவனை நாடியதால் கல்லானாள் அருந்ததி கற்பாற்றலால் வான்புகழ் பெற்றாள்.

**"அம்கண் உலகின் அருந்ததி அன்னானை" - (சிலம்பு. மங். 63)**

**"வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்"**
**- (கலித்தொகை 2.21)**

அருந்ததியை **'வடமீன்'** என்பர்.

அம்மியை சுத்தமாக நீர் விட்டு கழுவி சந்தனம் குங்குமம் இட்டு வைத்திருப்பர். மணப்பெண்ணை தன் வலது பாதக் கட்டை விரலை அம்மியில் மிதித்து எப்பொழுதும் வடக்கிலேயே இருக்கும் துருவநட்சத் திரத்தைப் பார்க்கச்சொல்வர்.

அம்மி மிதித்தலும் அருந்ததி காட்டலும் மணப் பெண்ணின் கற்பின் முக்கியத்தை உணர்த்துவது ஆகும்.

## நலங்கிடல்:

வெற்றிலையில் நீர்விட்டு பிசைந்த குங்குமத்தை மாப்பிள்ளை மணப்பெண்ணுக்கும், மணப்பெண் மாப்பிள்ளைக்கும் நெற்றியில் வைத்துக் கொள்வர்.

## விரல் கோர்வை:

கங்கணத்தை அகற்றியபின் மணமகனது வலதுகைச் சுண்டு விரலையும், மணமகளது இடதுகைச் சுண்டு விரலையும் இணைத்து இருவர் கையையும்பட்டுத் துணியால் சுற்றி மண அறை மேடையைச் சுற்றி வலம் வரச செய்வர். சுண்டு விரல் இதய நாடியின் ஆளுமை பெற்றுள்ளதால் இரு இதயங்களையும் இணைக்கச் சுண்டு விரலால் இணைக்கின்றனர்.

## திருமணவிழா மொய்க்களரி:

திருமண விழாவிற்கு வந்துள்ள அனைவருக்கும் விருந்து அளிக்கப்படும். திருமணத்திற்கு வந்தவர்கள் மொய்ப்பணம் வைக்கும் பழக்கம் தற்பொழுது அரிதாகிவிட்டது. பாத அணி அணிதல்: திருமணநாளில் புதுமணத் தம்பதிகளுக்கு மாதிகள் தான் செய்து வந்த மிதியடிகளை வாசலில் அணிவிப்பர்.

## பந்தற் செலவு:

பதினென் குடிகளில் திருமணத்திற்கு உதவி செய்தவர்களுக்கு அவரவர்களுக்கு நாட்டு நடைப்புப்படி சன்மானம் வழங்கப்படும். வண்ணான் மணவறை அலங்காரம், நடைமாத்து விரித்தல், பந்தம் பிடித்தல் போன்ற பணிகள் செய்தமைக்கும் நாவிதன் முகவேலை

மற்றும் கல்யாணசீர் செய்தமைக்கும், குயவன் மண்பாண்டங்கள் அளித்தமைக்கும், குறவன் கூடை, முறம், பேழை போன்ற பொருட்கள் கொடுத்தமைக்கும் மற்றும் மேலத்தான், பூக்காரன பண்டாரம், தட்டான், கொல்லன், செக்கான் ஆகியவர்களுக்கும் பந்தல் செலவில் பணம் அளிக்கப்படும்.

வேட்டுவர் தம் பதினென் குடிகளைத் தங்களுடைய கோயில் விழாக்களிலும் தங்களுடைய ஒவ்வொரு நன்மை தீமைகளிலும் பங்குகொள்ளச் செய்து ஆதரிததனர்.

### சம்பந்தம் கலக்கல்:

மணம்முடிந்த மறுநாள் பெண்வீட்டார் சுற்றத்துடன் வந்து மாப்பிள்ளை வீட்டில் விருந்துண்டு மணமக்களை தம்மோடு அழைத்துச் செல்வதை சம்பந்தம் கலக்குதல் என்பர்.

### பெண் எடுத்த விருந்து:

மணமக்களை அழைத்துச் சென்றபின்பெண் எடுத்த மாமன் மார்களுக்கு விருந்துவைப்பர். மாப்பிள்ளைக்கும் பெண் வீட்டிலும், பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டிலும் எண்ணெய் தேய்ப்பு நடை பெறும். எண்ணெய் தேய்ப்பில் வேட்டுவ நாவிதனும், வண்ணாணும் பங்கு பெறுவார்கள். மாங்கல்ய நூலணிதல்

### (உட்கழுத்து சரடு):

சுமங்கலிப் பெண்கள் உட்கழுத்து சரடு இல்லாமல் இருக்கமாட்டார்கள். முப்பரி நூலால் செய்த நூலணியை மஞ்சளில் தோய்த்து கழுத்தில் அணிவர்.

> **“மழை பட்டன்ன மணன் மலிபந்தர்**
> **இழையணி சிறப்பின் பெயர் விருப்பு ஆற்றி”**
> **- (அகம். 136 - 16, 17)**

இழையணி என்பது நூலணி ஆகும். உட்கழுத்து சரடு கட்டும் பழக்கம் சங்க காலந்தொட்டே இருந்திருக்கிறது. பொங்கல் வைத்து விரதம் இருந்து மணமகன் மணமகள் கழுத்தில் மூன்று முடிச்சிட்டு அணிவிப்பான். ஒவ்வொரு மார்கழி திருவாதிரை நோன்பில் விரதம் இருந்து இந்தநூலை மாற்றிக்கொள்வர்.

27 நட்சதிரங்களில் திரு என்ற சிறப்புப் பெயருடையது திருவாதிரை, திரு ஓணம் மட்டும்தான். திருவாதிரை நட்சத்திரத்தில் தான் சினம் மிகு சிவன் எனும், வேட்டுவமன்னனும்,

திருஒணம் நட்சத்திரத்தில் பெருமாள் என்னும் வேட்டுவ மன்னனும் பிறந்தார்கள். சேரமன்னர்கள் பிற்காலங்களில் பெருமாள் என்ற பட்டதுடன் சேரநாட்டை ஆண்டனர். எனவேதான் சேரநாடாம் கேரளத்தில் ஓணம் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

திருவனந்தபுரம் பத்மநாம சுவாமி கோவிலின் வடக்கு வாசலுக்கு அருகில் ஒருகிலோ மீட்டர் தொலைவில் "கண்டேஸ்வரம் சிவாலயம்" உள்ளது. இத்தலத்து "ஈசன் திருவாதிரையன்று புலித்தோல் போர்த்தி வில்லும் அம்புமாக வேட்டுவர் கோலத்தில் காட்சி தருகிறார்". திருவனந்தபுரம் மற்றும் அன்றி அனைத்து சிவன் கோயிலிலும் திருவாதிரை நட்சத்திரத்தன்று வேட்டுவக் கோலத்தில்தான் ஈசன் காட்சி தருகிறார்.

**"சேர, சோழ, பாண்டிய அரசுகள் தோன்றுவதற்கு முன்பிருந்தே தென்னகத்தில் வில்லுடன் ஆட்சி செய்த வில் வேட்டுவனே ஆதிசிவன்"** ஆவான்.

**"தென்னாடுடைய சிவனே போற்றி!**
**என்நாட்ட வருக்கும் இறைவா போற்றி!!"**

தமிழகத்தில் திருமுருகன் பூண்டி, புளியம்பட்டி (புலியன்பட்டி), பெரிய கொமரபாளையம் போன்ற பல சிவன் கோயில்களில் வில் அம்பு சின்னத்துடன் சிவலிங்கம் அமைந்துள்ளது.

கட்டி முதலியார்களைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் வில்சன் என்ற ஆங்கில அறிஞர். கொங்கு மண்டலம் சேர,சோழ, பாண்டியர் காலத்திற்குப் பின்னாளும் வேட்டுவப் பாளையகாரர் களால் சீரும் சிறப்புடன் ஆளப்பட்டு வந்தது எனவும் அவர்களே சங்ககிரி, சரம்ப்பள்யில் தென்மனை, காவேரிபுரம், அந்தியூர் போன்ற இடங்களில் கோட்டைகள் கட்டிக்கொண்டு ஆண்டனர் என்று கூறியுள்ளார். (Wilson.P425No.XVIII)

சரம்பள்ளியில் தென்மனை, காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் வேட்டுவர்கள் கோட்டை இருந்ததாக பாளையப் பட்டுகளின் வரலாறு (தொகுதி-1 பக்கம்-1ல் கூறுகிறது.தொல் காப்பியருக்குமுன்பே ஆரியர்கள் தமிழ்கத்தில் குடியேறி விட்டனர். தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட வேண்டிய அளவுக்குச் செல்வாக்குப் பெற்றும் இருந்தனர்.

**“அன்னாய் வாழ் வேண்டு, அன்னை நம்மூர்**
**பார்ப்பணக் குறுமகன் போல தாமும்**
**குடுமித்தலைய மன்ற**
**நெடுமலை நாடன் உளர்ந்த மாவே”       - (அய்ங்குறு நூறு)**

“அன்னையே! நான் சொல்வதைக் கேள். நம் ஊருக்குள்ளே, நெடியமலையை உடைய குறிஞ்சித் தலைவனான நாடாளும் வேட்டுவ மன்னன் வருகிற தேரிலே பூட்டப்பட்டுள்ள குதிரைகள் எல்லாம், நம் ஊரில் வாழும் பார்பனச் சிறுவர்களைப் போல முன் குடுமியைப் பெற்றுள்ளன” என்றுஅய்ங்குறு நூறு கூறுகிறது.

கல்வெட்டுகளில் வேளிர், வேளாண் என்ற வார்த்தைகள் சாதியைக் குறிக்காது. **‘வேளிர்’** என்றாள் குறு நில மன்னன் என்று பொருள்படும். **‘வேளண்’** என்ற வார்த்தை நன்கொடையாளர் களையும் அரசியல் அதிகாரிகளையும் குறிக்கும். உதாரணமாக **“வேட்டுவரில் வேளாண் மருதங்க வேளாண்”** என்ற கல்வெட்டு வாசகத்தில் வேளாண் என்ற சொல் அரசியல் அதிகாரியையே குறிக்கும் அல்லது நன் கொடையாளரைக் குறிக்கும்.

## மன்றாடி :

மன்றாடி என்றால் ஊர் மன்றத்தில் (மந்தையில்) உள்ள ஆடுமாடுகளை) **“பசு மாடுகள் மேய்ப்பவன்” (SHEPHERD)** என்பது பொருள். (கொங்கு களஞ்சியம் இரண்டாம் தொகுதி ம. பசுவலிங்கம்)

## மண்ணாடி :

மண்ணாடி என்றால் மண்ணுக்கு உரிமையுடையவர்கள் அல்லது அதிகாரம் படைத்தவர்கள் என்று அர்த்தம்.

## குன்னாடி (குன்னுவர்):

குன்னாடி என்ற சொல் குன்றுகளை (குன்னுகளை) ஆட்சி செய்தவர்கள் என்று பொருள்படும். குன்றத்தூர்களை (குன்னத்தூர்களை) ஆட்சி செய்தவர்களைக் குறிக்கும். குறிப்பாக குன்னாடி வேட்டுவர்களை குறிக்கும். இன்று குன்னத்தூர் என்றும் குன்றத்தூர் என்பதும் குன்னாடி (குன்றாடி), குன்னி என்று அழைக்கப்படும் குன்ன வேட்டுவர்களின் ஊர்கள் ஆகும்.

## பட்டக்காரர், பாளையக்காரர், ஊராளி:

பட்டக்காரர் என்பது அந்தந்த சாதி வழக்குகளை தீர்த்துவைப்பவர். சாதி கட்டுப்பாட்டுக்களை கவனிப்பவர் ஆகும். பட்டக்காரன் என்பவன் நாட்டுக்கு அதிகாரி அல்ல. ஒவ்வொரு சாதியிலும் நாட்டுக்கு ஒரு சாதிப்பட்டக்காரர் இருந்தார். அவர்கள். சாதிகட்டுப்பாடுகளையும், சாதி வழக்குகளையும் தீர்வளித்துக் கொள்வர். எனவே பட்டக்காரர் என்பது பாளையக்காரர் அல்ல கொங்கில் நாடாண்ட பாளையக்காரர்களாக இருந்த வேட்டுவப் பாளையக்காரர்கள் சிலர் ஆங்கிலேயர் ஆட்சியில் ஜமிந்தார்களாக இருந்தனர். கொங்கு நாட்டில் ஊரை ஆளும் பொறுப்பில் இருந்த ஊராளி வேட்டுவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கிராம அதிகாரி என்று வழங்கப்பட்டு சுதந்திர பூமியில் பரம்பரை மணியகாரர்களாக இருந்தனர்.

செந்நீரால் (இரத்தத்தால்) எழுதப்பட்ட வேட்டுவர் வீர வரலாறுகளை வெறும் பேனாமை கொண்டு போலி வரலாற்று ஆசிரியர்களால் அழிக்க முடியாது. ஒரு இனத்தின் வரலாறுகளை அழித்தாலே போதும் ஆயுதம் இல்லாமலேயே அந்த இனத்தை அழித்துவிடலாம் என்ற எண்ணத்தில் எழுதும் பொய்க்கதைகளும் போலி ஆவணங்களும் ஒருபோதும் உண்மை வரலாறு ஆகாது.

## வேட்டுவரும் பதினென் குடிகளும்:

**“தொண்டை மண்டல வரிசை மூவாறு**
**குடிமக்கள் சுருதிநாள் முதலாகவே**
**துங்கமிகு நாவிதன், குயவன், வண்ணான், ஓலை**
**சொன்னபடி எழுதும் ஒச்சன்**
**கண்ட கம்மாளர் வகை ஐவர், வாணியர் மூவர்**
**கந்தமலர் மாலைக்காரர்**
**கலைமீது சாரட்டோட்டும் பாணன், தலைக்கடைக்**
**காவல்புரி பள்ளி, வளையன்**
**பண்டு முதல் ஊரான், மறிக்கும் இடையன், விருது**
**பல கூறு வீர முடியான்**
**பதினென் குடிமக்கள் அனைவரும் வேட்டுவர்**
**பணி செய்து பல முறைமையும்**
**கொண்டு பரிவட்டமும் கட்டியே வருவார்**
**இக்குவலய மதிக்க வே தான்.**

**கூரறிய கச்சிவாழ் ஏகாம்பரர் ஆலயக்**
**குமதத்தில் இட்ட லிபியே" (லிபி என்றால் எழுத்து)**

இறந்தகால உண்மைகளே வரலாறு ஆகும்.

**"பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால்**
**மெய் போலுமே மெய் போலுமே**
**மெய்யுடை யொருவன் சொல மாட்டாமையால்**
**பொய் போலுமே பொய் போலுமே"**
**- (அதிவீர ராம பாண்டியன்)**

**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!!**

அயலூர் பச்சைநாயகி அம்மன் மற்றும் கூத்தாண்டை மாரியம்மன்.

## அயலூரில் 14 – ஆம் நூற்றாண்டு கல்வெட்டு :

கோபியருகே பல நூற்றாண்டுக்கு முன்பு வணிக நகராக சிறந்து விளங்கிய அயிலாபுரிபட்டணத்தில் முகலாயர் படையெடுப்பால் சிதறிய நிலையில் காணப்படும் கோயில்களும், கல்வெட்டுகளும் பல அரிய வரலாற்று தகவல்களை வெளிப்படுத்து கின்றன. கி.பி. 14 - ஆம் நூற்றாண்டில் முகமதிய, ஆங்கிலேய படையெடுப்பில் தரை கோட்டைகள் பல அழிக்கப்பட்டன. கோட்டைகள் சூழ்ந்த புரிகளில் மைலாபுரி, கந்தமாபுரி அயலாபுரிபட்டினங்களின் அழிவுகளில் எஞ்சிய கோயில் களும், நடுகற் சிற்பங்களும் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. இதுகுறித்து கல்வெட்டு ஆராய்ச்சியாளரும், பேராசிரியருமான அரங்கசாமி கூறியதாவது, கோபி, கலிங்கியம், அவ்வையார் பாளையம் சாலையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வணிகத்தில் வரலாற்று பெருமை கொண்ட நகரமாக அயிலாபுரிபட்டினம் இருந்துள்ளது, பின்னர் முகமதிய, ஆங்கிலேய படையெடுப்பில் இந்நகரம் அழிந்தது. பழம்பெருமை மிக்க கோவில்களும் சண்டையால் சிதையுண்டன. அயலாபுரிபட்டினம் என்பது தற்போது அயலூர் கிராமப் பகுதியை கொண்டதாக விளங்குகிறது. கிராமத்தில் பெருமாள், விநாயகர், பச்சை நாயகி அம்மன், சிதையுண்ட சிவன், கூத்தாண்டை மாரியம்மன், மாகாளியம்மன், வீரமாத்தி கோயில், நாக சிற்பம், நடு கற்கள், வேதகிடை, தேர் இறங்கிய தெப்பக்குளம், சிலம்பாயி மற்றும் சித்தர் கோயில்கள் சிதைந்த நிலையில் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இங்குள்ள பழம்பெரும் பெருமாள் கோயிலில் காளிங்க நர்த்தனம் புரியும் கண்ணன், ஆஞ்சநேயர் சிலை சிதைந்த நிலையில் இன்றும் காட்சியளிக்கிறது. மேலும் பழமையும், பெருமையும் வாய்ந்த இங்குள்ள விநாயகர் சிலை அதன் சிறப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது. இங்கு பராமரிப்பின்றி சிதலமடைந்த நிலையில் உள்ள **பச்சைநாயகி அம்மன் கோயில்** பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கோயிலின் முன் கருட கம்பம் 16 பட்டைகள் கொண்டதாகவும், அதன் அடிப்பகுதியில் சிவன், சூரியன், சந்திரன் வட்டங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கோயில் நுழைவு வாயிலில் பூந்துறை, அயலூர், காங்கேய நாட்டைச் சேர்ந்த மூன்று வீரப்பத்தினிகள் ஒரே நேரத்தில் தீக்குளித்த சம்பவத்தை நினைவுறுத்தும் வகையில், ஒரே கல்லில் மூன்று பெண்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கோயில் மகாமண்டபம் எண்கோண வடிவிலும், இங்குள்ள **துர்க்கையம்மன் சிலை காலால் அசுரனை மிதித்து கொண்டும், கையில் சூலாயுதம் ஏந்தியும், காலில் சிலம்புடன் நெருப்பு மகுடத்துடன் அமைக்கப்பட்டிருப்பது சிறப்புடையதாகும்.** கோயிலின் மேற்கே பழம் பெறும் சிவன் கோயில் இருந்ததற்கான தடயங்களும், முகமதியர் படையெடுப்பில் அது முற்றிலும் சிதைந்து, தற்போது அங்கு சிவலிங்கம் மற்றும் நந்தி ஊர்வ சிலைகள் மட்டுமே மிஞ்சியுள்ளன. அப்பகுதி வேதகிடை என்று அழைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. விஜயநகர் ஆட்சியின்போது ஒவ்வொரு சிவன் கோயிலிலும் வேதம் ஓத கிடை அமைத்து மானியம் வழங்கப்பட்டதால், அதுபோல் இங்கும் ஒரு கிடை இருந்ததற்கான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. சிவன் கோயில் அருகில் பள்ளமான நிலைப்பகுதியில், தேர் இறங்கி மூழ்கிப்போன தெப்பக்குளம் உள்ளதாகவும் வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கி. பி. 14 - ஆம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட நீண்ட சதுர வடிவான கல் ஒன்றும் கண்டறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் ஒரு பகுதியில் கர்னல் மொர்கன்சி தென்னிந்திய கோயில் சாசனத் தொகுப்பில் அயலூர் என்ற தலைப்பில் சேர்த்துள்ளார். இக்கல்வெட்டின் ஒரு பகுதியில் சூரியன், சந்திரன், சிவலிங்கம், கோடுகள், குத்துவிளக்குகள் பொறிக்கப்பட்டுள்ளன. மறுபக்கம் போர் வீரனைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அயலூருக்கு வடக்கே சித்தர்கள் வாழ்ந்த குகை இருந்தது

134 || வடகரை நாட்டு வரலாறு – ஆய்வு நூல்

கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்ட செய்திகளால் **கர்னல் மொர்கன்சி** காலத்தில் அயலூர் எனும் அயலாபுரி பட்டினம் வணிக நகரமாக விளங்கியது புலனாகிறது.

அயலூரில் தற்போது சிதைந்த நிலையில் காணப்படும் கோயில்கள் பராமரிக்கப்பட வேண்டிய கலைப் பொக்கிஷங் களாகும். அங்கு காணப்படும் கல்வெட்டு மற்றும் சிலைகளும் பராமரித்து தொல்பொருள் துறையினர் முறையான ஆய்வு நடத்தினால் நம் முன்னோர்கள் பற்றிய உண்மையான வரலாறு நமக்கு கிடைக்கும் என்பது நிச்சயம்.

அயலூர் பச்சைநாயகி அம்மன் திருக்கோயில் பணி கடந்த கால பார்வை... பச்சைநாயகி அம்மன் அருள் ஆசியுடன்...



**அருள்மிகு பச்சைநாயகி அம்மன் திருக்கோயில், அயலூர்.**

பச்சை நாயகி அம்மன் பீச்சகுல வேட்டுவர் சமுதாயம் சார்ந்த அயலூர் பஞ்சாயத்தில் உள்ள பல கிராமங்களில் வாழ்ந்த மக்கள் மற்றும் கலிங்கியம், அயலூர், காவலிப்பாளையம் பஞ்சாயத்து அனைத்து கிராமத்தில் உள்ள பீச்ச குல மக்கள், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோவை மாவட்டத்தில் பல ஊர்களில் வாழ்ந்த பீச்ச குலவேட்டுவ கவுண்டர்கள் தங்களின் குலதெய்வமாக பல தலைமுறைகளாக வழிபட்டு வந்தனர்.

பழைய கோயில் முன் பிரகாரம் முன் மண்டபம், அர்த்தமண்டபம், கருவறை மேல் விமானம் தாங்கிய கோபுரம் கொண்டது, முன் தூபி, கருப்புராயன் கோயில் நான்கு புற சுற்று சுவர் உள் மண்டபம் கொண்டது.

1995 - 1998 ஆண்டுகளில் தொன்மையான அருங்கோன வடிவ முன் மண்டபம் சிதலமடைந்த நிலையில் மரத்தால் முட்டுக்கொடுத்து வழிபட்டு வந்தார்கள். தென்புற மற்றும் கிழ புற சுற்று சுவர் சிதலமடைந்ததால் அயலூர், காவிலிப்பாளையம் பஞ்சாயத்து உட்பட பீச்ச குல மக்கள் அதனை தற்காலிகமாக செப்பனிட்டும், புதிதாக கருப்புராயன் கோயிலும் காவிலிபாளையம் பீச்சகுல மக்கள் உருவாக்கி, சுற்றுவட்டார நமது பீச்சகுல வேட்டுவ மக்கள் செப்பனிட்டும் வழிபட்டு வந்தார்கள்.

1999 - ஆம் ஆண்டு நமது பீச்சகுல முன்னோடிகள் சேர்ந்து மூன்று ஆலோசனைக் கூட்டம் நடந்தது. நமது குலதெய்வம் அருள்மிகு பச்சை நாயகி அம்மன் திருக்கோவிலை திருப்பணி செய்ய முடிவு செய்யப்பட்டது. (முன்பு சுமார் 1969 - 1970 ஆண்டு காலத்தில் அயலூர் வெள்ளே கவுண்டன்புதூர் பீச்சகுல நிலக்கிழார் சின்னாரி கவுண்டர் (மணி பாரதியின் தாத்தா) மற்றும் பீச்சகுல வேட்டுவ மக்கள் அனைவரும் சேர்ந்து திருப்பணி செய்ய முடிவு செய்து மஞ்ச முடிப்பு செய்யப்பட்டது. குடும்பச் சூழல் காரணமாக அவர் காவலிபாளையம் இடம் பெயர்ந்ததால் திருப்பணி நடைபெற வில்லை) மீண்டும் 1999 - ஆம் ஆண்டு இறுதியில் ஒரு அமாவாசை அன்று நம் கோயில் சுத்தம் செய்ய கோவில் நில அளவீடு காரணமாக சுற்றியுள்ள நிலத்தார்களால் தடுத்து நிறுத்தப்பட்டது, நான்கு மாதம் கடும் முயற்சி செய்து இக்கோயில் சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர், பீச்சகுல மக்கள் சிலர் சேர்ந்து அயலூர் பீச்சகுல வேட்டுவ கவுண்டர் கோயில் இடம் அளக்கப்பட்டு நான்கு புறம் முதன் முதலில் அத்துக்கல் நடப்பட்டு கோயில் இடம் உறுதி செய்யப்பட்டது. பிறகு அன்றைய ஆதரவு பொருளாதார சூழ்நிலை குறித்து ஆய்வு செய்து சிதிலமடைந்த ஆபத்தான நிலையில் இருந்த முன் மண்டபத்தை மட்டும் அகற்றிவிட்டு புதிதாக முன் மண்டபம் மட்டும் அமைக்க முடிவு செய்யப்பட்டது. 26.03.2010 அனைத்து பீச்சகுல மக்கள் பங்களிப்புடன் முன்மண்டபம் பணி துவக்கப்பட்டு 2013-ஆம் ஆண்டில் முடிவுபெற்றது. வழிபாடும் தடைபெறாமல் திருப்பணியும் நடைபெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டது.

மேற்கண்ட காலகட்டத்தில் அதிகமாக பீச்சகுல மக்கள் அமாவாசை பூஜை தினங்களில் வரவும், திருப்பணிகளில் பங்கு கொண்டு ஆர்வமாக தன் பங்களிப்புகளை செய்தனர். பிறகு டிசம்பர் 2016-ஆம் ஆண்டு பெருவாரியான பீச்சகுல மக்களின்

ஆலோசனையின் முடிவில் அறநிலையத்துறைக்கு பீச்ச குல நபர்கள் எழுத்து மூலமாக தெரிவித்து 07.11.2016 அன்று **'பாலாலயம்'** செய்து அறநிலைத்துறை அதிகாரிகள் முன்னிலையில் மூல சிலைகள் பாதுகாப்பு செய்யபட்டு பழைய கோயில் ஆகம விதிகளின்படி முன்மண்டபம் மேல் மூன்று புறமும் சிற்பம், கோபுரத்தின் கீழ் வர்க்கவேலை நிலவு மற்றும் வேலைப்பாடுகள் கொண்ட திருக்கதவு முன் மண்டபத்தில் சிற்ப வேலை, கண்ணப்ப நாயனார் சிலை என மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டு கோயில் கோபுர வேலை 07.02.2020 முடிக்கப்பட்டது.

கோபுரத்தில் மகா நாசி இரண்டாவது நிலை, மூன்றாவது நிலை, சுற்றுவர்க்க வேலை, மூன்று புறமும் சால கோபுரம் ஆர்ச், கோபுரம் தாங்கிகள் 16, அம்மன் 8, கந்தர்வ குழந்தை 4, கோடி பூதம் 4, சிம்ம வாகனம் 8, முன் மண்டபத்தில் முன்புற ஆர்ச்சில் 8 கைகள் கொண்ட பச்சைநாயகி அம்மன், விநாயகர், முருகன், மேற்கு முருகர் மயில் துவார சக்தி... என கோயில் இலக்கண படியும் ஆகம விதிகளின் படியும் குலதெய்வத்தார்கள் பேராதரவுடன் தொடர்ந்து திருப்பணிகள் முடிக்கப்பட்டது. இந்து அறநிலைத்துறை அனுமதி பெற்று கும்பாபிஷேகம் 15.11 2021 அன்று முடிவு செய்யப்பட்டது. பல மாவட்டத்தில் உள்ள பீச்சகுல மக்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் பக்தகோடிகளின் ஆதரவுடன் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இந்து அறநிலையத்துறை துணை ஆணையாளர் மற்றும் அதிகாரிகளும் இக்கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு வெகுவாக பாராட்டினர். பல மாவட்டங்களில் இருந்தும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கோபி பகுதியில் நமது வேட்டுவ இன மக்களின் முக்கிய திருக்கோவிலாகவும் பீச்சகுல வேட்டுவ கவுண்டர்களின் குலதெய்வமாகவும் அமையப் பட்டுள்ளது. தற்போது இந்து அறநிலையத்துறை அறிவிப்பின் பேரில் கோபியை சார்ந்த திருமதி ம.பரிமளாதேவி அவர்கள் கோவில் அறங்காவலர் பொறுப்பு ஏற்று பழைமையான கோவிலின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை அனைவரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறார். (மணிபாரதி, வழக்கறிஞர், காபி.)

அந்தியூர் வடகரை நாட்டு அடசப்பாளையம் சந்திரசேகரன் பட்டயத்தில் பட்லூர் சிற்றூர் மன்னனாக பீச்ச வேட்டுவர் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.பீச்ச வேட்டுவரில் பட்லூர் பீச்ச வேட்டுவர், அயலூர் பீச்ச வேட்டுவர் என இரு வகையினர்

உள்ளனர். பட்லூரில் இன்றும் அருள்மிகு வாகிசுவரர், சௌந்தர நாயகியுடன் காட்சியளிக்கிறார். பொதுவாக பீச்ச வேட்டுவார்கள் காவிலிபாளையம், பெரிய குமாரபாளையம், மீனம்பாளையம், நாதகவுண்டன் புதூர், அய்யம்பாளையம், கோப்பம்பாளையம், சுங்ககாரன் பாளையம், சின்னாங்குட்டை, கண்டிசாலை, காளி செட்டிபாளையம், கவுந்தப்பாடி, கரட்டூர் மற்றும் பரவலாக நான்குக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான ஊர்களில் இன்றும் இப்பீச்ச குல மக்கள் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

## ஜம்பை கல்வெட்டு:

திருக்கோவிலூர் வட்டத்தில் திருக்கோவிலூரிலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஜம்பை என்ற ஊரின் கிழக்கே ஏரியை அடுத்த சிறுமலையில் உள்ள பாறையில் மிகப்பெரிய எழுத்துக்களில் தமிழ் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. 30 அடி தூரத்தில் இருந்து பார்த்தால் கூட எழுத்துக்கள் தெளிவாகத் தெரிகின்றன. அக்கல்வெட்டு வாசகம் வருமாறு "சதியபுதோ அதியமாந் நெடுமானஞ்சி ஈந்தபாழி" சத்தியபுத்திரர்கள்: அசோகன் காலத்து கல்வெட்டு சோழ புத்திரா, பாண்டிய புத்திரா, கேரள புத்திரா ஆகிய தென்னிந்திய அரச பரம்பரையினரைக் குறிக்கின்றது. சத்திய புத்திரர்கள் என்போர் குடியின் பிரிவுகளான மலையமான் திருமுடிகாரிக் குடி, ஓரிக்குடி, அதியமான் நெடுமான் அஞ்சிக்குடி ஆகியன. அதியன் மட்டுமே சத்தியபுத்திரன் என்று கொள்வது தவறாகும், காரி, ஓரி, அதியன் இவர்கள் சேரர் பெருங்குடியை சேர்ந்தவர்களே, சேரர்கள் வேட்டுவ வர்க்கத்தினரே ஆவர். (திருக்கோவிலூர் வரலாறு. துறை மலையமான், பக்கம் 247 - 248)

சேர, சோழ, பாண்டியர்கள் வேட்டுவ புத்திரவர்க்கத்தினர்: வேட்டுவர்கள் சேரர் புத்திரவர்க்கம், சோழ புத்திரவர்க்கம், பாண்டிய புத்திரவர்க்கம் என்பதை விட சேர, சோழ, பாண்டியர்கள் வேட்டுவபுத்திர வர்க்கத்தினர்கள் என்பதே சரியான ஒன்றாகும். ஏனென்றால் சிறுகுடி, சிற்றரசு ஆகி சிற்றரசுகளின் மேல்தான் பேரரசு அமைந்தது. வேட்டுவர்கள் சேர, சோழ, பாண்டிய நாடுகள் மற்றும் கொங்கு நாடு, தொண்டை நாடு என ஐந்து தமிழகத்தையும் ஆண்டவர்கள். இவர்கள் இந்தியா முழுவதும் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் தங்களது நாகரீகத்தை பரப்பியவர்கள் ஆவர். சேரனுக்கு சோழன் பெண் கொடுப்பதும், பெண் எடுப்பதும்,

பாண்டியர் சேரனுக்குப் பெண் கொடுப்பதும், பெண் எடுப்பதும் வரலாற்றில் பதியப்பட்ட உண்மைகள் ஆகும். மூவேந்தர்களும் வேட்டுவக் குறுநில பெண்களை மணந்ததும் வரலாறு கூறும் உண்மைகளே ஆகும். வேட்டுவ மன்னன் வேள் பாரியின் மகளை மூவேந்தர்களும் பெண் கேட்டனர். சேர வேந்தர்கள் கொங்கு நாட்டில் 'கொங்கர்' எனும் கொங்கு வேட்டுவ குறுநில மன்னர்களின் மகள்களை மணத்தனர். சேரர் அக்னிகுல வேட்டுவர்கள், சோழர் சூரியகுல வேட்டுவர்கள், பாண்டியர் சந்திரகுல வேட்டுவர்கள் ஆவார்கள்.

## சோழர்களும் வேட்டுவர்களும்:

ஆறு சோழ பேரரசர்களை உருவாக்கி சோழர் ஆட்சி காலம் பொற்காலம் என்று உலகம் போற்ற வைத்தவர் செம்பியன் மாதேவி ஆவாள். இவள் மழங்கொங்கு நாட்டு வேட்டுவ இளவரசி ஆவாள். இவள் கண்டராதித்ய சோழனின் மனைவி ஆவாள்.

# மழவர் மகளார் செம்பியன் மாதேவி



ஆறு சோழ பேரரசர்களை உருவாக்கிய வேட்டுவப் பேரரசி செம்பியன் மாதேவின் படிமம்.

## செம்பியன் மாதேவியாரின் கலைப் பணிகள்:

தமிழக வரலாற்றிலும், சைவ சமய வரலாற்றிலும், தமிழகக் கலை வரலாற்றிலும் செம்பியன் மாதேவியாருக்குத் தனிதத்தோர் சிறப்பும் இடமும் உண்டு. சோழ வேந்தன் கண்டராதித்தனின் அரசியான இவர், உத்தம சோழனின் கல்வெட்டில், ஸ்ரீ பராந்தக தேவரான பெரிய சோழன் மகனார் கண்டராதித்த தேவரின் தேவியார் மழப் பெருமானடிகள் மகளார், ஸ்ரீ உத்தம சோழர் தங்களாட்சி செம்பியன் மாதேவியார் என்று பாராட்டப் பெற்றுள்ளார். வேட்டுவர் குலத்தின், பொன் விளக்காகத் திகழும் இப்பெருமாட்டி, கோயில்கள் பல கட்டிய கோமகளாக, செங்கற் கோயில்களைக் கற்றளியாக மாற்றிய மாதரசியாக, 37 கவின் மிகு ஐம்பொன் தெய்வப் படிமங்களை திருக்கோயில்களில் பிரதிட்டை செய்த பெண்ணரசியாக, எண்ணிறந்த சிற்பங்களை எழுந்தருளுவித்த கலையரசியாக, 26 பழைய கல்வெட்டுகளைப் படியெடுத்து, புதுக் கோயில்களில் வெட்டுவித்த வரலாற்றுச் சிற்பியாக, மருமகள்கள் போற்றிய மாமியாராக பராந்தன் 1, கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தர சோழன், ஆதித்தகரிகாலன், உத்தம சோழன், இராசராசன் -

என்னும் ஏழு சோழ மன்னர்கள் காலத்தில் ஏறத்தாழ அறுபதாண்டுகள் கோயில் பணிகள் பல புரிந்து, 80 வயது வரை வாழ்ந்து சிவஞானச் செல்வியாக வரலாற்றில் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பெரும் தகுதி படைத்த இத்தவ மணியார் கோயில் பணிகளைப் பற்றி இங்கே காண்போம்.

நாயகவிச்சி நாயன் சிலம்பி என்னும் வேட்டுவ நங்கை தன் கணவன் காவன் அரையனின் நினைவாகப் பிடாரி கோயில் கட்டியதைப் போன்று, இச்சிவ மணியும் தன் கணவன் கண்டராதித்த சோழனின் நினைவைப் போற்றும் வகையில் திருநல்லத்து மகாதேவர் கோயிலை **'ஸ்ரீ கண்டராதித்தம்'** என்னும் பெயரில் கற்றளியாக்கினார்.

(நாகப்பட்டினம் மாவட்டம், குத்தால வட்டம், கோனேரி ராஜபுரம் உமா மகேசுவரர் கோயில்) இக்கோயிலுக்கு **'ஸ்ரீ கண்டராதித்தம்'** எனும் நந்தவனத்தையும் அமைத்து அதன் பராமரிப்பிற்காக நிலதானமும் அளித்தார். இவர் கட்டிய மற்ற கோவில்கள்.

1. ஆடுதுறையில் திருக்குரங்காடு துறை மகாதேவர் கோவில்.
2. திருக்கோடிகாவலில் திருக்கோட்டீசுவரர் கோயில்.
3. குத்தாலத்தில் சோழீசுவரர் கோயில்.
4. செம்பியன் மாதேவியில் கைலாசநாதசாமி கோயில்.
5. ஆனங்கூரில் அகத்தீசுவரர் கோயில்.
6. திருவாரூரில் அச்சனேஸ்வரர் (திரு அறநெறி ஆழ்வார்) கோயில்.
7. மாயூரத்தில் மயூரநாதேசுவரர் கோயில்.
8. திருவக்கரையில் பரமசுவாமிகள் (சிவலோகம் உடையார்) கோயில்
9. வடதிருமுல்லை வாயலில் மாசிலாமணீஸ்வரர் கோயில்.
10. விருத்தாச்சலத்தில் விருத்தகிரீசுவரர் (பழமலை நாதர்) கோயில்.

மேற்கூறப்பட்ட 10 கோவில்களும் இவரால் கட்டப்பட்டமை குறித்த கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கீழ்க்காணும் மூன்று கோயில்களில் இவர் சில புதுக்கட்டுமானப் பணிகளை

மேற்கொண்டார். புதிய இறைமாடங்களை அமைத்து இறைபடிமங் களை நிறுவியுள்ளார். இவரது கலைப்பணியின் தாக்கம் உள்ளது.

1. திருவேள்விக்குடியில் மணவாளேசுவரர் கோயில் (திருவிளக்குடி, காவிரி வடகரை) இது முதலாம் ஆதித்த சோழன், முதற்பராந்தக சோழன் காலத்தில் கட்டப்பட்டது. அர்த்த மண்டபச்சுவர்களில் அகத்தியர், கணபதி, நடராசர், சண்டீசருக்கு அருகில் பாலிக்கும் மூர்த்தி ஆகிய படிமங்களும் விமானத்தின் மீதுள்ள அர்த்த நாரீசுவரர், அரிகரர் படிமங்கள் செம்பியன் மாதேவி கலைப்பணியில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

2. திருபுறம்பியத்தில் ஆதித்தியேசுவரர் கோயில் முதலாம் ஆதித்தன், முதற்பராந்தகன் காலத்திய கோயில், காளசம்கார மூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி, போன்ற சிற்பங்கள் புதிய பாணியில் உள்ளன.

3. கரந்தை வதிஷ்தேஸ்வரர் கோயில், இக்கோயிலிலும் செம்பியன், மாதேவியின் பாணியிலான பல இறைப் படிமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

சோழர் காலம் செப்புப்படிமக்கலையின் பொற்காலம் குறிப்பாக அதிலும் சிறப்பாக செம்பியன் மாதேவியின் கலைப் பணியில் வடிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் உலகப் புகழ்பெற்றவை. இவர் காலத்திய கலையெழில் மிக்க செப்புத் திருமேனிகளைக் கீழே காணலாம்.

1. திருநல்லம் (கோனேரிராசபுரம்) திருக்கோயிலில் வழிபாட்டில் உள்ள நடராசர் செப்புத் திருமேனி, உலகில் பெரியதும், உலகப் புகழ் பெற்றதுமாகும். இது பார்க்கப் பார்க்கத் திகட்டாத அற்புதக் கலைப் படைப்பு, இங்கு வழிபாட்டில் உள்ள சிவகாமி அன்னை, திரிபுராந்தகர் படிமங்களும் கலையெழில் மிக்கவை. திரிபுரசுந்தரி, கல்யாணசுந்தரர், சிவன், காளி, ரிசபவாகனதேவர், போகேசுவரி - படிமங்களும் கலைச் சிறப்புடன் மிளிர்கின்றன.

2. குத்தாலம் கோயிலில் உள்ள போகேசுவரி, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்.

3. திருவேள்விக்குடி கோயிலில் இடம் பெற்றுள்ள கல்யாணசுந்தரர், போகேஸ்வரி அம்மன்.

4. திருமணஞ்சேரி திருக்கோயிலினுள் உள்ள கணபதி, பிரதோச மூர்த்தி (சிவன் பார்வதி) கல்யாணசுந்தரமூர்த்தி, சந்திரசேகரர், மணிவாசகர்.

5. திருமேயச்சூர் மயூர சினதேசுவரர் கோயிலில் நடராசர் சிவகாமி.

6. விருத்தாச்சலம் பலமழை நாதர் கோயிலில் நிறுவப்பட்டுள்ள போகேசுவரி, நடராசரும் அம்மையும்.

7. திருநரையூர் சித்தேஸ்வரசுவாமி திருக்கோயிலில் அருள் புரியும் நடராசர்.

8. வடதிருமுல்லைவாயில் கோயிலில் உள்ள நடராசர் அம்மை.

9. மாயூரம் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு தற்போது தஞ்சை கலைக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள அழகிய திரிபுராந்தகர்.

10. தஞ்சாவூர் இராசகோபாலசுவாமி கோயிலிலிருந்த (தற்போது தஞ்சை கலைக் கூடத்தில் உள்ள) பேரழகு வாய்ந்த திரிபுராந்தகர்.

11. திருவெண்காடு ஸ்வேதாதரன்யேசுவரர் கோயிலில் உள்ள நடராசர், கணபதி, பெருந்தோட்டம், ஐராவதேசுவரர் கோயிலில் உள்ள நடராசரின் அம்மை.

12. பல்லவனேசுவரம், பல்லவனேசுவரர் திருக்கோயிலில் அருள் புரியும் கணபதி, ரிஷப வாகன தேவர் உமா கந்தர்.

13. திருநாமநல்லூர் திருத்தொண்டீசுவரர் கோயிலில் உள்ள கலையெழில் மிக்க அம்மன்.

14. திருச்சேரை சாரநாதன் திருக்கோயிலில் பக்தர்களுக்கு அருள் மழை பொழியும் நடனமாடும் கிருஷ்ணன், இராமர் - சீதை.

செப்புப்படிமக் கலைக்குப் புத்துயிர் ஊட்டிய இச்சிவமணிக்கு முதல் இராஜேந்திர சோழர் கி.பி 1019 - ல் செம்பியன் மாதேவி எனும் ஊரில் உள்ள திருக்கைலாயமுடையார் திருக்கோயிலில் செப்புப்படிமம் ஒன்றினை நிறுவியுள்ளமை பொருத்தமானதே ஆகும். கலைமணியான இச்சிவமணிக்கு ஆனங்கூர் அகத்தீசுவரர் கோயில், திருநல்லம் திருக்கோயில், ஆடுதுறை ஆபத்சகாயேசுவரர் கோயில், செம்பியன்மாதேவி கைலாசநாதர் கோயில் முதலானவற்றில் படிமங்கள் நிறுவப்பட்டு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இக்கலைச் செல்வியின் நினைவைப் போற்றும் வகையில் அரியலூர் வட்டம், திருமழப்பாடிக்கு மேற்கில் செம்பியன் மாதேவிக்குடி, திருச்செங்கோடு வட்டத்தில் செம்பகமாதேவி, மன்னார்குடி அருகில் செம்பியன் மாதேவி, உளுந்தூர்பேட்டை வட்டத்தில் செம்பியன் மாதேவி, நாகை வட்டத்தில் செம்பியன் மாதேவி முதலான ஊர்கள் நிறுவப்பட்டுள்ளன. இவர் நினைவாக திருக்கோயிலூர் வட்டத்தில் செம்பிமாதேவி எனும் ஊர் அமைக்கப்பட்டது.

இம்மாதரசியின் நினைவாக செம்பியன் மாதேவி வாய்க்கால், செம்பியன்மாதேவி வதி, செம்பியன் மாதேவி சேரி நிறுவப்பட்டதாக உத்தம சோழனின் 15- ஆம் ஆண்டுக் கல்வெட்டு குறிப்பிடு கின்றது. செம்பியன் மாதேவிப் பெருமண்டபம் திருமுக்கூடல் வெங்கடேசப் பெருமாள் கோயிலில் ஒன்றும், செம்பியன்மாதேவி எனும் ஊரில் உள்ள திருக்கைலாயமுடையார் கோயில் (முதலாம் இராசேந்திரன் கட்டியது) ஒன்றும், செம்பியன்மாதேவிப் பேரேரி (திருமழப்பாடி அருகே) செம்பியன் மாதேவி மரக்கால் (மரத்தாலானது. அதில் செம்பியன் மாதேவி எனும் எழுத்து உள்ளது). திருநல்லத்தில் செம்பியன்மாதேவி பெயரில் நந்தவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேலே கண்ட சில எடுத்துக்காட்டுகளால் தமிழகம் முழுவதிலும் கலையரசி செம்பியன் மாதேவியின் பெயரும் புகழும் பொன்றாது நின்று நிலவுகிறது என்பது புலனாகிறது.

கோயிற்கலை வரலாற்றில் கொடுமுடியைத் தொட்ட இக்கலை மாமணி, ஏறத்தாழ இருபது கோவில்களுக்கு அறக்கொடைகள் வழங்கியுள்ளமை பாராட்டுக்குரியது. நிலதானம், விளக்கு தானம், பொன், முத்து, மரகதம், மாணிக்கம் இவற்றால் இழைக்கப்பட்ட அணிகலன்கள் தானம், பொற்பூக்கள் தானம், விலை மதிப்பிட இயலாத மணிமுடி தானம் ஆகியவை இவற்றில் அடங்கும். இவற்றுள் ஒருசிலவற்றை மட்டும் மாதிரியாக இங்கே காண்போம்.

இவரது அறக்கொடைகளுள் முடிமணியாகக் கருதப் பெறுவது திருச்சியருகே உள்ள உய்யக்கொண்டான் திருமலை இறைவர்க்கு அளித்த வைர மணிமுடியே ஆகும். இம்மணிமுடியில் 27 மின்னும் வைரங்களும், 3 இரத்தினக் கற்களும், 700 தரமான முத்துக்களும், 149 கழஞ்சுப் பொன்னும், 190 கழஞ்சு வெள்ளியும் வைத்து இழைக்கப்பட்டிருந்ததாக முதல் இராசராச பெருமன்னனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பதிவு செய்துள்ளது.

இதே மன்னனின் ஆட்சிக்காலத்தில், இவ்வம்மையார் விருத்தாச்சலம் பழமலைநாதர் இறைவர்க்கு 9 கழஞ்சுக்கு மேற்பட்ட எடை கொண்ட விலை மதிப்பிட முடியாத எடுப்பான கிரீடம் ஒன்றை வழங்கினார். 206 1/2 கழஞ்சு வெள்ளிபட்டையில் மூன்று இரத்தினங்கள் பதிக்கப்பட்டு, 36 வைரகற்களுடன் 1998 பெண் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டது இம்மணிமுடி. இத்துடன் மனநிறைவு கொள்ளாத இக்கலைமாமணி இவ்விறைவர்க்கு 5 கழஞ்சு பொன்னால் செய்யப்பட்ட பட்டம், 369 கழஞ்சு வெள்ளியால் இழைக்கப்பட்ட அங்கியும், நடராசப் பெருமானுக்கு ஒரு கழஞ்சில் தாலியும், மேலும் பல பொன்னாலான அணிகலன்களும் பொற் பூ ஒன்றும் மனம் மகிழ்ந்து வழங்கினார்.

வரலாற்று சிற்பி பேராசிரியர். இராஜசேகர தங்கமணி, கரூர்.

## முதல் இராசராச சோழனும் மின்ன வேட்டுவரும்:

### பாச்சல்:

சேலம் - நாமக்கல் நெடுஞ்சாலையில் இவ்வூர் உள்ளது. பாய்ச்சல் வரலாறு முதல் இராசராசன் ஆட்சி காலத்தில் தொடங்குகிறது. பாச்சல் கல்வெட்டுகளில் பாச்சில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**“வடகரை இராசாச்சிரய வளநாட்டு முனை வல்லவரையர் நாட்டுப் பாச்சிலான உலகளந்தான் சதுர்வேதி மங்கலம்”**

என்பது கல்வெட்டுச் செய்தி. முதல் இராசராசன் தன் ஆட்சிக் காலத்தில் தன் ஆட்சிப் பகுதியை மண்டலங்களாகவும், வளநாடுகளாகவும், கூற்றங்களாகவும், நாடுகளாகவும் வகுத்தான்.

வளநாடுகள் பிரிவுக்குத் தன் சிறப்பு பெயர்களை வைத்தான். அம்முறையில் இப்பகுதி வடகரை இராசாச்சிரய வளநாடு என்று வழங்கப்பட்டது.

வடகரை என்பது காவிரியின் வடகரை, கொல்லிமலையின் கிழக்கும் மேற்கும், சேலம் வரையிலும் பரந்து பட்டது. நாட்டு பிரிவில் முனை வல்ல வரையர் நாடு, சில கல்வெட்டுகள் முனை என்றும், சில கல்வெட்டுகள் முஞ்சை என்றும் வழங்குகின்றன. முனை என்பதும் முஞ்சை என்பதும் பூர்வீக குடிகளான வேட்டுவர்களில் ஒரு குலப் பிரிவாகும். (கொங்கு களஞ்சியம், இரண்டாம் தொகுதி பக்கம்: 42, புலவர். வெ. இரா. துரைசாமி, வெள்ளகல்பட்டி, நாமகிரிப்பேட்டை, இராசிபுரம், சேலம்.)

உலகளந்தான் எனும் பட்டப்பெயர் உடையவன் முதலாம் இராசராசன் ஆவான். கல்வெட்டுகளில் முனை, முஞ்சை, முன்னை என்று கூறப்படும் வேட்டுவர் குலப்பெயர் இன்று மின்ன வேட்டுவர் என்று அழைக்கப்படுகின்றனர்.

கொடிவேரி அணையில் உள்ள முன்னை ஈஸ்வரன் கோயில் முன்னை, முன்ன என்னும் மின்ன வேட்டுவரால் கட்டப்பட்ட கோயிலாகும். இன்று இக்கோயில் அணை மினியப்பன் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இவர்கள் கோசணம் காணியாளர் ஆவர் என்று கோசணம் கல்வெட்டு கூறுகிறது. புஞ்சை புளியம்பட்டி அருகில் உள்ள நல்லூர் கரிய காளியம்மனை இம்மின்ன வேட்டுவர்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

## முதலாம் இராஜேந்திர சோழனும் களாச்சி வேட்டுவரும்:

**இடம்:** ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், துக்காச்சி வேட்டுவன் காடு.

**காலம்:** கி.பி. 11ம் நூற்றாண்டு முதல் இராஜேந்திரன் காலம்.

**செய்தி:** நடைபெற்ற போரில் ஊராளி அழகன் காளி வீர மரணம் அடைந்ததால் அவருக்கு நடுகல் எடுத்தல் முறையில் கோயில் போல அமைக்கப்பட்டுள்ளது.

# களாச்சி வேட்டுவன் நடுகல்



**ஈரோடு மாவட்டம், துக்காச்சி, வேட்டுவன் காட்டில் உள்ள ஊராளி வேட்டுவன் அழகன் காளியின் நடுகல்.**

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூர்வ தேசமும் கங்கையும்
2. கடாரமும் கொண்ட ஸ்ரீ இராஜேந்திர
3. சோழருக்குச் செல்லா நின்ற யாண்டு
4. .................... ஊராளி வேட்டுவன் அழகன்
5. காளி அவன் இதில் பட்டான்.

முதலாம் இராஜேந்திர சோழனின் சேரநாட்டு படையெடுப்பின் போது அழகன் காளி வீரமரணம் அடைந்தான் என்பது இக்கல்வெட்டால் உணரப்படுகிறது. (வேட்டுவர் சமூக ஆவணங்கள், செ. ராசு, பக்கம்: 27)

## ஈரோடு மாவட்டம் பட்டைய காளிபாளையம் காளத்தீஸ்வர கோயில் கல்வெட்டு:

"பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகிய ஸ்ரீ காளத்திநாதர் ஆதினம், கண்ணப்ப கோத்திர வில் வேட்டுவர் மாவுலவர், பூவுலவர்,

காவுலவர், இதைச் சார்ந்த 32 ராயர் குலமும் இலட்சத்தி எட்டு வீர குலத்தவர்களும் வெற்றி வாளும் வீரத்தண்டும் புலிக்கொடியும் என்று இக்கல்வெட்டு கூறுவதால் வேட்டுவர்கள் புலிக்கொடியும் உடையவர்கள்” என்று புலப்படுகிறது. இதனால் சோழர்கள் வேட்டுவர் வர்க்கம் என்று அறியப்படுகிறது.

# கொடிவேரி அணை கட்டிய கொங்காள்வான்

ஆதித்ய சோழன் ஒன்பதாம் நூற்றாண்டில் கொங்கு நாட்டின் மீது படை எடுக்கும்பொழுது **கொங்குநாடு முழுவதும் வேட்டுவ இராசாக்கள் ஆண்டனர்** என்று **'கொங்கு தேச இராசாக்கள்'** எனும் நூல் சரித்திரம் கூறுகிறது. ஆதித்ய சோழனுக்குப் பின் முதலாம் இராசராச சோழன் கி.பி. 1008 ஆம் ஆண்டுக்கு முன் உதகை மீது படையெடுத்தான், உதகையை அடைய பதினெட்டு காடுகளை தாண்ட வேண்டி இருந்தது.

குடகு நாடு என்பது குடமலை நாடாகும். அதில் உதகை மலை அரண் சூழ்ந்த நாடு. குட நாட்டை ஆண்ட மன்னனுக்கும், இராசராச சோழனுக்கும் கடும் போர் நடைபெற்றது இப்போரில் வீரம் காட்டிய செம்ப வேட்டுவனின் போர் திறமையை மெச்சி **"சத்ரிய சிகாமணி கொங்காள்வான்"** என்ற பட்டத்தைச் சூட்டி குடநாட்டையும் மாளவி என்ற ஊரையும் பரிசாக அளித்தான் என்று வரலாறு கூறுகிறது. இம்மரபினர் இராஜேந்திர சோழன் காலத்திலும் குட நாட்டில் குறுநில மன்னனாக இருந்து அரசாண்டு வந்தனர்.

கொங்கு நாட்டில் முதல் முதலில் பவானி ஆற்றுநீரை கொடிவேரி என்ற இடத்தில் நீரை தேக்கி (இக்குளம் அட்டி) கால்வாய் வெட்டிய பெருமை ஊராளி செம்ப வேட்டுவரையே சேரும். இவர் பெயர் ஜெயங்கொண்ட சோழ கொங்காள்வான். (கி.பி. 1070 - 1125) ஆட்சிக்காலத்தில் இவனுக்கு ஊராள்வான் பொறுப்பு இருந்தது. முதல் குலோத்துங்கனின் 55 - வது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1125) சோழ கொங்காள்வான் கொடிவேரியில் பவானி ஆற்று நீர் பாயும் இடத்தை அகலப்படுத்தி பெரும் கற்களை கொண்டு தேக்கி கால்வாய் வெட்டினான். இன்று இது கொடிவேரி அணை என்று அழைக்கப்படுகிறது இந்த செய்தியை **கொடிவேரி பவானி ஆற்றங்கரையில் உள்ள கல்வெட்டு கூறுகிறது.**

கொடிவேரி அணை சத்தியமங்கலத்தில் இருந்து கிழக்கே10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கொடிவேரி அணையின் வடக்கு பக்கம் ஒரு கால்வாயும், தெற்கு பக்கம் ஒரு கால்வாயும்

ஊராளி செம்பவ வேட்டுவன் வெட்டினார். கொடிவேரி அணையின் வடக்குப் பகுதியில் உள்ள கால்வாய் பெருமுகை வரை செல்கிறது. வடக்கில் செல்லும் இக்கால்வாய் **அரக்கன் (அரசன்)** கோட்டை கால்வாய் என்று பொதுமக்களால் அழைக்கப்படுகிறது. கொடிவேரி அணையின் தெற்கு பகுதியில் உள்ள மற்றொரு கால்வாய் கவுந்தப்பாடி அருகில் உள்ள பெருந்தலையூர் மேட்டுப்பாளையம் வரை செல்கிறது. பி. மேட்டுப்பாளையத்தில் உள்ள ஏரிக்கரையில் இருக்கும் குதிரை வீரர்கள் சிற்பம் அங்குள்ள **பரிபடை வேட்டுவரின்** ஆதிக்கத்தை குறிக்கிறது. இந்த கால்வாய் தடப்பள்ளி கால்வாய் என்று அழைக்கப்படுகிறது. இந்த இரண்டு கால்வாய்களின் மூலம் பல ஆயிரம் ஏக்கர்கள் நீர்பாசன வசதி பெறுகிறது. இதிலிருந்து கி.பி.11-ம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் நீர்ப்பாசன வசதியை பெருக்கியவர்கள் **வேட்டுவ ஆட்சியாளர்களே** என உறுதியாகத் தெரிகிறது.

அந்தியூர் வடகரை நாட்டுப் பட்டயத்தில் பெருமுகை **வெள்ளை வேட்டுவர்** ஊராட்சி செய்ததாக உள்ளதால் வெள்ளை வேட்டுவர்க்கு அரக்கன் (அரசன்) கோட்டை வாய்க்காலும், பெருந்தலையூர் **பெருந்தலை** வேட்டுவர் ஆதிகாரத்தில் இருந்ததால் பெருந்தலை வேட்டுவருக்கு தடப்பள்ளி வாய்க்காலும் வெட்டப்பட்டன. எனவே வேட்டுவர்கள் கட்டியதே கொடிவேரி அணையும் வாய்க்கால்களும் என்பதும் புலப்படும். அரக்கன் **(அரசன்) கோட்டை வடகரை நாட்டை ஆண்ட அந்தி வேட்டுவரின் கோட்டைகளில் ஒன்றாகும்**. பெருந்தலைச் சாத்தனார் எனும் சங்ககாலப் புலவரின் ஊர் பெருந்தலையூர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். எனவே பெருந்தலையூர் எனும் ஊர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானது என்பது புலப்படும். இப் பெருந்தலைச்சாத்தனார் பெருந்தலை வேட்டுவர் ஆவார். எனவேதான் அவர் கடியநெடு வேட்டுவனையும், குமண வள்ளலையும், கண்டிர கோப்பெரு நள்ளியையும் வேட்டுவன் என்றே புகழ்ந்து பாடியுள்ளார்.

பெருந்தலையூர் திரு மகிழீசுவரர் கோயில் தென்னிந்தியக் கல்வெட்டு சாசனம்:- திருமகிழவனமுடையாருக்கு சந்தியா தீபம் ஒன்று வடகரை நாட்டு பட்லூரிலிருக்கும் ஸ்ரீதினார் வேட்டுவரின் பிள்ளையான சிவந்த தேவன் கொடுத்தபடி அச்சு என்னவென்றால் பெருந்தலையூரில் உள்ள உடையாருக்கு திருப்படிச் செலவுக்கு பணம் கொடுக்கப்பட்டது. (தெ.கா.சா.மி. 378)

## கொடிவேரி அணையில் உள்ள கல்வெட்டு:



1. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்
2. துங்க சோள தேவற்
3. கு யாண்டு ஐம்பத்து அ
4. ஞ்சாவது வடகரை நாட்டு
5. க்குளவாற்றூரிலிருக்கும்
6. ஊராளி செம்ப வேட்டுவ
7. ன் தொண்டையன் பிள்ளா
8. நான் சயங்கொண்ட சோழ
9. க் கொங்காள்வானேன் இக்குள
10. ம் அட்டிக்
11. காலும் வெட்டி
12. விச்சேன் இது

13. ஆக்குவான் பா
14. தம் எந்தலைமேல்
15. இது அழிப்பான் வழி
16. அறுவான்

கி.பி. 11 - ம் நூற்றாண்டுகளில் கொடிவேரி வேட்டுவர்களின் காணியாக இருந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. கொடிவேரி ஆற்றங்கரையில் உள்ள கல்வெட்டு வரியில் "இக்குளம் அட்டிக் காலும் வெட்டிவிச்சேன்" என்று உள்ளது.

முதலாம் குலத்துங்கனின் ஆட்சி காலத்தில் (கி.பி. 1070 1125) கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளில் ஒன்றான வடகரை நாட்டில் ஊராளி செம்ப வேட்டுவர் குலத்தலைவன் ஜெயங்கொண்ட சோழக் கொங்காள்வான்.

முதலாம் குலோத்துங்கனின் ஐம்பத்து ஐந்தாவது ஆட்சிக் காலத்தில் சோழக் கொங்காள்வான் குளவாற்றூரில் (கொடிவேரி) பவானி ஆற்றின் குறுக்கே பெரிய பாறைகள் மற்றும் கற்களை கொண்டு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தினான். கொடிவேரி அணை சத்தியமங்கலத்தில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கோபி செல்லும் சாலையில் உள்ளது இதன் பழைய பெயர் குளவாற்றூ கிராமம் இன்று கோபி வட்டத்திற்கு உட்பட்டது.

900 ஆண்டுகளுக்கு முன்பு கொடிவேரி பகுதியில் அடர்ந்த மரங்கள் மிகுந்து, விலங்குகள் வாழ்ந்த காட்டுப் பகுதியாகும் இந்தக் காட்டின் வழியே தான் பவானி ஆறு பாய்ந்து ஓடுகிறது இந்தப் பகுதியில் **இயற்கையாகவே குளம் போல் இருந்ததால்** சோழக்கொங்காள்வான் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக நீர்த்தேக்கம் ஒன்றை கட்டும் முயற்சியில் ஈடுபட்டான் அதற்குத் தேர்ந்தெடுத்த இடம் தான் கொடிவேரி. இந்த இடத்தில் பவானி ஆறு இயற்கையாகக் குளம் போல் தேங்கி இருந்ததால் இவ்வூர் குளவாற்றூர் என்று அழைக்கப்பட்டது.

பொதுவாக கொங்கு நாட்டில் **பவானி, காவேரி போன்ற ஆறுகள் பாறைகளின் மேல் தான் ஓடுகின்றன.** அந்தப் பாறைகளைக் கொண்டு அணைகட்டி நீரைத் தேக்கினார் சோழக் கொங்காள்வான். எதிர்காலத்தை எண்ணியவாறு இரு கரைகளிலும் வசிக்கும் மக்களின் பயன் பாட்டிற்கு ஏற்ற வகையில் அணையின் வடக்குப் பக்கம் ஒரு கால்வாயும், தெற்குப் பக்கம் ஒரு கால்வாயும்

வெட்டினார். வடக்கு பக்கம் கால்வாய் பெருமுகை வரை செல்கிறது, இந்த கால்வாய் அரக்கன் (அரசன்) கோட்டை கால்வாய் என்று மக்களால் அழைக்கப்படுகிறது, அதன் பிறகு பாசன வசதிக்காகத் தெற்கு பகுதியில் உள்ள கால்வாய் 40 கிலோ மீட்டர் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கவுந்தப்பாடி அருகில் உள்ள பெருந்தலையூர் மேட்டுப்பாளையம் வரை செல்கிறது. இது தடப்பள்ளி கால்வாய் என்று அழைக்கப் படுகிறது இது மேலும் 26 கிலோ மீட்டர் தூரம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

கொடிவேரி அணைக்கட்டின் மூலம் பல ஆயிரம் ஏக்கர் விலை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன மேலும் இந்த வட்டாரமே கோடையிலும் வற்றாத நிலத்தடி நீரை பெற்றுள்ளதும் குறிப்பிடத் தக்கது. கி.பி.11-ஆம் நூற்றாண்டிலேயே கொங்கு நாட்டில் மிகச்சிறந்த நீர்ப்பாசன வசதி பெருக்கியவர்கள் வேட்டுவர் ஆட்சியாளர்கள் என்று உறுதியாக இதன் மூலம் தெரிகிறது.



## மணல் போக்கி தொழில்நுட்பம்:

அணைக்கட்டின் மையப் பகுதியில் தண்ணீர் குவி மையத்தில் கிணறு வடிவில் சுரங்கமே வெட்டப்பட்டிருக்கும், இது அணைக்கு வெளியே தண்ணீர் திறக்கப்படும் இடத்துக்கு சுமார் 20 அடி தூரத்திற்கு அப்பால் செல்கிறது. சுரங்கத்தின் வாய்ப்பகுதி அகலமாகவும் உள்ளே செல்ல செல்ல குறுகளாகவும் வடிவமைக்கப் பட்டுள்ளது சுரங்கத்துக்குள் கல்லால் ஆன நுட்பமான சல்லடை

அமைப்புகள் மற்றும் கல்லால் செதுக்கப்பட்ட பல்வேறு வடிவங்கள் செய்யப்பட்டிருக்கும். மணல் போக்கிகளைக் கரையிலிருந்து மூடும் வகையில் சங்கிலியால் பின்னப்பட்ட கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மணல் போக்கிகள் மணலையும் சேற்றையும் உள்ளே இழுத்து மறுபக்கம் சுரங்கத்தின் துவாரம் வழியாக அணைக்கு வெளியே தள்ளிவிடும், இதன் மூலம் அணையில் மணலும், சேரும் தாங்காது. மேலும் இதன் வழியே வரும் தண்ணீரும் வெளியேறாது என்பது இதன் சிறப்பு, இந்த அணையின் தனிச்சிறப்பு இது தன்னைத்தானே தூர்வாரி கொள்ளும் வகையில் கட்டப்பட்டுள்ளது. இவ்வளவு அரிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த அணையைக் கட்டியுள்ளனர்.

## நீர் மேலாண்மை தொழில்நுட்பம்:

தடப்பள்ளி கால்வாயும், அரக்கன் கோட்டை கால்வாயும் ஆற்றை ஒட்டிய இருபுறமும் செல்கிறது. இதனால் ஆற்றின் நீரோட்டம் திசை திருப்பப்படுவதில்லை மேலும் அணைக்கு கீழே இருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் நீர்வரத்து எந்த விதத்திலும் குறையாத வண்ணம் ஆற்றில் இருந்து கால்வாய் களுக்கு செல்லும் நீர் வயல்வெளிக்குச் சென்று அதன் கசிவுநீர் மீண்டும் ஆற்றுக்கே வந்து விழும் வகையில் கட்டப்பட்டியி ருக்கிறது. அதாவது ஒரு பாசன நிலம் தனக்கு தேவையான நீர் போக மீதியை மீண்டும் ஆற்றுக்கு அனுப்பி விடுகிறது. தடப்பள்ளி அரக்கன் கோட்டை கால்வாய்களில் மிகச் சிறந்த நீர்



மேலாண்மையை காரணமாக இன்றும் கொடிவேரி அணையில் பாசனத்திற்கு வினாடிக்கு 800 கன அடி நீர் திறந்தால் அந்த தண்ணீர் இடைப்பட்ட பகுதிகளுக்குப் பாய்ந்து பயன் தந்து மீதிநீர் 400 கன அடி ஆற்றுக்கே சென்று சேர்கிறது.

## கல்வெட்டு சான்றுகள்:

## குளம் வெட்டி வளம் பெருக்கிய வள்ளல்கள்:

சேலம் மாவட்டம் மூக்குத்திபாளையம் மோழப்பாறை கல்வெட்டால் அறியப்படுவது.

**ஸ்வஸ்தி ஸ்ரீ ஏழுகரை நாட்டு அக்கை சாலை**
**கங்கை என்று பெயரிட்டு இக்குளம் அட்டினேன்**
**பெரிய விளங்கை ஊராளியாகிய சுரண்டை**
**வேட்டுவன் சிலம்பன் சிறியன் ஆன் ஏழுகரை**
**நாட்டு அக்கசாலைகள் மாத்த ஆராத பிள்ளையேன்**
**பெருமலைக்கு எல்லை......**

பெரிய ஊராளியான சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியன் ஏழுகரை நாட்டில் அக்கசாலைக் கங்கை என்னும் பெயரில் குளம் ஒன்றினை வெட்டி வளம் பெருக்கியதை மேலே உள்ள கல்லெழுத்துக்கள் உணர்த்துகின்றன. (அக்கசாலை - நாணயம் அச்சிடும் தொழிற் சாலை)

மணலூர் கிழவன் சோழ கோனான நல்வாளை குலத்தைச் சேர்ந்த வேட்டுவ நாயன் என்பார் கிணறு ஒன்றை வெட்டி நீர்ப்பாசனத்தை பெருக்கினான். அது கூறும் கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ முளை ஊ
2. ரான அஞ்சாதக
3. ண்ட நல் ஊர்
4. கிணறு மண
5. லூர் கிழவன் சோ
6. ழ கோன் நல்
7. வாளை வேட்டு
8. வந் நாயன்
9. தன்மம்

இரும்புளை வேட்டுவன் வாழவந்தியில் ஏரி ஒன்றினை அமைத்து வளம்பெருக்கி வள்ளல் ஆனார்.

வாழவந்தி ஒழுகு பாறை ஏரியில் உடைப்பு ஏற்பட்டது அதனை வாழவந்தியில் உள்ள இரும்புளை வேட்டுவன் வடசேரி ஆறங்காடி நாயறலியார் என்பானைக் கொண்டு நலமாகக் கட்டுவிக்கச் செய்தார். அவ்வேரியைக் கட்டியமைக்காக அவனுக்கு சர்வமானிய நிலம் கொடுத்தார். இராசிபுரம் குட்லாம் பாறைக் கல்வெட்டால் இது அறியப்படுகிறது, இக்கல்வெட்டு சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கன் (கி.பி. 1645) காலத்தது ஆகும். **கொல்லிமலையில் கொல்லி வேட்டுவன் ஒருவன் கிணறு ஒன்றினைத் தோண்டியுள்ளான்.**

கரூர் மாவட்டம் புங்கம்பாடி பூமதேவம் பாளையக்காரர்கள் ஒன்று கூடி விருப்பாச்சி மலையிலிருந்து வரும் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தலைய நாட்டைச் சேர்ந்த சேந்தமங்கலம் கிராமம் கோரையூத்தில் ஒரு அணையும், பள்ளப்பட்டி அருகே இரு அணைகளும், அரவக்குறிச்சி பக்கம் இரு அணைகளும் கட்டினார்கள். மேலும் பள்ளப்பட்டி அருகே அணையின் நீரை வாய்க்கால் மூலம் கொண்டு சென்று மண்மாரிக்கு மேற்கில் ஒரு பெரிய குளம் வெட்டி, அதில் நீரை தேக்கி அந்தப் பகுதியை வளமாக்கினார்கள்.

> **“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
> **வான் இன்று அமையாது ஒழுக்கு” - திருக்குறள்.**

மன்னன் (மன் - என்றால் ஆக்குதல்) காட்டை அழித்து குளம், குட்டை, ஏறி, கிணறு, அணை வாய்க்கால் அமைத்து நாட்டை ஆக்கியவன்.

மக்களிடமிருந்து பெற்ற வரிப்பொருளை அவர்களின் நலன்களுக்காகவே வேந்தர் செலவிட்டனர். கரிகால் வளவன் குலம் தொட்டு வளம் பெருக்க காடு கொன்று நாடாக்கிய செய்தி பட்டினப்பாளையால் (பட்டினப்பாலை: 283 - 284) அறியலாம். கரிகாலன் காவேரியின் குறுக்கே கல்லணை கட்டி நீர்பாசன வசதியை மேம்படுத்தினான். இச்செய்தியினை சங்க இலக்கியங்கள் குறிப்பிடவில்லை எனினும் கலிங்கத்துப்பரணி (கலிங்கத்துப்பரணி - 197) குறிப்பிடுகின்றது.

உயிர் வாழ்வதற்கு வேண்டிய உணவைக் கொடுப்பவை நிலமும் நீருமாகும். இவ்விரண்டையும் ஒன்றாக இணைத் திருக்கும்படி செய்வதே மன்னர்களின் தலையாய கடமை.

நிலத்திற்கு வேண்டிய நீர் வசதிகளைச் செய்து தர வேண்டியது அரசின் கடமைகளுள் ஒன்றாக பண்டைய தமிழகம் எண்ணியது. ஒரு வேந்தன் சிறந்த நல்லிசை நிறுத்தல் வேண்டின்

**நீரிஇன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப்படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலனும் புணறியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே (புறநானூறு: 18: 18 - 23)**

என்னும் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பார் குடபுலவியனார். உணவுப் பொருள் பெருக நீர்வளம் இன்றியமையாததாகிறது. கொங்கு பகுதியில் முன்பு கொங்கர் எனும் வேட்டுவ ஆட்சியாளர்களே அரசு ஆட்சி செய்தனர் என்பதை சோழன் பூர்வ பட்டயம் உறுதி செய்கிறது.



## வேட்டுவரின் நீர்பாசனப் பணிகள்:

வடகரை ஆற்றூர் அல்லாளன் இம்முடி திருமலை இளையான் இருக்கூர் பாளையக்காரனுக்கு மதுரையை ஆண்ட திருமலை நாயக்கனால் (கி.பி. 1623 - 1659) இளைய நாயகன் எனும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் பெரிய மண் கோட்டை கட்டி ஆண்டார். இவர் காவேரியைத் தடுத்து தடுப்பு அணை ஒன்றைக் கட்டி, வாய்க்கால் ஒன்றினை வெட்டினார். காவேரியின் நீரை முதன் முதலில் கொங்கில் அணைகட்டி வாய்க்காலில் ஏற்றிய பெருமை அவரைச் சேரும். இக்கால்வாய் ஜேடர்பாளையத்தில் தொடங்கி நாமக்கல் மாவட்டம் வேலூர் வழியாக பாலப்பட்டி ஒடுவந்தூர் வரை சென்று 5000 - க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் பாசன வசதி பெற 36 கீ.மீ தூரம் வரை வெட்டப்பட்டுள்ளது.

# அல்லாள இளையா நாயக்கர்



**வாய்க்கால் வெட்டி வளம்பெருக்கிய அல்லாளன்:**

'மூவருக்கும் அகத்திய மாமுனிவருக்கும்
அரசிருந்த முன்னையோர்க்கும்
தேவர்க்கும் திரும்பாத காவிரியைக்
கொங்கேற்றித் திரை கொண்டாயே
பூவிரக்க முரமாயன் கடலமைத்தான்
அவன் வேடம் புனைந்தவாறோ
யாவருக்கு மிளையானே அல்லாள திருமலை ஈகையானே'
(திருச்செங்கோடு திருப்பணிமாலை)

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் வட்டம் நம்பியூர் கிடாரம் என்ற ஊரில் மூன்று துண்டாக உடைக்கப்பட்டு சாலை ஓரம் கிடக்கும் கல் பூச்சந்தை வேட்டுவரின் வள்ளல் தன்மை என்னவென்று இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

**காலம்:** உம்மத்தூர் தலைவன் வீரநஞ்சண் உடையார் காலம்; நள ஆண்டு சித்திரை 13 - ஆம் தேதி கி.பி. 1496.

**செய்தி:** மோடமங்கலம் (மொட்டணம்) பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டன் என்பவர் நவீரை ஆனகப் பலன் கிடாரன் என்ற ஊரில் குளம் வெட்டி வைத்துத் தாமரைக் குளம் என்று பெயரிட்டு புஞ்சையை நஞ்சையாக்கினான், அப்பூமியை பொன்விளையும் பூமி ஆக்கினான்.

## கல்வெட்டு:

| | |
|---|---|
| 1.ஸ்வஸ்தி ஸ்ரீமன் | 2. மகா மண்ட |
| 3. லேஸ்வரன் ஸ்ரீ | 4. வீரநஞ்சண் |
| 5. ண உடையாற்கு | 6. ச் செல்லா நின் |
| 7. ற நள வருஷ | 8. த்து சித்திரை ப |
| 9. தினொன்றாம் | 10. தியதி கீழ்க |
| 11. ரைப் பூந்துறை நா | 12. ட்டு மோட மங் |
| 13. கலத்து பூச்சன் | 14. தை வேட்டுவரி |
| 15. ல் பெரிய பெரு | 16. மாள் முத்தா |
| 17. ண்டானேன் வ | 18. டபரிசார நாட்டு ந |
| 19. விரையான கப்பலன் | 20. கிடாரன் தாம |
| 21. ரைக் குளம் முத் | 22. தாண்டாருடைய |
| 23. உபையம். | |

இவ்வாறு வாய்க்கால் வெட்டியும், குளம் வெட்டியும், வளம் பெருக்கிய இத்தமிழ் மண்ணின் மைந்தர்களான வேட்டுவச் செம்மல்களை சங்க காலத்திலேயே கிணறுகளை வெட்டி தன் கால்நடைச் செல்வங்களுக்குரிய நீரை சேமித்து வைத்திருந்த வரலாற்றில் ஒன்றினை மட்டும் நற்றிணை எனும் சங்ககால நூலில் 92-ம் ஆம் பாடலின் மூலம் காண்போம். மலைப்பகுதியில் வேட்டுவரின் குடியிருப்பான வேட்டச் சீறூரின் அருகே கால்நடை களுக்கெனக் கிணற்று நீர் பாத்திரங்களில் சேமிக்கப்பட்டு விற் பொறியால் மூடப்பட்டுள்ளது. பெண் யானைகள் இம்மூடிகளைத் தகர்த்துத் தம் கன்றுகளை நீர் பருகச் செய்கின்றன (நற்: 92)

## வானியாறு:

வானியாறு காவிரியின் உபநதியாகும் இந்த ஆறு கேரளத்திலுள்ள அட்டப்பாடி பள்ளத்தாக்கில் உற்பத்தியாகிறது.

இதனுடைய உபநதிகள் குன்றூராறு, பாய் கரையாறு, பாயாறு, கல்லாறு என்பவனாகும். நாற்புறமும் மலைகளால் சூழப்பட்ட கொங்கு நாட்டின் மேற்கு எல்லையாம் மேற்கு தொடர்ச்சிமலையில் இவ்வாறு உற்பத்தியாகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் பாலைகாட்டு கணவாய்க்கு வடக்கு பகுதி வடமலை என்றும் தெற்கு பகுதி தென்மலை என்றும் அறியப்படுகிறது.

வட மலையில் தோன்றும் ஆறுகளை **'வானி'** என்றும், தென்மலையில் உற்பத்தியாகும் ஆறுகள் **'பொருநை'** என்றும் சங்க காலப் புலவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. வடமலையில் சிறுவானி பெருவானி என இரண்டு ஆறுகள் உற்பத்தி ஆகின்றன. இன்று சிறுவானி ஆறு கோயம்புத்தூர் நகரின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. வடமலையில் உற்பத்தியாகும் பெருவானி ஆறு பவானி கூடுதுறையில் காவிரி ஆற்றில் சங்கமம் ஆகிறது.

காவேரி நதிக்கு அகத்திய முனிவர் பெருமை சேர்த்தது போல் வானி நதியாகிய பவானி நதிக்கு துருவாசக முனிவர் பெருமை சேர்த்திருக்கிறார். வானியாறு மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கீழே வர வர பல சிற்றோடைகளும் சிறு நதிகளும் இணைந்து பெரியதொரு ஆறாகப் பெருக்கெடுத்து பெருவானி என்று பெயர் பெற்றது. இன்று பவானி என்றும் அழைக்கப்படும் இவ்வாறு அன்று வானியென்றும் பெருவானி என்றும் சங்க காலத்தில் அழைக்கப்பட்டு வந்தது. இன்று வானி நதிகரையில் உள்ள **வானிபுத்தூர், கீழ்வானி, மேவானி, வானி நவலூர் (அத்தானி)** எனும் ஊர்களே இவ்வாறு வானி என்று அழைக்கப் பட்டதிற்கு சாட்சியம் கூறுகின்றன.

இவ்வானி ஆறு கொங்கு நாட்டில் உள்ள அந்தியூர் வடகரை நாடு, ஒடுவங்க நாடு, காஞ்சிக்கோயில் நாடு என்னும் மூன்று நாடுகளுக்கிடையே தவழ்ந்து வருகிறது. இவ்வாற்றின் அழகையும் தெளிவையும் சேர மன்னர்களின் வரலாறு கூறும் பதிற்றுப்பத்தில் காண்போம்.

**"கழை நிலைபெறா அக்குட்டத்து ஆயினும்**
**புனல் வாய் மகளிர் ஆட ஒழிந்து**
**பொன் செய் பூங்குழை மீ மிசைத் தோன்றும்**
**சாந்து வரு வானி நீரினும்**
**தீந்தன் சாயலன் மன்றதானே"**

இப்பாடல் வரிகள் பதிற்றுப்பத்தில் உள்ள ஒன்பதாம் பத்தில் பெருங்குன்றூர் கிழார் சேரமன்னன் இளஞ்சேரல் இரும்பொறையைப் பற்றி பாடியது ஆகும். சேர மன்னர்கள் வரலாறு கூறும் செந்தமிழ் இலக்கியமாம் பதிற்றுப்பத்தில் பவானி ஆறு வானி ஆறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஓடக்கோல் அண்டாத ஆழமுடைய இடத்திலும் நீரில் பாய்ந்தாடும் மகளிர் காதில் இருந்து கழன்று விழுந்த பொன்னால் ஆகிய காதணிகள் நீரின் மேலிருந்து பார்க்கத் தெளிவாகத் தெரியும் தெளிந்த நீரைக் கொண்டதும், சந்தன மரங்களை அடித்துக்கொண்டு வருவதுமான வானி என்னும் ஆற்றின் நீரைக் காட்டிலும் மென்மை உடையவனாக இளஞ்சேரல் இரும்பொறை விளங்குகின்றான்”

கொங்கு சோழர் காலத்தில் கொங்கில் வேட்டுவர்கள் காணி ஆட்சி பெற்றிருந்தனர். வடபாரிசார நாட்டு **“கோசனம் காணியாளர் முன்னை வேட்டுவர்”** என்றும் சாந்தப் படை வேட்டுவர், கரைய வேட்டுவர், பூந்துறை நாட்டு அறச்சலூர் காணியாளர்கள் என்றும் சிற்றூர் படவோடு குறிச்சி, அஞ்நூற்றுமங்கலம், மழபாடி வடகரை நாட்டு இருப்புலி, தென்னிலை ஆகிய ஊர்களில் வெங்கட்சி வேட்டுவர் காணியாளர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதிகாரிகளாகச் (வேளான்களாக) சில வேட்டுவர் கூறப் படுகின்றனர். அவர்கள் கொடுக்கி மங்கலம், ஆப்பக்கூடல், வேம்பத்தி, கரூர் போன்ற ஊர்களில் இருந்துள்ளனர்.

வேட்டுவர்கள் பலர் சிவன் கோயில்களுக்குத் திருநிலைக்கால் மண்டபம் ஆகியவற்றைக் கட்டியுள்ளனர். அறச்சலூர் சிவன் கோயிலுக்குத் திருநிலைகாலும், மண்டபமும் உருவாக்கியுள்ளனர். வெங்கம்பூர் சிவன் கோயிலுக்கு புல்லை வேட்டுவன் வெங்கம்பூரை தானமாக அளித்தான், கொடிவேரி முன்னை ஆளுடையார் கோவிலுக்கு சந்தி விளக்கு வைத்தான் சிறுத்தலை வேட்டுவரில் இருங்கோளன் மகன்.

ஊர் பெயர்களும், நாட்டுப் பெயர்களும், கோவில் பெயர்களும் வேட்டுவர் குடிப் பெயர்களால் உருவாகியுள்ளன. வெங்கம்பூர் வெங்கச்சி வேட்டுவர் குடிப்பெயரிலும், கிழங்கு நாடு கிழங்க வேட்டுவர் குடிப்பெயரிலும், முன்னை ஆளுடையார் (கொடுவேரி) முன்னை வேட்டுவர் குடிப்பெயரிலும் ஏற்பட்டன என்பதற்கு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

கல்வெட்டுகளில் வேட்டுவரில் வேளான் என்பதில் **'வேளான்'** என்ற சொல் அரசியல் அதிகாரி அல்லது நன்கொடையாளர் என்பதையே குறிக்கும் **'வேள்'** என்ற சொல் குறுநில மன்னன் என்பதை குறிக்கும் பாரிவேள், கொங்கு வேள், இருங்கோவேள் (இருக்கு வேள்), அந்துவன் வேன் மான் ஆய்வேள் எனும் ஆய் எயினன் ஆய் அண்டிரன் ஆகியவர்கள் குறுநில மன்னர்கள் ஆவர்.

## கொடிவேரி (கொடிவேலி, கொடுவேரி):

கொடிவேரி என்பது ஒரு சிறந்த மருத்துவச்செடியாகும், இது சங்க காலம் தொட்டு தமிழகத்தில் இருந்து வந்துள்ளதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. தமிழ் சொல் தொகுதியில் இச்செடி கொடுவேரி, கொடுவேலி, செங்கொடு வேலி என குறிக்கப் பட்டுள்ளது. கொடுவேலியில் மூன்று வகை உண்டு, அவை வெண் கொடிவேலி, கருங்கொடு வேலி, செங்கொடி வேலி எனப்படும். இதில் வெண்கொடி 'Plumbago Zeylania' என்று தாவரவியல் நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனுடைய வேர் அதிகமாக சித்த மருத்துவத்திற்குப் பயன்படுகின்றது. இதனைப் பதார்த்த குணவிளக்கம் எனும் நூல் **'கொடிவேலி'** எனக் கூறுகிறது.

செங்கொடி வேலி நஞ்சு நிறைந்த கொடியாகும், செங்கொடிவேலியைத் தாவர நூல்கள் **'பிளும்பாகோ ரோஸியா'** (Plumbago Rosea) என்க்குறிக்கப்பட்டுள்ளது. சிகப்பு பூக்கள் கொண்ட இனம் செங்கொடி வேரி எனப்பட்டது. பொதுவாக கொடிவேலியும் சித்திர மூலமும் ஒன்றே ஆகும். செங்கொடிவேலி சிவப்பு சித்திரமூலம் என அழைக்கப்பட்டது. பத்துப்பாட்டுகளில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு செங்கொடுவேலியைக் குறிக்கிறது.

> **'ஒண் செங்காந்தள் ஆம்பல் அனிச்சம்**
> **தண் கயக் குவளை குறிஞ்சி வெட்சி**
> **செங்கொடுவேரி தே மா மணிச்சிகை'**
> **- (குறிஞ்சிப்பாட்டு: 65.64, கபிலர்)**

இக்குறிஞ்சிப்பாட்டு குறிக்கும் பல்வேறு மலர்களில் செங்கொடுவேலிப் பூவும் குறிக்கப்பட்டுள்ளது. எனவே சங்க காலத்தில் இச்செடி பற்றியும் அறிந்திருந்தனர் என்பது புலப்படுகிறது. மேலும் இச்செடியை பற்றி சிலம்பும் குறித்துச் சொல்கிறது.

பெருங்கதை என்னும் சமண நூலில், இச்செங்கொடுவேரி குறிக்கப்பட்டுள்ளது. **'பெருங்கதை'** கொங்கு வேளிர் என்பவரால்

இயற்றப்பட்ட ஒரு தொடர்நிலைச் செய்யுள் ஆகும். இவர் கி.பி. 7 - நூற்றாண்டில் கொங்கு நாட்டில் விசயமங்கலத்தில் வாழ்ந்தவர் என்பதால் இக்கொடிவேலியும் கொங்கு நாட்டில் 7 - ஆம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது எனலாம்.

இராமாயணத்தில் சொல்லப்படும் கதிரவ குலம் (சூரியவம்சம்) பழஞ்சோழக் கிளையும் ஆகும். முசுகுந்தன், மாந்தாதா, சிபி முதலியோர் தென்னாட்டுச் சோழர் குடிக்கும், வட நாட்டு கதிரவ குலத்திற்கும் பொது முன்னோராக் கொல்லப்படுதல், இவ்விரு குடிகளும் ஒரே குலத்தைச் சேர்ந்தமையாலேயே சிபியின் வழியினன் ஆதலாலேயே சோழன் **‘செம்பியன்’** எனப்பட்டான். பிற்காலத்து தெலுங்கு சோடர் (சோழர்) மொழிப் பற்றிப் பிரிந்து போனது போன்றே, முற்காலத்து கதிரவகுல வடவரசரும் மொழியும் சேய்மையும் பற்றி பிரிந்து போயினர் என்க.

நாரதனை மூவுலகு முலாவி (திரிலோக சஞ்சாரி) என்றது சேர, சோழ, பாண்டிய நாடுகள் பற்றியே உலகம் என்பது முதலாகு பெயராய் நாட்டையும் குறிக்கும். இத்துணைப் பழமை வாய்ந்த சேர, சோழ, பாண்டியக் குடிப்பெயர்கள் தமிழாயன்றி வேறு மொழியாய் இருத்தல் முடியாது, ஆயினும் ஆரிய வெறியர் இந்திய நாகரிகத்தை ஆரியமாக காட்டல் வேண்டி மூவேந்தர் குடிப்பெயரையும் வடநாட்டுத் தொடர்பு கொண்டு வடசொல்லாக காட்டி வருகின்றனர். (தமிழ் வரலாறு. ஞா. தேவநேயப் பாவணர் பக்கம். 55 -56).

முதலாம் இராசராசன் (கி.பி. 985 - 1012) சேர நாட்டின் மீது படை எடுத்து கொல்லம், கொடுங்கோளூரை வென்று **‘கீர்த்தி பராக்கிரமன்’** என்னும் சிறப்பு பெயர் பெற்றார். இக்காலத்தில் குடகு எனப்படும் குடகு மலை நாட்டைத் தாக்கி **‘பனசோக’** என்னுமிடத்தில் அதன் அரசன் கொங்காள் வாரை வென்றார். **‘மனிசா’** என்பவர் இராசராசனுக்காகப் போரிட்டு வெற்றி வாய்ப்பை அளித்ததால் “சத்திரிய சிகாமணி கொங்காள்வான்” என்னும் பட்டம் அவருக்கு வழங்கி ’மாளவ்வி’ என்ற ஊர் ஒன்றை அளித்தார். மனிசாவின் மரபினர் சுமார் நூறு ஆண்டுகள் வரை சோழர்கட்கு அடங்கிய குறுநில மன்னராய் கொங்காள்வான் என்னும் பட்டத்துடன் குடுகு நாட்டில் அரசாண்டு வந்தனர். எனவே அப்போர் நிகழ்ச்சிக்குப் பிறகு குடகுமலை அம்மனிசா என்பவருக்கே அளிக்கப்பட்டது. அம்மனிஷா என்பவன் சோழக் குடியினன் ஆவான். சிபியின் வழியினர் சோழர் என்பதால் **‘செம்பியன்’**

எனப்பட்டனர். மேற்கூறிய மனிஷாவும் **'செம்பகுலம்'** என்னும் **வேட்டுவ குலத்தில் தோன்றிய சோழக்குடியினர்** ஆவான்.

குடநாட்டின் மன்னனாக இராசராசன், இராஜேந்திரன் எனும் சோழர்கள் கொங்கில் சிறப்புற்று இருந்தபோது சுமார் நூறு ஆண்டுகள் வரையில் சோழர்களுக்கு அடங்கிய குறுநில மன்னனாக குட நாட்டில் அரசாண்டு வந்தான். பின் இவன் சந்ததியினர் குலோத்துங்கன் ஆட்சியில் (கி.பி. 1070 - 1125) வடகரை நாட்டில் இன்று பெரிய கொடிவேரி என்று அழைக்கப்படும் குளவாற்றூர் எனும் ஊருக்கு ஊராளியாக பொறுப்பேற்று பின் அவன் **'செயங்கொண்ட சோழக் கொங்காள்வான்'** எனும் பட்டப் பெயர் பெற்று கொங்கு நாட்டின் அரசியல் அதிகாரி ஆனான். செயங்கொண்டான் என்பது முதல் இராசராச சோழனின் பட்டப் பெயராகும். இவர் காலத்தில் வானி ஆறு பெரிய கொடிவேரியில் பாறைகளால் தடுக்கப்பட்டு குளம் போல் காட்சியளித்ததால் **'குளவாற்றூர்'** என்று அழைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

வானி (பவானி) ஆற்றைக் குளம் ஆக கட்டியதால் குளவாற்றூர் **ஊராளி செம்ப வேட்டுவர்** என்று அழைக்கப்பட்டார். ஊராளி என்றால் ஊரை ஆளும் மக்கள் தலைவன் என்று பொருள்படும். அவர் சோழர் ஆட்சி காலத்தில் ஊராளும் தலைவராக மட்டும் இல்லாமல் சோழனின் அரசியல் அதிகாரியாக இருந்தமையால் 'செயங்கொண்ட சோழக் கொங்காள்வான்' என்ற பட்டத்தை பெற்றிருந்தார். அவர் சோழனின் அரசியல் அதிகாரியாக இருந்ததால்தான் கொடிவேரி அணையை கட்ட முடிந்தது. கொங்கு நாட்டின் முதன் முதலில் வாணி (பவானி) ஆற்றை தடுத்து குளம் ஆக்கி இருகரைகளிலும் வாய்க்கால்களும் வெட்ட முடிந்தது. வடகரையில் உள்ள வாய்க்கால் அரக்கன் (அரசன்) கோட்டை வாய்க்கால் என்றும், தென்கரையில் உள்ள வாய்க்கால் தடப்பள்ளி வாய்க்கால் என்றும் அழைக்கப்படுகிறது. கொடிவேரி அணை இன்று ஒரு சிறந்த சுற்றுலா தலமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சோழர்கள் காலத்தில் தான் நீர்ப்பாசன முறை சிறந்து விளங்கியது என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

கொடிவேரி அணையில் இருந்து பிரிக்கப்படும் அரக்கன்கோட்டை வாய்க்காலும், தடப்பள்ளி வாய்க்காலும் பழைய

கரை வாய்க்கால் என்று அழைக்கப்படுவதால் இவ்விரு வாய்க்கால்களே கொங்கு நாட்டில் முதன் முதலில் வெட்டிய வாய்க்கால் என்பது புலப்படும். எனவே சோழர்கள் ஆட்சி காலத்தில் இக்கால்வாய்கள் வெட்டப்பட்டது என்பதே வரலாற்று உண்மையாகும். கரிகாலன் கட்டிய கல்லணையை நினைவு கூறும் வகையில் அந்தியூர் வடகரை நாட்டு குளவாற்றூர் குலோத்துங்க சோழனின் அரசியல் அதிகாரியான ஊராளி செம்ப வேட்டுவன் தொண்டையன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் வானி (பவானி) ஆற்றை கொங்கில் முதன் முதலில் தடுத்து அணைகட்டி குளம் உண்டாக்கி இரு கரைகளிலும் வாய்க்காலும் வெட்டினார். இக்கொடிவேரி அணையை பிற்காலங்களில் வந்த சிற்றரசர்கள் பழுது பார்த்திருக்கலாம், ஆனால் முதன் முதலில் சோழர்கள் ஆட்சி காலத்தில் இவ்வணையைக் கட்டியது வடகரை நாட்டு குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவன் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் என்பதே வரலாற்று உண்மையாகும்.

**வேட்டுவர்கள் சோழர்கள் ஆட்சிக் காலத்தில் மிக உன்னதமான நிலையில் இருந்தனர் வேட்டுவர்கள் சோழர்கள் ஆட்சி காலத்தில் 32 ராயர் குலம் லட்சத்து எட்டு வீரக்குலத் தவர்களும் வீரத்தண்டும் வெற்றி வாளும் புலிக்கொடியும் பெற்றிருந்தனர் என்று பட்டய காளிபாளையத்தில் காலத்தீஸ்வரர் ஞானப்பூங்கோதை கோயிலில் உள்ள சோழர் கால கல்வெட்டு கூறுகிறது.**

"It is dated in the 55th year of the region of the Kongu King Kulothunga and records the gift of a tank and excavation of a channel by Semba - Vettuvan Thondaiyan - Pillai alias Jayankonda Chola - Kongalvan of Kula attur in Vadakarai Nadu.

**இந்திய தொல்லியல் துறை 1989 – 90 இல் மேற்கண்ட வடகரை நாட்டு செம்ப வேட்டுவனின் கல்வெட்டை மேற்கண்டவாறு பதிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.**

மேற்கூறிய கொடிவேரி பற்றிய ஐந்து வேட்டுவர்கள் கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகள் வட பாரிசார நாட்டில் தென்கரைக் கொடுவேலி முன்னையீசுவரர் கோயிலுக்கு வட பாரிசார நாட்டுச் சிறுத்தலை வேட்டுவர்கள் சந்தியா தீபம் வைத்தது பற்றியது ஆகும். இம்மூன்று கல்வெட்டுகளும் கொடுவேலி

முன்னையீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் ஆகும். அடுத்த இரண்டு கல்வெட்டுகளும் கொடிவேரி பவானி ஆற்றங்கரை கல்வெட்டுகள் ஆகும். அதில் ஒரு கல்வெட்டு வடகரை நாட்டுக் கரை (ய) வேட்டுவர் வட பாரிசார நாட்டு கொடுவேலி திரு முன்னையீசுவரர் கோயிலுக்கு சந்தியா தீபம் வைத்தது பற்றியது ஆகும். மற்றொன்று மேற்கூறிய வடகரை நாட்டுக் குளவாற்றூர் செம்ப வேட்டுவர் பற்றியது ஆகும். இன்றைய கொடிவேரி அணையின் தென்கரையில் உள்ள ஊர் கொடுவேலி என்றும், வடகரையில் உள்ள ஊர் குளவாற்றூர் என்றும் சோழர்கள் காலத்து கல்வெட்டுகள் கூறுகின்றன.

கொடுவேரி அணை கட்டியபின் கொடுவேலி என்பது கொடுவேரி என்று ஆகி பின்னர் தென்கரை கொடிவேரி என்றும், அணையின் வடகரையில் இருந்த குளவாற்றூர் வடகரை கொடிவேரி என்றும் அழைத்தனர். தற்போது இக்கரை கொடிவேரி என்றும், அக்கரை கொடிவேரி என்றும் மக்கள் அழைத்து வருகின்றனர்.

ஆதி காலங்களில் வேட்டுவர்கள் மலையன், வேடன், எயினன், வெற்பன், சிலம்பன், குறும்பியன் எனும் திணை நில மக்களாக வாழ்ந்து வந்தனர். சங்க காலத்தில் வேளீர் (சிற்றரசர்), கிழான் (மக்கள் தலைவன்) கொங்கன் (கொங்கின் இனக்குழு சிற்றரசர்கள்), மழவன் (மழங்கொங்கின் சிற்றரசர்கள்) எனும் வேட்டுவச் சிற்றரசர்களாய் வாழ்ந்து வந்தனர். பின்பு சேரப் பேரரசு இவ்வேட்டுவ சிற்றரசுகளின் மேல் சங்ககாலத்தில் போர் செய்து கொங்கு நாட்டினை கைப்பற்றி ஆண்டனர்.

சேரனை வானவன், (வானை முட்டும் மலையினை உடையவன்), மலையன், வெற்பன் (வேடன்), மழவன், பொறையன், கொங்கன், வில்லவன், வஞ்சி வேந்தன், கொல்லிச்சிலம்பன், கோதை கேரளன் போன்ற பல பெயர்களில் கூறுகின்றனர். சேரநாடு மலைவளங் களும், மலைப்பொருட்களும் அதிகமாக கிடைக்கும் நாடு ஆகும். “கற்காலத்தில் தமிழன் காடுகளில் வாழ வில்லை மலையில் வாழ்ந்தான் அதனால் பிறநாட்டுக் கற்கால மனிதன் போல் காட்டு மிராண்டியாய் இல்லை இவனே இம்மண்ணின் மைந்தன்” என்று இராமச்சந்திர தீட்சிதர் கூறுவார். மற்ற உலக நாகரிகங்கள் நதிக்கரையில் தோன்றியது என்றால் தமிழர் நாகரீகம் மலைகளில் தோன்றியது ஆகும். பொதிய மலையில் தமிழ்மொழி பிறந்ததாக கூறுவதும், குறிஞ்சி கடவுள் முருகன் தமிழ் கடவுளாக

கூறப்படுவதும் இதனால் தான். குறிஞ்சிக் கோமரபினர்கள் ஆன வேட்டுவர்கள் இம்மண்ணின் மைந்தர்கள் ஆவர்.

சேரனின் முத்திரை **'வில்'** முத்திரை ஆகும். குமரி முதல் காளத்தி (வேங்கடம்) வரை உள்ள அனைத்து வேட்டுவ மக்களின் சின்னமும் இந்த வில் முத்திரைதான். வேளிர் என்ற சேரர் கொடி குறுநில மன்னனர்களும் வேட்டுவ மன்னர்கள் தான். ஆதிதிவாரகம் என்ற நிகண்டு சேரனை

**"பூமியன் உதியன் கொங்கன் பொறையன்**
**வானவன் குட்டுவன் வானவரம்பன்**
**வில்லன் குடநாடன் வஞ்சிவேந்தன்**
**கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்**
**போந்தின் கண்ணிக் கோ ஆன்பொருனைத் துறைவன்**
**சேரலன் மலையமான் கோச்சேரன் பெயரே"**

என்று பெயர் சொல்லிச் சேரன் வேட்டுவ மரபினன் என்பதை உறுதி செய்கிறது.

கொடிவேரி என்பது ஒரு மருத்துவ குணம் கொண்ட ஒரு கொடியாகும். கொடிவேரிச் செடிகளின் பூக்கள் நிறைந்த சோலையாக இன்றைய கொடிவேரி அணையின் தென்கரையில் விளங்கியது. அச்சோலையில் முன்னை வேட்டுவரால் கட்டப்பட்ட **முன்னை ஈசுவரர் கோயில்** இருந்தது. இந்த **முன்னை ஈஸ்வரர்** கோயிலை இன்று **அணைமுனீஸ்வரர்** என்று அழைக்கின்றனர். இன்றும் இக்கோயிலுக்கு பொங்கல் வைத்து பூஜை செய்த பின்னரே அணையில் இருந்து பாசனத்திற்கு நீர் அரக்கன் (அரசன்) கோட்டை வாய்க்காலுக்கும், தடப்பள்ளி வாய்க்காலுக்கும் நீர் திறந்து விடப்படுகிறது. சோழர் ஆட்சி காலத்தில் கொங்கில் நீர் பாசன வசதிகளைப் பழங்குடி பகுதிகளில் உருவாக்கினர். ஆறுகளில் இருந்து கால்வாய்களையும், குளங்களையும், கிணறுகளையும் வெட்டினர். நீர் பாசனம் பற்றிய கல்வெட்டுகள் பழங்குடிகள் வாழ்ந்த பல ஊர்களில் காணப்படுகின்றன திங்களூர், பாரியூர், அன்னூர், சேவூர், கோயில்பாளையம், இடிகரை, பேரூர், முடுதுறை, கருவூர், வெஞ்சமாங்கூடல், கொழுமம், குமரலிங்கம், கடத்தூர், ஆனைமலை, ஈரோடு, அந்தியூர், கருவலூர் போன்ற ஊர்களில் கால்வாய் வெட்டியமை பற்றியும் குளம் வெட்டியமை பற்றியும் பல கல்வெட்டுகள் பேசுகின்றன. இவற்றில் சிலவற்றை

பழங்குடியைச் சேர்ந்தவர்களே வெட்டியுள்ளனர். அரசர்களும், சாமந்தர்களும், பிராமணர்களும் கோயில்களையும் நீர் பாசன வசதிகளையும் செய்தனர்.

சேலம் - நாமக்கல் நெடுஞ்சாலையில் உள்ள பாச்சலில் கிடைக்கப்பெற்ற முதலாம் இராசராசசோழனின் கல்வெட்டு **'முனை வல்லரையர் நாட்டுப்பாச்சில்'** என்று முனை (முன்னை) வேட்டுவர் ஆண்ட முனை வல்லரையர் நாடு பற்றி குறிப்பிடுகிறது. கோசணம் கல்வெட்டு முன்னை வேட்டுவரை கோசணம் காணியாளர் என்று குறிப்பிடுகிறது. முன்னை, முஞ்ஞை, முன்னை, முன்ன என பலவாறு அழைக்கப்படும் இவ்வேட்டுவர்கள் இன்றைய மின்ன வேட்டுவராகலாம் இவர்கள் **'திருமுனைபாடி'** நாட்டினை ஆண்டனர் என்று இலக்கியங்களும், கல்வெட்டுகளும் கூறுகின்றன. இந்த திருமுனைப்பாடி நாடு விழுப்புரத்தை மையமாகக் கொண்டதாகும். இது சோழ நாடு மற்றும் தொண்டை நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. கொடிவேரி முன்னை ஈஸ்வரர் கோயில் முன்னை வேட்டுவர்களால் கட்டப்பட்டது ஆகும். கொடிவேரியில் கிடைத்த ஐந்து கல்வெட்டுகளும் வேட்டுவர்கள் பற்றிய கல்வெட்டுகளே ஆகும். செம்ப வேட்டுவர், கரை (ய) வேட்டுவர், சிறுத்தலை வேட்டுவர் பற்றியதாகும். இந்த ஐந்து கல்வெட்டுகளும் சோழர்கள் காலத்தைச் சேர்ந்தவையாகும்.



**காசிபாளையம் சோழமாதேவிக்கரை நடுகல், கோபி.**

கோபிசெட்டிபாளையத்தில் இருந்து சத்தியமங்கலம் செல்லும் நெடுஞ்சாலையின் வலது பக்கம் சோழமா தேவிக்கரைவெளி என்னும் கரைவெளிப் பகுதி அமைந்துள்ளது. இது கொடிவேரி தடப்பள்ளி வாய்க்கால் கரையில் உள்ளது. வட கொங்கு நீண்ட நெடிய காலம் தஞ்சை சோழரின் ஆட்சியின் கீழ் இருந்ததால் சோழர்கள் தொடர்புடைய பெயர்கள் பல ஏற்பட்டன அவற்றுள் ஒன்றுதான் **‘சோழமாதேவி கரைவெளி’**. முதலாம் இராசராசன் கல்வெட்டுப்பெற்ற கொடிவேரி நாயனார் கோயிலும், தடப்பள்ளி என்ற ஊரும் அழிந்துவிட்டன. இக்கரையில் உள்ள ஒரு வயல்வெளியில் கல்வெட்டு உள்ளதால் **‘எழுத்துக்கல் வயல்’** என்று இன்றும் அழைக்கப்படுகிறது. கீழே பொதிந்துள்ள கல்லில் சிதைந்த வட்டெழுத்து வடிவங்களை காணலாம்.

கோபி அருகே பழங்கால நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோபி அருகே காசிபாளையம் கிராமத்தில் நடுகல் ஒன்று இருப்பதாகச் சந்திரசேகரன், ஜோதி ஆகியோர் கூறிய தகவலின்படி அவர்களுடன் சென்று கல்வெட்டு ஆய்வாளர் ஜம்பை பழனியப்பன் ஆய்வு மேற்கொண்டார்.

நடுகல் குறித்து கல்வெட்டு ஆய்வாளர் ஜம்பை பழனியப்பன் கூறியபோது, மன்னன் போரில் வெற்றி பெறுவதற்காகத் தன்னையே பலி கொடுத்து உயிர் துறந்த வீரனுக்கும், வீரச்செயல் செய்து உயிர்த் துறந்த வீரனுக்கும் நடுகல் எடுக்கப்படுவது வழக்கம். தற்போது கோபி அருகே கிடைத்துள்ள நடுகல் 13-ம் நூற்றாண்டைச் சார்ந்தது. கொங்கு சோழ மன்னன் வீர ராஜேந்திரன் காலத்தது. இவனது ஆட்சியில் வேட்டுவர்கள் கோயில்களுக்குப் பல நன்கொடைகளை அளித்துள்ளனர். அவர்கள் அதிகாரிகளாகவும் பணியாற்றி உள்ளனர். கோபி அருகே காசிபாளையத்தில் பவானி ஆற்றின் தெற்குக் கரையில் வயல்கள் சூழ்ந்த பகுதியில் இந்த நடுகல் உள்ளது. ஒரு சிலர் இதற்குப் பொங்கலிட்டுப் படைத்து வழிபட்டு வருகின்றனர். இங்குள்ள மக்கள் இதனை வேட்டுவ அய்யன் நடுகல் என்றும் வீரக்கல் என்றும் கூறுகின்றனர். இது சுமார் 97 செ.மீ உயரமும், 89 செ.மீ அகலமும், 8 செ.மீ பருமனும் உடைய கருங்கல் பலகையில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. தெற்கு நோக்கிய வண்ணம் உள்ள வீரனின் இடக்கையில் வில்லும், வலக்கையில் குறுவாளும், இடுப்பில் வேடர்கள் உடுத்தும் உடையும் உள்ளன. தலையில் குடுமி அமைந்துள்ளது. நடுகல்லில் எழுத்துக்கள் இல்லை. 800

ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை உடைய இந்த நடுகல்லைச் சுற்றிலும் திருநீற்றைப் போன்ற மண்மேடு இங்கு இருந்ததால் மக்கள் இப்பகுதியை திருநீத்துமேடு என்றும் தின்னீத்துமேடு என்றும் வழங்குகின்றனர். இந்த நடுகல்லைப் பாதுகாத்து வருகின்ற மக்கள் போற்றத்தக்கவராவார்கள்.

மேற்கண்ட வரலாற்று ஆதாரங்கள் கொடிவேரி அணை சோழர்கள் ஆட்சி காலத்தில் சோழக் கொங்காள்வனால் கட்டப்பட்டது என்ற உண்மையை உறுதிப்படுத்துவனவாகும். செம்ப (செம்பியன்) வேட்டுவர் சோழ வர்க்கத்தினர் ஆவர். சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர்கள் வேட்டுவர் எனும் முதுகுடிகளின் குடியரசிலிருந்து உதித்த முடியரசர்களே ஆவர்

கொடிவேரி அணை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் பழுது பார்க்கப்பட்டது. 1880 இல் பழுது பார்த்ததை இங்குள்ள கொடிவேரி அணிப் பகுதியில் இருக்கும் ஆங்கிலேயர் கல்வெட்டு உறுதி செய்கிறது. In Memory of Booster 1889 and 1897.

1891-ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் பழுது பார்த்து விரிவுபடுத்தப்பட்டன. தடப்பள்ளி கால்வாயினால் 17,650 ஏக்கர் நிலமும், அரக்கன் கோட்டை கால்வாயினால் 6,850 ஏக்கர் நிலமும் நீர் பாசன வசதி பெறுகின்றன.

அணையின் நீளம் 151. 20 மீட்டர், அணைச்சுவர் அகலம் 20 அடி, அணையின் ஆழம் 4.5 மீட்டர், அணை நீர் வெளியேறும் மதகு உயரம் 3.5 மீட்டர், 150 மீட்டர் 20 அடி அகல சுவர் அனைத்தும் பெரிய பெரிய கற்பாறையால் அடுக்கப்பட்டுள்ளது. இப்பாறைகளைத் துளைகளிட்டு இரும்பு கம்பிகளால் இணைத்து ஒன்றன் மேல் ஒன்றை அடிக்கி அணையை உருவாக்கியுள்ளனர். கற்களால் உருவாக்கிய கல்லணை எனச் சொல்வதில் தவறில்லை. இந்த அணையின் இடது புறத்தில் அரக்கன் கோட்டை வாய்க்காலும், வலது புறத்தில் தடப்பள்ளி வாய்க்காலும் அமைந்துள்ளன. இந்த அணைக்கட்டு மூலம் ஈரோடு மாவட்டத்தில் கோபி, பவானி வட்டங்களில் 25 ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட ஏக்கர்கள் நிலங்கள் நீர் பாசன வசதி பெறுகின்றன.

அணையிலிருந்து வெளியேறும் நீர் சுமார் 4.5 மீட்டர் உயரத்தில் இருந்து கீழே விழுவதன் மூலம் ஒரு அழகான நீர்வீழ்ச்சி

திகழ்கிறது. தற்போது ஈரோடு மாவட்டத்தின் மிகச்சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகக் கொடிவேரி அணை விளங்குகிறது.

> கொடிவேரி அணைமுனியப்பன் கழுத்தில் ருத்ராட்சமாலை இருக்கிறது. இதனால் இங்கு ரத்த பூசையும், பலி கொடுப்பதும் இல்லை. இவ்விடத்தில் எந்த மந்திரமும் பலிக்காது அவ்வளவு சக்தி வாய்ந்த முனியப்பர் என்று மக்கள் நம்புகின்றனர். இரத்த பூசையில்லை என்பதால் கல்வெட்டு கூறும் முன்னையீசுவரராகக் கூட இருக்கலாம் என்று எண்ண இடமுள்ளது.
>
> ("பவானி போற்றதும்"
> முனைவர். க.வீ. வேதநாயகம், பக்கம் - 65 - 66).

ஊர் கதை, முனியப்பன் கதை என்று கூறி முன்னை வேட்டுவர் கட்டிய முன்னை ஈசுவரன் கோயில் இன்று முனி ஈஸ்வரன் கோயில் என்றும், அணை முனியப்பன் கோயில் என்றும் வேட்டுவர்களின் மீதான காழ்புணர்ச்சியால் திரித்து அழைக்கப்படு கின்றது என்பதுதான் உண்மையாகும்.

கொடிவேரி கோட்டையும், கோயில்களும் தடப்பள்ளி, குளவாற்றூர் எனும் ஊர்களும் மைசூர் மன்னர்களின் பினாமி கொள்ளையன் நஞ்சராயனால் கொள்ளையிட்டு அழிக்கப்பட்டன. இவ்வூர்களெல்லாம் வெள்ளத்தால் அழிக்கப்படவில்லை என்பதே உண்மையாகும். நஞ்சராயனால் கொடிவேரி அணைப்பகுதியில் குடி அமர்த்தப்பட்ட கன்னட மக்களின் வாய் மொழியை வைத்து கொண்டு **'புக்கானன்'** தனது பயணக் குறிப்பில் கொடிவேரி அணை நஞ்சராயனால் கட்டியது என்று வெறுமனே குறிப்பிடப் பட்டுள்ளது. கொடிவேரி அணையை கொங்கில் அடிக்கடி வந்து கொள்ளையிட்டு சென்ற கொடியவன் நஞ்சராயன் கட்டியது என்று கூறுவது வரலாற்று உண்மையாகாது.

பயணக் குறிப்பில் கொடிவேரி அணை நஞ்ச ராயன் (நஞ்சராசன்) கட்டியது என்று வெறுமனே குறிப்பிடப் பட்டுள்ளதால் மட்டும் கொடிவேரி அணையை கொங்கில் அடிக்கடி வந்து கொள்ளை இட்டுச் சென்ற கொடியவன் நஞ்சராயன் கட்டியது என்று கூறுவது வரலாற்று உண்மையாகாது. புக்கானன் வெள்ளையர்கள் திப்புசுல்தானைக் கொன்று மைசூரையும் கொங்கையும் கைப்பற்றிய பின் கொங்கில் வரி வசூல் வேட்டை செய்ய நஞ்சை புஞ்சை கணக்கெடுப்பு தறிவரி ஈட்ட

நெசவாளர்களின் தறி எண்ணிக் கையைக் கணக்கெடுக்க அனுப்பப்பட்டவனே தவிர அவன் தமிழர் வரலாறு எழுத வந்த வரலாற்று ஆசிரியன் அல்ல. ஒரு அணை என்பது ஒரு நிலையான நேர்மையான அமைதியான ஆட்சிக் காலங்களில் பல ஆண்டுகாலம் செய்யக்கூடிய ஒரு செயலாகும். ஒரு குளம் வெட்டினால் கூட எந்தக் காலத்தில் யார் ஆட்சி செய்த காலத்தில் வெட்டப்பட்டது என்ற கல்வெட்டுச் சான்றுகள் உள்ள கொங்கில் எந்த வரலாற்று சான்றுகளோ வரலாற்று தடயங்களோ இல்லாது வெறுமனே பொய் உரையை வைத்துக்கொண்டு உறுதி செய்வது வரலாறு ஆகாமல் கதையாய் முடிந்துவிடும் என்பதுதான் உண்மை. வாய்மொழியும் பொய் மொழியும் வரலாறு ஆகாது. **சோழமாதேவிக்கரை என்பது நீண்ட நெடிய கரைவழி** ஆகும்.

சோழர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சோழமாதேவிக்கரை ஆற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது என்று கூறுவதெல்லாம் ஏற்புடைய செயலாகாது. பெருமுகை வெள்ளை வேட்டுவர் ஆதிக்கத்தில் உள்ள ஊர் என்பது அந்தியூர் வடகரை நாட்டு சுந்தராயர் பட்டயத்தில் கண்டுள்ளதால் அரசன் கோட்டை (அரக்கன் கோட்டை) வாய்க்கால் வெள்ளை வேட்டுவர் ஆதிக்கத்தில் உள்ள பெருமுகை வரை வெட்டப்பட்டது ஆகும். கொள்ளையன் நஞ்சராயனால் தனது மைசூர் தீவட்டிக் கொள்ளையர்களுடன் வந்து தீயிட்டு கொள்ளையடிக்கப்பட்ட பெருமுகைக்கு கால்வாய் வெட்டினான் என்பது எப்படி உண்மை யாகும்.

புலவர் செ.இராசு அவர்களால் எழுதப்பட்ட **'வேட்டுவர் சமூக ஆவணங்கள்'** எனும் நூலில் அவரே சோழக் கொங்காள்வான் கல்வெட்டு கொடிவேரி பவானி நதிக்கரையில் எடுக்கப்பட்டது என்று உறுதிப்படக் கூறியும் எழுதியும் உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். நஞ்சராயனின் கொள்ளையில் பெருமுகை வெள்ள வேட்டுவரின் வேட்டராயன் (வேட்டுவராயன்) சஞ்சீவி ராயன் கோயில்களும் கொள்ளையனின் கொள்ளையில் இருந்து தப்பவில்லை. கொடிவேரி கோட்டை, அரக்கன் கோட்டை, முன்னை ஈஸ்வரன் கோயில், தடப்பள்ளி, லக்கம்பட்டி, பாரியூர் என வேட்டுவர் கோட்டைகளும், கோயில்களும், ஊர்களும் நஞ்சராயனின் கொள்ளையில் அழிவுற்றன.

## மைசூராரின் போர்க் கொடுமைகள்:

1761 சூன் மாதம் முதல் ஐதர் மைசூரின் முழு அதிகாரமும் வகிக்கத் தொடங்கினான். மைசூர் அரசன் பேருக்கு மாத்திரம் அரசனாயிருந்தான். பல வகையிலும் தன்னுடைய நிலைமையை உறுதிப்படுத்திக் கொண்டு ஐதர் மைசூர் ராச்சியத்தையும் பெருக்கி வைத்துக் கொண்டான். ஆகவே 1761 முதல் தளவாய்கள் ஆட்சி தொலைந்தது. ஐதரே மைசூருக்கு உண்மைத் தலைவன் ஆனான்.

இவ்வாறு தளவாய்களின் ஆட்சி அரை நூற்றாண்டு வரையில் மைசூரில் ஏற்பட்டிருக்க அந்தக் காலம் முழுவதும் கொங்கு நாடு அவ்வாட்சியின் கொடுமைகள் இருந்தது என்று அறிய வேண்டும். தளவாய்கள் மிகவும் பேராசை உற்றவர்கள். அரசன் வெறும் பொம்மையாக வைக்கப்பட்டிருந்தான். அரசனை வைப்பதும் நீக்குவதும் கூட தளவாய்களின் அதிகாரத்தில் இருந்தது. இருந்தாலும் அந்த பொம்மை அரசர்களை முழுவதுமாக நீக்கிவிடவுமில்லை. இவ்விதமான இராஜ தந்திரம் சில இடங்களில் சில காலங்களில் நடைபெறுவதுண்டு.

மைசூர் தளவாய்கள் அனேகமாக அரசவம்சத்திற்கு உறவினர் களாகவே இருந்தார்கள் பசுவராஜன் தேவராஜன், நஞ்சராஜன் இவர்களே மிகுந்த அதிகாரம் செலுத்தி வந்தார்கள் இவர்கள் ஆட்சியில் சமாதானம் என்பது இருக்கவில்லை சண்டை சச்சரவு குழப்பம் படையெடுப்பு முதலியவைகளே நிரம்பி இருந்தன பேராசையினால் அக்கம் பக்கத்தில் நாடுகளை பிடிப்பதும் கொள்ளையடிப்பதுமே சிறந்த தொழிலாக அவர்கள் கைக்கொண்டிருந்தார்கள் அந்தக் காலம் மிகக் கொடிய காலம் தட்சிணத்திலும் சுற்று பக்கங்களிலும் அமைதி என்பது இல்லாத காலம் வட மேற்கே மராட்டியர்கள் நெருங்கிக் கொண்டே இருந்தார்கள் கொள்ளையடித்து பணம் சேர்ப்பதே அவர்கள் தொழில் வட கிழக்கே நிஜாம் ராஜ்யத்தில் ஏற்பட்ட பட்டத்துச் சண்டைகள் மக்களை அலைக்கழித்தன கிழக்கே ஆர்க்காட்டுப் பிரதேசங்களில் முகமதியர்களின் ஆதிக்கச் சண்டை நடந்து கொண்டிருந்தது. இந்தச் சந்தர்பங்களை ஒட்டி ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் எரிகின்ற வீட்டில் பிடுங்கினது லாபமென்று நாட்டின் பகுதிகளை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். இந்த நிலையில் தளவாய்களின் நிலைமை கடினமாகத்தான் இருந்தது. ஆகவே அந்தக் காலத்தை அசுர காலமென்றே சொல்ல வேண்டும்.

அப்படிப்பட்ட காலத்தில் தளவாய்களின் கீழே கொங்கு நாடு இருந்ததால் அதன் பரிதாபமான நிலையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? நாட்டில் அடிக்கடி பகைவர்களுடைய சேனைகள் வருவதும், போவதுமாகவே இருந்தன. படைகள் வருகின்றன என்றால் நாட்டு மக்கள் வீடுகளுக்குள் ஒளிந்து கொள்வார்கள். கிராமத்தில் கொள்ளைகள் அடிக்கடி நேரிடும். அப்போது குடிகள் காடுகளுக்கு ஓடி விடுவார்கள். நிலங்களில் விதை விதைத்தால் அதன் விளைவு வீட்டிற்கு வரும் மட்டும் அது தன்னுடையதென்று உழவன் சொல்லமாட்டான். பயிராக விளையும் போது சேனையில் வரும் குதிரைகளுக்கு அறுத்துச் செல்லப்படும். தானியமாக விளைந்து விட்டால் படை வீரர்களுக்கு உணவுக்காகக் கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு இருக்கையில் நாட்டில் எவ்வாறு அமைதியும், அபிவிருத்தியும் ஏற்படும்? மேலும் படையெடுப்புக் காலங்களில் கொடுமையான வரி வசூல் விதிக்கப்படும். வரிக்கு தகுந்த சகாயம் எதுவும் நாட்டு மக்களுக்கு ஏற்படாது. பாண்டியர், சோழர் காலத்தில் ஏற்பட்டிருந்த நீர்பாய்ச்சல் வசதிகளோ ஆலய திருப்பணிகளோ தளவாய்கள் காலத்தில் ஏற்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை அரை நூற்றாண்டாக இருந்திருக்கும். பின்னர் ஐதர் வந்த பிறகும் அது செவ்வைப்பட்டதாகத் தெரியவில்லை. (கொங்கு நாட்டு வரலாறு (இரண்டாம் பகுதி) கோவைக் கிழார் பக்கம் 152-155)

> திப்பு, மக்களையோ அல்லது நாட்டின் செழிப்பையையோ கவனித்ததாகத் தெரியவில்லை. போர் புரிவதும், பணத்தை வசூல் பண்ணுவதிலுமே காலம் கழித்தான். ஐதர் இந்துக்களையாவது இந்துக்கள் கோயில்களை யாவது தொடவே இல்லை. ஆனால் திப்புவோ, மதப்பித்துப் பிடித்தவனாய் இந்துக்களையும் இந்துக் கோயில்களையும் துன்புறுத்தினான். உதாரணமாகப் பேரூர் பட்டீசுவரர் கோயிலுக்கு சேர்ந்திருந்த இனாம் கிராமத்தை 1784ல் ஜப்தி செய்து அதன் வருமானத்தின் பாதியை தான் எடுத்துக் கொண்டான்.
>
> (கொங்கு நாட்டு வரலாறு (இரண்டாம் பகுதி) கோவை கிழார் பக்கம் 181)

**"சங்ககிரி மலையைக் 'கட்டி முதலி' குன்ன (குன்னி) வேட்டுவப் பாளையக்காரன்**

**ஆண்டுவந்தான்.** கட்டி என்பது கட்டி நாட்டை சங்ககாலத்தில் ஆண்டபரம்பரையினர் என்பதை குறிக்கும். முதலி என்பது ஒரு பட்டபெயராகும். முதலி எனும் பட்டம் எதிலும் முதன்மையானவன் என்பதை குறிக்கும். சங்ககிரியில் இருந்து திருச்செங்கோடு செல்லும் வழியில் உள்ள மோரூரை காங்கேயன் என்னும் பொன்ன வேட்டுவன் ஆண்டு வந்தான், மைசூர் போரில் அவ்வூர் முழுவதும் அழிக்கப்பட்டபோது அப்போரில் இறந்த பொன்ன இராசாவுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லை இன்றும் குட்டிமேய்க்கன்பட்டி பொன்ன வேட்டுவரும், குன்ன வேட்டுவரும் ஆண்டிற்க்கு ஒருமுறை போர் ஆயுதங்களுடன் வந்து வணங்கிச்செல்கின்றனர். குன்னி வேட்டுவ கடைசிப் பாளைக்காரனைத் திப்பு சுல்தான் கொன்று விட்டான் என்று வரலாறு கூறுகிறது. விஜய நகரத்தார் காலத்தில் 1522 வது ஆண்டில் இந்த சங்ககிரி துர்க்கத்திற்கு குன்றத்தூர்த் துர்க்கம் (குன்ன வேட்டுவ மன்னன் ஆண்டதுர்க்கம்) என்று பெயர் இருந்தது. "சங்ககிரி மலை அடிவாரத்தில் உள்ள 30 அடி பாறையை முதலிக் குண்டு என்று கூறுவார்கள். இங்கே குறுநில மன்னனாக இருந்த கட்டி முதலியை திப்புசுல்தான் இக்குன்றின் மேல் நிறுத்தி அன்ன ஆகாரம் இல்லாமல் தண்டித்துக் கொன்று விட்டானாம்.

(கொங்கு நாட்டு வரலாறு (இரண்டாம் பகுதி
பக்கம் 198-199) கோவை கிழார்)

கட்டி முதலியார்களைப் பற்றி குறிப்பிடும் பகுதியில் வில்சன் என்ற ஆங்கில அறிஞர் கொங்கு மண்டலம் சேர, சோழ, பாண்டியர் காலத்திற்குப் பின்னாலும் வேட்டுவப் பாளையக்காரர்களால் சீரும் சிறப்புடன் ஆளப்பட்டு வந்தது என்றும் அவர்களே சங்ககிரி, சாமப்பள்ளியில் தென்மனை காவேரிபுரம், ஆண்டியூர் ஆகிய இடங்களில் கோட்டைகள் கட்டிக் கொண்டு ஆண்டனர் என்றும் கூறியுள்ளனர். (Wilson. p. 425 No. XVIII)

இனி நாம் யா. லட்சுமி நாராயணன் அவர்கள் எழுதிய கொங்கு நாட்டு வரலாறு எனும் நூலில் மைசூர் காரர்கள் ஆட்சி செய்ததைப் பற்றியும் நஞ்சராஜன் எனும் பேராசைக்காரன் பற்றியும் காண்போம்.

மைசூர் மன்னன் தொட்ட கிருஷ்ணனுக்குப் பிறகு அவனுக்குப் பிள்ளை இல்லையாதலால் தாயாதிக்காரனான சாம்ராஜ் உடையார் என்னும் சிறுவனைப் பட்ட மேறச் செய்தவர்கள் சர்வாதிகாரிகளாக இயங்கிய தேவராஜ், நஞ்சராஜ் சகோதரர்களாவர். இவர்கள் இருவரையும் அதாவது இவர்களுடைய சர்வாதிகாரத் தலையீட்டைச் சாம்ராஜ் எதிர்க்கத் துணிந்ததும் அவர்கள் கதிகலங்கிப் போய் அவனைச் சிறையில் அடைத்து விட்டு ஒரு "ஐந்து வயதுக் குழந்தையை" அரசன் ஆக்கிக் கொண்டு அவன் சார்பில் அரசின் அத்தனை அதிகாரங்களையும் இவர்களே வைத்துக் கொண்டு தம் இஷ்டப்படி எல்லாம் ஆடினர்.

1746-ல் மைசூரின் கொங்கு நாட்டுப் பகுதிகள் கிளர்த்தெளிந்த போது நஞ்சராஜன் தாராபுரம் சென்று அந்தப் பாளையக்காரனைத் தாக்கினான். இதுதான் சமயம் என்று நிஜாம் மைசூரில் நுழைந்தான். ஆனால் தாராபுரத்தில் வெற்றி கொண்டு விட்ட நஞ்சராஜ் மைசூர் திரும்பியதும் நிஜாம் சமாதானம் பேசினான். தேவனஹள்ளி என்னுமிடத்தில் போரிடச் சென்ற நஞ்சராஜ் ஐதர் அலி என்னும் வீர இளைஞனைக் கண்டு அவனைத் தன் ராணுவத்தில் ஒரு பொறுப்பான பதவியில் நியமனம் செய்தான். இதே ஐதர் அலிகான் தான் பின்னர் பின்னாளில் மைசூரின் சர்வாதிகாரியாக மாறிவிட இதே நஞ்சராஜ் அன்றே வழிகாட்டியது மட்டுமின்றி வழி செய்தும் கொடுத்தான் என்பது வரலாற்று உண்மையாகும்.

மைசூர் உடையார்கள் ஆட்சியிலும் சரி, பிந்தைய மைசூர் மந்திரிகளின் சர்வாதிகார ஆட்சியிலும் சரி, கொங்கு நாடு மிக்க நல்ல நிலைமையில் இருந்தது என்று கூறுவதற்கில்லை.

நஞ்சராஜன் மிகவும் பேராசைக்காரன். தன்னுடைய பதவிக் காலத்தில் அவன் சர்வாதிகாரியாக நடந்து கொண்டதே தன் சுயநலத்துக்குத்தான். ஏனெனில் இவன் செய்த சில கொடுமைகள் இவனுடைய சகோதரனான தேவராஜனுக்கே பிடிக்கவில்லை கொங்கு நாட்டுப் பாளையக்காரர்களை மிகவும் கொடுமைப்படுத்தி இருக்கிறான்.

## நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டுக்கு அருகில் வேட்டுவர் நடுகல் கண்டுபிடிப்பு

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டுக்கு அருகில் உள்ள மோரூர்ப் பகுதியில் வேட்டுவர் தொடர்பான நடுகல் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது.

ஏறத்தாழ 3 1/2 அடி உயரமும் 3 அடி அகலமும் கொண்ட இந்த நடுகல்லின் வலப்புறத்தும் இடப்புறத்தும் செம்புரக் கல்லால் ஆன பலகைக் கற்கள் நடப்பட்டுள்ளன. இவ்விரண்டு கற்களின் மேல் கல்பலகை ஒன்று கூரையாகப் போடப்பட்டுள்ளது. நடுகல் மழையாலும் வெயிலாலும் பாதிக்காமல் இருப்பதற்காகக் கல்கூரை போடப்பட்டுள்ளது. இந்நடுகல் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு உட்பட்டது. நடுகல்லின் வலப்புறம் உள்ள பலகைக் கல்லில், கல்வெட்டு உள்ளது. ஆனால் அதனைப் படிக்க இயலாதவாறு எழுத்துகள் தேய்ந்த நிலையில் உள்ளன.

இந்த நடுகல் பற்றி அப்பகுதி மக்கள் கூறுவதாவது, ஒரு காலத்தில் அங்கு வேட்டுவர் குடும்பங்கள் நூற்றுக்கணக்காக இருந்தன. அங்கு நடந்த போரில் வேட்டுவர் தலைவன் வீரமரணம் அடைந்தான். அவனுடைய உருவமும் அவன் மனைவியின் உருவமும் நடு கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

தங்களுடைய தலைவன் இறப்பிற்குப் பிறகு அங்கு வாழ்ந்த வேட்டுவர் மக்கள் அனைவரும் அருகில் உள்ள குட்டி மேய்க்கன்பட்டிக்குக் குடியேறி விட்டனர். அவர்கள் வழியில் வந்தவர்கள் இன்றும் குட்டி மேய்க்கன் பட்டியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இந்த நடுகல்லை வேராளியப்பன் என்று போற்றுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் சிவராத்திரியன்று இந்த நடுகல் இருக்கும் இடத்திற்குப் பலவகை ஆயுதங்களுடன் வந்து ஆயுதங்களை நட்டு இந்த நடுகல்லிற்குச் சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

இந்த வழிபாட்டு நிகழ்ச்சியை வேட்டுவர்கள் நடத்துகின்றனர். திருச்செங்கோட்டில் உள்ள வழக்குரைஞர் K.K.பழனிச்சாமி என்பவர் குடும்பத்தினர் முன்னின்று இவ்வழிபாட்டை நடத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



தங்களுக்காகப் போராடி உயிர் துறந்த த… னாகிய வேராளியப்பனை வழிபட்டுவருவது அம்மக்களின் நன்றி மறவாத் தன்மையை விளக்குகிறது. என்று, கல்வெட்டு ஆய்வாளர் நம்பை புலவர் அ.பழனியப்பன் கூறுகிறார். இவருடன் இந்த நடுகல்லைக் காண்பதற்காக அடசப்பாளையம் சந்திரசேகர், ஜோதி ஆகிய இருவரும் வந்திருந்தனர். என கல்வெட்டு ஆய்வாளர் கூறுகிறார்.



அ. பழனியப்பன்

> மைசூர்த் தளவாய் சர்வாதிகாரிகள் ஆட்சியில் கொங்கு நாடு பல கஷ்டங்களை அனுபவித்தது. மக்கள் எந்த நாளும் சண்டைகளைத் தங்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத சச்சரவுகளை எதிர்பார்த்து அஞ்சி அஞ்சி வாழ வேண்டிய நிலையை இவர்கள் உண்டாக்கி விட்டார்கள். விவசாயம் செய்தவன் அப்பொருளைப் பெறுவதில்லை. வாணிபம் செய்தவன் அதன் விலையைப் பெறுவதில்லை. எல்லாம் அந்த ஏதேச்சாதிகாரிகளின் தண்டச் செலவுகளுக்காகவேப் பறிமுதல் செய்யப்படும். எனவே அவர்கள் காலத்தில் கொங்கு நரக வேதனைப் பட்டது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுவதில் முழு நியாயமும் உண்டு. இவர்களுக்கு பின் கொங்கின் **'விதி'** ஐதர் அலி வசமாகியது என்பது வரலாறு.
>
> (**'கொங்கு நாட்டு வரலாறு'** யா.லட்சுமி நாராயணன்-பக்கம்:147-148)

ஆங்கிலேயர்கள் திப்பு சுல்தானை வீழ்த்தி சீரங்கப்பட்டணம் தங்கள் வசம் கிடைத்ததும் டாக்டர் புக்கானன்ன அவர்கள் கைப்பற்றிய நாடுகளுக்கு அனுப்பி எல்லாவற்றையும் சோதித்து ஒரு அறிக்கை எழுதும் படி நியமித்தார்கள். டாக்டர் புக்கானன் கி.பி 1800 அக்டோபர் மாதத்தில் யாத்திரை செய்யத் தொடங்கினான். அவர் எழுதிய பயண நூலில் கொங்கு நாட்டைப் பற்றி எழுதின சில குறிப்புக்களை மட்டும் இங்கு பார்ப்போம்.

கொள்ளேகாலம் தாலுகாவிலிருந்து கிழக்கே செல்லும் கணவாய்ப் பாதை காவேரிக் கரையிலுள்ள காவேரிப்புரத்திற்குச் செல்லுகிறது. இப்பாதையின் இடையில் நாடு காவல் என்ற ஒரு கெடிஸ்லதமிருக்கிறது. அதில் மக்கள் தங்குவதற்கு ஒரு சத்திரமும், உணவு சமைப்பதற்கு ஒரு பிராமணக் குடியுமுண்டு. இதுதான் கருநாடகத்திற்கும் சேர நாட்டிற்கும் எல்லை. இந்த வழியாகத்தான் மைசூர் சேனைகள் வந்து போய்க்கொண்டிருந்தன. காவேரிபுரத்தில் வியாபாரம் அதிகம். ஒரு சுங்கமும் கோட்டையும் உண்டு.

> காவேரிப்புரத்திலிருந்து தெற்கே போகையில் சரம்பள்ளி, நெருஞ்சிப்பேட்டை, பவானி கூடல் என்ற இடங்களில் கோட்டைகள் உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் பரம்பரை மணியக்காரன், கணக்கன், தோட்டி என்ற கிராம அதிகாரிகள் உண்டு. அவர்களுக்கு வரியிலிருந்து

100க்கு இரண்டு, இரண்டரை, ஒன்றேகால் வீதம் வருவாய் உண்டு. திப்பு கோயில் மானியங்களை நிறுத்தி விட்டான்.

(கொங்கு நாட்டு வரலாறு.
இரண்டாம் பகுதி-கோவைக்கிழார் பக்கம்:184-187)

நஞ்சரயன் அடிக்கடி நிகழ்த்திய கொங்கு படையெடுப்பில் கொங்கு வேட்டுவர்களின் ஊர்களும், கோட்டைகளும் மைசூர் தீவட்டி கொள்ளைக்காரர்கள் துணை கொண்டு சூறையாடுதல், கொலை, கொள்ளை முதலிய கொடுஞ்செயல்கள் புரிந்ததைக் காண்போம். காஞ்சிக்கோயில் நாட்டு பெரிய பெருமாள் கம்பனுடைய அந்துவ வேட்டுவர்களின் கோட்டைகளும், கிளை கோட்டைகளும், காஞ்சிக்கோயில் (காஞ்சி மரங்கள் அதிகம் உள்ள நாடு), அந்தியூர், புலியன்பட்டி (புளியம்பட்டி) மற்றும் கிளை கோட்டைகள், பெருந்தலையூர், ஜம்பை, அரக்கன் கோட்டை (அந்துவ அரசன் கோட்டை), கொடிவேரி ஆகிய இடங்களில் இருந்தன.

திப்பு சுல்தானை வீழ்த்திய பின்னர் கொங்கு நாடும், மைசூர் பகுதியும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது. அப்போது இப்பகுதி நிலங்கள் வளங்கள் பற்றி ஆய்வு செய்ய கிழக்கிந்திய கம்பெனி டாக்டர். புக்கானனை அனுப்பியது. புக்கானன் அவர்கள் கிழக்கிந்திய கம்பெனியின் ஆய்வு அலுவலராக மைசூர் பகுதியிலும், பவானி பகுதி முதல் நீலமலை வரையிலும் மற்றும் கோவை பகுதிகளையும் கண்டறிந்து மக்களிடம் கருத்துக்கள் கேட்டு பல குறிப்புகளைத் தம் பயண குறிப்பில் கூறியுள்ளான். அக்குறிப்பில் டணாய்க்கன் கோட்டை பற்றி "அக்கோட்டை மதுரை ராஜாவின் கீழிருந்த தண நாயகன் என்ற அந்தி வேட்டுவப் பாளையக்காரரால் கட்டப்பட்ட தாகும். அந்த பாளையக்காரரின் சந்ததியினரிடமிருந்து மைசூர் ராஜா அதைக் கைப்பற்றினார் என்று அவ்வூர் மக்கள் கூறினர்".

வீர நஞ்சராய உடையார் (கி.பி. 1489 - 1500) கல்வெட்டும் தணாய்க்கன் கோட்டையில் உள்ளது. மைசூர் மன்னர்களின் அதிகாரிகள் **தணநாய்க்கன் கோட்டை, சத்தியமங்கலக் கோட்டை, புளியம்பட்டி கோட்டை, கொடிவேரி கோட்டை, அந்தியூர் கோட்டை, ஊராட்சிக் கோட்டை** முதலியவற்றில் தங்கி வரி வசூல் செய்வார்கள் என்ற வரலாற்று குறிப்பும்

காணப்படுகிறது. (பவானி போற்றதும். கா.வி. வேதநாயகம் பக்கம் 27).

“வடகரை நாட்டில் உள்ள ஊர்களில் பவானி ஆற்றின் கரையோரம் உள்ள சம்பை 18 பட்டிகளைக் கொண்டு சம்பை பேரூராட்சியாக விளங்கியது”.

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் பத்ரகாளி அம்மனுக்குத் திருவிழா நடைபெறும். பதினெட்டுபட்டி மக்களும் வந்து விழாவில் பங்கேற்பது சிறப்பாகும். இக்கோயில் முதலில் கரிய காளியம்மன் என்று அழைக்கப்பட்டது. அந்தியூர் பத்ரகாளியம்மன், பவானி செல்லாண்டியம்மன் போன்ற பழமையான கோயில்களில் இதுவும் ஒன்று.

ஈஸ்வரன் கோயில் ஒன்றும் இருந்தது தமிழ் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் தன் நாட்டுக் குறிப்பில் சம்பைக்கு வந்து ஈஸ்வரனை வழிபட்டுச் சென்றதாக குறித்துள்ளார்.

சம்பை ஊரின் கிழக்கே உள்ள கோட்டைமேடு அதன் பழமையை உணர்த்தும் ஊரின் வடக்கே முன்னோர்களைப் புதைத்த பகுதி கண்டறியப்பட்டது பாண்டவர் குழி என்று அப்பகுதி அழைக்கப்படுகிறது. ஐந்து ஏக்கர்ப பரப்பு உள்ள அப்பகுதி தற்போது விலை நிலமாக பயன்பாட்டில் உள்ளது.

மைசூர் நஞ்சராயன் கன்னட நாட்டிலிருந்து கோட்டையைப் பழுது பார்க்கும் **‘கன்னடப் பறையர்’** என்னும் வேலையாட்களை கூட்டி வந்து தென்னிலை கோட்டையின் அருகில் குடியமர்த்தி கோட்டையை பழுது பார்ப்பது போல் வேலை செய்து கொண்டு **‘கொங்கு ராயன்’** (தென்னிலை வேட்டுவ பாளையக்காரன்) மற்றும் அவர் குடும்ப உறுப்பினர்களின் நடமாட்டத்தை ரகசியமாக கண்டுபிடித்து அவர்களை தந்திரமாக கொல்லவும் சதி திட்டம் தீட்டினான். ஒரு நாள் தென்னிலை கோட்டையில் இரவு உறங்கிக் கொண்டிருந்தபோது கோட்டை தூணை அவர்மீது விழச்செய்து தந்திரமாக கொங்கு ராயனை கொன்று விட்டனர். கொங்கு ராயன் மறைந்தாலும் அவரது புகழ் கொங்கு நாடு எங்கும் பரவி பறைசாற்றி வருகிறது. இவர்கள் வம்சாவளியினர் தென்னிலையில் நீலியம்மனையும், மருதூரில் மதுர காளியம்மனியும், சத்தி - மதிப்பானூரில் பத்ரகாளி அம்மனையும், லக்கம்பட்டி கள்ளிப்பட்டியில் நீலி அம்மனையும் தங்கள் குலதெய்வமாக வணங்கி வருகின்றனர். இக்குல மக்கள் வெங்கச்சி வேட்டுவர்

என்றும் வெங்காஞ்சி வேட்டுவர் என்றும் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அழைக்கப்படுகின்றனர்.

இவர் வழியில் வந்தவர்கள் நீலாக் கவுண்டர், நீலியப்ப கவுண்டர், நீலா, நீலியம்மாள் போன்ற பெயர்களை தங்களது பெயர்களாக தொடர்ந்து வைத்துக் கொண்டு தனது வம்சத்தினரை அழியாமல் காத்து வருகின்றனர்.

கிழங்க வேட்டுவர்கள் ஆண்ட கிழங்க நாட்டில் உள்ள தலைய நல்லூரில் வேம்ப வேட்டுவர்கள் ஊராளியாக இருந்து பொங்காளி அம்மன் (பொன் காளியம்மனை) தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர் கொள்ளையன் நஞ்சராயன் படையெடுப்பில் அவ்வூர் அளிக்கப்பட்டது கோயில் கொள்ளையடிக்கப் பட்டது காஞ்சிக்கோயில் நாடு வடகரை நாடு ஒடுவங்கநாடு எனும் வேட்டுவர்கள் ஆளும் நாடுகளில் குடியேறினர் தங்கள் சொத்து சுகங்களையும் கோயில்களையும் இழந்தனர் அந்த வெற்றிடங்களில் புதிய குடிகள் மெல்ல மெல்ல குடியேறினர்.

பெருந்தலையூரில் (காஞ்சி கோயில் நாடு) இருந்த பெருந்தலை வேட்டுவர்கள் நஞ்சராயன் மற்றும் திப்புவின் படையெடுப்பின் கொடுமைகளையும் மதமாற்றக் கொடுமைகளையும் சகிக்க முடியாமல் திருச்செங்கோடு சென்று அங்குள்ள செங்கோட்டு வேலவனை வணங்கி விட்டுக் கொல்லிமலை செல்லத் திட்டமிட்டு சென்றனர். கரடி வேட்டுவர்கள் வாழ்ந்து வரும் கரடிப்பட்டி அருகில் சென்றதும் இரவு நேரமாகியதால் ஓய்வு எடுத்து செல்ல இருந்தனர். ஓய்வு எடுத்த பின்னர் மறுநாள் காலையில் இவர்களுடன் வந்த கால்நடைகள் மேலும் கொல்லிமலை நோக்கி செல்ல மறுத்ததால் கரடிப்பட்டி அருகில் செங்கோட்டு வேலவனுடைய பெயரில் செங்கோடம் பாளையம் என்று பெயரிட்டு இன்னும் வாழ்ந்து வருகின்றனர். ஒளிர் வாள் கொங்கர், ஆகலும் கொங்கர் எனும் கொங்கு வேட்டுவர்களின் கால்நடைகளைக் குறிஞ்சியில் புலையர்களும், முல்லையில் இடையர்களும் மேய்த்தனர். இப்பெருந்தலை வேட்டுவர்கள். தங்கள் குலதெய்வ வழிபாட்டை மறக்க முடியாமல் ஆண்டுக்கு ஒரு முறை அதாவது பெருந்தலையூரில் உள்ள பொங்காளி அம்மனை வழிபட்டுச் செல்கின்றனர்.

தலையநல்லூரில் இருந்தும் பெருந்தலையூரில் இருந்தும் குடி பெயர்ந்தவர்கள் தங்கள் குலதெய்வத்தின் நினைவில்

பொங்காளியப்பன், பொங்கி அம்மாள், பொங்கியன்ன கவுண்டர் என்று பெயரிட்டு இன்றும் வாழ்ந்து வருகின்றனர் இவர்கள் எல்லாம் போர்க் கொடுமையால் கோயில்களையும் குலதெய்வ ஊர்களையும் விட்டு வேறு ஊர்களுக்கு சென்று வாழ்ந்து வருகின்றனர்.

மூவேந்தர்கள் காலத்தில் தமிழகத்தில் கி.பி 5 ஆம் நூற்றாண்டில் நடந்த களப்பிரர் போர் தமிழ் வேட்டுவருக்கும், வடுக (கன்னட) வேட்டுவர்களுக்கும் நடந்த போர் ஆகும். மைசூராரின் கொள்ளையன் நஞ்சராயன், ஹைதர் அலி, திப்பு சுல்தான் இவர்கள் கொங்கு நாட்டின் மீது அடிக்கடி எடுத்த படையெடுப்புகள் கொங்கு நாட்டின் வேட்டுவ பாளையக்காரர்களின் அரசாட்சிகளைச் சீர்குலைக்காமல் இருந்திருந்தால் ஆங்கிலேயர்களின் ஆட்சி தமிழ் மண்ணில் வேரூன்றி இருந்திருக்காது.

## வேட்டுவரின் வீரம்:

**"போர் வந்த காலத்தே**
**புறம் போய் பதுங்காது**
**காவுண்டதாலே கவுண்டரெனும்**
**பெயருமுண்டு"**

**"காவுண்டார்ப் போர்க்களத்தில்**
**களங்கண்டார் சரித்திரத்தில்**
**பாவுண்டார் இலக்கியத்தில்**
**பழியுண்டதில்லை இவர்"** **- கவிஞர் கண்ணதாசன்.**

**"இட்டுத்தலை எண்ணும் எயினரையல்லது**
**சுட்டுத்தலை போகாத் தொல்குடி"**
**- (சிலப்பதிகாரம் வேட்டுவ வரி 20 - 21)**

"இதன் பொருள் வேட்டுவர்கள் தமது பகைவர்களுடைய தலைகளை வெட்டி அவைகளை கீழேவைத்து எத்தனை தலைகளை வெட்டியுள்ளோம் என்று எண்ணிப் பார்ப்பார்களாம், மற்றபடி பிற பகைவர்கள் வேட்டுவரது தலைகளை வெட்டி அவற்றை எண்ணிக்காட்ட இயலாது."
(கொங்கு சமுதாயம் (வேட்டுவர்) ம. இராசசேகர தங்கமணி, பக்கம் 72 - 73)

ஈரோடு - சத்தியமங்கலம் தேசிய நெடுஞ்சாலை அருகில் கொடிவேரி அணை சிறந்த சுற்றுலா ஸ்தலமாக அமைந்துள்ளது.

கொடிவேரி அணையில் உள்ள முன்னை ஈஸ்வரன் கோயில் முன்னை (மின்ன) வேட்டுவரால் கட்டப்பட்டது ஆகும். இன்று அக்கோயில் அணை முனியப்பன் கோயில் என்று பேச்சுவாக்கில் வாய்மொழியால் தவறுதலாக அழைக்கப்பட்டு வருகிறது. இந்த அணை ஆற்றங்கரையில் இருந்த கல்வெட்டு கொடிவேரி அணை செம்ப வேட்டுவன் செயங்கொண்ட சோழக் கொங்கள்வான் கட்டியது என்று கூறுகிறது. இந்த அணையில் உள்ள முன்னை (மின்ன) ஈஸ்வரன் கோயிலை கட்டிய மின்ன வேட்டுவரின் வாரிசுகளும், கொடிவேரி அணையை கட்டிய செம்பவ வேட்டுவர்களின் வாரிசுகளும் இன்றும் ஈரோடு - சத்தி தேசிய நெடுஞ்சாலையில் கவுந்தப்பாடி அருகில் உள்ள மின்ன வேட்டுவம்பாளையத்தில் வாழ்ந்து வருவது கொடிவேரி அணை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.



22 ஈரோடு 10-7-2019 தினத்தந்தி

கொடிவேரி

நம்ம ஊரு... நல்ல ஊரு...

## கொங்காள்வான் கட்டிய கொடிவேரி

[illegible]

கொடிவேரி அணையை படத்தில் காணலாம்.

[illegible]

# துணைநின்ற நூல்கள்


1) தமிழ்நாட்டு வரலாறு - தொல்பழங்காலம் தமிழ்நாடு அரசு வெளியீடு.

2) தோல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும் - க.சுபாஷினி.

3) வேட்டுவர் வேந்ததர் மரபினர் - -Dr.Valaiparameswaran.MD.

4) வேட்டுவர் சமூக அவணங்கள் புலவர் செ.இராசு

5) சங்ககல மறவர் - செ.மா. கணபதி

6) அய்யன் சமூகம் தோற்றமும் வளர்ச்சியும்

7) அகநானூறு.

8) புறநானூறு.

9) மாந்தரஞ் சேரல் மெய்க்கீர்த்தி - இதழ் 4

10) வேட்டுவர் சமூகம் ஓர் வரலாற்றுப் பார்வை - சிற்பி ராஜசேகர தங்கமணி.

11) அப்பிச்சிமார் காவியம் - புலவர் இராசு.

12) மா.ராசமாணிக்கனார் தாலி-சொற்பொருள் ஆராய்ச்சிக் கட்டுரை, (தினமலர் - வாரமலர் (11.03.2018)

13) கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் - வீயாரம்.

14) பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி - கார்த்திகேசு சிவத்தம்பி.

15) களப்பிரர் போர் தமிழ் வேட்டுவர் கன்னட வேட்டுவர் ஏ.கே. சந்திரசேகரன்.

16) பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கம் ராஜ்கவுதமன்.

17) புராண இதிகாசங்களில் வேட்டுவர் வரலாறு -மூர்த்தி.

18) 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நிலம் தொல்லியல் நோக்கில் சங்ககாலம் நிலவரைபடம் -சி இளங்கோ.

19) தமிழர் தளபதி - புலவர் கா கோவிந்தன்.

20) தமிழர் மானிடவியல்- பக்தவச்சல பாரதி.

21) ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும் - ராஜ் கவுதமன்.

22) தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு சங்க காலம் - ராஜ்கவுதமன்.

23) தமிழ்நாட்டு வரலாற்றில் புதிய கண்டுபிடிப்பு வரலாற்று வித்தகர்- பேராசிரியர் இராசசேகர தங்கமணி.

24) வில்லோர் உழவர்கள் சங்க இலக்கியங்கள் புகழும் சங்க கால வேட்டுவர் வேளிர்கள் -ஆசிரியை இறைவி எம்.ஏ.,பி.எட்.

25) கரூர் ஆனிலையப்பர் திருக்கோயில் தல வரலாறு -வரலாற்று வித்தகர் பேராசிரியர் இராசசேகர தங்கமணி.

26) அரை நாட்டு மன்னன் அல்லாள இளையான்- வெளியீடு அல்லாள இளையான் அறக்கட்டளை.

27) வேட்டுவ மன்னன் வல்வில் ஓரி -கவிதா வாழைபரமேஸ்வரன்

28) தொல்குடி வேட்டுவர் ஆவணம் -பா.ஆனந்தகுமார் .

29) வேட்டுவர் சமூக ஆவணம் -புலவர் இராசு.

30) குருகுல காவியம்.

31) கொங்குமண்டலச் சதகம்.

32) கொங்குதேச ராஜாக்கள்.

**செப்பேடு** 1) அல்லாளா இளையான் செப்பேடு.
2) குறிப்பு நாட்டுப் பட்டயம்.
3) சோழர்கள் பூர்வ பட்டயம்.
4) ஊசிப்பாளையம் செப்பேடு.
5) கபிலர்மலைச் செப்பேடு